பொதுவுடைமை இயக்க இதழ்கள்

பதிப்பாசிரியர்
இ. சுந்தரமூர்த்தி
மா.ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பொதுவுடைமை இயக்க இதழ்கள்

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா.ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை-600113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Potuvutaimai iyakka italkal**
Author	:	**E. Sundaramoorthy** **M.R. Arasu**
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	729
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2011
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	vi + 252
No. of Copies	:	1200
Price	:	Rs.115/- (Rupees One hundred and fifteen only)
Printed by	:	Sri Venkateswara Offset No.47, Rajanga Mathya Street Vadapalani, Chennai - 600 026
Subject	:	Studies on Tamil Journalism

திரு.கூ.வ.எழிலரசு, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎட்.,
இயக்குநர் (கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்.

என இதழ்களின் இன்றியமையாமையை எடுத்துரைப்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். நாம் வாழும் ஊடக உலகில் இதழ்களின் பணி மிகப்பெரிதாய் உயர்ந்தோங்கி நிற்கிறது. மாநகரங்கள் முதல் சிற்றூர்கள் வரை இதழ்களால் இன்று உலக மக்களைக் காண முடிகிறது. ''இருக்கும் நிலை மாற்றும் ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறக்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்'' எனும் குறிக்கோளுடன் இதழ்களை நடத்திய பெருந்தகையாளர்கள் என்றென்றும் நினைக்கத் தக்கவர்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழின் மறுமலர்ச்சிக் காலம் தொடங்கி விட்டது. வழிவழியாகப் பாடிய மரபும், வழி வழியாக வந்த எழுத்து முறையும் திராவிட இயக்கக் கருத்தாக்கங்களால் மடைமாற்றம் பெற்றன. மொழியும், இலக்கியமும் மனிதனுக்குரியவை என்றும் மனிதனை விட்டொழித்து மொழியால் மற்றவற்றைத் தேடுதல் நல்லதல்ல எனத் தந்தை பெரியார் போன்ற சிந்தனையாளர்கள் காட்டிய திசைநோக்கி இதழ்கள் முதலான படைப்புலகம் பயணித்தது. இப்பயணத்தின்போது பொதுவுடைமைக் கோட்பாட்டின் கருத்து வீச்சுக்களை, 1934ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டுவரை இதழ்கள் ஏந்திய கருத்தாக்கங்களைக் கண்டறியப் 'பொதுவுடைமை

இயக்க இதழ்கள்' எனும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. கருத்தரங்க ஆய்வின் விளைவாக இந்நூல் அழகாக உருவாகியுள்ளது. இதில் இடம் பெற்றுள்ள தலைப்புகளில் அமைந்த ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களுக்குப் பெரும் பயனாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் என் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் அச்சகத்தாருக்கு என் பாராட்டுகள்.

இயக்குநர் (கூ.பொ.)

பொருளடக்கம்

1.	சுதந்திரம்	-	இரா. விசுவநாதன்	1
2.	புது உலகம்	-	பா. வீரமணி	10
3.	ஜனசக்தி	-	சி. மகேந்திரன்	51
4.	சமரன்	-	வீ. அரசு	114
5.	சரஸ்வதி	-	வல்லிக்கண்ணன்	130
6.	தாமரை	-	சாரு. செந்தில்குமார்	160
7.	தீக்கதிர்	-	கே. ராஜு	184
8.	செம்மலர்	-	ச. மாடசாமி	198
9.	சிகரம்	-	மு. வளர்மதி	220

சுதந்திரம்

1934 **இரா. விசுவநாதன்**

அந்நிய ஏகாதிபத்தியம் இந்தியாவில் வேரூன்றி இருந்த காலம்! ஆங்கிலேயரும், பிரஞ்சியரும், டச்சு, போர்த்துகீசியரும், இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய இருபதாம் ஆண்டின் தொடக்க காலம். ஓர் அமைதியான சூழல்! சிப்பாய் கலகம் இந்தியாவில் சுதந்திர வேட்கையைத் தூண்டிவிட்ட போதிலும் நாடெங்கும் சுதந்திர வேட்கை துளிர்விடவில்லை.

1908இல் தென்னகத்தில் ஏற்பட்ட ஆங்கிலேய அடக்குமுறை பாரதியாரைப் புதுவைக்கு அனுப்பியது. தொடர்ந்து கல்கத்தாவிலிருந்து அரவிந்தர் புதுவை வந்தார். தேசபக்தர்கள் புதுவையில் குவிந்தனர்.

ஆங்கிலேய அடக்குமுறை, பிரெஞ்சியர் ஆட்சியில் காணப்பட்ட அவலங்கள் புதுவை மக்களிடையே உரிமை முழக்கமிடச் செய்தது. செங்கொடி ஏந்தி மக்கள் தலைவர் வ.சுப்பையா சமூக, இலக்கிய தொலைதூரப் பார்வையுடன் பஞ்சாலைத் தொழிலாளர்களைத் திரட்டி உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட வேளை அது!

மக்களிடையே உரிமை முழக்கங்கள் சிற்றிதழ்களின் வாயிலாக விரைவில் சென்றடையும் வண்ணம் சுதந்திர தாகம் கனியத் தொடங்கப்பட்ட விழிப்புணர்வு இதழ்தான் “சுதந்திரம்”. அரிசன சேவா சங்கம் சமூக சீர்திருத்த கருத்துகளையும், தொழிலாளர் நலனையும் முக்கிய இலக்காகக் கொண்டது.

தோற்றம்

சுதந்திரம் பத்திரிகை 1934ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது. அப்பொழுது அது மாத இதழாகத் தொடங்கப்பட்டது.

இந்த இதழின் முதல் அட்டைப் படத்தில் பாரத அன்னை வெண்புரவிமீது ஏறி அமர்ந்து இடது கரத்தில் சுதந்திரக் கொடியைத் தாங்கி, வலது கரத்தில் சுதந்திரச் சங்கினை ஏந்திப் போர் முழக்கம்

செய்து களத்தில் இறங்கிப் பகைவர் அணியை எதிர்த்திட, புரவியைக் கோட்டை கொத்தளத்திலிருந்து புயல் வேகத்தில் ஓட்டிச் செல்வது போன்ற ஓவியம் இடம் பெற்றது.

1934 முதல் 1954 வரை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து புதுச்சேரியை விடுவிக்க வேண்டுமென்பதே இப்பத்திரிகையின் இலட்சியமாக இருந்தது.

விடுதலைக்குப் பின்னர் அரசியல் சுதந்திரம், சமூகப் பொருளாதாரத் துறைகளில் இன்னும் நம்மைப் பிணைத்துள்ள தளைகளை உடைக்காமல் இழி நிலையிலேயே வைத்துள்ளது. எனவே நம்முடைய பயணம் தொடர வேண்டும் என்று இப்பத்திரிகையின் நிறுவனர் வ. சுப்பையா அவர்கள் இப்பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டியதன் அவசியம் குறித்துக் கூறியுள்ளார்.

அதனடிப்படையில் கடந்த 65 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பத்திரிகை பல்வேறு தடைகளைக் கடந்து, அடக்கு முறைகளைச் சந்தித்து இன்றைக்கும் பவனி வந்து கொண்டு இருக்கின்றது.

தோற்றத்தின் பின்னணி

அரிசன சேவா சங்கத்தின் மூலமும் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றிவந்த மக்கள் தலைவர் வ. சுப்பையா அவர்கள், பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். அப்பொழுது அவர் "தி ஸ்டார் ஆப் இந்தியா இன்சூரன்ஸ்" கம்பெனியின் புதுவை மாநில ஏஜெண்டாக பணிபுரிந்தார். அக் கம்பெனியார் வழங்கிய கமிஷன் பணத்தில் சில நூறு ரூபாய்களை மூலதனமாக வைத்து "சுதந்திரம்' மாதப் பத்திரிகை தொடங்கப்பட்டது. இப்பத்திரிகை வெளிவர துவங்கியபோது இதன் துணை ஆசிரியராகப் பணிபுரிந்த தோழர் ஏ.என். கிருஷ்ணசாமி அவர்கள் சுதந்திரம் பொன்விழா மலர் கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

இதழின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து செயல்பட்டவர்கள்

1934 முதல் 1937 வரை இப்பத்திரிகையின் நிறுவனரான தோழர் வி.எஸ். அவர்கள் ஆசிரியராகச் செயல்பட்டார். பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அவரைச் சிறையில் அடைத்ததால் 1938ஆம் ஆண்டு தோழர் ஜேடி.ஏ. அருள் என்பவர் ஆசிரியர் பொறுப்பு ஏற்றார். அவரும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் சிறையில் அடைக்கப்பட்டதால் 1938ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து 1939ஆம் ஆண்டு வரை தோழர் ஏ.லொ.போ என்பவர் ஆசிரியராக இருந்து செயல்பட்டார்.

1939 முதல் 1943 வரை தோழர் எம். நந்தகோபாலும், 1944 முதல் 1947 வரை காரைக்கால் பகுதியைச் சார்ந்த தோழர் சிதம்பரம் என்பவரும் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டார்கள்.

1947 முதல் 1950 வரை தோழர் கவி. வெ. நாரா அவர்கள் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அதற்குப் பின்னர் டாக்டர் என். ரங்கநாதன் அவர்கள் 1954 முதல் 1987 வரை ஆசிரியராகச் செயல்பட்டார். இக் காலகட்டத்தில் 1972 வரை தோழர் கவி வெ. நாரா அவர்கள் பொறுப்பு ஆசிரியராக இருந்து பணியாற்றினார்.

1987 முதல் 1996 வரை தோழர் இரா. விசுவநாதன் அவர்கள் ஆசிரியர் பொறுப்பு ஏற்றுச் செயல்பட்டார். அவர் 1996இல் புதுச்சேரி அரசின் அமைச்சர் பொறுப்பு ஏற்றவுடன், அன்றிலிருந்து தோழர் வி.எஸ். அபிஷேகம் அவர்கள் இன்றுவரை ஆசிரியராகச் செயல்பட்டு வருகிறார்.

இந்தக் காலகட்டத்தில் தோழர்கள் ஏ.என். கிருஷ்ணசாமி, டி மாரியப்பன், என்.வி.கிரி, இராமநாதப்புரத்தைச் சார்ந்த சோமு சுப்பையா, வி.எஸ். அபிஷேகம் ஆகியோர் துணை ஆசிரியர்களாகச் செயல் பட்டுள்ளனர்.

பாரதி, சுத்தானந்த பாரதியின் படைப்புகள்

"இந்தியா" பத்திரிகையில் வெளிவந்த பாரதியாரின் கதைகள், கட்டுரைகள் மற்றும் கவிதைகள் சுதந்திரம் பத்திரிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டன.

சுத்தானந்த பாரதியின் "உடல் உயில் நூல்" என்ற கட்டுரை சித்திர விளக்கத்துடன் வெளியிடப்பட்டது.

பிரெஞ்சு மொழியில் சுதந்திரம்

பிரெஞ்சு மொழியிலும் சுதந்திரம் பத்திரிகை சில காலம் வெளிவந்துள்ளது. அப்பொழுது பிரெஞ்சு மொழியில் கட்டுரைகளைத் திருவாளர்கள் குனுமா, லாம்பேர் சரவணன் (இவர் பிரெஞ்சு கல்லூரி பேராசிரியராகவும், பிரெஞ்சு பார்லிமெண்ட் உறுப்பினராகவும் திகழ்ந்தார்), தட்சணாமூர்த்தி, பிரெஞ்சு மொழி பேராசிரியரும், தொழிலாளர் இயக்க முன்னணி தலைவருமான பேராசிரியர் அன்னுசாமி, பிரெஞ்சு வழக்கறிஞர் போல் லத்தூர் போன்றவர்கள் எழுதியுள்ளார்கள்.

சுதந்திரம் அச்சிடப்பட்ட அச்சகங்கள்

கலாநிதி பிரஸ், இம்பீரியல் பிரஸ், உச்சணியா அச்சகம், காரைக்கால் சமுத்திரா பிரிண்டிங் ஒர்க்ஸ், லிபர்ட்டி பிரஸ், சுதந்திரம் பிரஸ், விழுப்புரம் அனுமான் அச்சு எந்திரசாலை, விழுப்புரம் சுதந்திரம் பிரஸ் முதலிய அச்சகங்களில் அச்சிட்டு வெளியானது. புதுச்சேரி கம்யூனிஸ்ட் கம்யூட்டர் மூலம் தற்போது அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

அச்சகங்கள் மீதான தாக்குதல்

1937இல் சுதந்திரம் அச்சடிக்கப்பட்டதற்குச் சமுத்திர பிரிண்டிங் ஒர்க்ஸ் அச்சகம் பிரெஞ்சு அரசாங்க ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு நஷ்டத்திற்கு உள்ளானது. 1939இல் லிபர்ட்டி பிரஸும் தாக்கப்பட்டது. 1949 வரை செயல்பட்ட காலத்தில் பிரெஞ்சு ஆதரவாளர்களால் பலமுறை தாக்கப்பட்டது

1950 ஜனவரி 14இல் வெள்ளாளர் வீதியில் இருந்த கட்சி அலுவலகமும், தோழர் வி.எஸ். அவர்களின் வீடும் பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டபொழுது பின்புறம் இருந்த சுதந்திரம் பிரஸின் ஒரு பகுதி நெருப்புக்கு இரையாகியது.

1952இல் சுதந்திரம் பிரஸ் தளவாடங்கள் லாரியில் கடத்தப்பட்டு விழுப்புரத்தில் தோழர் என்.ஆர். அவர்களால் புணர்நிர்மாணஞ்செய்து பத்திரிகை வெளியிடப்பட்டது.

பத்திரிகை விற்ற பக்கிரி

சுதந்திரம் பத்திரிகை அக்காலத்தில் அச்சடித்து வெளியிடும் பொழுது இயக்கத் தோழர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து முக்கிய தெருக்களில் பிரச்சாரம் செய்து கொண்டே விற்பார்கள். அப்பொழுது பிரெஞ்சு ஆதரவு குண்டர்கள் நமது தோழர்கள்மீது தாக்குதல் தொடுப்பார்கள். அவற்றையெல்லாம் முறியடித்து நமது தோழர்கள் விற்பனை செய்வார்கள். அவ்வகையில் இயக்கத் தோழர்களுடன் 1948இல் பக்கிரியும் சேர்ந்து பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது படுகொலை செய்யப்பட்டார். பத்திரிகை விற்பனையாளர் படுகொலை சமூகக் கொலையாகக் கருதப்பட்டது.

பாவேந்தரின் உதவிகள்

சுதந்திரம் தொடர்ந்து வெளிவர பல்வேறு நிலைகளில் பலரும் உதவி வந்துள்ளனர். குறிப்பாக, பாவேந்தர் பாரதிதாசன்

கட்டுப்படுத்தப்பட்ட விலையில் பத்திரிகை அச்சிட தாள் வாங்கித் தந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்டித நேரு அவர்களின் தலையீடு

பத்திரிகை வளர்ச்சியில் இடர் ஏற்பட்ட நிலைகளில் ஜவகர்லால் நேருவும் உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1938ஆம் ஆண்டு சுதந்திரம் தடை செய்யப்பட்டதை நேரு அவர்கள் பாரிசு அரசுடன் எடுத்துரைக்க, தலைவர் வி.எஸ். அவர்களுக்குக் கடிதம் கொடுத்தனுப்பினார்.

பொதுவுடைமைக் கொள்கை பரப்பும் இதழாக இருந்த போதிலும் சுதந்திரம் மக்கள் விழிப்புணர்வு இதழாக வந்து கொண்டிருந்தது. சமுதாயச் சீர்கேடுகளை எடுத்துரைக்கவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வெளியிடப்பட்ட கட்டுரைகள் மக்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தன. வாரந்தோறும் சுதந்திரம் வரும் நாளை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்த வாசகர்கள் ஏராளம்.

மார்க்சிய பார்வை கொண்ட முதல் இதழ்

1937இல் ஜனசக்தி தொடங்குவதற்கு முன்னர் தொடங்கப்பட்ட சுதந்திரம் பொதுவுடைமைக் கொள்கை இதழ்களின் முன்னோடியாகும். இந்திய விடுதலைக்கு முன்னரே 8000 பிரதிகள் வரை விற்பனையானது. மார்க்சிய பார்வை கொண்டு வெளிவந்த முதல் இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகளும், செய்திகளும் மக்களிடையே நல்லாதரவை பெற்றிருந்தன. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் போர் முரசாகச் சுதந்திரம் திகழ்ந்தது.

கற்றறிந்தோர், அறிஞர் பெருமக்கள் பாராட்டும் வகையில் சுதந்திரம் பத்திரிகை உலகில் பீடுநடை பயின்றது. உள்நாட்டுப் பாராட்டுகளுடன் மேல்நாட்டவரும் பாராட்டும் வகையில் இதழ் வெளிவந்தமை போற்றுதலுக்குரியது.

சுதந்திரம் குறித்து சோவியத் மொழிபெயர்ப்பாளர் நா. முகம்மது செரீபு

தலைசிறந்த சோவியத் மொழிபெயர்ப்பாளர் திரு. நா. முகம்மது செரீபு என்பவர், "சுதந்திரம் இதழின் 50 ஆண்டுகள் ஒரு பார்வை"

என்ற ஆய்வுக் கட்டுரையில் சுதந்திரத்தின் அருமையை உணர்ந்து, அதன் பெயரில் ஓர் இதழைக்கொண்டு வருவது என்பது உரிய தொலைநோக்கிற்குக் கட்டியம் கூறுவதாகும் என்று கூறியுள்ளார்.

மகத்தான லட்சியங்களை நிறைவேற்ற ஒரு பத்திரிகை அவசியம் என்பது உணரப்பட்டு சுதந்திரம் தொடங்கப்பட்டது. இதுவே ஒரு பெருமைமிக்க பணி என்பது ஒரு புறமிருக்கட்டும். புதுவையிலேயே அங்கு நிலவிய கெடுபிடிகளை எல்லாம் தாண்டி ஓர் இதழ் 50 ஆண்டுகாலமாக வந்துகொண்டு இருக்கின்றது என்பதை வெறும் செய்தியாகக் கொள்ளமுடியாது. சுதந்திரம்தான் புதுவையின் ஜீவனுள்ள வரலாற்று நூல் என்று குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரம் குறித்து மாஸ்கோ தமிழ் ஆய்வாளர் விதாலி ஃபுர்னீக்கா

முதலில் சுதந்திரம் இதழ் 'வாசகர்களை'க் கவர்கின்றது என்பதைச் சொல்லியாக வேண்டும். ஏனெனில் அதனது திசை வழியே அதற்கு முக்கிய காரணமாகும். மேலும் புதுச்சேரி மாநிலம் மிகப் பெரிய மாநிலமன்று. அதைக் கொண்டு இதழின் வீச்சை மதிப்பிட முடியாது என்றே கருதுகிறேன். அறிவு ஜீவிகளின் தாக்கத்தைச் சுதந்திரத்தால் தீர்க்கமுடியும் என நம்புகிறேன். இந்தியா மற்றும் உலக நாடுகளின் முற்போக்கு இலக்கியத்தையும், கலாச்சாரத்தையும் அறிய ஆவல் கொண்டவர்கள் உங்களது வாசகர்கள். பொன்விழா மலர் (ஜூன் 1984) இதை நிரூபிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பாவேந்தரின் பாராட்டு

பாவேந்தர் பாராட்டுகையில்,

சுதந்திரம் ஆம் பத்திரிகையைத்
தோற்றுவித்தும் தொண்டு செய்தும்
சிங்கமென வாலிபர்கள் தீவிரம் கொண்டோ
சங்கமமைத்தும் தலைமை நின் றுழைத்தும்
அழிவார்கள் என்றிருந்த அவலநிலை நீக்கித்
தொழிலாளர் என்ற நிலைக்குக் கொண்டுவந்தீர்

எனக் குறிப்பிடுகின்றார்.

பெண் உரிமைக்குக் குரல்

அடக்கு முறைகளுக்காக குரலெழுப்பியும் பெண்கள் வாக்குரிமைக்குக் குரல் கொடுத்தும், பிரெஞ்சிந்தியாவில் இரட்டை

வாக்காளர் பட்டியல் முறையை முற்றாக ஒழித்திடவும் துணை நின்றது "சுதந்திரம்".

தொழிலாளர் உரிமைக்குப் போராடியமை

1936இல் நடைபெற்ற பஞ்சாலை தொழிலாளர்களின் போராட்டத்திற்குச் சுதந்திரம் ஒரு தூண்டுகோலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் தலைவர் வ.சுப்பையா அவர்கள் தொழிலாளர்கள் உரிமைகள் குறித்து எழுதிய பல்வேறு கட்டுரைகள் தொழிலாளர் மத்தியில் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

1936இல் தீவிரமடைந்த பஞ்சாலை தொழிலாளர்கள் போராட்டத்தின் விளைவாக ஜூலை 30இல் 12 தொழிலாளர்களைப் பிரெஞ்சு ராணுவம் சுட்டு வீழ்த்தியது. அதற்குப் பின்னர்தான் 8 மணி நேர வேலை உரிமை பெறப்பட்டது. ஆசியா கண்டத்திலேயே முதன்முதலாக 8 மணி நேர வேலை உரிமை புதுச்சேரி மாநிலத்தில் தான் அமுலாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பொன்விழா கண்ட இதழ்

சமூக ஒற்றுமைக்காகவும் உள்ளூர் சுயவர்களின் நயவஞ்சக அரசியல் மாச்சரியங்களை எடுத்துரைக்கவும் சுதந்திரம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு 50 ஆண்டு கால நெடிய பயணத்தை 1984இல் கண்டது.

50ஆண்டுகளை நினைவுபடுத்தி இதழில் வெளிவந்த அனைத்து அம்சங்களும் வாசகர்களிடையே வெகுவாக அலசி ஆராயப்பட்டன. அவை ஐம்பது ஆண்டுகால இதழியல் போக்கை அறிந்துகொள்ள உதவுகிறது.

சமூக விடுதலை, பிரெஞ்சிந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம், பெண்ணுரிமை, பாமர மக்களின் போர் முரசம், இளைஞர்களின் எழுஞாயிறு எனப் பல்வேறு நிலைகளில் பயணித்தது சுதந்திரம்.

1984இல் சுதந்திரம் பத்திரிகையின் பொன்விழா கொண்டாடப் பட்டது. பொன்விழாவினை ஒட்டி ஓர் சிறப்புமலர் வெளியிடப் பட்டது.

இம் மலர் மிகச் சிறந்த வரலாற்றுப் பெட்டகமாக இருந்தது. "பொன்விழா மலர்" மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாக விளங்குகின்றது

என்று மாஸ்கோ தமிழ் ஆய்வாளர் டாக்டர் விதாலி ஃபுர்னீக்கா அவர்கள் மக்கள் தலைவர் வ. சுப்பையா அவர்களுக்கு அக்டோபர் 1987இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

கணிப்பொறியில் சுதந்திரம்

சுதந்திரம் பத்திரிகைக்காக 1995இல் கணிப்பொறி வாங்கப்பட்டது. இக் கணிப்பொறி மையத்தினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய அகில இந்திய செயலாளராக இருந்த தோழர், இந்திரஜித் குப்தா அவர்கள் துவக்கி வைத்தார். அன்று முதல் சுதந்திரம் பத்திரிகை ஆப்செட் முறையில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது.

மக்களின் உணர்வுகள் பிரதிபலிப்பு

சுதந்திரம் பத்திரிகை கடந்த 60 ஆண்டு காலமாக வெளி வந்துகொண்டு இருக்கிறது. இப்பத்திரிகை மக்களின் உணர்வுகளை- அவர்களது பிரச்சினைகள், அடிப்படை வசதிகள் போன்றவைகளை எழுப்பக்கூடியதாகவும் விளங்கி வருகிறது.

லஞ்ச ஊழலை அம்பலப்படுத்தும் ஆயுதம்

பல்வேறு அரசுத் துறைகளில் நடைபெறுகின்ற லஞ்ச ஊழல் ஆகியவைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்ற ஓர் ஆயுதமாகச் சுதந்திரம் பத்திரிகை விளங்கியது. பலர் மொட்டைக் கடிதம் எழுதி அதைப் பிரசுரிக்கக் கோருவார்கள். அச் செய்தி உண்மையா என விசாரித்து வெளிச்சம் போட்டுக் காட்டிய வரலாறும் உண்டு. பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் இரகசியமாக ஆள் அனுப்பி வாரம்தோறும் பத்திரிகையை வாங்கிப் பார்ப்பதும் உண்டு.

துணை நிலை ஆளுநர் பதவியை நிரப்பிய சுதந்திரம்

புதுச்சேரி மாநில 1995-96ஆம் ஆண்டுகளில் புதுச்சேரி மாநிலத்தில் துணைநிலை ஆளுநர் பதவி காலியாக இருந்தது. அப்பொழுது சுதந்திரம் பத்திரிகையில் "துணைநிலை ஆளுநர் பதவிக்கு ஆள் தேவை" என்ற பெயரில் வெளியிடப்பட்ட ஒரு செய்தி டெல்லி குடியரசுத் தலைவர் மாளிகை வரை எதிரொலித்தது. அதற்குப் பின்னர் ஏறத்தாழ 1½ ஆண்டுகளுக்குப் பின்னர் புதுச்சேரி மாநிலத்தில் துணைநிலை ஆளுநர் பதவி நிரப்பப்பட்டது.

இன்றைக்கும் மக்களின் பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக் காட்டி அவற்றுக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் பத்திரிகையின் ஸ்தாபகரான தோழர்

வ.சுப்பையா அவர்கள் காட்டிய பாதையில் தடம்பதித்து முன்னேறியுள்ளது என்பது பெருமைக்குரிய ஓர் அம்சமாகும்.

கட்டாந்தரையில் நட்ட தனிமரக் கன்றாகி சாய்ந்துவிடாமல்
பாறையில் பனிமலர் செடியாகி கருகிவிடாமல்
நீ, வேர் பிடித்துத் தழைத்தோங்கிட – எத்தனைபேரின்
ரத்தம் அருவியாய் பாய நேர்ந்தது
எத்தனை தடைகள், இன்னல்கள், இடர்ப்பாடுகள்
எண்ணிப்பார்த்தால் ரத்தம் உறைகிறது

என்று பாவேந்தரின் புதல்வர் கவிஞர் மன்னர்மன்னன் அவர்கள் சுதந்திரம் பொன்விழா மலரில் குறிப்பிட்டது மிகவும் சரியானது என்பதை இந்த வரலாற்று உண்மைகளின் மூலம் நாம் அறியலாம்.

புது உலகம்

1935 **பா. வீரமணி**

புது உலகம் எனும் திங்கள் இதழைச் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 1935 ஆம் ஆண்டு மே திங்களில் தொடங்கினார். இதற்கு முன்பு "குடியரசு" புரட்சி, "பகுத்தறிவு ஆகிய இதழ்களின் விஞ்ஞானம் தத்துவம், மூடநம்பிக்கை, மதம் ஆகியன குறித்து எண்ணற்ற கட்டுரைகள் எழுதியுள்ளார். 1923 அக்டோபர் திங்களில் "லேபர் அண்டு கிசான் கெசட்" (Labour & Kissan gazete) எனும் ஆங்கில இதழை மாதம் இருமுறை வெளியிட்டார். பின்பு "தொழிலாளி எனும் வார இதழை தொடங்கி வெளியிட்டு வந்தார். தமிழகத்தில் முப்பதுகளில் தொழிலாளர்கள் குறித்து வரிக்கண்ணோட்டத்துடன் முதன்முதலில் வெளிவந்த இதழ்கள் இவையே யாகும். மற்றும் இ.எல். அய்யர் அவர்களால் 1921இல் தொடங்கப்பெற்ற (SWADHARWA) ஸ்வதர்மா எனும் ஆங்கில வார இதழில் சுதந்திரம் குறித்தும் தொழிலாளர் பிரச்சனைக் குறித்தும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இதே போன்று 1921 முதல் (HINDU) இந்து தாளிதழில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து எண்ணற்ற அரசியல் கட்டுரைகளை வரைந்துள்ளனர். சுருங்கக் கூறின் 1921 முதல் 1940 வரைத் தொடர்ந்து இந்தியச் சுதந்திரம், மதம், தொழிலாளர், பொருளாதாரம், அரசியல், பொதுவுடைமை, விஞ்ஞானம், தத்துவம், உலக நேயம் ஆகியன குறித்து மிக்க பொறுப்புடன் இவரால் எழுதப்பெற்ற கட்டுரைகள் பற்பல. இந்தியச் சுதந்திரத்திற்கும், எளிய மக்களின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடியலுக்கும் ஓயாது தொடர்ந்து பணியாற்றிய அப் பெருமகனைப் பற்றி மேலும் சில தெரிந்துகொள்வது மிக இன்றியமையாதது. சிங்காரவேலர் (18.2.1860 - 11.2.1946)

தமிழகம் கண்ட சிந்தனையாளர்களுள் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் தலைசிறந்தவர். தத்துவம், விஞ்ஞானம் அரசியல், பொருளியல், உளவியல், மானிடவியல், வரலாறு, சட்டம் போன்ற துறைகளில் ஆழ்ந்த ஞானம் உடையவர் இத்துறைகளைப் பற்றி எளிய மக்களும் நன்கு புரிந்துகொள்ளும் வகையில் தொடர்ந்து எழுதிய

பெருமையும் அவருக்குண்டு. விஞ்ஞானக் கருத்துகளைத் தமிழில் எழுதமுடியுமா? என ஐயுறும் இன்றைய பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் விடை கூறும் நிலையில் 1920இல் இருந்தே அறிவியல் கட்டுரைகளைத் தமிழில் எழுதிய மூலவர், முன்னோடி சிங்காரவேலரே ஆவார். தொடக்கப் பள்ளிப் படிப்பு முதல் கல்லூரிக் கல்வி வரை ஆங்கில வழிக் கல்வி கற்று ஆங்கிலத்தில் நற்புலமை பெற்றவரேனும், மக்களுக்கு எதனையும் தாய்மொழி வழியாகவே கற்பிக்க வேண்டுமெனும் கொள்கையுடையவர். அதனைச் செயலிலும் காட்டியவர்.

கடக்கார்ட், ஸ்பினோசா, இமானுவேல் காண்ட், லாப்லஸ், ஹெர்பட் ஸ்பென்ஸர், மெட்சினிகாப், ஹெகல் ஜிமார்டோனா புருனோ, டார்வின், ஏங்கல்ஸ் காரல் மார்க்ஸ் போன்ற அறிவுலக மேதைகளைத் தமிழகத்திற்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரேயாவார். தமிழக மக்கள் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தையும், அதன் செயற்பாட்டையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்திய முன்னோடியும் இவரே.

"இந்தியாவிலேயே விஞ்ஞான அறிவுக்கலை சம்பந்தமாகவும், பொதுவுடைமைச் சம்பந்தமாகவும் அதிகம் படித்து புரிந்துகொண்டு, அந்த அறிவைக் கொண்டு மற்றவர்களுக்குப் புரியும்படியாகச் செய்த பெருமைக்குரிய இடத்தில் முன்வரிசையில் முதலிடம் அவருக்கே அளித்தாக வேண்டும்'' என்று பேரறிஞர் அண்ணா கூறுவது உளங்கொளத்தக்கது.

"கூர்தலறத்தை டார்வின் ஆராய்ச்சி கொண்டு முதன் முதல் அறிவுறுத்தியவர் தோழர் எம். சிங்காரவேல் செட்டியார்"

"எனது வாழ்க்கை தொடக்கத்தில் சமயப் பணியில் ஈடுபட்டது. அதனால் பலசமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சி பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாகவுள்ள பொதுமை + சமரசம் ஏன் உலகில் பரவவில்லை? என்று யான் எண்ணுவேன். சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவதில்லை. சிங்காரவேல் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கம் செய்தது. அவ்விளக்கம் பொதுமையை உலகில் பரப்பி நிலைநிறுத்த வல்லது காரல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது"[2] என்று தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்கள் கூறுவது சிந்திக்கத்தக்கது. இம் மேற்கோள்களால் சிங்காரவேலரின் சிந்தனைகள் எத்துணைச் சிறந்தது என்பதையும், அச்

சிந்தனைகள் திரு.வி.க., அண்ணா ஆகியோரிடத்து எவ்வளவு அறிவாட்சி புரிந்துள்ளன என்பவற்றையும் நன்கு உணரலாம். சிந்தனை உலகில் சிறந்து விளங்கிய அவர் இயக்கப் பணிகளிலும் எவ்வாறு பணியாற்றியுள்ளார் என்பதையும் காண வேண்டும்.

இவர், காங்கிரஸ் கட்சியில் இருந்த போது பல பணிகளை முனைப்பாக ஆற்றியுள்ளனர். 1919 ஏப்ரலில் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து எப்ரல் 6- முதல் 13-ஆம் தேதி வரை, காங்கிரஸ் கட்சியால் நாடெங்கும் பெரும் கண்டனக் கூட்டங்கள் நடத்த பெற்றன. அந்நாள்களில் பஞ்சாப் படுகொலையைக் கண்டித்துப் பேசியும் எழுதியும் பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். குறிப்பாகவும் சிறப்பாகவும் சிறிய - பெரிய தொழிற்சாலைகளில் கதவடைப்புகள் நிகழ்த்தப்படுவதற்கும், கடையடைப்புகள் ஏற்படுவதற்கும் மூலவராக இருந்துள்ளார். பஞ்சாப் படுகொலையை முன்னிட்டுக் காந்தியடிகளால் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தின் போது, பொதுமக்களும் தொழிலாளர்களும் பங்கேற்க வேண்டுமென வலியுறுத்தினார். மற்றும் கல்வியாளர்களும் மாணவர்களும் வழக்கறிஞர்களும் இவ் வியக்கத்தில் பங்கேற்க வேண்டுமென "இந்து" நாளிதழில் 6.2.1922இல் கட்டுரை எழுதினார். தன்னுடைய வழக்கறிஞர் அங்கியைப் பொதுமக்களிடையில் கொளுத்தி வழக்கு மன்றத்திற்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார். வேல்ஸ் இளவரசர் வருகையைக் கண்டிக்கும் வகையில், தடை இருந்தபோதும், தன் இல்லத்தில் இருந்தே கறுப்புக் கொடியைக் காட்டி வேல்ஸ் இளவரசர்க்குத் தன் எதிர்ப்பைக் காட்டியவர்.

காங்கிரஸ் இயக்கத்தின் அகில இந்திய உறுப்பினராகவும் சென்னை காங்கிரஸ் இயக்கத்தின் தொண்டர் படைத் தலைவராகவும் இருந்துள்ளார். 1917 அக்டோபரில் தோன்றிய சோவியத் யூனியனின் தோற்றமும், அக்காலத்தின் முன்னும் பின்னும் அவர் படித்த பொதுவுடைமைத் தத்துவங்களாலும் அவர் ஒரு பொதுவுடைமை வாதியாகப் படிப்படியாக வளர்ந்து கொண்டிருந்தார். இதன் விளைவாக 1921இல், ஜாரியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடந்தது. அம் மாநாட்டிற்கு அவர் செல்லவில்லையாயினும் இங்கிருந்து ஓர் அறிக்கையை அனுப்பினார். அவ் வறிக்கையில், தொழிலாளர்களும், உழவர்களும் மேம்படும் வகையில் அமையும் பூரண சுதந்திரமாக அச் சுதந்திரம் வேண்டும் என்றார். 1901 இல் உருவாகிய சோவியத்துத் தொழிலாளர் ஆட்சிக்குத் துணையாக இருப்போம் என்று காங்கிரஸ் கட்சி அறிவிக்க வேண்டுமென்றும் கூறினார். 1922ஆம் ஆண்டில்

கயாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்று காங்கிரஸ் கேட்கும் சுதந்திரம் தொழிலாளர்-உழவர் ஆகியோரை மேம்படுத்தும் சுதந்திரமாகவும் அச் சுதந்திரத்திற்கு அவ்விருவகையினரையும் இணைத்துப் போராட வேண்டும் என்றும் கூறினார். இம் மாநாட்டில் தம் பேச்சைத் தொடங்கும் போது, உலகப் பொதுவுடைமை இயக்கம் எனும் மாபெரும் அமைப்பின் பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கின்றேன் என்றார். இம் மாநாட்டிலிருந்ததுதான் எஸ்.ஏ. டாங்கே அவர்களுடன் இவர்க்கு நட்பு முளைக்கிறது. மே தினத்தை இந்தியாவில் 1.5.1923இல் முதன் முதலில் கொண்டாடிய பெருமை இவரையே சேரும். அவ்வாண்டிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மே தினத்தைக் கொண்டாடினார். 1922இல் இந்திய நாட்டினரான சக்லத்வாலா அவர்கள் (பொதுவுடைமை வாதி) இங்மகலாந்து பாராளுமன்றதிற்குத் தேர்ந்தெடுத்த போது சென்னைத் தொழிலாளர் சங்கச் சார்பாகப் பாராட்டுச் செய்தி அனுப்புவதற்குக் காரணமாக இருந்தவரும் சிங்காரவேலரே. மற்றும் 1927 பிப்ரவரியில் சக்லத்வாலா சென்னைக்கு வந்தபோது அவருக்குச் சொன்னை நகர மன்றம் (இன்றைய சென்னை மாநகராட்சி) வரவேற்பு வழங்கக் காரணமாக இருந்தவரும் அவரே. அமெரிக்கா நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் போராடிய சாக்கோ - வான்சிட்டி ஆகியோரைப் படுகொலை செய்தபோது அதனைப் பெரிதும் கண்டித்துச் சென்னையில் பெரும் கண்டன கூட்டம் நடத்தினார். 84 வயதில் முதுமை அவரைத் தழுவிய போதும், இறுதி வரைத் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கத்திற்கும் போராடுவதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தார். இவ்வாறு சிந்தனை உலகிலும், இயக்கப் பணிகளிலும் வாழுங்காலத்தில் பெருந் தொண்டாற்றியதால், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர் 1925-இல் கான்பூரில் நடந்த கம்யூனிஸ்ட் மாநாட்டிற்குத் தலைமைத் தாங்கும் பொறுப்பை, பெருமையை அவர்க்கு வழங்கினார் எனலாம். தம் இறுதிக் காலம் வரை ஓயாது படிப்பதும் சாயாது உழைப்பதுமே தம் மூச்சாகக் கொண்டிருந்தார்.

புது உலகம்

1920 ஆம் ஆண்டு முதற்கொண்டே சிங்காரவேலர் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் மிகப் பெரிதும் கண்காணிக்கப் பட்டார். சிங்காரவேலரின் சோசலிச கருத்துகளும், ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான சிந்தனைகளும் ஆங்கிலேயர்களை அவ்வாறு செயலாற்ற தூண்டின. குடியரசு இதழில் சோசலிசம் குறித்தும், ஆங்கிலேய ஆட்சிக் கேடு குறித்தும் புரட்சிகரமான பல கட்டுரைகளை எழுதி

வந்தார். குறிப்பாக, "சமதர்ம விளக்கம்" எனுந் தலைப்பில் 17.1.1932 முதல் 23.4.1932 வரைத் தொடர்ந்து அரிய கட்டுரைகள் எழுதினார். இக் கட்டுரைகள் பொதுவுடைமைத் தத்துவத்தைப் புரிந்துகொள்ள சிறந்த அரிச்சுவடி எனலாம். இக்காலகட்டத்தில் தந்தைபெரியார் சோவியத்து யூனியனுக்குச் சென்று திரும்பி இருந்தார். அங்குக் கண்ட காட்சிகளாலும் கேட்ட கருத்துக்களாலும் அவரும் குடியரசில் மிகத் தீவிரமாக சோசலிச கருத்துக்களை எழுதிக் கொண்டிருந்தார். அப்போது, குடியரசில் "இன்றைய ஆட்சிமுறை ஏன் ஒழிய வேண்டும்? என்று ஆங்கிலேயர் ஆட்சியை மிகப் பெரிதும் தாக்கித் தலையங்கம் எழுதியிருந்தார். இதனைக் கண்ணுற்ற ஆங்கிலேய அரசு தந்தை பெரியாரை சிறையில் அடைத்தது. இதன் விளைவாகக் குடியரசு வெளிவரத் தடை ஏற்பட்டு விட்டது. பின்பு புரட்சி எனும் இதழ் வெளிவந்தது. அவ்விதழின் புரட்சிகரமான கருத்துகளைச் சகிக்க முடியாத அன்றைய அரசு அதற்குத்தடை விதித்தது. பின்பு "பகுத்தறிவு" (வார இதழ்) வெளிவந்தது. இதன் பின்பு, அரசியல் செயற்பாடு குறித்துச் சிங்கார வேலர்க்கும் பெரியார்க்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. காரணம் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட காலம்முதல் சீர்திருத்த இயக்கமாகவே இருந்து வந்தது. இவ்வியக்கம் வெறும் சீர்திருத்த இயக்கமாக மட்டுமே இருந்ததால் அதனால் பயன் விளையாது எனக் கருதிய சிங்காரவேலர், அவ்வியக்கம் கூடிய விரைவில் அரசியல் இயக்கமாக வளர வேண்டும் எனத் திட்டமிட்டார். ஆதலின் அரசியல் இயக்கமாக மாறவேண்டியதின் முக்கியத்துவத்தைப் பெரியார் சோவியத்து யூனியன் செல்வதற்கு முன்பாகவே சிக்ஙகாரவேலர் குடியரசில் விளக்கிப் பல கட்டுரைகளை எழுதினார். குறிப்பாக, சிங்காரவேலரின் தெளிந்த அரசியல் சிந்தனைகளை ஏற்குமளவுக்கு சுயமரியாதை இயக்கத்தினர் அக்கால கட்டத்தில் அத்துணைப் பக்குவம் பெற்றிருக்கவில்லை. எனினும், சிங்காரவேலர் தம் சிந்தனைகளைத் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருந்தார். அக் கட்டுரைகளை நோக்கின் சிங்காரவேலரின் தொலைநோக்குச் சிந்தனை நன்கு புலப்படும்.

''நமது நாட்டில், சாதி மதங்களை நியாய வாயிலாகக் கண்டிப்பவர்கள் சிலரே. சென்ற 50 வருஷமாக பண்டைக் காலத்துப் பழக்க வழக்கங்களைக் கண்டித்தவர்கள் அதிகமாகக் கிடையாது. தற்காலம், தென்னாட்டில் பெரிய சுயமரியாதைக் கூட்டத்தார் நமது சமூக வாழ்க்கையிலுள்ள தோஷங்களையும், ஆபாசங்களையும் கண்டிக்க முயன்ற விசயம் நமது நாட்டின் பாக்கியமே யாகும்.

இதுவுமன்றி சாதிக் கண்டனங்களையும் எடுத்துக்காட்டியவர்கள் சுயமரியாதைக்காரரைத் தவிர இதுகாறும் யாருமில்லை."3

இவ்வாறு சுயமரியாதை இயக்கத்தினரின் சிறப்புகளைப் பாராட்டி விட்டு, அவர்களின் குறைகளையும் அதே கட்டுரையில் சுட்டிக் காட்டுகிறார்.

சாதி ஒழிய வேண்டியது அவசியமே சமயமும் ஒழிய வேண்டியது அவசியமே. ஆனால், இவைகளுக்கெல்லாம் அடிப்படையாயுள்ளது வொன்றுண்டு. அது தொலையாமல் சாதி ஒழிந்தும் பயனில்லை. சமயம் ஒழிந்தும் பயனில்லை.

அதாவது பொருளாதார வேற்றுமையை வைத்துக் கொண்டு, மத சீர்திருத்தம், சாதி சீர்திருத்தம், முதலிய சீர்திருத்தங்கள் செய்தாலும் யாதும் பயன்படாது. மதத்தைத் தவிர்த்த அரசாங்கங்கள் பலவுள. குடியரசு அமைத்த அரசாங்கங்கள் பலவுள. இருந்தும் பாமர மக்களின் கதி என்னவாயிற்று. வறுமையும் நோயும், நிலமில்லாமையும், வீடில்லாமையும், கல்வியறிவில்லாமையும் கேள்வியில்லாமையும், வேலையில்லாமையும் உலகிலுள்ள பெரும்பான்மையோருடைய வாழ்வாகும்! இந்த முக்கிய வித்தியாசத்தை வேர் அறுக்காமையால்தான் தற்போது உலகில் காணும் கொடுமைகள் யாவும் நீண்டு வளர்ந்து வருகின்றன. இந்தக் கோடாலிக் காம்புதான் மனித உலகத்திற்கு ஈனமாகவுள்ளது.

உலகில் சுதந்திரத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் அடிப்படையாயுள்ளது. பொருளாதார சமத்துவமே. இந்தச் சமத்துவம் ஏற்படுகின்றவரை, எந்தச் சீர்திருத்தம் பயன்படாவென அறிக. உலகமும் சாதி சமயமற்ற சாஸ்திரமாய் நின்றாலும், பொருளாதார வித்தியாச ங்கள் இருக்கின்றவரை, சீர்படாதென்று துணிந்து கூறலாம்.

ஆதலின் சுயமரியாதைச் சங்கத்தார் சாதிசீர்திருத்தம் சமய சீர்திருத்தத்துடன் நின்றுவிடாமல் பொருளாதாரச் சீர்திருத்தத்தையும் கைகொள்ள வேண்டிவரும். இதன் சம்பந்தமாக ஒரு திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அரசியல் சீர்திருத்தத் துறையில் இறங்குவார்களேயானால் மற்ற சீர்திருத்தங்களும் கஷ்டமில்லாமலேயே உண்டாகிவிடும்".

இவ்வாறு சிங்காரவேலர் அக் கட்டுரையில் நன்கு விளக்கிவிட்டு முடிவில் சுயமரியாதைக் கொள்கைத் திட்டங்களைக் கடைபிடிக்க வேண்டுமென எண்ணி 16 திட்டங்களை முன் வைத்தார்.

தந்தை பெரியார் சோவியத்து யூனியனுக்குச் சென்று திரும்பும் வரை இத்தகைய சிந்தனைகளைச் சிங்காரவேலர் தொடர்ந்து குடியரசில் எழுதிக் கொண்டே இருந்தார். அக் கட்டுரைகள் மலர்க்கு நல்ல தெளிவைத் தந்தன. தந்தை பெரியாரும் சோவியத்து யூனியனிலிருந்து திரும்பியதும் சிங்காரவேலரின் கருத்துக்கள் ஏற்புடையனவே எனக் கருதி அவரும் பிரச்சாரம் செய்து வந்தார். இத் திட்டங்களுக்குச் சரியான கொள்கை வடிவம் கொடுக்க வேண்டுமெனக் கருதி, ஈரோட்டில் தந்தை பெரியார் இல்லத்தில் பெரியாரும் சிங்காரவேலரும் இணைந்து முடிவெடுத்துப்பின்பு நண்பர்களுடன் விவாதித்துத் திட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தனர். அத் திட்டத்தைக் குடியரசு இதழில் 1.1.33 அன்று வெளியிடப்பட்டது. முதலில் இத்திட்டத்திற்குப் போதிய ஆதரவு இருந்தாலும் நாளடைவில் மிகவும் குறைந்துவிட்டது. இதற்குப் பெருங்காரணம் தந்தை பெரியாரே ஆவர். தந்தை பெரியார் நாளடைவில் ஜஸ்டிஸ் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதால், புரட்சிகரமான திட்டங்களைச் செயற்படுத்தாமல் இருந்தார். மற்றும் ஜஸ்டிஸ் கட்சி பிராமணர் எதிர்ப்புக் கட்சியாக விளங்கியதே யன்றி, நாட்டு விடுதலைக்கும் பொதுவுடைமைத் திட்டத்திற்கும் தடையாகவே இருந்தது. மேலும், தந்தை பெரியார் பொதுவுடமைத் திட்டத்திற்கு ஆதரவாளராகி இருப்பதை அவ்வியக்கம் விரும்பவில்லை. மற்றும் சுயமரியாதை இயக்கத்தின் பணி சமுதாயச் சீர்திருத்தத்திற்குப் பயன்பட வேண்டுமேயன்றிப் பொதுவுடைமைச் சிந்தனைகள் பரப்புவதற்குப் பயன்படக்கூடாதெனத் தந்தை பெரியாருக்கே அறிவுறுத்தியது. ஜஸ்டிஸ் கட்சி தந்தை பெரியாரின் இந்நிலைப்பாட்டைக் கண்டித்துச் சிங்காரவேலர் 8.10.1933 அன்று குடியரசு இதழில் ஒரு கட்டுரையே எழுதியுள்ளார். ஈரோட்டுத் திட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்துத் தொடர்ந்து தொண்டாற்றியிருந்தால், கேரளம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் உள்ள பொதுவுடைமைக் கட்சியைக் காட்டிலும், தமிழகப் பொதுவுடைமை இயக்கம் மிகப் பெரும் வலிமையைப் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஜஸ்டிஸ் கட்சியுடன் பெரியார் நெருக்கமான உறவு கொண்டது சிங்காரவேலர்க்கும் சிறிதும் பிடிக்கவில்லை. தந்தை பெரியாரை விட்டுப் பிரிந்த சிங்காரவேலர் தம் அரசியல் நிலைப்பாட்டிற்கேற்பப் 'புதுஉலகம்' எனும் திங்கள் இதழைத் தொடங்கினார். சிங்காரவேலரின் வழித் தோன்றல்களான நாகை. கே. முருகேசன் ஆசிரியராகவும் நாகை டி.என். இராமச்சந்திரன் கௌரவ ஆசிரியராகவும் கொண்டு அவ்விதழ் 1.5.1935 முதல் வெளிவந்தது.

இவ் விதழில், விஞ்ஞானம், தத்துவம், மானிடவியல், பொருளியல், அரசியல் குறித்துச் சிங்காரவேலர் பல அரிய

கட்டுரைகளை எழுதியுள்ளார். குறிப்பாக, மார்க்சியம் குறித்து நுட்பமான பல கட்டுரைகளை எழுதியிருந்தார். இன்றளவிலும் அக் கட்டுரைகள் கருத்துக் களஞ்சியங்களாக ஒளிர்கின்றன. மூடநம்பிக்கைகளின் உருவாக்கங்களான பேய், பிசாசு சோதிடம் குறித்து அறிவியல் பூர்வமான அரிய பல கட்டுரைகளையும் வரைந்துள்ளார். ஆல்பர்ட் ஈன்ஸ்டினின் சார்புக் கொள்கையை (Theory of relatinity) மிகச் சுருக்கமாக அந்நாளிலேயே விளக்கியுள்ளார். பொருள் முதல்வாதத்தை (Meterialism) "ஜடத் தத்துவம்" மற்றும் "ஜடம்" எனும் தலைப்புகளிலும் காரல்மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல் வாரத்தை (Historical Meterailism) சமூகத் தத்துவம் எனும் தலைப்பிலும் விளக்கியுள்ளார். "குடியரசு" "புரட்சி" ஆகிய ஏடுகள் ஆங்கிலேயே அரசின் தலையீட்டால் நின்றுவிட்ட பிறகு சிங்காரவேலரின் புதிய அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக "மூலதனம்" எனும் பெயரில் மாத இதழ் தொடங்குவதென முடிவு எடுக்கப்பட்டது. இவ் விதழுக்குப் பலவாறு முயற்சித்தும் அன்றயை ஆங்கிலேயே அரசு அனுமதி கொடுக்க மறுத்து விட்டது.

சிங்கார வேலரை மிகத் தீவிரமான பொதுவுடைமை வாதி எனக் கருதிய ஆங்கிலேய அரசு பலமுறை அவர் வீட்டைச் சோதனை (Raid) இட்டது. தொடர்ந்து அவரைக் கண்காணித்தும் வந்தது. இதன் காரணமாகவே "மூலதனம்" எனும் இதழ் வெளிவர அவ்வரசு அனுமதி தர மறுத்தது. எனினும் எப்படியும் ஓரிதழை வெளிக்கொணர்ந்தே ஆகவேண்டும் என எண்ணியதால் "புது உலகம்" பிறந்தது. முன்குறித்த காரணங்களால், "புது உலகத்திற்கு" ஆசிரியராகத் தன்னை ஆக்கிக் கொள்ளாமல், தம் நண்பர்களை ஆசிரியர்களாக அமர்த்தினார். அவ்விதழுக்கான பொருட் செலவையும் பெரும் உழைப்பையும் தானே ஏற்றார்.

அவ்விதழில், ஸயின்டிஸ்ட், தோழர், அப்சர்வர், எமினன்ட் லாயர், கிரிட்டிக், இமாலயதவசி, சிந்தனாவாதி, மனித நேய வாதி, சமதர்ம யுக்திவாதி சோசலிஸ்ட் எனும் புனை பெயர்களில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு இதழ்களிலும் தலையங்கம், மற்றும் இரண்டு அல்லது மூன்று தலைப்புகளில் தனிக்கட்டுரைகளையும் எழுதி வந்தார். இப்படைப்பின் பெயர்களை நுணுகிப் பார்த்தால் சிங்காரவேலரின் நுண்மான் நுழைபுலத்தையும் சமுதாய உணர்வையும், முற்போக்குச் சிந்தனையையும் நன்கு உணரலாம். தன்னால், புது உலகம் நின்றுவிடக் கூடாதென எண்ணியே தன் பெயரை மறைத்துப் புனைபெயர்களில் எழுதினார் எனலாம். சில நேரங்களில் 'முகமூடி'

எனும் புனைபெயரிலும் கட்டுரைகள் எழுதிவந்தார். (பார்க்க - புது உலகம் - டிசம்பர் 1935) இவ்விதழில் இந்தியாவின் சிக்கல்களை மட்டுமே யல்லாமல் உலகச் சிக்கல்களைப் பற்றியும் அலசி ஆராய்ந்தது.

இதழின் நோக்கம்: தந்தை பெரியாரிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின காரணமாக பொதுவுடைமை கொள்கைகளைச் சரியான முறையில் எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி விளக்க வேண்டும் எனச் சிங்காரவேலரும் அவருடைய நண்பர்களும் எண்ணினர். இதன் காரணமாகவே வெளியிடும் இதழுக்கு "மூலதனம்' எனப் பெயரிட நினைத்தனர். ஆனால், ஆங்கிலேய அரசு அதற்கு அனுமதி வழங்க மறுத்தனர். 1920 முதல் தொடர்ந்து ஆங்கிலேய அரசு சிங்காரவேலைரைக் கடுமையாகக் கண்காணித்துக் கொண்டிருந்தும், தம் இதழுக்கு மூலதனம் எனும் பெயரையே சூட இருந்தது சிங்காரவேலரின் கொள்கை உறுதியைக் காட்டுகிறது. எனக் கூறலாம். மற்றும் காரல் மார்க்சின் மூலதனத்தை (Das capital) யும் அவரின் கோட்பாட்டையும் தமிழக மக்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே "மூலதனம்" எனப் பெயரிட்டார் போலும். ஆங்கிலேய அரசு அனுமதி தரமறுத்தால் இனித் தாம் காணவேண்டிய உலகத்தை நோக்கியே "புது உலகம்" எனப் பெயரிட்டார் எனலாம். "புது உலகம்" இதழின் வழிப் பொதுவுடைமைக் கொள்கைகளை மட்டுமின்றி வளர்ந்து வரும் புதிய விஞ்ஞான கருத்துகளையும் விளக்க வேண்டும் என்பதையும் அவர் ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார். "புது உலகம்" இதழ் தொடங்கும் போது அவர் எழுதிய முன்னுரையை நோக்கினால் உண்மை விளங்கும்.

'PURE SCIENCES என்று வழங்கும் சுத்த விஞ்ஞானத்தை எடுத்துரைக்க தமிழ் பாஷையில் ஒரு தனித்த பத்திரிகை கூட இல்லை. இந்த அவசியத்தைப் பூர்த்தி செய்ய "புதிய உலகம்" என்ற பத்திரிகை வெளிவந்ததைப் போற்றுகிறோம்.

நமது சமூக வாழ்க்கை (Social life) கூறவேண்டுமானால் விஞ்ஞான முறை இன்னதென்று தெரிந்துகொள்ளல் அவசியமாகும். விஞ்ஞான முறையைப் பெரும்பான்மை மக்களுக்குத் தெரிவிக்காமையால் அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் தினசரி பழக்கவொழுக்கங்களிலும் அறிவுடையோரும் தங்கள் பகுத்தறிவை உபயோகப்படுத்தாமல், மூடப் பழக்கங்களுக்கும் மூட எண்ணங்களுக்கும் ஆளாகின்றனர். தமிழ் உலகம் இன்று தலைக்கீழாய் நின்று வருவதற்கு இந்த அறியாமையை முதற் காரணம்.

பெரும்பான்மை மக்கள் ஸயன்சின் மார்க்கம் இன்னதென்று தெரிந்துகொள்ளாத தோஷத்தால் மூட ஒழுக்கங்களாலும் ஜாதி சமய துராசாரங்களாலு:ம வாடி வதங்கி வருகின்றனர். நிழலைக் கண்டு பயப்படும் குதிரை, ஆடு மாடுகளைப் போல் நமது நாட்டு மக்கள் பூமி நிழலால் மறைக்கப்பட்டு உண்டாகும் சந்திர கிராணத்தையும் சந்திரன் நிழலால் மறைக்கப்பட்டு உண்டாகும் சூரிய கிராணத்தையும் கண்டு பயப்படும் அறியாமையே என்னென்று கூறுவது? இந்தக் குறைகளை நீக்குவதற்கும் ஒரு விஞ்ஞான பத்திரிகை வேண்டுமென்ற கோரிக்கை இந்தப் "புதிய உலக" (புது உலகம்) தோற்றத்தால் நிறைவேறுமென்று நம்புகின்றோம்.

விஞ்ஞான அபிவிருத்தியால் உலக ஞானம் தெளிவு அடைந்து வருகின்றது. மக்கள் பகுத்தறிவும் விசாலப்பட்டு வருகின்றது. உள்ளது உள்ளபடி தெரிந்து நடக்கவும் விஞ்ஞானத்தால் மிகவும் சாதகமாகும். நேர்மையான யோசனையைப் புரிவதற்கும் ஸ'யன்சின் உதவி வேண்டியது மிக அவசியம். 'What knowldege is most worth'? எந்த ஞானம் எல்லா ஞானத்தைவிட சிறந்தது என்ற கேள்விக்கு ஸயன்ஸ் ஒன்றே என்று மாபெரும் ஞானியாகிய ஹெர்பட் ஸ்பென்ஸர் தெரிவித்ததை நமது தமிழ் மக்களிடம் அறிமுகம் செய்வதே இந்தப் புதிய உலக பத்திரிகையின் கோரிக்கையாக வேண்டுமென்று வேண்டுகிறோம்."

புது உலகம் – மே 1935

முற்குறித்த மேற்கோளால் சிங்காரவேலரின் நோக்கம் இனிது புலனாகும். புது உலகத்தில் வெளிவந்த கட்டுரைகளை நோக்கினால் அரசியல், பொருளியல், தத்துவம், மானிடவியல் புவியியல் போன்ற துறைகள் பற்றியும் பல கட்டுரைகள் வந்திருப்பதைக் காணலாம். மனிதனது மேம்பாட்டில் மிகத்தொலை நோக்குக் கண்ணோட்டம் உடையவராதலால் அவர் பல துறைகளைப் பற்றியும் எழுதினார் எனலாம். "you can became communist only when you enrich your mind with a knowledge of all treasures created by mankind."[3]

(மனிதகுலத்தால் உருவாக்கப்பட்ட அனைத்து அறிவுக் கருவூலங்களையும் தன் வயப்படுத்திக் கொள்பவனே ஒரு பொதுவுடைமைவாதியாக விளங்க முடியும்)

எனும் லெனின் வரையறைக்கு விளக்கமாகத் திகழ்ந்தவர் சிங்காரவேலர் எனக் கூறலாம். பல அறிவுத்துறைகளைப் பற்றி

மட்டுமல்லாமல், உலகின் தலை சிறந்த விஞ்ஞானிகளையும், அவர்களின் உயரிய கண்டு பிடிப்புகளையும் விளக்கி அவர் எழுதினார்.

"ஐரோப்பிய சரித்திரத்தில் அறிவுச் சுதந்திரத்திற்காகப் போராடிய மக்கள் எண்ணற்றோர் ஆவர். எனினும் அவர்களில் சிறப்பாக சாக்ரடிஸ், வானினி, காம்பெனலா, கலிலியோ, புரூனோ, சர்வதேஸ் முதலானவர்களைக் குறிப்பிடலாம். அவர்களுள் நாம் இப்பொழுது புருனோவைப் பற்றிச் சிறிது கவனிப்போம்".

புதுஉலகம்-அக்டோபர் 1935

இக்கட்டுரையில் புருனோவின், பிறப்பு, வளர்ப்பு, உருவாக்கம் அவரின் சிந்தனை வளர்ந்த வரலாறு, அவரின் கண்டுபிடிப்பு, கொள்கை உறுதி ஆகியவற்றைப் பத்துப்பக்கங்களில் விளக்கியுள்ளார். அவர் எழுதிய கட்டுரைகளில் இக்கட்டுரை செறிவும் நிறைவும் வாய்ந்தது. இக்கட்டுரையைப் பெரும் ஈடுபாட்டுடன் அவர் எழுதியுள்ளதாகத் தெரிகிறது. அவர் எழுதிய நீண்ட கட்டுரைகளுள் இதுவும் ஒன்று. தாம் எழுத விரும்பிய விஞ்ஞானிகளில் முதலாமானவராகப் புருனோவைத் தெரிந்தெடுத்ததும், அக் கட்டுரையை ஈடுபாட்டுடன் எழுதியிருப்பதும், புருனோ மீது அவர் கொண்ட மதிப்பைக் காட்டுகிறது எனலாம்.

"புருனோ முட்டாள்களுக்கு எப்பொழுதும் இடங்கொடுத்ததில்லை. கர்விகளை கண நேரம் சகிப்பதில்லை. புதுமை எண்ணங்களால் பொங்கித் ததும்புவார். போட்டிக்கஞ்சா வம்புப் பேச்சுக்கு . அடக்கம், சில சமயம் தனக்கு விலக்பேனதாகக் கருதிப் பேச்சில் தன்னை இடித்தவனைத் தானும் இடித்துக் காட்டுவார்".

"தூங்கும் மனங்களைத் தட்டி எழுப்புபவன். அசட்டுத் துணிவையும் அறியாமையையும் அகற்றுபவன். நான் எல்லாவகையினும் மக்களைப் பொதுவாக நேசிக்கிறேன் . . . பொய்யும் புனைச் சொல்லையும் பிரச்சாரம் செய்யும் பித்தலாட்டக்காரர்களால் வெறுக்கப்படுபவன். நான் அறிவு ஆராய்ச்சிப் பிரியர்களாலும் யோக்கியர்களாலும் உதாரண குணமுடைய யதார்த்தவாதிகளாலும் போற்றப்படுபவன்." புதுஉலகம்-அக்டோபர் - 1935

புருனோவின் இப் பண்பு நலன்கள் சிங்காரவேலர்க்கும் பொருந்தும். சிங்காரவேலர் தன்னைத் தான் அறிமுகப் படுத்துகிறாரோ என எண்ண வேண்டியுள்ளது. சிங்காரவேலரை நன்கு அறிந்தவர்களுக்கு இக் கூற்று உண்மையினும் உண்மை என்பது இனிது புலனாகும்.

விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தையும், விஞ்ஞானிகளையும் தம் இதழில் சிறப்பித்து எழுதிய சிங்காரவேலர், உலகின் ஏதாவதொரு பகுதியில் சிறந்த நூல்கள் வெளிவருமாயின் அவற்றின் சிறப்பியல்புகளைத் தம் இதழில் விளக்கி எழுதுவதையும் கடமையாகக் கொண்டார். 1935ஆம் ஆண்டில் வெளிவந்த இரு விஞ்ஞான நூல்களை விளக்கி எழுதி அவை கிடைக்கும் இடத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

1. Religion of The Open Mind by - மதங்கள் விஷயத்தில் பொதுமனப்பான்மை.
2. Social Record of Christianity by - J. Kacabi (Watts and Co. London) - கிறிஸ்துமதத்தின் சமூக வேலை.

இவ்விரு சிறு புத்தககங்கள் வரப்பெற்றோம். இதன் விலை ஒன்றுக்கு 12-அணா (1 ஷிளங்) இங்கு மகாதேவன் வேப்பேரி, சென்னை, புத்தக ஆலயத்திலும் கிடைக்கும்.

சமதர்மிகளாயினும், பகுத்தறிவாளராயினும், இந்த நூல்களை வாசிக்க தமிழ் மொழிகளில் எளிய நடையில் எழுதி, பல்லாயிரம் மக்களுக்கு இப்பெரிய விஷயங்களில் யோசனையையும், அறிவையும், ஞானத்தையும் உண்டாக்க தமிழ்நாட்டில் பொருளுடையோர் முன்வரக் கோருகிறோம்.

மதங்கள் விஷயத்தில் பொதுமனப்பான்மை (தலைப்பு கட்டுரையாளரால் தரப்பட்டது)

"மதக்கதைகளாகிய சிருஷ்டி, ஆன்மா, மோட்சம், நரகம், முதலிய கற்பனைகளில் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். மனிதன் மிருகங்களில் ஒன்றாய் இருந்து, படிப்படியாய் மனிதனாக மாறி வந்தான் என்ற விஞ்ஞான விஷயம், உலகில் பரவி வரவர கடவுள் சிருஷ்டி என்ற கதை பஞ்ச தந்திரக் கதைகளின் ஒன்றென்னும்படி ஆயிற்று. மத சித்தாத்தங்களில் முக்கியமான சித்தாந்தமாகிய ஜடம் வேறு, சித்து வேறு என்பதை (Matter and Mind) நடத்தை விஞ்ஞனம் பொய்யாக்கி வருகிறது. இருப்பது, அதாவது, நமது அனுபவத்திற்கு வருவது ஜடம் சித்து என்பது ஜடத்தின் அசைவு என்று நடத்தை விஞ்ஞானம் (Behaviourism) வற்புறுத்தி வருகிறது. நீதி, நெறி என்பவை கடவுளின் ஆணை அல்ல. மக்களின் கூட்டுறவால் உண்டான நடத்தைகள் என்று நீதி நெறி விஞ்ஞானம் எடுத்து நிரூபித்து வருகிறது".

கிறிஸ்து மதத்தின் சமூக வேலை

கிறிஸ்து மார்க்கம் உண்டான காலத்தில் ஆடுமாடுகளைப் போல் வாங்கி விற்கப்பட்ட அடிமைத்தனமென்று வழங்கிவந்த ஸ்தா

பனத்தை, இந்த கிறிஸ்து மார்க்கம் ஆதரித்து வந்தவுடன், இந்த மத ஸ்தாபனங்கள் (Churches) அடிமைகளைக் கொண்டு வேலை வாங்கி வந்தன. மத்திய காலத்திலும் இந்தக் கொடுமையான ஸ்தாபனத்தை கிறிஸ்துமதம் தடுக்கவுமில்லை. நாளைக்கும் ஆப்பிரிக்க நாட்டில் அடிமைத்தனம் வழங்கிவரும் நாடு கிறிஸ்து நாடே. கிறிஸ்து மதத்தவர் உலகில் அடிமைத்தனம் ஒழித்ததென்பது உண்மையாகாதென று மக்காபி கருதி யுக்தியுடன் நிரூபிக்கிறார். பெண்களிடையே தாழ்ந்த நிலைமையை கிறிஸ்துமதம் உயர வைத்ததென்பது உண்மையல்ல. கிறிஸ்துமதம் உலகில் தோன்றியது முதல் பெண்களைத் தாழ்ந்தவர்களென்றே பாவித்து வந்தது. . . . உழைப்போர் சம்பந்தமாகக் கிறித்துமத நிலைமையை அறிய வேண்டுமானால் மக்காபியினுடைய நேற்று வெளிவந்த புத்தகத்தை வாசித்தறியலாம்.

புதுஉலகம்–ஆகஸ்ட் 1935

புதிதாக வெளிவந்த இரு நூல்களைப் பற்றித் தம் மொழியில் கருத்துரையை உடனுக்குடன் வழங்கியிருப்பதைக் கொண்டு சிங்காரவேலரின் சமுதாயக் கடமையை நன்கு உணரலாம்.

இதேபோன்று, சார்லஸ் டார்வின் (1809 - 1888) பரிணாமக் கொள்கையை மின்சாரத் துறையில் சிறந்த விஞ்ஞானியாக விளங்கிய சர். அம்பிரராஸ் பிலமிங் (Sir. Ambraose Fleming - 1849 - 1945) ஒரு முறை மறுத்துப் பேசினார். மறுத்துப் பேசியதுடன் பைபிளில் கூறியவாறே கடவுள் மனிதனைப் படைத்தார் என்று விளக்கினார். அதனைக் கேட்ட இன்னொரு விஞ்ஞானியான சர். ஆத்தர் கீத் (Sir Arthar Keith 1866 - 1955) பிலமிங்கின் கருத்தை மறுத்து சிறந்த முறையில் (Antiquitx of Man) "மனிதனின் பூர்வாகலம்" எனுந் தலைப்பில் மூன்று தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அத்தொகுதிகளை படித்து அதனை வரவேற்றுப் பாராட்டித் தம் இதழில் "விஞ்ஞான குறிப்பு" "மதிப்புரை" எனும் இரு தலைப்புகளில் இருகட்டுரைகளை அவர் வரைந்துள்ளார். நூலாசிரியரின் கருத்துக்களை மிகச் சுருக்கமாகவும் எளிமையாகவும் சிங்காரவேலர் தம் நடையில் விளக்குவதைக் காணலாம்.

"டார்வின் சித்தாந்தம் முதலில் வெளியானபோது மிருக மனித எலும்புகள் கண்டெடுக்கவில்லை. அதன்பிறகு, கடந்த 190 வருஷத்திற்குள் பலவித மிருக மனித எலும்புகள் கண்டெடுக்கப் பட்டன. ஜாவா தீவில் "பிதகாந்த ரோபஸ்" என்ற ஒரு குரங்கு மனித எலும்பு கண்டெடுக்கப்பட்டது. அதன் பிறகு ஆங்கில நாட்டில் பிதகாந்த ரோபசுக்கு மேலாக ஒரு மிருக மனிதனுடைய எலும்புகளும்

அகப்பட்டன. இந்தப் பூர்விக மிருக மனிதர் சில லட்ச வருஷங்களுக்கு முந்தி, நமது மூதாதைகளாக உலகில் ஜீவித்திருக்கலாம் என்ற உத்தேசம் மேற்கண்ட எலும்புகளால் வற்புறுத்தப்படுகிறது. நமது மனித மூதாதைகள் சற்றேறக்குறைய சில லட்ச வருஷங்களுக்கு முன்னர், மிருகங்களாக அடர்ந்த தோப்புகளிலும், குகைகளிலும் நதி ஓரங்களிலும் வாழ்ந்து வந்தார்களென்பதை மறுக்க முடியாது.

மனிதன், பைபிளில் சொன்னபடி மண்ணால், கடவுளால் செய்யப்பட்டான் என்றால் மனித உருவத்திற்கும், மற்ற மிருக உருவங்களுக்கும் அவ்வளவு ஒற்றுமை இருப்பானேன் என்று சர் ஆர்த்தர்கீழ் கேட்கின்றார்.

கட்டட ஒற்றுமை, கர்ப்பவளர்ச்சி வொற்றுமை, இரத்த ஒற்றுமை, இத்தியாதி வொற்றுமை மிருகங்களுக்கும் இருந்து வருவானேன்? எல்லா உயிர்களும், புல், பூண்டு, விருட்சம், புழுப்பூச்சி, நகர்வன, பறப்பன, நடப்பனவெல்லாம், ஒரு சிறு கிருமி முட்டையிலிருந்து வளருவானேன்? சர் அம்ரோஸ் கூறும் சிருஷ்டி வாதத்தால் இத்தியாதி அனுபவ காட்சிகளுக்கு எந்தவித சமாதானமும் கொடுப்பதற்கில்லை. ஆனால், எல்லா உயிர்களும் ஒரு காலத்தில் ஒரு சிறு கிருமி வித்திலிருந்து வளர்ந்து மாறி வந்த படியால் எல்லா உயிர்களும் ஜனிக்கும் போது சிறு கிருமி உருவத்திலிருந்துதான் முளைக்கின்றன. இதுதான் நமது யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தி இருக்கின்றது." -புது உலகம்- ஜூலை 1935.

முன் குறித்தவாறு சர் ஆர்தர் கீத் அவர்களின் கருத்துகளைக் கூறிவிட்டு, சிங்காரவேலர் தம்முடைய கருத்துகளையும் முன்வைக்கிறார். அவர் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

"மனிதன் கடவுள் உருவத்தைப்போல் சிருஷ்டிக்கப் பட்டவனென்றால், கடவுள் உருவம் சைனாக்காரன் முகத்தைப் போன்றாகிலும், அல்லது காபிரி முகத்தைப் போன்றாகிலும், அல்லது தமிழ்நாட்டுத் திராவிடன் முகத்தைப் போன்றாகிலும் அல்லது ஐரோப்பிய முகத்தைப் போன்றாகிலும் பெற்றிருந்தாரா? எனக் கேட்கின்றோம். இவ்வித வித்தியாசம் கொண்ட முகங்களைப் போல் ஆதிமனிதனைப் படைக்கவில்லை. என்றால் இவ்வித வித்தியாசங்கள் பிறகு ஏற்பட்டிருக்க வேண்டும். பிறகு ஏற்பட்ட வித்தியாசங்கள் மக்களுக்குள் இயற்கையாகத்தான் எழுந்திருக்கவேண்டும். இவ்வித வித்தியாசங்கள் பூர்வ மனித விஞ்ஞானிகள் சொல்வதுபோல் (Anthropologists) சுமார் 5 அல்லது 6 லட்ச வருசங்களாக இயற்கையாக

உண்டாகிருக்குமானால் லட்ச வருசங்களாக ஏன் 5 அல்லது 6 கோடி வருசங்களுக்குள் ஆதி மனிதன் ஆதி மிருகமொன்றிளிருந்து இயற்கையாகவே மாறி வந்திருக்க மனிதன், தனது தாய் கர்ப்பத்தில் வளரும்போது ஐந்து அல்லது ஆறு வாரக் கருவில் வாலொன்றை, கைகால்கள் தோன்றுவதற்கு முன் காட்டிக் கொண்டு வளருவானேன்? கடவுள் சிருஷ்டி என்றால், அவர் உருவத்திற்கும் ஒரு காலத்தில் வாலொன்று இருத்தல் வேண்டுமன்றோ? இதை கவனிப்பாரில்லை" - புதுஉலகம்-மே-1935.

இப்போது இருப்பது போன்று வானொலி, தொலைக்காட்சி இன்டர்நெட் போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லை அக்காலத்தில் இங்கிலாந்து நாட்டில் இரு விஞ்ஞானிகளுக்கே ஏற்பட்ட தத்துவப் போரை கூர்ந்து நோக்கி, அதன் சார்பான நூற்களையும் படித்து, விஞ்ஞானத்திற்கு எதிராகத் தோன்றிய கருத்துகளுக்கு உடனுக்குடன் சாட்டையடி கொடுக்கும் சிங்காரவேலரின் உலகப்பார்வையும், அறிவு வேட்கையும் நம்மால் பாராட்டத்தக்கது மட்டுமன்று; பின்பற்ற தக்கது மாகும். மற்றும் சர் அம்ரோஸ் பிளமிங்குக்கும் சர் ஆர்தர் கீத்துக்கும் நடந்த கருத்துப்போரை நூல்களில் மட்டுமேயல்லாமல், அக்காலத்தில் இங்கிலாந்தில் வெளிவந்த "மார்னிங்க போஸ்ட்" டெய்லி டெலிகிராப் ஆகிய செய்தித்தாள்களில் வெளிவந்த செய்திகளையும் சிங்காரவேலர் ஒப்பிட்டு ஆராய்கிறார். (பார்க்க - புது உலகம் - ஜுன் 1935) அக் காலத்திலேயே செய்திகளை எப்படியெல்லம் திரட்டியிருக்கிறார் என்பதற்கு இது ஒரு பெருஞ்சான்று. விஞ்ஞானத்தை ஆய்ந்த அவர் தத்துவங்களை எப்படி ஆய்ந்துள்ளார் என்பதை இனிக் காண்போம்.

சிங்கார வேலரும் அத்துவைதமும்

இந்தியத் தத்துவஞானங்களும் மிகுந்த செல்வாக்கு உடையது அத்துவைதம். இதனைப் பற்றிப் பேராசிரியர் பலர் நன்கு விளக்கிப் பலநூலகளை எழுதியுள்ளனர். அத்துவைத்தை விளக்க டாக்டர் இராமகிருஷ்ணன், டாக்டர் டி.எம்.பி. மகாதேவன் போன்ற பலர் வழிவழியாகக் கூறிவரும் உதாரணத்தைச் சிங்காரவேலர்மிக எளிமையாக மறுப்பதைக்ககாணலாம். அத்துவைதச் சங்கரரால் உருவாக்கப்பட்டது. அத்துவைதம் என்றால் இரண்டற்றது என்று பொருள். அதாவது பிரம்மரும் ஜீவனும் ஒன்றேயன்றி வேறு வேறு அல்ல என்பதே இதன் பொருளாகும். இனி சிங்காரவேலரின் விளக்கத்தைக் காண்போம்.

"தத் + துவம் + அசி என்று பிரித்து அதுவே + நீ + ஆனாய் என்றார் சங்கரர். தத்+துவம்+அசி என்ற மூன்று மூலச் சொற்களுக்குரிய பொருள்களை யாரும் அனுபவத்தில் கண்டதில்லை. (They are mere assumptions) அவை வெறும் சங்கல்பங்களே. அவை வெறும் சொற்கள். அது நீ ஆனாய் என்று பிரித்தபோது "அது" என்பதை பாடும். அனுபவித்தாரில்லை. "அது" என்றால் எது? பிரம்மம் என்றால் எது? அது என்பார். இவ்விதமாக ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல்லைக் காட்டி வருகிறார்களொழிய அச் சொல்லுக்குரியதை தெரிய செய்தபாடில்லை. இதைத்தான் சங்கர பாஷ்யத்தில் காண்கிறோம். இந்தச் சொல்லின் பேரில் எழுதியுள்ள வியாக்கியானங்களுக்கு அளவு இல்லை. இதுதான் அத்துவைதம் என்பார்.

இந்த மாயாவாதிகளை எடுத்துக் கொள்வோம். இவர்கள், உலகம் மாயை என்று கூறுவார்கள். அதாவது நமது புலன்களுக்கு தோன்றும் உலகம் உண்மையல்ல. புலன்கள் உலகை உள்ளபடி (பிரம்மத்தின்படி) அறிவிக்க முடியாது. (senses are all decepfives) அதாவது புலன்கள் எப்போதும் மோசம். புலன்களில் அறியக் கூடிய உலகம் மெய்யல்ல. உண்மையாக இருப்பது ஆன்மாவே. ஆன்மாவின் மயமே இவ்வுலகமாகும் என்று வாதிப்பார்கள். உலகமே மாயம் என்று நிரூபிக்க சிலதிருஷ்டாங்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

கிளிஞ்சலை வெள்ளிபோலும், கயிற்றைப் பாம்புபோலும் பாவித்து நடப்பதைப் போல் பிரம்மத்தை உலகச் சராசரப் பொருள்களாகப் பாவிக்கிறோம் என்பார்கள்.

ஆனால் இந்த வாதத்தில் () ஒரு பிழை இருந்து வருகிறது. அதாவது பிரம்மம் என்ற சொல்லில் அடங்கிய பொருளை யாரும் கண்களால் பார்த்ததில்லை. ஆனால் காட்டும் திருஷ்டாந்தத்தில் கிளிஞ்சல், வெள்ளி, பாம்பு, கயிறு முதலிய திருஷ்டாந்திரப் பொருள்களைக் கண்களால் பார்த்து வருகின்றோம். இப்பொருள்களைப் பார்த்திராதவனுக்கு, ஒன்று மற்றொன்றாகப் பார்க்கும் மருள் எழாது. பார்ப்பதில் மருள் ஒன்று மில்லை. கண்களால் மருள் எழுவதில்லை. கண்கள் ஏதோ பொருள் இருப்பதைக் காட்டுகிறது. ஆனால் மருள் எப்படி எழுகிறது என்றால் இவ்விரண்டு பொருட்களையும் பார்த்தவன் ஒன்றை மற்றொன்றாக அர்த்தப்படுத்துகிறான். பார்த்த பொருள் ஏதோ ஒன்று. ஆனால், அதனை அர்த்தப்படுத்துவதில்தான் மருள் உண்டாகின்றது.

இரண்டு பொருள்களில் ஒன்றை மாத்திரம் பார்த்தவனுக்கு வெள்ளியென்றாகிலும், பாம்பென்றாகிலும் எண்ண முடியாது. பாம்பைப்

பார்த்திராதவன் கட்டையைப் பார்த்து எவ்வாறு பாம்பு என்று எண்ணுவான்? நாம் உலகமொன்றைத்தான் பார்க்கிறோம். பார்த்த பொருளைத்தான் ஒன்றைத்தான் மற்றொன்றாகப் பாவிக்க முடியும். பாராத பிரமத்தை உண்மை என்று கூறி, பார்த்த உலகை மித்தை, மாயை, மருள் என்று கூறுவது குருடன் பார்க்கும் பார்வையாகும். மலடி மக்களைப் பெற்றுள்ளதைப் போன்ற கதையை யொக்கும். வேதாந்திகள் தங்கள் வாதத்தில் மறைந்துள்ள இந்த வழுவைக் கவனியாமல் வேதாந்தம் பேசுவது விசனிக்கத்தக்கதே". புதுஉலகம்-1935.

கயிற்றையும் பாம்பையும் பார்த்தவனுக்குத் தான் கயிற்றைப் பார்க்கும்போது பாம்பாகவும், அதேபோன்று கிளிஞ்சலையும், வெள்ளியையும் பார்த்தவனுக்குத்தான் கிளிஞ்சலைப் பார்க்கும் போது வெள்ளியாகத் தோன்றுவது இயல்பு. ஆனால் பிரம்மத்தைக் காணாத ஒருவன், இவ்வுலகை எப்படிப் பிரம்மமாக உணர முடியும்? சிங்காரவேலரின் கேள்வி அசைக்க முடியாத கேள்வியன்றோ! மேலும், புலன்களால் எதனையும் உள்ளவாறு உணர முடியாது என்கிறது அத்துவைதம். புலன்களின் ஆற்றலின்மையால்தான் இவ்வுலகைப் பிரம்மமாக உணரமுடியவில்லையென்றும் கூறுகிறார்கள். ஆனால், சிங்காரவேலர் இதனையும் ஆழமாக மறுக்கிறார். கயிற்றைப் பார்க்கும்போது கண்களுக்கு அது கயிறாகத்தான் தெரிகிறது. கயிறாகத் தெரிகிறவொன்று பாம்பாகத் தெரிவதற்குக் காரணம் கண்களின் குறையல்ல. மாறாக அதனை அர்த்தம் படுத்துகின்ற மனிதனின் சிந்தனையே என்று சிங்காரவேலர் கூறுவது மிகச் சரியானதன்றோ!

"உலகம் மெய்யென்பதும் பொய்யென்பதும் நமது புலன்களால் உண்டாகும் அனுபவத்தைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள முடியும். யோகாயதவாதிகள் புலன்களால் அறியக் கூடிய உலகத்தை முழுமையும் நன்றாக அறிய முடியாவிடினும் அறிந்தவரை உண்மையே என்கிறார்கள். பரிட்சையால் இவ்வுலகத்தை அதிகமாக தினம்தினம் அறிந்து வருகின்றோம். புலன்கள் அன்னியில் உலகைத் தெரிந்து கொள்ள முடியாவிடினும், நெருங்கிப் பார்க்குமளவில் அதிகமாகத் தெரிந்துகொள்ள இடமுண்டு. புலன்கள் காட்டும் உலகத்தைக் கொண்டே நமது லௌகீக வாழ்க்கையை நடத்தி வருகிறோம். நாம் உணரும் பசியும் துக்கமும் புலன்கள் காட்டும் வழிகளால் தான் நீக்கிக் கொள்கிறோம். இதனைப் பொய்யென்று வாதிப்பது மாயையாகும்.

புது உலகம் – 1935

சிங்காரவேலர் மிக நடுவுநிலையாகவே தம் கருத்தை விளக்குகிறார். இதுவரை, உலகில் உள்ள எல்லாவற்றையும் புலன்களால்

அறிந்துவிட்டோம் எனக் கூறவில்லை. மாறாகப் படிப்படியாகத்தான் அறிந்து வருகிறோம் என்கிறார். குறிப்பாக மதவாதிகள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் பூமி தட்டையாக உள்ளது என்றார்கள். ஆனால் நாளடைவில் விஞ்ஞான வளர்ச்சியினால் பூமி உருண்டையாக உள்ளதைத் தெரிந்து கொண்டோம். எவ்வாறு? சந்திரன் மீது விழும் பூமியின் நிழலைக் கண்டு பூமி உருண்டை வடிவமானது என்பதைச் சரியாக அறிந்து கொண்டோம். அதன்பின் வளர்ந்த விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக உருவாக்கப்பட்ட விண்கலங்களால் எடுக்கப்பட்ட படங்களாலும், பூமி உருண்டை வடிவமுடையது என்பதை உறுதிசெய்து விட்டோம். இந்த விண்கலங்கள், மனிதனின் விஞ்ஞான அறிவினாலும், புலன்களின் செயற்பாட்டுத் திறத்தினாலும் உருவாக்கப்பட்டவை என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இந்த விஞ்ஞான வளர்ச்சியால் பூமிக்கு அடியில் உள்ள நீர், நிலக்கரி, உலோகங்கள், பெட்ரோல், எரிவாயு போன்றவை இருக்கும் இடங்களை அறிவதுடன், அவற்றின் அளவையும், பயன்பாட்டையும் துல்லியமாகவும் உணரமுடிகிறது. இவற்றை மட்டுமேயல்லாமல், பூமிக்கடியில் நிகழும் மாறுதல்களையும் பூகம்பங்களையும் சிஸ்மோகிராப் (Seismograph) எனும் அரிய கருவியால் கண்டுபிடிக்க முடிகிறது. இக்கருவிகளை உருவாக்கியது மனிதர்களின் புலன்கள் தாமே? புலன்களின் தொழில் திறமின்றி இக்கருவிகளையெல்லாம் உருவாக்க முடியுமா?

இத்தகு வளர்ந்த விஞ்ஞானம் வெறும் பூமி ஆராய்ச்சியோடு நின்றுவிடாமல் விண்ணையும் நன்கு ஆய்ந்து வருகிறது. அதன் பயனாக மண்ணும் விண்ணும் நெருங்கி வருவதைக் காண்கிறோம் "கண்ணில் தெரியும் பொருட்களைக் கைகள் கவர்ந்திடமாட்டாவோ" என ஏங்கிய நெஞ்சங்கட்கு" மண்ணில் தெரியுதுவானம் அது நம் வசப்படலாகாதோ" என நினைக்கும் அளவுக்கு விண்ணை மண்ணோடு நெருங்க வைத்துக் கொண்டிருக்கிறது. இன்றைய விஞ்ஞானம். இத்தகு விஞ்ஞானம் வளர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன? இடையறாத சிந்தனை வளர்ச்சியும், புலன்களின் செயற்பாட்டுத் திறமும் தாமே!

மேலும், சிங்காரவேலர் "உலகம் மாயை" "புலன்கள் மாயை" "புலன்கள் குறையுடையவை" எனும் கருத்துகளை ஆய்வதுடன் நின்றுவிடாமல், உலகம் மாயை என்று கருதிவந்ததால் நம் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்புகளையும் முன்னேற்றமின்மையையும் சுட்டிக் காட்டுகிறார். அதனையும் காண வேண்டுமன்றோ!

"பார்த்ததைப் பொய்யென்று வழங்கும் சுவறாந்த மருளினால் (Idealist illusions) உலகில் விளைந்த தீமைக்குக் கணேக்கே இல்லை.

உலகில் பிறந்து வளர்ந்து வாழ வேண்டிய மக்களுக்கு இவ்வுலகமே பொய்யென்ற மனப்பாதகத் தத்துவத்தைப் போதித்து வந்தபடியால், இவ்வுலகச் சுகவாழ்விற்கு வேண்டியவற்றைத் தேடாமலும், அதற்கு வழிவகை கண்டுபிடிக்காமலும், கற்பனை லோகங்களை நோக்கி வாழ்நாள் முழுமையும் வருந்தலாயிற்று. மக்கள் கண்ணோட்டம் மேலுலகின் மேல் வைக்க வைக்க இவ்வுலக வாழ்வுக்கு வேண்டிய தேவைகளின் மேல் ஆசையில்லாமல் போயிற்று. இம் மாபெரும் மருளால், இவ்வுலகில் உயிரை இனிது வளர்க்கச் செய்யும் விஞ்ஞானத்தைக் கைவிடவும் பழிக்கவும் நேரிட்டது. நமது நாடு விஞ்ஞான ஆராய்ச்சியைக் கைவிட்டதின் முக்கியக் காரணம் என்னவெனில் கற்பனை உலகத்தின் மேல் மக்கள் வைத்துள்ள நோக்கமேயாகும். நாம் வாழவேண்டிய உலகமே பொய்யென்றால் அந்தப் பொய் உலகை ஏன் விசாரித்தறிய வேண்டும்? இந்த மருளை ஆதாரமாகக் கொண்ட மதங்களால், எத்தனைக் கோயில்கள், குருக்கள், மௌலானாக்கள், பிஷப்புகள் உயிர் வளர்க்கின்றனர்".

சிங்காரவேலர் கூறுவது எத்துணை உண்மை. நம்நாட்டில் இன்றும், சரியான சிந்தனை வளர்ச்சியும் விஞ்ஞான முன்னேற்றமும் ஏற்படாதற்கு அடிப்படைக் காரணம், மதங்களும் அவற்றால் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்படும் மாயைக் கொள்கையும் தானே! இந்த மாயைக் கொள்கையால் நம் நாடு அடைந்த கேடுகளும் இழப்புகளும் எண்ணற்றவை. அவை பல நூற்றாண்டுகளாக வன்றோ தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன!

"The first necessity your Philosophical investigation is a free bold mind"

(தத்துவஞான ஆராய்ச்சிக்கு முதலில் தேவையானது சுதந்திரமான துணிவான அறிவே ஆகும்)

எனும் கார்ல் மார்க்சின் கூற்றுக்கேற்ப ஆய்வு நிகழ்த்தியவர் சிங்காரவேலர்.

சிங்காரவேலரும் ஜடத்தத்துவமும்

உலகில் உள்ள தத்துவங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று பொருள்முதல் வாதம். மற்றொன்று கருத்து முதல்வாதம். பொருள்முதல் வாதத்தை லோகாயத வாதம் என்றும், கருத்து முதல்வாதத்தை ஆன்மீக வாதம் என்றும் கூறுவர். இப்பிரபஞ்சம் இயற்கையிலிருந்து (பொருளிலிருந்து) தோன்றியது எனக்

கூறுவது பொருள் முதல் வாதம். இதற்கு மாறாகப் பிரபஞ்சம், கடவுளால் (வெளியில் உள்ள முன்மாவால்) படைக்கப்பட்டதெனக் கூறுவது ஆன்மீகவாதம். பிரபஞ்சத்தைக் கடவுள் படைத்தாரா? அல்லது இயற்கை படைத்ததா? என்னும் கேள்விகளுக்கு வழங்க இருவகை விடைகளைக் கொண்டு தத்துவாதிகள் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தனர். நம் முன்னோர்கள் பொருளை ஜடம் (MATTER) என்றும் ஆன்மாவைச் சித்து என்றும் வழங்கினர். நம் நாட்டில் பலர், சித்து வெளியிலிருந்து இப் பிரபஞ்சத்தையும், மனிதனையும் ஆட்டிப் படைக்கிறது என்றார்கள். இந்தத் தத்துவத்தைப் பற்றிச் சிங்காரவேலர் புது உலகத்தில் "ஜடம்" ஜடத்தத்துவம்" எனும் இரு கட்டுரைகளில் மிகச் சுருக்கமாகவும், எளிமையாகவும் விளக்கியுள்ளார். அதனைச் சற்றுக் காண்போம்.

மனோதத்துவ வாதத்தில் மனம்தான் உள்ளது; மனத்தைத் தவிர வேறு எந்தப் பொருளுமில்லை என்று வாதிப்பது. ஜடத் தத்துவ வாதமென்னவெனில் பிரபஞ்சத்தில் ஜடமே பிரதானம் ஜடத்தின் மயமே பிரபஞ்சம் என்று வாதிப்பது.

பிரபஞ்ச முழுமையும் ஜடமாகவே தோன்றுகிறது. நமக்குத் தெரிந்த வரையில் எல்லாப் பொருள்களும் ஜடத்தின் பரிணாம மென்று தெரிகிறது. சூரிய சந்திர நட்சத்திரங்களாய் இருந்தாலும் சரி, புல், பூண்டு, செடி பிராணிகளாயிருந்தாலும் சரி யாவும் ஜடத்தால் ஆக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ளது நமது பூமி. நமது பூமியில் உள்ள வஸ்துக்களை உயிரென்றும் உயிரற்றவை என்றும் பிரித்திருக்கிறார்கள். ஆனால், விசாரணையில் உயிர் என்று கூறப்படும் ஒருதனி வஸ்து இருப்பதாகத் தெரியவில்லை. உயிர் என்பதெல்லாம் சிற்சில ஜடப்பொருள்களின் நடத்தையே தவிர வேறொன்றுமில்லை. உயிரென்று கூறுப்படும் வஸ்துக்களின் பரிசோதனையில், ஜடமே அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி உருவமெடுத்து வருவதாகத் தெரிகிறது.

மனம் என்று ஒரு தனிவஸ்து இருப்பதாகவும் அது மனிதனில் விஷேசப்பட்டிருப்பதாகவும் அதனால் அறிவு புத்தி விளங்குவதாகவும் இன்பம், துன்பம் உணர்வதாகவும் சில மனோதத்துவாதிகள் வாதிக்கின்றார்கள். இதுவாதமே ஒழிய பிரத்தியட்ச அனுபவமில்லை.

திரேகத்தில் ஜடவஸ்துவாகிய இரத்தம் குறைந்தாலும், கெட்டாலும் மனம் என்பது எங்கோ பறந்து போய்விடுகிறது. மூளையில் நிறைந்துள்ள நரம்புகளை சின்னப்படுத்தினாலும் அறிவு

எங்கோ மழுங்கிப்போய் விடுகிறது. கஞ்சா, லேகியம் சாராயம் கள் முதலிய வஸ்துக்களால் மனம் தடுமாறுகிறது. திரேகம் தள்ளாமையோடு மனமும் தள்ளாடுகிறது. தூக்கத்தில் மனத்தைக் காணோம்.

இத்யாதி அனுபவ சாட்சியங்களால், மனம் எனும் ஒரு தனிப்பொருள் திரகேத்திலிருந்து கொண்டு நடிப்பதாகத் தெரியவில்லை. அறிவு என்பது திரேகத்தின் நடத்தைக்குரிய ஒரு காரணமென்று சொல்லலாம்.

மண், கண்ணாடியாவதைப் போல், திரேகத்திற்குரிய ஜடப்பொருள்கள் மனமொன்று கூறும் நடத்தைகளைக் காட்டுகிறது. ஆதலின், மனமென்பதும், சித்தென்பதும், ஆன்மா வென்பதும் ஜடப்பொருள்களால் கூட்டப்பட்ட மனித திரேகத்தின் நடத்தைகளேயொழிய வேறில்லை. கண்ணாடியில் எதிர்பட்ட வஸ்துக்கள் பிரதிபிம்பப்படுவது போல் நமது கண்ணில் பிரபஞ்ச வஸ்துக்கள் பிரதிபிம்பப்படுகின்றன. கண்ணாடி உடைந்து மண்ணானால் பிரதிபிம்பத்தைக் காட்டமுடியாதது போல், திரேகம் அழிந்து சாம்பலானால் உலக வஸ்துக்கள் தெரியவில்லை. அறிவும், அறிவில்லாமையும், உணர்வும் உணர்வில்லாமையும் உருவத்தைப் பொருந்தியிருந்திருக்கின்றது. இதுதான் (METERIALISM) அதாவது ஜடவாத மென்று கூறுவர். இதுதான் நமக்கு எளிதில் விளங்கக் கூடிய தத்துவமென்று கூறலாம்.

புதுஉலகம் - ஜடத்தத்துவம் - அக்டோபர் 1935 மஞ்சளும், சுண்ணாம்பும் சேர்ந்த மாத்திரத்தில் சிவப்பு என்ற வர்ணம் அதாவது குணம் இன்று தோன்றுவதுபோல் ஜடப்பொருள்கள் திரேகமாகப் பரிணமித்த காலை எண்ணத்தையும், நினைவையும் காட்டுகின்றன.

இதை விட்டு விட்டு ஆன்மா ஒன்றுண்டு; சீவன் ஒன்றுண்டு; உயிர் வொன்றுண்டு என்று எண்ணுவது வெறும் தனிதய வொழிய வேறல்ல. மெய்ஞ்ஞானம் முழுமையும் ஜடத்தைப் பற்றியே விசாரித்து வருகிறது. பண்டைக்கால மாணவ நூல் (OLD PSYCHOLOGY) அதாவது, ஆத்மா ஒன்று உண்டென்று பேசிவந்த நூல், தற்கால மாணவ நூலாகமாறியது. ஆனால், கடந்த இருபது வருஷத்திற்குள் இந்தத் தற்கால மாணவ நூலும் (NEW PSYCHOLOGY) நடத்தை நூலுக்கு (BEHAVIOURISM) இடங்கொடுத்து விட்டது. பிரபஞ்சப் பொருட்கள் யாவும் ஜடமயம். சித்தென்பது வெறுஞ்சொல். இதுதான் நமது அனுபவம் புதுஉலகம் - ஜடம் - டிசம்பர் 1935.

அரசியல் சிந்தனைகளையும் பொருளியல் கருத்துகளையும் பரப்பிக்கொண்டிருக்கும் கட்டுப்பாட்டில் சிக்குண்டிருந்த சிங்காரவேலர்,

நேரம் கிடைக்கும் போதெல்லாம் மதமூடநம்பிக்கை களையும், புனைச் சுருட்டுகளையும் தோலுரித்துக் காட்டிக் கொண்டிருந்தார். அவற்றுடன் தத்துவ சர்ச்சைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். முற்போக்குச் சிந்தனைகள் வளர்ந்துவரும் இக்கால கட்டத்திலேயே மேற்குறித்த தத்துவக் கட்டுரைகள் போன்று கட்டுரைகள் வெளிவருவது அரிது. அக்கட்டுரைகளைப் போன்ற கட்டுரைகள் எழுதுபவர்களும் இக் காலத்தில் மிகக் குறைவு. இவ்வித சூழலில் முப்பதுகளிலேயே தத்துவக்கட்டுரைகள் எழுதிய பெருமை அவருக்குண்டு. "Criticisam of religion premise of all criticism".5

"மதத்திற்கு எதிரான விமர்சனம் அனைத்து விமர்சனத்திற்கும் அடிப்படையாகும்" என்று கூறிய காரல் மார்க்சின் வழித்தோன்றல் சிங்காரவேலர் ஆதலின், அவரும் மதங்களையும் கடுமையாக விமர்சிப்பதில் குறியாக இருந்தார் எனலம்.

சிங்காரவேலரும் வெண்மேக சித்தாந்தமும்: (NEBULER HYPOTHESIS)

லாப்லஸ் (1749-1827) LAPLECE) எனும் விஞ்ஞானி பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். இவர் கணிதம், பௌதிகம் ஆகிய துறைகளில் தேர்ந்த விஞ்ஞானி. வேறுபல துறைகளிலும் சிறந்து விளங்கிப் பல ஆய்வுகளை நிகழ்த்தியவர். இவர்க்கு முன் கடந்த பல நூற்றாண்டுகளாகச் சூரியன், சந்திரன் போன்ற கோள்கள் எவ்வாறு தோன்றின என்பது பற்றிப் பலவித முடிவுகள் இருந்துவந்தன. ஆனால், சூரியன் போன்ற கோள்கள் தோன்றியதை விஞ்ஞான முறையில் நிறுவியர்கள் லாப்லசும் ஹெர்சலும் ஆவர். அவர்தம் கோட்பாட்டை "நெபுலர் அய்போதீசஸ்" (வெண்மேக சித்தாந்தம்) என்பதாகும். அதனை விளக்குவதே சிங்காரவேலரின் வெண்மேக சித்தாந்த கட்டுரை யாகும்.

''பண்டைக் கால கருவிகளும் தத்துவஞானிகளும், புராணகர்த்தர்களும் வேடிக்கையான கதைகளைக் கொண்டு உலகமும் மற்றப் பிரபஞ்சப் பொருள்களும் உண்டான விதங்களைப் பற்றிச் செய்த உபதேசங்களை விபரமாக ''மனித உற்பவம்'' என்ற நூலில் எடுத்துரைக்கின்றோம்.

மத சிந்தனைகளால் எந்த ஞானமும் பெருகியதாகச் சொல்ல முடியும். ஆனால், விஞ்ஞான சிந்தனைகளால் சகல ஞானமும் திம்னம்தின பெருகிக் கொண்டே வருகின்றன. இதுவே விஞ்ஞானத்தின் சிறப்பு. இந்த உண்மை இந்த வெண்மேக சித்தாந்தத்தின் கட்டுரையில் விளங்கும்.

உலகமும், அதாவது நாம் வாழும் பூமியும், அதனைப் போன்ற எட்டு ஒன்பது கிரகங்களும், அவைகளின் நட்சத்திரங்களும் உண்டான விதத்தை முறைப்படி முதலில் ஆலோசித்தவர் மூவர். முதலில் ஜெர்மன் பிரபல ஞானியாகிய இமானுவேல்கான்ட் (IMMANUEL KANT - 1724 - 1804) என்பவர் பிரபஞ்சத்தில் அடங்கிய பொருள்கள் யாவும், எங்கும் நிறைந்த ஒரு பெரிய ஆவி மேகத்திலிருந்து ஏற்பட்டிருக்க வேண்டுமெனச் சிந்தித்தார். இந்த ஆதி சிந்தனையை லாப்லஸ் பெரியார் கணிதமூலமாகச் சூரியன், சந்திரன், பூமி உட்பட கிரகங்கள் யாவும் ஒரு பெருத்த ஆவி மேகத்திலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டுமென்று எடுத்துக் காட்டினார். அதன்பிறகு வான ஆராய்ச்சிகளில் பிரபலமான மற்றொரு ஜெர்மன் பெரியார் ஹர்ஷல் (HERCHEL 1792 - 1871) என்பார் இரவு முழுதும் வானத்தை நோக்கியதன் பயனாகப் பிரபஞ்சங்களாக மூளைக்கும் வெண்மேகங்களைக் கண்டுபிடிததார் இந்த வெண்மேகங்கள் பற்பல நிலைமைகளின் இருந்துவரும் காட்சிகளைக் கண்டார். சில வெண்மேகங்கள் அகண்டகார ஆவிரூபமாக இருப்பதைக் கண்டார். இவற்றுள் சில வெண்மேகங்கள் ஆங்காங்கு தடுப்பேறி நட்சத்திரங்களாகும் நிலைமையில் இருப்பதையும் கண்டுபிடித்தார். மற்றும் சில வெண்மேகங்கள் நட்சத்திரக் கூட்டங்களாக மாறி, வெண்மேகங்களின் மத்தியில் தோன்றுவதையும் பார்த்தார். . . . . . .

பலகோடி வருஷங்களுக்கு முன்னர் எவ்வாறு வெண்மேகத் தினின்று சூரியனும், மற்றும் பல நட்சத்திரங்களும் பெறப்பெற்றிருக்க வேண்டுமோ அதே காட்சியைப் பற்பல வெண்மேகங்களில் கண்டார். இவ்வாறாக மேல்நாட்டு மும்மூர்த்திகளால் இந்த மாபெரும் சிந்தனை விளக்கப்பட்டுள்ளது." புது உலகம் - ஜுன் - 1935

இந்த வெண்மேக சித்தாந்தத்தைப் பற்றிய கட்டுரையை மேலும் இரு கட்டுரைகளைப் புது உலகத்தில் ஆகஸ்டு திங்களிலும் செப்டம்பர் - (1935) திங்களிலும் வெளிவந்துள்ளன. குறிப்பாக ஆகஸ்டு திங்களில் வெளிவந்த கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பைபளில் "வெளிச்சம் உண்டாகுக என்ற போதே" வெளிச்சம் உண்டாயிற்றாம். பகலில் பிரகாசிக்க சூரியனையும் இரவில் பிரகாசிக்க சந்திர நட்சத்திரங்களையும் கடவுள் படைத்தார் எனுங் கருத்தைக் கடுமையாகக் கண்டனம் செய்துவிட்டு, "சுத்தமாம் சோதி தன்னில் சொல்லிய விண்ணும் விண்ணில் அனலும்" எனும் கைவல்ய நவநீதம் கூறியதைப் பெருமையாகக் குறிப்பிடுகின்றார். சூரியனைப் பற்றிப் பல அரிய செய்திகளையும் கீழ் உள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

சூரியன் ஒருபெரும் நெருப்புக் கோள். சூரியனின் ஒளி பூமிக்கு வருவதற்கு எட்டு நிமிடங்கள் ஆகின்றன.

சூரியனின் மேற்புறம் 6000 டிகிரி தனல் உள்ளது. உட்புறம் 60,00,000 டிகிரி அனல் உள்ளது. பூமியில் புயல் வீசினால் சுமார் 100 மைல் உயரத்திற்குப் புயல் வீசும். ஆனால், சூரியனில் வீசும் புயல் 20 லட்சம் மைல் உயருகிறது. பூமியில் உள்ள பொருட்களைப் போன்று பல பொருட்கள் சூரியனில் உள்ளன. ஆகாயக் கண்ணாடி (Spectroscope)யால் சூரியனில் நீராவி, பிராண ஆவி, கரி, கால்சியம், சிலிகான் போன்ற தாதுவர்க்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சூரியனில் ஈலியம் (Helium) எனும் அணுகண்டுபிடிக்கப்பட்ட பின்பே, பின்பு பூமியிலும் கண்டுபிடிக்கப்பட்டது. பூமியிலுள்ள பூர்வ மூல வஸ்துக்களும் (Rare Elements) சாதாரண மூல வஸ்துக்களும் (Ordinary Elements) சூரியனினும் காணப்படுகின்றன.

பூமி தன்னைத் தான் சுற்றுவதற்கு 24 மணிநேரம் ஆகுவதைப் போன்று, சூரியன் தன்னைத்தான் சுற்ற 15 நாட்கள் ஆகின்றன. பூமியைப் போல் சூரியனும் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகச் சுற்றுகிறது.

நமது பூமியும், சூரியனும் ஒரே சமதளத்தில் சுற்றுகின்றன. ஒன்பது நவக்கிரகங்களும் ஒரே சமயத்தில் பூமியைச் சுற்றுகின்றன. ஒன்பது நவக்கிரகங்கள் மட்டுமல்லாமல், 500 சிறு கிரகங்களும் ஒரே சமதளத்தில் சூரியனைச் சுற்றுகின்றன.

எல்லாக் கிரகங்களும் ஒரே சமதளத்தில் சுற்றுவதற்கு ஓர் சூரியனும், பூமியும், ஏனைய பெரிய சிறிய கிரகங்களும் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டிருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகிறது.

புதுஉலகம் - ஆகஸ்டு 1935

பத்து அல்லது பன்னிரண்டு சட்டங்களை ஒரு நீளமான இரும்புக் கம்பியால் இறுக்கிச் சுற்றினால், அச் சட்டங்கள் இறுக இறுக உருண்டை வடிவம் பெறுகிறது. அது போன்றே நமது உலகம் குழம்பிய பொருளாக வேகமாக உருளும்போது, சுற்றும் விசையால் உருளை வடிவத்தைப் பெற்று இருக்கும். பூமியில் உள்ள அன்னத்துப் பொருட்களும் சூரியனில் ஆவிமயமாக உள்ளன. ஆனால், பூமியில் ஏறக்குறைய எல்லாப் பொருட்களும் குழம்பாகவும், கடினமானதாகவும் உள்ளன. பூமியில் ஆவிவடிவமாக இருப்பது காற்று ஒன்றே.

நமது பூமி சூரியனைச் சுற்றி வருவதுபோல், சந்திரன் நமது பூமியைச் சுற்றி வருகிறது. பூமியில் இருப்பது போன்று சந்திரனிலும் மலைகள், எரிமலைகள் உள்ளன. ஆனால் அங்குக் காற்றோ, நீரோ கிடையாது.

சந்திரன் தன்னைத் தான் சுற்ற முப்பது நாட்கள் ஆகின்றன. சந்திரனின் ஒரு பகுதி சூரியனுக்கு எதிராக பதினைந்து நாட்களாகவும், மற்றொரு பகுதி சூரியனுக்குப் பின்னால் பதினைந்து நாட்களாகவும் சுற்றுகின்றன. இதனால் சந்திரனின் ஒரு பகுதி 15 நாட்கள் பகலாகவும், இன்னொரு பகுதி 15 நாட்கள் இரவாகவும் காட்சியளிக்கிறது.

சந்திரனில் ஒரு காலத்தில், காற்று, நீர், செடி, கொடி, உயிர்கள் இருந்திருக்க வேண்டும். பின்பு, பற்றி எரிந்து பாழ்பட்ட கோளாகச் சந்திரன் மாறியிருக்க வேண்டும்.

புது உலகம்-செப்டம்பர்-1935

இவ்வாறு, பூமி, சந்திரன், சூரியன் ஆகிய கோள்கள் பற்றிப் பல அறிய செய்திகள் முன் குறித்தகட்டுரைகளில் உள்ளன. பொதுவாக ஒரு திங்களிதழில், நாட்டு நடப்புகள், அரசியல் நிலைமைகள், அரசாங்க செயற்பாடுகள், கதைகள் போன்றவை வெளிவருவது இயற்கை. திங்கள் இதழை நடத்துபவர் முற்போக்குச் சிந்தனையுடையவராக இருப்பின், அரசியல் வழிகாட்டுதலும், விஞ்ஞான செய்திகளும் வெளிவருதல் கூடும். ஆனால், அரசியலில் ஈடுபட்டுக் கொண்டு, விஞ்ஞானத்தின் பல துறைகளைப் பற்றியும் அவர் எழுதியுள்ளார் எனின் அது சாதாரண செயல் அன்று. சிங்காரவேலர், புது உலகத்தில் "உயிர்", "மரணம்"-(ஆகஸ்டு 1935) குறித்தும், "எது உண்மை" - (செப்டம்பர் 1935) குறித்தும், "மூப்பு" (நவம்பர்-1935) குறித்தும் எழுதிய கட்டுரைகளை கனித்து நோக்கின் அவரின் தொலைநோக்குச் சிந்தனையையும், உலகமானுடம் தழுவிய நோக்கையும், புதுமை பொங்கும் தன்மையையும் இனிது உணரலாம். இவற்றுள் மூப்பு எனும் கட்டுரையை நோக்குவோம்.

மூப்பு பற்றிச் சிங்காரவேலா

"மூப்பு என்பது யாது? மூப்பு அதாவது தள்ளாமை உயிர்களின் இயற்கை என்பார்கள். மூப்பின் லட்சணம் நாமெல்லோரும் அறிவோம். மயிர் நரைப்பது தள்ளாமையின் முக்கிய இலட்சணம். ஆனால், சிலருக்குப் பித்த நரை என்பது அகாலத்தில் உண்டாகின்றது. ஆனால், அது ஏகதேசம், ஏகதேசமாயினும் எந்தக் காரணத்தால் வயதடைந்த மக்களுக்கு மயிர் நரைக்கின்றதோ அதே காரணத்தையொட்டியே "பித்தநரை" என்பது அகாலத்தில் உண்டாகின்றது.

"தள்ளாமையின் முக்கிய லட்சணங்கள் யாவை?" மயிர் வெளுப்பது ஒரு முக்கிய இலட்சணமென்கிறோம். தள்ளாமையில் மேல் தோலும் பளபளப்பை இழந்து வரவரப்பைப் பெறுகின்றது. திரேக எலும்புகள் வலுவிலக்கின்றன. நரம்புகள் தளர்வடைகின்றன. கண்பார்வை மட்டுப்படுகின்றது. காது கேட்பது மெதுவாகின்றது. முதுகெலும்பு நேர் நிற்க சக்தி இன்றி வளைகின்றது. இரத்த ஓட்டம் மெதுவடைகின்றது. இரத்தக் குழாய்கள் வலுவற்றுப் போகிறபடியால், நாடியும் தளர்வடைகின்றது. மூளையின் வேலை தளவர்வடைகின்ற படியால் நினைவும் தளர்வடைகின்றது. திரேக முழுமையும் சுறுசுறுப்பை இழக்க நேரிடுகிறது.

தள்ளாமையின் காரணத்தைக் குறித்து, அநேக பிரபல விஞ்ஞானிகள் விசாரித்து வந்தார்கள். அவர்களில் முதன்மையானவர் மெட்சினிகாப் (Matchinikoff) என்ற ரஷிய பெரியார். இவர் இயற்றிய நூல்களில் சாமான்ய மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய நூல்கள் இரண்டு. அவையாவன, மனிதனின் இயற்கை (Nature of Man) என்பது ஒன்று வாழ்வின் நீட்டிப்பு (Prolongation of life) என்பது மற்றொன்று.

தள்ளாமையின் காரணங்களைக் குறித்து இரண்டு முக்கிய அபிப்பிராயங்கள் விஞ்ஞானிகள் கொண்டுள்ளார்கள். ஒரு வகுப்பார் என்ன கூறுகிறார்களெனில் நாம் பிறந்ததுமுதல் யவ்வன வயதுவரை, நமது திரேகம் வளர்கின்றதாகவும், அந்த வளர்ச்சி நின்றவுடன், நமது அவயங்களுக்குச் சரியான போஷிப்பின்மையால் திரேகத்திற்குத் தள்ளாமை உண்டாகின்றதாகவும் கூறுகின்றனர். . . .

மெட்சினிகாப்பின் விஞ்ஞான ஆராய்ச்சியின்படி திரேக வளர்ச்சி இல்லாமல் தள்ளாமை உண்டாவதாகச் சொல்வதற்கில்லை என்றும், நமது திரேகத்திலுள்ளகிருமிகளே தள்ளாமைக்குக் காரணமென்றும் தெரிகின்றது என்கிறார். இந்த முடிவைப் பல விஞ்ஞானிகள் ஆதரிக்கின்றார்கள்.

நமது தேகத்தில் இரண்டுவகை கிருமிகள் (Microbes) வளர்கின்றன. நம் திரேக முழுமையும் சிறு பைகளால் கட்டப்பட்டு இருப்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்தப்பைகளில் பெரும்பான்மை (செல்கள்) திரேகத்தைக் காப்பாற்றி வருகின்றன. எப்படியெனில் திரேகத்திற்கு வெளியிலிருந்து மரநத்தில் நுழையும் விஷக்கிருமிகளைப் பட்சணம் செய்து விடுகின்றன. அப்படி விஷக் கிருமிகளை நாசம் செய்து வருகிறபடியால் திரேகம் போசிப்பு பெற்று வருகின்றது. ஆனால், சில வேளைகளில் விஷக்கிருமிகள் பலப்பட்டுச்

சுகாதாரக் கிருமிகளை விழுங்க நேரிடுகிறது. சுகாதாரக் கிருமிகள் பலமற்றுப் போகவே திரேகம் தள்ளாமையின் அடையாளங்களைக் காட்ட ஆரம்பமாகிறது.

திருஷ்டாந்திரமாக, தலைமயிர் கறுப்பு நிறத்தைப் பெற்று வரும் காரணம் என்னவெனில், தலைமயிர் வளர்க்கும் சுகாதாரர் கிருமிப்பைகள் (Black Pigment) என்ற கறுப்பு வர்ணத்தைச் சிருஷ்டித்துக் கொண்டு, மயிரைக் கறுப்பு நிறமாக வைக்கின்றன. ஆனால், இந்தச் சுகாதாரப்பைகளை () என்ற விஷக்கிருமிகள், சுகாதாரக்கிருமிகளை விழுங்கி விடுகின்றபடியால், நமது மயிர்களுக்குக் கறுப்பு நிற வஸ்துவின்றி வெள்ளையாக மாறுகின்றன. இதுபோலவே, நமது தசை, நரம்பு, மூளை முதலிய கிருமிப்பைகள், கொலை பாதக கிருமிகளால் விழுங்கப்படுகின்றமையால், அந்தந்த அவயங்கள், தங்கள் இயற்கை வாலிபத்தை இழந்து தோல் சுருங்கவும், சதை வளரவும், எலும்பு பலி ஈனமாகவும், அறிவு மழுங்கவும் நேரிடுகின்றது. இவ்விதமாக உண்டாகும் தள்ளாமையை தடுக்க மார்க்கம் ஏதாகினும் உண்டோ எனில், விஞ்ஞானிகள் முக்கியமாக மெட்கினி காப்பை பின்பற்றிய பல விஞ்ஞானிகள், அகால தள்ளாமையைத் தடை செய்யக் கூடுமென அபிப்பிராயப் படுகின்றார்கள்.

எப்படியெனில், நமது திரேக சுகாதாரப்பைகளை (Health Microbes) தளர்ச்சியடைய வொட்டாமல் தடுத்து வருவோமே யாகில், கொலைப் பாதக கிருமிகளுக்குச் சுகாதாரக் கிருமிகளை விழுங்க முடியாமற் போகும். இந்த நிலைமையைக் கொண்டுவர, நமது திரேகத்தை நன்றாக போஷித்து சுகாதார வழிகள்படி நடந்து வந்தால், பலகாலம் தள்ளாமை அணுக வொட்டாமல் செய்யலாம்.

விஷக்கிருமிகள் உண்டாகும் இடம், நமது திரேக மலஜல இடங்களே! இந்த இடங்களைச் சிறுகுடல், பெருங்குடல் என்பார்கள். இந்தக் குடல்களில் (Intestines) மலஜலங்கள் தங்குகிறபடியால், அவ்விடங்களில் (Phagocytes) என்ற விஷக்கிருமிகள் கோடி கோடியாக உற்பத்தியாகின்றன. இவைகளே சுகாதாரக் கிருமிகளை நாசமாக்குகின்றன. இந்த விஷக்கிருமிகள் வளருமிடத்தையும், உற்பத்தியாகுமிடத்தையும், சுத்தமாக வைக்கும் பட்சத்தில் பெருவாரி விஷக்கிருமிகள் உற்பத்தியாகா.

இன்னொரு சிகிச்சையையும் அவர் கூறுகிறார். அதாவது, நமது சாதாரண மோரில் (Butter Milk) Lactic Acid என்ற புளிப்பு உண்டு. அதற்கும், விஷகிருமிகளுக்கும் சத்துரு மித்துருக்களாம். நாம் கிரமப்படி

மோரை உண்டு வந்தால் தள்ளாமைக்கு இடங்கொடாமல் திரேகத்தைக் காப்பாற்றலாம் என்கிறார்."

புதுஉலகம்-நவம்பர் 1935

இக்கட்டுரையை நோக்கினால் ஒன்று புலப்படும். விஞ்ஞானம், தத்துவம், அரசியல், பொருளியல் குறித்துப் பல கட்டுரைகளை எழுதிய அவர், உடல் மருத்துவத்திலும் கவனம் செலுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. அவர் காலத்தில் சிறந்து விளங்கிய அனைத்துத் துறைகளிலும் அவர் கவனம் செலுத்தியுள்ளார்.

"சிங்காரவேலனைப்போல் சிந்தனைச் சிற்பி
எங்கேனும் கண்டதுண்டோ?
....
செங்கதிர் ஒளிபோல் அறிவில் தெளிந்தவன்
திங்களின் ஒளிபோல் அன்பில் குளித்தவன்
....
ஓடும் அருவியைப்போல் உண்மையில் தெளிந்தவன்
உறுதியில் எஃகினும் ஊட்டம் அளித்தவன்
மூலதனத்தின் பொருள் புரிந்ததும் அவனால்
புதுவுலகக்கனா முளைத்ததும் அவனால்
கோலப் பொதுவுடைமை கிளைத்ததும் அவனால்
கூடின அறிவியல், அரசியல் அவனால்!
கடல்வான் ஆழ்அகலக் கல்வியைக் கற்றவன்
கண்ணாய் உயிராய்த் தமிழர்க் குற்றவன்"[6]

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போற்றியது எத்துணை உண்மை என்பது, சிங்காரவேலரின் வாழ்க்கையை அறிந்தவர்கட்கும், அவரின் கட்டுரைகளைப் படித்தவர்கட்கும் நன்கு புலனாகும்.

பல்வேறு அறிவுத்துறைகளில் ஆழ்ந்த கவனம் செலுத்திய அவர், பேய், பிசாசு, நரகம், சொர்க்கம், சோதிடம் போன்ற மூடப்பழக்க வழக்கங்களை அகற்றுவதில் பெரும் கவனம் செலுத்தி "மெய்ஞ்ஞானமும் மூடநம்பிக்கையும்" எனும் பெயரில் இரு நூல்களை வெளியிட்டுள்ளார். மேலும், பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் நோக்கின் எத்தனை உலக நூல்களைப் படித்துள்ளார் என்பது தெரிய வரும். அவர் குறிப்பிட்டுள்ள அறிவியல் நூல்களைக் கண்டால் பெரும் வியப்பே தோன்றும். இத்துணை கற்றுத் துறைபோகிய அவர், மக்களின் பழக்க வழக்கங்களை ஆழ்ந்து நோக்கி அவைகளிலிருந்து மக்கள் மீள முடியாமல் எவ்வாறு தவிக்கின்றனர்

என்பதை, மிக நுட்பமாக, "பழக்கத்தின் ஆர்வம் (புதுஉலகம்-ஜூன் 1935) "மனோ ஆலய உலகங்கள்" ஜூன் 1935) எனுங் கட்டுரைகளில் விளக்குவதைக் காணலாம். அவ்வாறே, டாக்டர் அம்பேத்கர் குறித்தும் (புது உலகம்-நவம்பர்-1935) டாக்டர் இராதாகிருஷ்ணன் குறித்தும் (ஏப்ரல் -1996) தோழர் சக்லத்வாலா குறித்தும் மார்ச்-1936) எழுதிய கட்டுரைகளும் சிந்தனைக்கு உரியது. சிறு பழக்க வழக்கங்கள் தம்மை எப்படி ஆட்படுத்துகின்றன எப்படி அடிமை படுத்துகின்றன என்பவற்றைப் "பழக்கத்தின் ஆர்வம்" மற்றும் "மனோ ஆலய உலகங்கள்" எனும் கட்டுரைகளில் விளக்கிய அவர்" சொல்லின் கொடுங்கோன்மை" (The Tyranny of words) எனும் கட்டுரையில் வெறும் சொற்கள் எப்படியெல்லாம் நம்மைப் பயமுறுத்துகின்றன என்பனவற்றை மிக எளிமையாக விளக்கியுள்ளார்.

"சொற்கள், நமதுசெய்கைகளைக் குறிப்பிக்கும் கருவிகள் ஒருவருக்கொருவர், தத்தம் செய்கைகளை நாம் பேசும் சொற்கள் அறிவிக்க வேண்டி உண்டானவை. சத்தத்தால் மற்ற மிருகங்கள் தத்தம் செய்கைகளைக் குறிப்பிடுகின்றன. மனிதன், சொற்களால் குறிப்பிடுகின்றான். ஆனால், பேச்சும், சத்தமும், ஒன்றே. பேச்சு (Speech) என்பது லாரிங்ஸ் என்ற அகவயத்தால் ஒழுங்காக்கிய (Sound) சப்தம்.

சொற்கள் உண்டானபோது அவைகளைக் கொண்டு மனிதன், உலகப் பொருட்களுக்குப் பெயரிட்டான். கண்டவைகளையும், பரிசித்தவைகளையும் பஞ்சேந்திரியங்கள் மூலமாக தன் அனுபவத்தில் வந்த வஸ்துகளுக்குப் பெயர் வைத்தான். ஆனால் காணாத பொருட்களுக்கும் பெயரிட ஆரம்பித்தான். பிசாசு என்றும், பேயென்றும், காணாத மாயைகளுக்கும் (Illusion) பெயரிட்டான். இவைகளிலிருந்து சாத்தான், சனி முதலிய மாயைகளுக்கும் பெயர் கொடுத்தான். பல கடவுளென்றும் சொற்களால் சிருஷ்டி செய்து கொண்டு அவைகளை வணங்கி வழிபட்டு கோயில் குளங்கள் கட்ட ஆரம்பித்தான். இவ்விதம் பலவித மாயைகளுக்குப் பெயரிட்டு தன் வாழ்நாள் முழுமையும் பயத்திலும் நடுக்கத்திலும் ஆழ்ந்து நடக்க செய்து கொண்டான்.

கடவுள், ஆன்மா, உயிர், நரகம், மோட்சம் முதலிய மாயை சொற்கள் மனிதனுடைய சொல்லின் திறமையால் உண்டானவைகளே வொழிய கண்களால் பார்க்கும் பொருள்களல்ல. மற்ற இந்திரியங்களிலாகிலும், தன் அனுபவத்தில் வந்தவைகளல்ல. பேசும் சக்தி மனிதனுக்கு வந்திராவிடில், இந்தச் சொற்கள் உலகில் தோன்றியே

இருக்கா. மனிதனுக்கு முன்பாக, பல கோடி வருஷங்களுக்கு முன்பு உலகில் தோன்றிய சீவன்களெதற்கும் இந்த மாயை சொற்கள் கிடையா.

மனிதன் தான் சிருஷ்டித்த சொற்களுக்குப் புதுமைகளை () உண்டாக்கி, உருவங்களைப் படைத்து, கதைகளையும், புராணங்களையும் மற்றும் பல மத நூல்களையும் எற்படுத்தி ஸ்தல புராணங்களென்றும், பைபிள்கள் என்றும் கட்டுக்கதைகள் கட்டினான். இச் சொற்களுக்கும், கதைகளுக்கும் தன் உயிரையும் பலி கொடுக்க துணிந்தான். தன் உயிரைப் பலிகொடுப்பதோடு மற்ற உயிர்களையும் லட்சக்கணக்காகப் பலியிட்டு வந்தான்.

இவ்விதமாக, தான் சிருஷ்டித்த சொற்களுக்குப் பயந்து நடுநடுங்கி, தன் ஆயுள் முழுமையுமே சொற்களின் கொடுங்கோன்மைக்கு உட்படுத்திக் கொண்டான்.

கொடுங்கோல் அரசுகள் செய்யும் கொடுமைகளை விட பதின்மடங்கு கொடுமை நமது சொற்களால் விளைகின்றன. சுவைகளின் உபயோகம் ஒரு பங்கிருந்தால், அவைகளால் உண்டாகும் வியர்த்தம் பதின்மடங்கு. வெறுஞ்சொற்களால் மயங்காதவர்கள் இவ்வுலகில் இல்லை என்று சொல்லலாம். நாமெல்லோரும் சொற்களுக்கு அடிமை பட்டுள்ளோம். சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் என்ன கோபம், மாச்சர்யம் உண்டாகின்றன.

உலகில் உள்ள மாயாஜால முழுமையும் சொற்களின் மாய ஜாலத்தால் என அறிக (The magic of word is enormous) சொல்லால் மயங்கும் மக்கள் கோடான கோடி.

புது உலகம்–தலையங்கம்–செப்டம்பர் 1935

இன்றைய விஞ்ஞானம் மிகப் பெரிதும் வளர்ந்துள்ளது. சந்திர மண்டலத்திலும், ஏனைய விண்கோள்களிலும் உள்ள பொருட்களை விஞ்ஞானத்தால் மண்ணில் உள்ள நீர்வளங்களையும், கனிம வளங்களையும் துல்லியமாக அறிய முடிகிறது. சந்திரனில் உள்ள கரும்புள்ளிகளையும், சூரியனின் மாறுதல்களையும் தொலைநோக்குக் கண்ணாடியால் அறிய முடிகிறது. ஆனால், மனித சமுதாயத்தால் பல்லாயிரம் ஆண்டுகளாக நம்பி வரும் பேய் பிசாசுகள், நரகம், சொர்க்கம், ஆன்மா போன்றவைகள் அந்தத் தொலைநோக்குக் கண்ணாடிகளாலும் காண முடியவில்லை. யமன், சித்திரா புத்தன் போன்றோரைக் கூட விஞ்ஞானத்தால் அறிய முடியவில்லை போலும்! இன்று வளர்ந்துள்ள விஞ்ஞான தொழில் நுட்பத்தால் அனைத்தையும்

நம்மால் அறிய முடிகிறது. இவ்வாறு, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பொருட்களையும் அறிந்த - அறியும் சூழலில் உள்ள நாம், பேய், பிசாசு, யமன் எனும் சொற்களுக்கு இன்னும் பயந்து கொண்டுதான் இருக்கிறோம். இஃது அரியாமை அன்றோ! இத்துணை நிலைக்கு விஞ்ஞானம் பல்லாற்றானும் வளர்ந்திருந்தும், மிகச் சிலர் தாம் மேற்கண்டவைகளுக்கு அஞ்சாமல் உள்ளனர். ஆனால் பெரும்பாலோர் இன்னும் அவ்வச்சத்தில் மூழ்கியே உள்ளனர். இந்நிலையில் மிகச் சமூகப் பொறுப்புடன் சிங்காரவேலர் முப்பதுகளிலேயே எழுதியிருப்பது போற்றத்தக்கதன்றோ?

"பொதுவுடைமை, பகுத்தறிவு சம்பந்தமாக அவரைப் போன்று அறிந்தவர்கள் அப்போது இல்லை என்றே கூறலாம். . . . அவர் ஒரு நல்ல தைரியமான நாத்திகர். காங்கிரசில் இருந்து கொண்டே சட்டசபையில் கடவுளின் பேரால் பிராமணம் எடுக்கக் கூடாது என்று தீர்மானம் கொண்டு வந்தவர். எதையும் ஆராய்ச்சி செய்யும் பண்பும், துணிச்சலும், தைரியமும் உடைய அவரைப்போன்ற ஆராய்ச்சியாளர்கள் நிறைய விஷயம் உணர்ந்து வாதிப்பவர்கள் அவருக்குப் பிறகு தோன்றவே இல்லை."[7]

"சிங்காரவேல் செட்டியார் பிர்வின் கொள்கையைத் தமிழில் விளக்கினார். என் உள்ளம் அதில் ஈடுபட்டது. கலகஞ்செய்ய போந்த யான் பிர்வின் வகுப்பு மாணாக்கனானேன். செட்டியார் ஆசிரியரானார்".[8]

"உலக அறிவியல் வரலாற்று, சமய மறுப்பு வரலாற்றுப் பேரியக்கங்களைக் கொண்ட மாபெரும் நூலகத்தை வைத்திருந்த சிங்காரவேலர், பிறநாட்டு நல்லறிஞர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகள் அனைத்தையும் எளிய தமிழில், கருத்துச் செறிவுடன் குடியரசு இதழில் வழங்கினார். இது ஒரு புது முயற்சி மட்டுமன்று, முதன் முயற்சியாகும். விஞ்ஞான உணர்வு தமிழ் மொழியில் கால்கொள்ளாத சூழலில் தமிழில் அவற்றை எடுத்துரைப்பது என்பது எளிதான செயலன்று. இந்த அறிவியல் வளர்ச்சிப் பணியில் சிங்காரவேலரின் சாதனை புதிய வழியைக் கண்டது.[9]

அரசியல் துறையில் ஈடுபட்டுக் கொண்டு, மேற்குறித்த கட்டுரைகளைத் தம் எழுபத்தைந்தாம் வயதில் சிங்காரவேலர் எழுதியுள்ளார் எனில், அவர்தம் கொள்கை உறுதி எஃகினும் உறுதி வாய்ந்தது என்று பாரதிதாசன் கூறியது முற்றிலும் உண்மை அன்றோ!

உலகப் போரும் சிங்காரவேலரும்

இந் நூற்றாண்டில், மனித குலம் இதுவரை காணாத இருபெரும் உலகப் போர்களைக் கண்டுவிட்டது. குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் அணு குண்டுகளால் ஜப்பானின் இரோசிமோ, நாகசாகி ஆகிய நகரங்களும், அவற்றின் மக்களும் அடைந்த துன்பங்கள், இழப்புகள் ஆயிரம்! ஆயிரம்! பலியான உயிர்கள் எண்ணற்றவை. அவற்றின் கொடுமை இன்னும் ஜப்பான் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறது. இப்போரில், அன்றைய சோவியத்து யூனியன் இராணுவப் படையில் மட்டுமே இரண்டு கோடி ஆடவர்களை இழந்தது. இவ்விழப்பினால் அந்நாடு அடைந்த நட்டங்களும் கேடுகளும் கணக்கிலடங்கா. குறிப்பாக, அந்நாட்டின் பெண்களுக்கு உரிய பருவத்தில் திருமணம் செய்விக்க போதிய ஆடவர்கள் இல்லை. இச்சமநிலையின்மையால் அந்நாடு உற்ற கேடுகள் பற்பல. இருபெரும் உலகப் போர்கள் மட்டுமேயல்லாமல், பல நாடுகளில் எண்ணற்ற போர்கள், நடந்துள்ளன. நம்முடைய உலகம் இதுகாறும் 24,000 போர்களை நிகழ்த்தியுள்ளதாகவும், அப்போர்களில் 300 கோடி மக்களை இழந்துள்ளதாகவும் உலக சமாதான குழு அறிவித்துள்ளது. இழந்து விட்ட இந்த மக்கள் தொகை, இன்றைய மக்கள் தொகையில் (580 கோடி) செம்பாதிக்கு மேலானவர். மக்கள் தொகையே இத்தனை என்றால் பொருட் சேதம் எவ்வளவோ?

குறிப்பாக, இரண்டாம் உலகப் போரில் சோவியத்து யூனியனுக்கு மட்டும் ரூ.48,500 கோடி அமெரிக்க டாலர் செலவானது எனில், மற்ற உலக நாடுகள் உற்ற பெரும் இழப்புகள் ஏராளம்! ஏராளம்! சோவியத்து யூனியன், இரண்டாம் உலகப் போரில் பதி 10 பேர்களை இழந்தது. ஒரு மணிக்கு 587 பேர்களையும், ஒரு நாளைக்கு 14000 பேர்களையும், மொத்தத்தில் 2 கோடி பேர்களை இழந்தது. அப்போரில் உலகம் இழந்த ஐவரில் சோவியத்து யூனியன் இருவரை இழந்தது.

இனி, ஓர் உலகப் போர் ஏற்பட்டால், அப்போரின் ஆபத்துகளையும் இழப்புகளையும் கணக்கிட மனித இனமே உயிருடன் இருக்காது. காரணம், இன்றைய அணுகுண்டுகளின் சக்தி அத்துணை ஆபத்தானது. நாகசாகியில் எறிந்த அணுகுண்டைக் காட்டிலும் இப்போதிருக்கிற அணுகுண்டு 170 மடங்கு உயர்ந்தது. அப்போது அணுகுண்டு ஒரு நாட்டில் மட்டுமே இருந்தது. இப்போது பல நாடுகளில் பல வகையில் உள்ளன. சிறப்பாக, பல நாடுகளில் அணு உலைகள் இருப்பதால், இன்னும் அணுகுண்டின் பேராபத்து

பன்மடங்கு பெருகும். ஓர் அணுகுண்டை ஓர் அணு உலையில் (கல்பாக்கத்தில் இருப்பது போன்ற உலையில்) எறிந்தால் ஒரு லட்சம் சதுர கிலோமீட்டர் வரை இரண்டாண்டுக்குக் கதிர்வீச்சு வீசிக்கோண்டே இருக்கும் மற்றும் இருபது ஆண்டுகள் வரை இருபதானயிரம் சதுர கிலோ மீட்டர் வரை கதிர்வீச்சு இருக்கும் என விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர். இந்நிலையில் புண்ணிய பூமியில் மனித உயிர்கள் மட்டுமல்ல, புல் பூண்டுகள் கூட முளைக்கா. இவைபோன்ற துல்லியமான பல செய்திகள் சிங்காரவேலரின் இறப்பிற்குப்பின்தான் உலக சமாதான குழுவால் நமக்குக் கிடைத்துள்ளன. இப்போர்களின் பேராபத்துகளை மேலும் சிலவற்றைப் பின்பு பார்ப்போம். ஆனால், இச் செய்திகள் கிடைக்காத காலத்தில் சிங்கார வேலர் எப்படிச் சிந்தித்துள்ளார் என்பதைக் காண முயல்வோம். விடுதலைக்கு மார்க்கம்- (ஜூலை 1935) போர்க்கோலம் -ஆயுத பரிகரணம் - (ஆகஸ்டு 1935) யுத்தம்! யுத்தம்! யுத்தம்! (செப்டம்பர் 1935) யுத்தநினைவுகள் - (மார்ச் 1936) ஆகிய கட்டுரைகளில் போரைப் பற்றி மட்டுமே எழுதிய அவர், மற்ற கட்டுரைகளினும் போரின் பேராபத்தை விளக்கியுள்ளார்.

"உலக முழுமையுமே போர்க்கோலமாக மாறிவிடுகின்றது. ஆப்பிரிக்காவில் போயர் சண்டைக்குப் (1889-1902) பிறகு சுமார் 35 வருஷங்களாகச் சமாதானமாக இருந்த தேசம் இப்போது போர் பேரிகை முழக்குகின்றது. . . இத்தாலிய பாசிசம் (Facism) ஆட்சியில், ஏகாதிபத்தியத்தை நாடி, மற்ற வல்லரசுகள் ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொண்டு, ஏகாதிபத்தியமாக ஆப்பிரிக்கா தேசத்துப் புராதன குடிகளை ஆண்டு வருவதைப் போல், தானும் அபிசீனியாவை அடக்கியாள படைக்கோலம் கொண்டு வருகிறது.

அங்கும், இங்கும், எங்கும் யுத்த பேரிகையின் ஓசை கிளம்புகின்றது. எங்கே சமாதான சங்கங்கள்? எங்கே சமாதான ஒப்பந்தங்கள்! சமயம் வந்தால், எல்லா ஒப்பந்தங்களும், உடன் படிக்கைகளும் காற்றில் பறக்க வேண்டியதே. இந்த யுத்த முழக்கத்தில், உலகம் நாசமாக வேண்டி வருமோ என்ற எண்ணம் அறிஞர்களுக்கு வியாகூலத்தை உண்டாக்கி வருகிறது. கடந்த 20, 30 வருஷங்களாகக் கட்டிய கட்டடங்களும், கோபுரங்களும், மாளிகைகளும், நகரங்களும், கல்வி கேள்வியும், அழகும் அன்பும் ஒரு கணத்தில் நாசமாய்விடும் போலும். இந்தப் போர்க்கோல மனப்பான்மைக்குக் காரணமென்ன?"

இவ்வாறு போர்களைப் பற்றிக் கூறும் சிங்காரவேலர், போரை நிறுத்துவதற்கு ஆயுத குறைப்பு சிறந்தது என மற்ற நாடுகள் கூறுவதைக்

கண்டிக்கிறார். ஆயுத குறைப்பு போர் நிறுத்தத்திற்கு ஓரளவு பயன்படலாம். அதுவே முழுமையான வழி என்று சொல்ல முடியாது என எச்சரிக்கிறார். சிங்காரவேலர் இதனை வெளிப்படையாக அக் காலத்திலே அவர் கூறியது பாராட்டத்தக்கது.

"ஆயுதங்களைக் குறைப்பதாலும், ஆயுதங்களைப் பரிக்கின்றோம் என்ற தீர்மானங்களாலும், உலக சேதம் நிற்குமா?. ஆயுதங்கள் வெறும் கருவிகளேயொழிய அவைகளே மக்களைக் கொல்லா." (ஆயுத பரிகரணம்-ஆகஸ்டு-1935)

இப்படி ஆயுத குறைப்பைப் பற்றித் தம் கருத்தைக் கூறிவிட்டு போர் உண்டாவதற்கான காரணத்தைக் காட்டி, அவற்றைப் பற்றிச் சிந்தனை இல்லாமல் போரை ஒழிக்க முடியாது என்கிறார். போர் உண்டாவதற்கு மூன்று காரணங்களைக் காட்டுகிறார்.

1. மனிதன் வழிவழி மரபாகப் பெற்ற மிருக உணர்வு
2. நியாயமற்ற தேசிய உணர்வு
3. தனியுடைமை ஆட்சி

இம் மூன்று காரணங்களையும் அவர் மொழியில் காண்பது நலம்.

1. போர் புரியும் மனப்பான்மை பரம்பரையாகவே மக்கள் மனத்தில் ஊன்றி வந்திருக்கின்றது. போர் புரியும் தூண்டுதல் நமது மிருக மூதாதையர்களிடமிருந்து பரம்பரை பரம்பரையாகப் பெற்று வந்துள்ளோம். இந்த மிருகத் தன்மை கோடி வருசங்களாக நமது திரேகத்துடன் ஊடுருவி வந்துகொண்டிருக்கிறபடியால் எவ்வளவு சமாதானம் பேசி வந்த போதிலும் சமயம் நேர்ந்த போது யோசியாமலே அந்தந்தத் தேசத்துப் பேடியும் போர்க்கோலம் கொள்கிறான். (விடுதலைக்கு மார்க்கம்-ஜூலை-1935)

2. "நான்" 'எனது' என்ற உணர்ச்சிகள் எவ்வளவு இயற்கையானதோ அவ்வளவு இயற்கையானது தன்நாட்டுக் காதல் தன்னாடு செழித்தால் போதும் பிறநாட்டின் உழைப்பு இல்லையென்றாலும் பரவாயில்லை என்று நினைக்கும் பாழ் தேசாபிமானமும் அவ்வளவு வெறுக்கத்தக்கதும், நசுக்கிக் கொல்லப்பட வேண்டியதாகும். தனிமனிதனுடைய தன்னலத்தைவிட ஓர்நாட்டின் மூடத் தன்னலம் மிகப் பல மனிதர்களுக்குக் கேடு விளைவிப்பதாகும். (யுத்த நினைவுகள்-டிசம்பர்-1935)

3. மதங்களாலும் தத்துவஞானங்களாலும் உலகப் போர் நிற்க மாட்டாது. ஆயுத பரிகரணத்தாலும் உலகச் சேதம் நிகழாமல் இராது. ஆயுத அபிவிருத்தியாலும் உலகச் சண்டை நில்லாது ஏனெனில், இவையாவும் யுத்தங்களுக்கும், கலகங்களுக்கும், சண்டைகளுக்கும், போர்களுக்கும் அடிப்படையாக இருவரும் தனிவுடைமை மனப்பான்மையே வளர்த்து வருகின்றன. (விடுதலைக்கு மார்க்கம்-ஜூலை-1935)

போர் உண்டாவதற்கான காரணங்களைக் கூறிய அவர், போரினால் ஏற்பட்ட சில நிகழ்வுகளையும் நினைவு கூறுகிறார். தனியுடைமையை அரசுக் கொள்கையாகக் கொண்ட நாடுகள், பிறநாடுகளின் மீது போர் தொடுத்ததுவென்று அந்நாட்டுச் செல்வங்களைக் கொள்ளை கொண்ட போதும், அந்நாட்டிலுள்ள பொதுமக்களின் வறுமை மேலும் கூடுதலானதே தவிர வளம் பெருக வில்லை என்கிறார். மற்றும் முசொலினி அபிசீனியாவின் மீது படையெடுதத போது இங்கிலாந்தின் அயல்துறை அமைச்சராக இருந்த ஈடனிடம், தான் அபிசீனியாவை எல்லா வசதிகளும் உடைய புதிய தகரமாகத் தோற்று விப்பதற்காகத் தான் படையெடுக்கிறேன் என்றாராம். உலக முதலாளித்துவ நாடுகள் அனைத்தும் இப்படிப் போலியான காரணத்தைக் கூறியே மற்ற நாடுகளின் சுதந்திரத்தை அழித்து, அந்நாட்டின் செல்வங்களைச் சூறையாடுகின்றன என எச்சரிக்கிறார். முதலாளித்துவ அரசுகளின் சர்வாதிகாரிகள் மட்டுமே அல்லாமல், மதவாதிகளும் சில நேரங்களில் போர்களுக்குத் துணையாக இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். ஒருமுறை அபிசீனியாவின் மீது இத்தாலி படையெடுத்த போது அங்கிருந்த மதவாதிகள் என்ன செய்தனர் என்பதை மிக நன்றாக நையாண்டி செய்துள்ளார்.

"அபிசீனியா நகரம் இத்தாலியர் கைக்குள் வீழ்ந்தபோது அங்கிருந்த மத குருக்கள் விரைந்தோடி வந்து, வெற்றி வீரர்களுக்கு மரியாதை செலுத்தி, ஆசீர்வதித்து வரவேற்றார்களாம். ஐயோ மதமே! ஐயோ மதகுருக்களே! பிடிப்போர்க்கெல்லாம் பெண்டாகும் இழி நிலைமை உங்களது உடைமையாகி விட்டதே! துறவிக்கு வேந்தன் துரும் பெனும் வீரமொழி, பொய்யாய்ப், பழங்கதையாய், ஏமாற்று வார்த்தையாகி விட்டதே! சத்தியத்தை விட்டுக் கொடுத்துக் கொள்கையை விற்று, பெயரையும் பட்டத்தையும் காப்பாற்றுவதிலேயே கண்ணோட்டமாயுள்ள மதமே! மத குருக்களே! உங்களுக்கு ஓர் ஐயோ!"

"மனித கூட்டத்தின் பேய்க் குணங்களை அகற்ற மதங்களாற் கூடவில்லை. போரிடும் உள்ளத்தை மாற்ற அவற்றிற்குச் சக்தியில்லை.

அன்பைத் தூண்ட நாதியில்லை. உலகத்தில் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் நிலைநிறுத்த ஆண்மை இல்லை. இன்பத்தைப் பெருக்க வல்லமையற்று, போர் முதலிய கொடுமைகளைக் கண்டஞ்சி மண்டியிடும் நொண்டிமதங்களின் துணைக்கொண்டு உலகத்தில் ஒற்றுமை, அமைதி, இன்பம் ஆகியவற்றைப் பெருக்க முயற்சிகள் வீணாசை என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே, இந்நற்காரியங்களில் கருத்து கொண்டுள்ளவர்கள், இனியும் மதங்களை நம்பிக்கொண்டிராது அறவழிகளைப் பின்பற்றல் அறிவுடைமையாகும். ஆண்மையுங் கூட"

புதுஉலகம்-மார்ச்-1935

போர்கள் உண்டாகமல் இருப்பதற்கான அடிப்படையான காரணத்தையும் அவர் விளக்கியுள்ளார்.

"போர்க்கோலம் கொள்ளும் ஐரோப்பா உலகை நோக்கி, ஆங்கில அரசியல் பெரியாராகிய ஸ்டான்லே பால்டுவின் (1867-1847-பிரிட்டிஸ் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர்) பித்தம் பிடித்த உலகமென்றாராம். ஆனால், இந்தப் பித்தத்தை வளர்ப்பது தனிவுடைமை திட்டமென்பதை அவர் உணர்ந்தாரில்லை. உலக அரசியலை நடத்தும் பெரியோர் இந்த உண்மையை உணர்ந்து நடப்பார்களின் உலகம் போரற்று வாழமுடியும். உலகம் போரற்றுச்சாமாதானமாக வழவேண்டுமானால் எல்லாக் கலகங்களுக்கும், ஆதிகாலப் பூதமாக இருக்கும் தனிவுடைமைத்திட்டம் மாறிப் பொதுவுடைமைத் திட்டமாக வேண்டும்."

தனியுடைமைதான் போர்களை உண்டாக்குகிறது என்பதை இன்றைய உலக நிகழ்வுகளை ஒப்பிட்டுப் பார்த்தாலேயே உண்மை விளங்கும். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன், இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள், பல நாடுகளைத் துண்டாடி, அவற்றில் தத்தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தின. அகில உலகின் தனிவுடைமையின் சர்வாதிகாரியாக விளங்கும் அமெரிக்கா, கடந்த 200 ஆண்டுகளில் 262 முறை தம் இராணுவத்தைப் போருக்குப் பயன்படுத்தியுள்ளது.[10] பிறநாட்டு இயற்கை வளங்களையும், உலக மக்களின் உழைப்பையும் சுரண்டிக் கொழுத்த தனியுடைமை அரசுகள், தத்தம் சுரண்டலை மேன்மேலும் பெருக்கவும், சுரண்டலுக்கு ஆபத்து எற்பட்டால் அதனைத் தடுக்கவும், போரைச் சிறந்த ஒரு கருவியாக வல்லரசுகள் பயன்படுத்துகின்றன. போருக்கான இராணுவத்தைப் பெருக்கக் குறிப்பாக அமெரிக்கா தம் பட்ஜெட்டில் ஒதுக்கும் தொகையைக் கண்டால் உண்மை விளங்கும். 1982-83ஆம் ஆண்டின் பட்ஜெட்டிற்கு அமெரிக்க அரசு, ரூ.9 இலட்சத்து 25 ஆயிரத்து 500

கோடியை ஒதுக்கியது. அதில் இராணுவத்திற்கு மட்டும் 3 இலட்சத்து 13 ஆயிரத்து 400 கோடியை ஒதுக்கியது. இந்த ஆண்டில் இந்தியாவின் தேசிய வருமானம் 50 ஆயிரத்து 463 கோடி மட்டுமே இந்த ஆண்டில், இந்தியா இராணுவத்திற்கு ஒதுக்கிய தொகை ரூ.6800 கோடி மட்டுமே. இரண்டு தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால் அமெரிக்காவின் இராணுவ பலம் எத்துணைப் பெரிது என்பது நன்கு விளங்கும். இத்துணைப் பெரும் இராணுவத்தை வைத்துக் கொண்டுதான் உலகில் பலநாடுகளை ஈவிரக்கமற்ற முறையில் அமெரிக்கா பயமுறுத்துகின்றது அல்லது போர்களை நிகழ்த்துகிறது.

குறிப்பாக, அமெரிக்கா 1945-முதல் 1999-வரை, சீனா, கிரீஸ், பிலிப்பைன்ஸ், வடகொரியா, கௌடிமாலா, ஜோர்டான், பர்மா, கம்போடியா, சிலி, நிகாரகுவா, கிரெடா, அங்கோலா, மொசாம்பிக், லிபியா, ஈராக் இன்று யுகோஸ்லாவியா (24.3.99) போன்ற நாடுகளில் தம் இராணுவ தாக்குதலை நிகழ்த்தியுள்ளது. இப்போர்கள் அணுகுண்டுகளால் எழும் புகையால் வெளிச்சம் மறைந்து, காற்றுக்குறைந்து உலகமே இருண்டு விடும். இதுகாறும் செய்த அணு ஆய்வுகளால் வான மண்டலத்தில் உள்ள ஓசோன் (Ozone) அடுக்குகளில் ஓட்டைகள் விழுந்துள்ளனவாம். அணுப்போர் மூண்டால் ஓசோன் அடுக்குகள் பயனற்றனவாகி, உலக உயிரினங்களே அழிந்துவிடும். சூரியனிலிருந்து வரும் காஸ்மிக் (Cosmic) கதிர்களைத் தடுத்து, உயிர்வாழ்வதற்கு ஏற்ற வெப்பத்தை அளிப்பது ஓசோன் அடுக்குகளே என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஓசோன் அடுக்குகள் சிதைந்து விட்டால் மனித இனமே பூண்டோடு அழிந்துவிடும் என்கிறார்கள். அதனால்தான் இத்துணை அபாயமான போர்கள்பால் சிங்காரவேலர் பெருங்கவனம் செலுத்தியுள்ளார் எனலாம்.

உலகில் போரற்ற சமாதானமும் அமைதியும் யாண்டும் நிலவ, இன்னும் பலர் கூற துணியாத அரிய சிந்தனைகளைச் சிங்காரவேலர் குறிப்பிட்டுள்ளார்.

"சண்டையில் செத்தால் சுவர்க்கம் என்ற பித்தலாட்டத்தை சிறுவயதிலேயே கற்றுக் கொடுத்து வருகிறார்கள். அயல்நாட்டு மக்கள் எந்தக் காலத்திலும் நமது எதிரிகள் என்ற பொய் எண்ணத்தையும் கற்பித்து வருகிறார்கள்.

நமது முதல் கடமை என்னவெனில், நமது சந்ததியார்க்கு முதன் முதலில் சண்டையின் பிரதி கூலங்களையும், நாசத்தையும், சண்டையில் சாக வேண்டியநிலைமையையும், சண்டையால் சுவர்க்கம் போகலாம்

என்ற ஜாலத்தையும், சண்டையால் எந்த நாடும் உருப்படாததையும் எடுத்துரைத்து வர வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலும், இந்தச் சமாதான கல்வியை ஒவ்வொருவரும் கற்றுக் கொடுப்பார்களாகில் இரண்டொரு சந்ததியில் சண்டை செய்யும் அவசியம் உலகில் இல்லாமற் போய்விடும். "அறஞ் செய விரும்பு" "ஆறுவது சினம்" என்று கற்பிப்பதுடன் "அயல்நாட்டை வெறுக்காதே" போரைக் கோராதே" என்று சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். . . மகாபாரத யுத்தத்தையும், இராமாயண யுததத்தையும், மற்ற பல உலக யுத்தங்களையும் சிறுவர்களுக்கு அவைகளின் தீமைகளை அறியாமல் உலகம் கற்பித்துக் கொடுத்ததின் பயனாக நேற்றும் நாளைக்கும் சண்டை உலகில் நிலைத்து வருகிறது. ஆதலின் சண்டையை சிலாகித்துப் பேசும் சரித்திரங்களை உலகினின்று அப்புறப்படுத்த வேண்டுமென அறிக.

புதுஉலகம்-நமது நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய திருப்பணி-செப்டம்பர் 1935

உலகச் சம்பத்தும், செல்வமும், சீரும், சிறப்பும், பொதுவுடைமையிலும், அகில தேச மனப்பான்மையிலும் அடங்கியுள்ளது. உலகம் இந்த முடிவை அடைய எந்தக் காலமானாலும் நமது "புது உலகம்" இதனை எடுத்துரைக்கும் கடமையை அறிஞர் உலகம் மறுக்காதென்று நம்புகிறோம்.

புதுஉலகம்-விடுதலைக்கு மார்க்கம்-ஜூலை 1935

போரில் மரணம் அடைந்தால் சுவர்க்கம் கிடைக்கும் எனும் நம்பிக்கையைச் சமுதாயத்திலிருந்து அகற்றப்படவேண்டும் என்றும், போர்களைப் பற்றிய பாடங்களைப் பாடத்திட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும், சமாதானத்தைப் பற்றிய கல்வியை இலைஞர்களுக்குப் போதிக்க வேண்டும் என்றும் முப்பதுகளில் சிங்காரவேலர் கூறியிருப்பது பெரிதும் போற்றத்தக்கது. இத்தகு தொலைநோக்கு இத்தனைகளிலும் சிங்காரவேலரே முன்னோடியாக விளங்குகிறார். அதனாலன்றோ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும்

போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி
பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி"

எனப் போற்றிப் புகழ்ந்தார்.

தமிழகத்தில் உலக சமாதானம் பற்றிய சிந்தனைகள் மிகப்பரவலாக எழுபதுகளில்தான் பரவியது. அக்காலத்தில் சோவியத்து

யூனியனின் முயற்சியால், உலகப் போர்களின் அபாயம் குறித்தும், உலக சமாதானத்தின் இன்றியமையாமை குறித்தும் பல நூல்களும், இதழ்களும் எண்ணற்ற தகவல் குறிப்புகளும் வெளிவந்தன. இக்காலத்தில், பல நேரங்களில் சமாதானம் குறித்து, கம்யூனிஸ்ட் கட்சிகள் பல கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்தின. எனினும், இளைஞர்களோ, பொதுமக்களோ, கல்வியாளர்களோ அதன் முக்கியத்துவத்தைப் பெரிதும் உணரவில்லை. இன்றும் அதே நிலைதான் நீடித்து வருகிறது. "உலக சமாதானம்" என்றால் ஏதோ அமெரிக்காவும் இரஷியாவுக்கும் இடையிலான போராட்டம் எனக் கருதுகிறார்களே அல்லாமல், மானுடம் தழுவியே ஆக வேண்டிய ஓர் உயிர்க்கொள்கை என்பதை அவர்கள் அறியத் தவறுகிறார்கள் என்பதே உண்மை.

உலக சமாதானத்தின் பெரும் முக்கியத்துவத்தை உணர்ந்த மாமேதைலெனின் அவர்கள் 8.11.1917இல் சமாதான திட்டத்தை முன் வைத்து, "பொதுவுடைமையும் சமாதானமும் ஆகிய இரண்டும் பிரிக்க முடியாத இரட்டைக் கோட்பாடுகளாகும். சோசலிச சமுதாயத்தின் சர்வதேச நீதி உலக சமாதானமே யாகும்'' என்றார். லெனின் கொள்கையைப் பின்பற்றிய சிங்காரவேலரும், படுக்கையில் தாம் இறப்பதற்குச் சற்று முன்,

"Let there be no more war ; Let there be peace in the world"[12]

இனியும் போர் வேண்டா ; அமைதி உலகில் நிலைக்கட்டும் என்றார் இக் கூற்றிலிருந்து சிங்காரவேலரின் உலக நோக்கும் மானிட நேயமும் இனிது விளங்குகிறதன்றோ!

முடிப்புரை

இதுகாறும் கூறியவற்றால், சிங்காரவேலர் புது உலகத்தின் விஞ்ஞானம், தத்துவம், உயிரியல், வானவியல், அரசியல், உடற்கூற்றியல் போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிப் பல நுணுக்கமான கட்டுரைகளை எழுதியுள்ளார் என்பதைக் கண்டோம். விஞ்ஞான - தொழில் நுட்பமும், தகவல் தொடர்பும் நன்கு வளர்ந்துள்ள இக் காலத்தில்கூட முன்குறிப்பிட்டுள்ள கட்டுரைகளைப் போன்று அரிய கட்டுரைகளை காண்பது அரிதினும் அரிது. சிங்காரவேலர் தம் முதுமைப் பருவத்தில், (74 வயது முதல் 76 வயது வரை) நோயில் உழன்று கொண்டே இத்தகு கனமான பொருள் குறித்து எழுதியிருக்கிறார் எனில், அதற்குக் காரணம் அவரின் உறுதிவாய்ந்த கொள்கைப் பிடிப்பும், மனித குல வளர்ச்சியின்மீது கொண்ட பெரும் அக்கறையுமே யாகும். அவர் காலத்தில் வளர்ந்திருந்த அனைத்துத் துறைகளையும் ஆழ்ந்து

நோக்கி அவற்றை எடுத்து விளக்கி மனித குலத்தை வளர்த்து எடுப்பதிலும், காப்பதிலும் ஈடிணையற்று விளங்கியுள்ளார். இத்தகு முயற்சிக்குப் "புது உலகம்" அவர்க்குப் பெருந் துணையாக இருந்துள்ளது.

"மக்கள் தங்களைப் பற்றியே அச்சம் அடையும்படிக் கற்பிக்கப்பட்டால்தான் அவர்களுக்குத் துணிவு ஏற்படும்"[13] என்று காரல் மார்க்ஸ் கூறியதற்கேற்ப, தமிழக மக்களுக்கும் கற்பித்தவர் சிங்காரவேலர். சிங்காரவேலரின் உடல் நலக் குறைவால் இரண்டு ஆண்டுகள் (1935-1936) மட்டுமே வெளிவந்தது புது உலகம்.[14] கொள்கையற்ற போலி அரசியல் கட்சிகளிலும், கவர்ச்சிகளிலும் மூழ்கியுள்ள நமது நாடு ஒரு புது உலகமாக மலர வேண்டுமானால், சிங்காரவேலரின் "புது உலகம்" போன்ற பல இதழ்கள் வெளிவரல் வேண்டும். அத்துடன் சிங்காரவேலரின் சீரிய விஞ்ஞான நூல்கள் கல்லூரி மாணவர்கட்குப் பாட நூல்களாக வைத்தல் வேண்டும். இத்தகு சீரிய பணிக்கு இக் கருத்தரங்கு வழியமைக்கும் என்பதில் ஐயமில்லை. புது உலகம் போல் பல உலகங்கள் இனி வெளிவரட்டும். இவ்வுலகம் அறிவிலும், அமைதியிலும் தழைக்கட்டும்.

நல்லறிவும் பெருநோக்கும் கேட்பீ ராயின்
நம் தோழன் சிங்காரவேலன் கண்ட
வெல்லுதமிழ்ப் புது உலகம் என்னும் மாத
வெளியீட்டை வாசித்தல் வேண்டும் என்போம்
புல்லறிவில் தூக்கத்தில் பேசும் பேச்சைப்
புதுஉலகில் எவ்விடத்தும் கண்டோ மில்லை
இல்லையெனில் இந்நாட்டின் விஞ்ஞான ந்தான்
புதுஉலகில் விஞ்ஞானம் எதேஷ்டம் காண்பீர்

- பாரதிதாசன்

துணைநூற் பட்டியல்

1. பேரறிஞர் அண்ணா, 'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்' திராவிட நாடு இதழில் எழுதிய கட்டுரை - சிங்காரவேலர் அறக்கட்டளை வெளியிட்ட நூல், பக்.1
2. திரு.வி.க., வாழ்க்கைக் குறிப்புகள், பக்.679, 195. கழகம், சென்னை
3. LENIN, quoted GENRIKH VOLKOV, 'BIRTH OF A GENIUS ',1978, page - I Progress Publiers, Moscow

4. KARL MARX, "Note books on Epicuraan Philosophy" collected works Vol.1, Page 469, Progress Publihses, Moscow

5. KARL MARX - Marx, Engels, collected works , Vol-3, P. 175. Progress Publishers, Moscow

6. பாரதிதாசன், தேனருவி, பக்.108-109, பூம்புகார் பிரசுரம், சென்னை

7. பொன்மலையில் 26.9.53 அன்று நடைபெற்ற இரயில்வே தொழிலாளர் மாநாட்டில் சிங்காரவேலர் படத்தைத் திறந்து வைத்து தந்தை பெரியார் ஆற்றிய உரை; தோழர் ம. சிங்காரவேலு 123ஆவது பிறந்த தின வெளியீடு. நாகை. கே. முருகேசன், ப.8

8. திரு.வி.க., வாழ்க்கைக் குறிப்புகள், ப.619, பகுதி II கழகம், சென்னை

9. பெசு. மணி, காரல் மார்க்சின் இலக்கிய இதயம், ப.258, 1986, பூங்கொடி பதிப்பகம், சென்னை

10. U.S. NEWS AND WORLD REPORT, JUNE 1983, p.3

11. பாரதிதாசன், தேனருவி, ப.109, பூம்புகார் பிரசுரம், சென்னை

12. பேராசிரியர் முத்து. குணசேகரன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், முனைவர் பட்ட ஆய்வேடு, ப.51, சிங்காரவேலர் கல்வி அறக்கட்டளை, 1990

13. KARL MARX, MARX, ENGELS COLLECTED WORKS, VOL - 3 ,p.178, Moscow , 1978

14. கே. முருகேசன், சி. சுப்பிரமணியன், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட், ப. 430, 1991, நியூ செஞ்சுரி புக் அவுஸ் (பி) லிமிடெட், சென்னை.

ஜனசக்தி

1937 **சி. மகேந்திரன்**

தமிழ் இதழியல் துறையில் கடந்த அறுபது ஆண்டுகளில் ஆழமான முத்திரையைப் பதித்த சிறப்பு முதல் பொதுவுடைமை இதழான ஜனசக்திக்கு உண்டு. பெரும் எண்ணிக்கையில் விநியோகத்தை விரிவாக்கியதாலோ அல்லது பரப்பரப்பான தகவல்களைத் திரட்டிக் குவித்ததாலோ இந்த முத்திரையை ஜனசக்தி பெறவில்லை. சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட ஆதிக்க சமுதாயத்தில் மிக ஆழமாகப் புதைந்து கிடந்த உண்மைகளை வெளிஉலகத்திற்குப் புலப்படுத்தியதன் மூலம் தனது இருப்பை ஜனசக்தி வெளிப்படுத்திக் கொண்டது. உழைக்கும் மக்களின் அடிப்படை நீதியை நிலைநிறுத்துவதில் இது மேலும் உறுதி பெற்றது.

மற்ற இதழ்களிலிருந்து ஜனசக்தி அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. வாணிகம் - லாபம் என்ற எல்லைகளில்தான் பெரும்பாலான இதழ்கள் முகாமிட்டிருந்தன. இவற்றின் வெற்றி என்பது, பெரும் திரளாகக் குவியும் பணக்கட்டுகளில்தான் கணக்கிடப்பட்டது. ஜனசக்தி உழைக்கும் மக்களின் சமுதாய மாற்றத்திற்கானது என்பது தோன்றிய காலத்திலேயே பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இது ஆயிரக்கணக்கான தமிழக மக்களின் உணர்வுகளை எழுத்துகளில் பிரதிபலித்தது. இந்த எழுத்துகள் உழைக்கும் மக்களை ஒன்று திரட்டுதல், மக்களை ஒன்றுதிரட்ட முன்னணியில் நின்று செயல்படும் இயக்கத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தல் என்ற இரண்டு நிலைகளில் செயல்பட்டு வருகிறது.

ஆரம்ப காலங்களில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் இதழாகத்தான் ஜனசக்தி வெளிவந்தது. 1925ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி தோன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தொடர்ந்து பல நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்தது. சதிவழக்குகள், கைது செய்யப்படுதல், அடக்குமுறைகள், தண்டனை வழங்கப்படுதல், ஏவுதல் போன்ற பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிர்ப்பந்தத்தில் செயல்பட்டது. சட்டபூர்வமாக இயங்குவதற்குக் காங்கிரஸ் கட்சியோடு இணைந்து காங்கிரஸ் - சோசலிஸ்ட் கட்சி என்னும் புதிய அமைப்பை

உருவாக்கிக் கொண்டார்கள். அனைவராலும் நன்கறிந்த கம்யூனிஸ்ட்களைத் தவிர, மற்றவர்கள் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் அதிகாரப் பூர்வமான இதழாகத்தான் ஜனசக்தி முதலில் வெளியிடப்பட்டது.

ஆட்சி அதிகாரங்களை எதிர்க்கும் அரசியல் கட்சிகளின் இதழ்கள் அவ்வளவு எளிதில் வெற்றி பெற்று விடமுடியாது. இதன்மீது சுமத்தப்படும் அரசு நெருக்கடிகள் மிகவும் கடுமையானதாக இருக்கும். தடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் நின்று கொள்கை இதழை அச்சிடுதல் அவ்வளவு சுலபமான காரியம் அன்று. பிரிட்டிஷ் உளவுத்துறை, இந்தியாவின் ஆதிக்க சக்திகளின் நேரடி தாக்குதல் என்று ஜனசக்தி சந்தித்த கொடுமைகள் வார்த்தைகளால் விவரிக்கக் கூடியதன்று.

ஜனசக்தி பிறந்தவுடனேயே வெளியிடப்பட்ட பிரகடனங்கள் மிகவும் துணிச்சலானவை. விஞ்ஞான பூர்வமான கம்யூனிசக் கருத்தாக்கங்களை மக்களிடம் உயிர்பெறச் செய்தல் என்பது இதன் நோக்கங்களில் பிரதானமானது. மிகவும் பின்தங்கிய, பல்வேறு பண்பாட்டு வாழ்க்கையில் பிடிமானம் கொண்ட தமிழ் மக்களைச் சித்தாந்த வழியில் எழுச்சி கொள்ள வைக்கும் சிரமமான பணியை ஏற்றுக்கொண்டிருந்தது. காட்டாற்று வெள்ளமெனப் பெருகி எழும் உணர்ச்சிகளை, ஒரு குறிப்பிட்ட நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுதல் மிகவும் வசதியான காரியம். ஆனால் அதே நேரத்தில் கல்லாமை நிறைந்த பகுதியில் ஆரம்பப் பள்ளி ஆசிரியருக்குரிய பொறுப்புணர்வுடன், கல்வியையும் பண்பாட்டையும், குழந்தைகளுக்கு ஊட்டி பயிற்றுவித்தல் போன்று ஜனசக்தியின் பணி கரடுமுரடான நெருக்கடிகளை உள்ளடக்கியது.

உலகப் பொதுமனிதன் என்னும் குறிக்கோள் ஜனசக்தியின் கருத்து நிலை உருவாக்கங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த மனிதன் அனைத்து அடிமைத்தளங்களிலும் விடுதலை பெறுவது என்பதும் ஜனசக்தியின் இலட்சியமாகும். மொழி, தேசியம், சர்வ தேசியம் என்ற மூன்று நிலைகளிலான இணக்கம், வளர்ச்சி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு வர்க்கப் போராட்டத்தின் ஆயுதமாக இது செயல்பட்டது. உழைப்பைச் சுரண்டுவதன் மூலம்தான் சமுதாயத்தின் அனைத்துவிதமான ஏற்றத்தாழ்வுகளும் வளர்ந்துள்ளன. இன்றைய மனித குலத்தின் அடிப்படையான சிக்கல், ஆதிக்காரன், அடிமை என்ற

இந்தப் பார்வைதான். உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு விஞ்ஞானப் பூர்வமான கண்ணோட்டத்துடன் ஆதிக்க சக்திகளை முறியடித்து, சமத்துவத்தை நிறுவ வேண்டும் என்ற வழிகாட்டுதலை உள்ளடக்கியது வர்க்கப் போராட்டம்.

மொழி, தேசியம், சர்வதேசியம் ஆகிய மூன்றும் இந்த வர்க்கப் போராட்டத்தின் அளவைப் பெறுமானங்களில் நோக்கினால் எதார்த்த நிலைமை தெளிவாகப் பிடிபடும் என்ற கருதுகோளை ஜனசக்தி பெற்றது. மொழி ஒவ்வொரு மனிதனின் பிறப்போடு ஆழமான தொடர்பு கொண்டது. தாய்ப்பால் போன்று மானுடவாழ்வின் உயிர்ப்புடன் தொடர்பு கொண்டது. இந்த மொழிக்கான செயல்பாடு ஆழ்மனத்தில் உறங்கி நிற்கிறது. உணர்ச்சி என்னும் கருவியின் மூலம், இதனை விழிப்படையச் செய்தால் விளைவுகள் என்ன நிகழும் என்பதை யாராலும் கணிக்க இயலாது. இது மானுட உணர்வுகளை வலுப்படுத்தும் சிறந்த ஆயுதமாகவும் அமையலாம் அல்லது சுய நல்வட்டங்கள் குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதாகவும் அமையலாம். வர்க்கப் போராட்டத்துடன், மொழியைத் தொடர்புபடுத்திப் பார்த்த ஜனசக்தி இது குறித்த தெளிவான கண்ணோட்டத்தைக் கொண்டது. ஜனசக்தியின் மொழிபார்வை குறித்து, பிற்காலங்களில் கடுமையான தாக்குதல் தொடுக்கப்பட்டது. இது தனியாக ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

ஜனசக்தி பிறந்த காலத்தில் தேசியம் என்னும் சொல் முக்கியமான தேவையாகக் கருதப்பட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பில், இந்திய மக்களை ஒன்றுதிரட்ட, தேசியம் என்பது தவிர்க்க இயலாத முக்கியத்துவத்தைப் பெற்றது. இன்றைய காலத்தில் தேசியம் வளர்த்துள்ள கருத்து நிலைகள் மாநிலங்களின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கின்றன என்பது உண்மையாக இருந்தாலும், சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசியம் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பங்கினை அளித்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

சர்வ தேசியம் என்ற கருத்தாக்கம் இந்திய மக்களுக்கு மிகவும் புதியது. காலனியாதிக்கம் வளர்த்திருந்த அடிமைத் தனமும், இந்தியாவின் பின்தங்கிய நிலைமைகளும், சர்வதேசியம் என்னும் சொல்லைப் புரிந்து கொள்ள பெரும் தடையாக இருந்தன. ஜனசக்தி இந்தச் சிக்கல் நிறைந்தப்பணியைத் தனது முக்கியமான கொள்கையாகக் கொண்டது. உலகம் தழுவிய பாதிக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையை உருவாக்குவதன் மூலம்தான் உலக ஆதிக்கத்தைத் தகர்க்க முடியும் என்ற புரிதலை ஜனசக்தி கொண்டிருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் பிரச்சார இதழாக ஜனசக்தி வெளிவருகிறது என்பது அனைவரும் அறிந்ததே! உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களுக்கென்று ஒரு தனித்த சர்வதேச அமைப்பை உருவாக்கியிருந்தன. இதன் பெயர் கம்யூனிஸ்ட் அகிலம் (COMMUNIST INTERNATIONAL) இதன் முக்கிய தலைவரான பல்கேரிய நாட்டின் தலைவர் ஜார்ஜ் டிமிட்ராவ் "ஐக்கிய முன்னணிக் கொள்கை" என்னும் புதிய திசைவழியைக் காட்டினார். ஏகாதிபத்தியத்தாலும், முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளாலும் பாதிக்கப்பட்ட சகலபகுதி மக்களை ஒருங்கிணைத்தல் இந்த ஐக்கிய முன்னணியின் நோக்கமாகும். இந்தக் கொள்கை 1935-இல் கம்யூனிஸ்ட் அகிலத்தால் அங்கிகரிக்கப்பட்டது. தொழிலாளர்கள், மாணவர்கள், கலை இலக்கியம் என்று வெகுமக்கள் அமைப்புகளை உருவாக்கும் அவசியம் எல்லா நாடுகளிலும் இதன்பின்னர் ஏற்பட்டது. இந்தியாவில் அகில இந்திய தொழிற்சங்க மாமன்றம் (ALL INDIA TRADE UNION CONGRESS) 1920ஆம் ஆண்டிலேயே தோன்றி எழுச்சி பெற்று வந்தது. 1936ஆம் ஆண்டில் அகில இந்திய விவ்சாயிகள் சங்கம் (ALL INDIA KISAN SHABA) அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், (ALL INDIA STUDENTS FEDERATION) இந்திய மக்கள் நாடக மன்றம் (INDIA People Theaters Association) முதலிய வெகுமக்கள் அமைப்புகள் தொடங்கப்பெற்றன.

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தால், கொதிப்படைந்த மக்களை அமைப்பு ரீதியாகத் திரட்டுவதற்கு ஜனசக்தி மிகவும் கடினமான பணிகளை ஆற்றியது. பிரிட்டிஷ் ஆட்சியில் தொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தனர். கிராமப் புறவாழ்க்கை மிக மோசமாகச் சூறையாடப்பட்டது. பஞ்சமும், வறுமையும் ஏழை மக்களது வாழ்வைக் கவ்விக் கொண்டன. விவாசயம் மிகக் கீழான நிலைமைக்குச் சென்றது. ஏகாதிபத்தியத்தின் குமாஸ்தாக் கல்வி, மாணவர்கள் உரிமை பெறுதலை மூர்க்கத்தனமாக அடக்கப் பார்த்தது. படைப்பாளிகள், கலைஞர்கள் ஆகியோரின் சுதந்திரத்தை, பிரிட்டிஷ் அரசு முழுமையாகப் பறித்தது. ஜனசக்தி இந்தப் பாதிப்புகளை எல்லாம் உணர்ச்சிப் பெருக்கோடு மக்கள் முன் விவாதத்திற்கு வைத்தது. வெகுமக்களிடம் ஜனசக்தி தனது உறவை விரிவாக்கிக் கொள்வதற்கும், வெகுமக்களும், இதனோடு இணைந்து நின்று பணியாற்றி வந்த கட்சித் தோழர்களும், செழுமை பெறுவதற்கு ஜனசக்தி பெரிதும் பயன்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியும், வெகுமக்கள் அமைப்பும் உருவானபின் போராட்டங்கள் அடக்கமுடியாத வேகத்துடன் வெடிக்கத்

தொடங்கியது. மக்கள் உணர்வு பெற்றுச் சிந்தித்து போராடத் தொடங்கியவுடன், பல்வேறு புதிய சூழ்நிலை உருவாக்கப்பெற்றன. இவையெல்லாம் போராடுகின்றவர்களுக்கு உற்காசம் தருவதுடன் புதிய அனுபவங்களை வழங்கின. ஜனசக்தி இவையெல்லாவற்றையும் புதிய பார்வையோடு வெளியிட்டது.

ஜனசக்தி வெளிவராமல் இருந்த காலங்கள் மிகவும் குறைவு. கட்சியும் இதழும் தடைப்பட்ட காலங்களில் இந்த சங்கடம் நிகழ்ந்தது. இதைத்தவிர கடந்த 60 ஆண்டுகாலமாக அர்ப்பணிப்புணர்வுடன் ஜனசக்தி தனது கடமையைச் செய்து வந்துள்ளது. இதுபோன்ற ஒரு நீண்ட போராட்ட அனுபவத்தை, தமிழ் இதழியலில் பெற்ற வேறொரு பொதுவுடைமை இதழ் இல்லை என்றால் இது மிகைப்படுத்தப் பட்டதல்ல.

இதழ் தொடக்கம்

ஜனசக்தியின் முதல் இதழ் 1937ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதி வெளியிடப்படுகிறது.

இதுபற்றி கட்சி முன்னணித் தலைவராக நீண்ட காலம் பணியாற்றி மரணமடைந்த தோழர் ப.மாணிக்கம் எழுதியுள்ள கருத்துகள் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக 15-ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர். மாணவர் பருவம் முதலே இயக்கத்தோடு நெருங்கி பணியாற்றியதால் இவருடைய கருத்துக்கள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. இதுபற்றிய கட்டுரை ஒன்று ஜனசக்தி பொன்விழா மலரில் வெளியிடப்பட்டுள்ளது.

"1937இல் ஜனசக்தி தொடங்கியபோது, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து விடுதலைப்போராட்டம் தொடர்ந்த காலம். அந்த நேரத்தில் சென்னை மாநிலத்தில் தமிழகம், கேரளம், ஆந்திரம், கர்நாடகத்தின் மங்களூர் பகுதி, ஒரிசாவின் கஞ்சம் மாவட்டம் ஆகியவை இருந்தன.

இந்தக் காலத்தில்தான் உலகில் யுத்த மேகம் சூழ்ந்திருந்தது. ஹிட்லர், முசோலினி போன்ற பாசிஸ்டுகளால் ஐரோப்பிய மக்கள் அச்சம் கொண்டிருந்தனர். முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியும் முற்றிவிட்டது.

இந்தியாவில் உழைக்கும் மக்கள் கடுமையாகச் சுரண்டப் பட்டார்கள். பிரிட்டிஷ்காரர்களின் மூலதனம் மிகவும் கடுமையாக

ஆதிக்கம் செலுத்தியது. விவசாயிகள் ஏழ்மைக்கு உள்ளாகக் கடனாளியானார்கள். நாட்டின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற லட்சியம் இளைய தலைமுறையிடம் உருவாகியிருந்தது. காங்கிரஸ் கட்சி அன்று விடுதலைக்குப் போராடிய இயக்கம். இதில் கம்யூனிஸ்ட் கட்சியினரும் இணைந்திருந்தனர். காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி என்னும் அமைப்பு உருவாகியிருந்தது. இடதுசாரிகள், ஐக்கியப்பட்டு விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த போராடி வந்த காலம். இத்தகைய போர்க்குணமிக்க காலத்தில்தான், சோசலிச லட்சியங்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, ஜனசக்தி பிறந்தது."

போர்க்குணமிக்க இத்தகைய புறச்சூழலில் தான் ஜனசக்தி பிறந்துள்ளது. ஆனாலும் சூழ்நிலை தந்த வாய்ப்புகளும், தடைகளும், ஆராய்ந்து பார்ப்பதற்கு மிகவும் சுவைதருவதாக இருக்கிறது.

பிரிட்டிஷ் இந்திய ஆட்சியில் பத்திரிகை, பிரசுர வெளியீடுகளின்மீது மிகவும் கடுமையான தடை இருந்தது. முற்போக்கான எந்த வெளியீடுகளும் பிரசுரிக்கமுடியாமல் தடுக்கப்பட்டன. இவை, இந்திய மக்களிடம் பெரும் விழிப்புணர்வை உருவாக்கிவிடும் என்ற அச்சம் பிரிட்டிஷ்காரர்களிடம் அதிகமாகவே இருந்தது. ஒன்றில்லாமல், தங்கள் கருத்துகளை மக்களிடம் வளர்க்க இயலாது என்பதை அறிந்த காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் வாய்ப்பு ஒன்றை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் சட்டம் (GOVERNEMNT OF INDIAN ACT) ஒன்றை இயற்றியது. இது இந்திய வரலாற்றில் மிக முக்கியமான சட்டமாகக் கருதப்படுகிறது. மாகாணங்களுக்குச் சுயாட்சி வழங்குதல் என்னும் வரைவு இந்த சட்டத்தில்தான் இயற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண ஆட்சி அமைவதற்கு இது வகை செய்கிறது.

சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் 1937ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் நாள் காங்கிரஸ் அமைச்சரவை பதவி ஏற்றது. தங்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்குமான உறவைப் பயன்படுத்தி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி, ஒரு பத்திரிகை தொடங்கும் முடிவுக்கு வருகின்றனர்.

திரு. சிஎஸ். சுப்ரமணியம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகாலத் தோழர்களில் மிகவும் முக்கியமானவர். கல்வி கற்பதற்காக லண்டன் சென்றவர்; அங்கேயே கம்யூனிச இயக்கத்தில் இணைந்து நாடு

திரும்பியவர்; வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொள்ள அண்ணல் காந்தியடிகள் இங்கிலாந்து சென்றபோது வரவேற்பு அளிக்க வந்தவர்களில் இவரும் ஒருவர்; ஜனசக்தியின் தொடக்க காலங்களிலிருந்தே நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பவர். ஜனசக்தியின் உருவாக்கத்திலும், வினியோகம் செய்வதிலும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவகையில் பணியாற்றியவர்.

இவரது கருத்துப்படி "பிற்காலத்தில் விவசாய சங்கத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய தோழர் பி. சீனிவாசராவ், 'சோசலிஸ்ட்' என்னும் தமிழ் வாரப்பத்திரிகைக்கு வெளியிடும் உரிமை கோரி, சென்னை மாகாணப் பிரதம மாஜிஸ்டிரேட்டிடம் ஒரு மனு விண்ணப்பித்திருந்தார். 1937ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் நாள் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் மீது சென்னை போலீஸ் கமிஷனர் விசாரணை செய்தார். விசாரணைக்குப் பின் 25 நாட்களுக்குள் ரூபாய் ஆயிரம் ஜாமீன் கட்டினால் மட்டுமே, அனுமதி வழங்கப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இந்த ஜாமீன் தொகை கட்ட முடியாததால், சோசலிஸ்ட் என்னும் தமிழ் வார பத்திரிகைக்கான அனுமதியைப் பெற இயலவில்லை.

அதன்பின்னர் மற்றொரு முயற்சி நடைபெற்றதாம். சென்னை மௌண்ட் ரோட்டின் அருகில் பி.என்.சி. பிரஸ் என்றொரு அச்சகம் இருந்தது. ஜனசக்தி என்னும் பெயரில், பி.சி. ஜெயவேல் என்பவரை ஆசிரியராகக் கொண்டு, இந்த அச்சகத்தில் ஒரு பத்திரிகை பிரசுரிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் பி.என்.சி. பிரஸ் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்திய அளவில் மிகவும் புகழ்பெற்ற எஸ்.வி. காட்டே அவர்களின் வழிகாட்டுதலில் 'நியூஏஜ்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை இங்குதான் வெளியிடப்பட்டது. எச்.டி. ராஜா என்னும் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிர உணர்வு கொண்ட இளைஞர் இந்த அச்சகத்தை நடத்தி வந்தார். இந்த அச்சகத்திற்குக் காவல் துறையில் கடுமையான நெருக்கடி இருந்தது. இந்த நெருக்கடி 'நியுஏஜ்' பத்திரிகையை வெளியிட்டதால் ஏற்பட்டது.

இந்த பி.என். அச்சகத்தில்தான் 1937ஆம் ஆண்டில் நவம்பர் 6ஆம் தேதி ஜனசக்தி பிறந்தது. இந்த நாள் நவம்பர் புரட்சி நாள். ருஷியாவில் பூர்ஷ்வா ஜொன்ஸ்கி அரசை வீழ்த்திய தினமாகும்.

ஜனசக்தியின், அன்றைய உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்து செயல்பட்டவர்கள், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்த

தலைவர்கள்தான். அப்பொழுது இந்த கட்சியின் இந்தியத் தலைமை பொறுப்பை, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஏற்றிருந்தார். தமிழகத்தில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர்களாக ப.ஜீவானந்தம், பி. சீனிவாசராவ், பி. ராமமூர்த்தி ஆகியோர் செயல்பட்டனர். ப. ஜீவானந்தம் கட்சியின் செயலாளராகச் செயல்பட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்கள். இவர்கள்தான் உட்கருவாக, நின்று வழிகாட்டினார்கள் என்று கூற வேண்டும். பல்வேறு, அரசியல் இயக்கங்களைச் சார்ந்த ஆர்வலர்களும் ஜனசக்திக்குப் பொருள் உதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளும் செய்து வந்துள்ளனர். ஜனசக்தி முதல் நிர்வாக ஆசிரியராக, ப.ஜீவானந்தம் செயல்பட்டார்.

1937இல் பிறந்த ஜனசக்தி மூன்று இதழ்களுடன் நின்று போனது. இதழ் நின்றுபோனதற்குப் புறசூழ்நிலைகள்தான் காரணம். இதழின் காலம் குறிக்கப்படவில்லை. மாதமா, வாரமா என - விலையை வேண்டுமெனில் குறிப்பிடலாம். ஜனசக்தியின் மூன்றாவது இதழ் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டு நின்று போய்விட்டது. நின்றுபோன இதழில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"இதுவரை இருந்ததுபோல் ஜனசக்தி அரசியல் துறையில் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க இயலாமல் போய்விட்டது (இன்று ஏற்பட்டுள்ள நிலைமையால்)

மீண்டும் தமிழ் மக்களுக்குச் சேவை செய்வதற்காக ஜனசக்தி மீண்டும் புத்துயிருடன் முன்வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போம்."

ஜனசக்தியின் 'இன்று ஏற்பட்ட நிலையால்' என்ற அடைப்புக் குறி வாசகம் பல அர்த்தங்களை மறைமுகமாகத் தெரிவிக்கிறது. 1935ஆம் அரசியல் சட்டம் மாகாணங்களுக்கு வழங்கிய சுயாட்சியின் புதிய சூழலைப் பயன்படுத்திதான் ஜனசக்தியால் வெளிவர முடிந்தது. மீண்டும் அரசியலில் புதிய சிக்கல் எழுந்தது. மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியவில்லை. சட்டம் பெயரளவில்தான் செயல்பட அனுமதித்தது. உண்மையில் மிகவும் நன்றாக மையப்படுத்தப்பட்ட வைசிராய் ஆட்சிதான் நடைபெற்றது. போலீஸ்காரர்களின் கெடுபிடியும் அச்சகங்களின் மீதான மறைமுக அடக்குமுறைகளும் அதிகரித்தன. அச்சகத்தின் உரிமையாளர்களால் இந்த கெடுபிடி முன்னால் தாக்குபிடிக்க இயலவில்லை.

மீண்டும் ஜனசக்தியைப் பிரசுரிக்கும் அடுத்த முயற்சி எடுக்கப் பட்டது. முந்தைய அனுபவத்திலிருந்து சொந்தமாக அச்சகம் ஆரம்பிக்கும் முடிவுக்குப் பொறுப்பாளர்கள் வந்தார்கள். சொந்த அச்சகத்தால் மட்டுமே, அரசாங்கத்தின் நெருக்கடிகளைச் சந்திக்க முடியும் என்று நினைத்தார்கள். ஆனால் இதிலும் ஒரு சிக்கல் எழுந்தது. நன்கறியப்பட்ட இயக்கத் தோழர்களின் பெயரில் அச்சகத்திற்கான அனுமதி பெறமுடியாது. போலீஸ்காரர்களும், அரசாங்கமும் விண்ணப்பித்தவுடனேயே மறுத்துவிடுவார்கள். இதற்கு ஒரு தந்திரமான வழிமுறையைப் பின்பற்றியிருக்கிறார்கள். அச்சகத்திற்கு 'ஜேசுபிரஸ்' என்று பெயரிட்டு, தோழர் பி. சீனிவாசராவ் அவர்களின் நெருங்கிய நண்பரும், தீவிரமான காங்கிரஸ் கட்சிக்காரருமான பாலன் என்பவர் பெயரில் அச்சகத்திற்கான உரிமையைக் கோரியிருக்கிறார்கள். அதன் பின்னர்தான் அச்சகத்திற்கான உரிமையை அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

அந்த காலத்தில் அச்சகத் தொழிலாளர் சங்கம், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட்களின் செல்வாக்கில் இருந்தது. இதிலுள்ள தீவிர உறுப்பினர்கள், ஜேசு அச்சகத்திற்கு அழைத்துக் கொள்ளப்பட்டார்கள். சீனிவாசராவ் அச்சக நிர்வாகப் பொறுப்பை முழுமையாக ஏற்றிருந்தார். மீண்டும் வெளிவந்த இதழின் ஆசிரியர் பொறுப்பு, ப. ஜீவானந்தம் ஏற்றிருந்தார். இரண்டாம் முறையாக 1938ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் தேதி மீண்டும் வெளிவரத் தொடங்கியது.

தனது பணியைச் செய்து வந்த ஜனசக்தி 16 மாதங்கள் பணியாற்றியபின் மீண்டும் நின்றுபோனது. பத்திரிகை நின்றுபோனதற்கு மிகவும் அடக்குமுறை நிறைந்த சூழல்தான் காரணம்.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியிருந்த காலம் இது. உலகப்போரில் பிரிட்டிஷாருக்கு ஆதரவாக இந்தியா யுத்தக் களத்தில் நிறுத்தப்பட்டது. இதனால் இந்தியாவுக்கு ஏற்படபோகும் பொருள் இழப்பையும் உயிர் இழப்பையும் கணக்கிட்டு, புரட்சியாளர்களும் முற்போக்கு தேசபக்தர்களும் கலக்கமடைந்திருந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது கடுமையான கோபம் உருவாக இது காரணமானது. மக்களிடம் இதனால் எழுந்த கொந்தளிப்பை உணர்ந்த அரசாங்கம் அடக்குமுறை சட்டங்களை இயற்றியது. கம்யூனிஸ்ட்களும், தீவிர தேசபக்தர்களும் கைது செய்யப்பட்டார்கள். வேறு வாய்ப்புகளற்ற நிலையில் ஜனசக்தி நிறுத்தப்பட்டது.

1937-39க்கு இடைப்பட்ட ஆரம்பகாலங்களில் ஜனசக்தி இதழுக்கு முழு வழிகாட்டுதலைத் தந்தவர் எஸ்.வி. காட்டே என்னும்

புகழ்பெற்ற கம்யூனிஸ்ட் தலைவர்தான். மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த இவர்தான், தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம் உருவாக அடிப்படையாக வழிகாட்டியவர். ஜனசக்தியோடு இவர் கொண்டிருந்ததொடர்பு, பொருத்தமான வழிகாட்டுதலாக அமைந்திருக்கிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதல் தலைமுறையின் முன்னணித் தலைவர்களாக மதிக்கப்பெறும் ப.ஜீவானந்தம், பி.எஸ். சீனிவாசராவ், பி. ராமமூர்த்தி ஆகியோர், ஜனசக்தி தோன்றுவதற்கு மிகவும் கடினமான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். சி. சுப்பிரமணியம், ஏ.எஸ்.கே அய்யங்கார் ஆசிரியர் குழுவுடன் இணைந்து செயல்பட்டிருக்கிறார். இதழின் செய்தியாக்கம், கட்டுரை வடிவாக்கம், பிழைதிருத்தம் முதலியப் பணிகளை, பல தோழர்களே இரவு பகலென்று பாராமல் தன்னலமற்று செயலாற்றியிருக்கிறார்கள். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், டி.ஆர். சுப்ரமணியம், நாகை ஜே. முருகேசன், திருத்துறைப் பூண்டி சுந்தரேசன், நாகர்கோவில் இளங்கோ.

மார்க்சிய வழிநின்று, சகலவிதமான அடக்குமுறைகளையும் முறியடித்து சமத்துவத்தை உருவாக்க தமிழ்மண்ணில் போராடுவோம் என்பதை ஆரம்ப காலத்திலேயே ஜனசக்தி தெளிவாக அறிவித்தது. மார்க்சீய பேராசான்களின் படங்களை வெளியிட்டு, கட்டுரைகளைப் பிரசுரித்தல், காங்கிரஸ், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி பற்றிய அரசியல் தீர்மானங்கள், செயல்பாடுகள் ஆகியவற்றை வெளியிடுதல்- விவசாயிகள், தொழிலாளர்கள் அமைப்புகளின் கோரிக்கைகள், போராட்டங்களை வெளியிடுதல் ஆகிய உள்ளடக்கத்தை ஜனசக்தி கொண்டிருந்தது. வாரம்தோறும் தொடர்ந்து வெளிவந்த ஜனசக்தியின் சில இதழ்கள் 16 பக்கங்களையும், வேறு சில இதழ்கள் 20 பக்கங்களையும் கொண்டிருந்தன.

சிறுகதைகள், திரைப்பட விமர்சனம், பெண் உரிமை பற்றிய கருத்துக்கள் - ஒவ்வொரு இதழிலும் இரண்டு அல்லது மூன்று பக்கங்கள் கொண்டிருந்தன.

ஜனசக்தி தலையங்கங்கள், மிகத் தெளிவையும், செயல்பாட்டிற்கான ஊக்கத்தையும் தரக்கூடியவையாகக் காணப்படுகின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய செயலாளராகப் பணியாற்றிய தோழர் பி.சி. ஜோஷி, கட்சியின் முன்னணி தலைவர் ஜி. அதிகாரி, ஆகியோர் அகில இந்திய கட்சி கண்ணோட்டத்தை நேஷனல் பிரண்ட் (National Front) என்னும்

ஆங்கில இதழில் எழுதிவந்தனர். தமிழாக்கம் செய்யப்பட்டு இது, ஜனசக்தியில் வெளியிடப்பட்டது.

'ஓடுகிற ஓட்டம்' என்னும் தலைப்பில் நாடோடி என்னும் பெயரிலும், ருஷியப்பெண் என்னும் தலைப்பில், சோவியத்து பித்தன் என்னும் பெயரிலும், இதைத் தவிர, பூபதி உட்டோபியர், சீனியஸ், தூரதிருஷ்டி என்னும் பெயரில் தனித்தனியான கட்டுரைகளும் வெளிவந்தன. இந்த புனைப்பெயர்களில் சி. சுப்பிரமணியம் உள்ளிட்ட சில தோழர்கள் எழுதியிருக்கிறார்கள். ப. ஜீவானந்தம் எழுதிய புதுமைப் பெண் - என்னும் புகழ்பெற்ற கட்டுரைகள், இந்தக் காலத்தில்தான் ஜனசக்தியில் வெளிவந்தன.

சுதந்திரப் போரின் புதிய கட்டம்

சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறு கண்ணோட்டங்கள் இருந்தாலும் 'பூரண சுதந்திரம்' என்ற கொள்கையை ஆரம்ப காலம் முதலே ஜனசக்தி ஏற்று, செயல்பட்டு வந்துள்ளது. அதற்கான கடமையை எந்த நேரத்திலும் செய்யத் தவறியதில்லை.

கடுமையான அடக்குமுறை 1939க்கு பின் ஏவப்பட்டது. கம்யூனிஸ்ட்களும், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும் 'தடுப்புக் காவல் சட்டத்தில்' கைது செய்யப்பட்டனர். ஜனசக்தியில் முதுகெலும்பாகக் கருதப்பட்ட பி. சீனிவாசராவ் கைது செய்யப்பட்டார். ராஜாஜி தலைமையில் அன்று இயங்கிய காங்கிரஸ் அமைச்சரவைக்குக்கூட தகவல் இல்லாமல், அவர் கைதானார். அமைச்சரவையில் அங்கம்வகித்த அமைச்சர்கள் பி. சீனிவாசராவ் மீது பெரும் மதிப்பைக் கொண்டிருந்தனர். இதன் காரணமாகக் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்தது.

எஸ்.வி. காட்டே, ப. ஜீவானந்தம் உள்ளிட்ட 350க்கும் அதிகமான கம்யூனிஸ்ட்டுகள், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் பாதுகாப்பு கைதிகளாக வேலூர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டனர். சிறைக்கு வெளியே போராட்டங்களுக்குத் தலைமையேற்றுச் செயல்பட்ட ஜனசக்தி முன்னணி பொறுப்பாளர்கள் சிஎஸ். சுப்ரமணியம், பி. ராமமூர்த்தி, மோகன் குமாரமங்கலம், சுப்ரமணிய சர்மா, கேரளீயன், ஆகியோர் 1940ஆம் ஆண்டு டிசம்பரில் கைது செய்யப்பட்டனர். 'சென்னை சதிக்குற்றம்' என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கான இவர்களின் வழக்கு விசாரணை ஓராண்டு காலம் நடைபெற்றது. கடைசியில் பல ஆண்டுகாலச் சிறைத் தண்டனை

இவர்களுக்கு வழங்கப்பட்டது. ஏ.கே. கோபாலன், ராமச்சந்திர நெடுங்காடி, முதலான கேரளத் தோழர்கள் தலைமறைவாக இருந்து இயக்கத்திற்குப் பெரும்பங்காற்றி யிருக்கிறார்கள்.

ஜனசக்தி தடைப்பட்ட இடைக்காலத்தில், 'தலைமறைவு வாழ்க்கை' நடத்திய பல்வேறு குழுக்களுக்கிடையே, அரசியல் அமைப்புச் செயல்பாட்டுப் பரிமாற்றங்களுக்கு ஒரு தனிச்சுற்று இதழ் தேவைப்பட்டது. 'கம்யூனிஸ்ட்' என்ற தனிச்சுற்று ரகசிய இதழ் தொடங்கப்பட்டது. இந்த இதழ் தலைமறைவு வாழ்க்கையின் ஜனசக்தி என்று கருதலாம். தலைமைமறைவு வாழ்க்கை அடிப்படைகளில் ஒன்று ஒவ்வொரு தோழரும் தனியான ஒருபெயரைப் புனைந்து கொள்ளவேண்டும். ஜனசக்தி, இவ்வாறு தனது பெயரை மாற்றிக் கொண்டதா? என்று நினைத்துப் பார்க்கத் தோன்றுகின்றது.

'ஸ்டென்சில்' என்னும் நகலெடுக்கும், முறையை அடிப்படையாகக் கொண்டு செக்ளோ மிஷின்களில் பலநூறு பிரதிகள் எடுத்து, "கூரியர்கள்" (தலைமறைவு ரகசிய தொடர்பாளர்கள்) மூலம் 'கம்யூனிஸ்ட்' மிகவும் எச்சரிக்கையுடன் வினியோகிக்கப்பட்டது.

இதுபற்றி ஆர்.கே. கண்ணன் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார். அரசியல், இலக்கியம் ஆகிய இரண்டு துறைகளில் மிகுந்த ஆழத்தைப் பெற்றவர் இவர். தலைமறைவு வாழ்க்கையை மேற்கெண்டவர்.

"இருட்டில் மினுக் மினுக் என்று கண் சிமிட்டும் சிம்னி விளக்கைச் சுற்றி உட்கார்ந்து, தாழ்த்திய குரலில் ஒருவர் வாசிக்க மூன்று நான்குபேர் கேட்டு விவாதம் நடத்துவார்கள். இதுவே அன்றைய 'செல்' என்னும் அமைப்பின் பிரதான அம்சமாகிறது. 'செல்' என்பது கட்சிகளில் அடித்தளங்களில் இயங்கும் கட்சி கிளை போன்ற அமைப்பாகும்.

இந்தச் சிறுசிறுஇதழ்கள், உலகத்தையே சுற்றி வந்து, ஆராய்ந்தன. 'தொழிலாளர் வர்க்கப் பாதை', என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படையான வேலைத்திட்டத்தை, தலைமறைவு வாழ்க்கையில், விளக்கி பயிற்றுவித்தது. விலைவாசி கடுமையாக உயர்ந்தது. 'யுத்த அலவன்ஸ்' கொடு என்ற கோஷத்தை முன்னிறுத்தி, திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய இடங்களில் வேலை நிறுத்தங்கள் நடந்தன. இவை எல்லாவற்றையும் தோழர்களுக்கு இந்த இதழ் தெரிவித்தது.

கையில் வைத்திருக்கும்போது சிக்கிக் கொண்டால், ஓராண்டுச் சிறை, ஈராண்டு சிறை என்ற பயம் இருந்த காலத்தில்தான் இந்த

பத்திரிகை இவ்வாறு நடத்தப்பட்டது". ஆர் கண்ணன் எழுதிய இந்த தகவல் '1939 செப்டம்பர் முதல் 1942 வரை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையாக 1927 டிசம்பர் ஜனசக்தியில் வெளிவந்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றிய காலத்திலிருந்து கிட்டதட்ட 15 ஆண்டுகள் தடைசெய்யப்பட்டிருந்தது. இந்த தடையை நீக்க வேண்டும் என்பதற்கான கிளர்ச்சிகள் இந்தியாவில் மட்டும் நடைபெறவில்லை. உலகமுழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் தடை நீக்கும் கோரிக்கையை முன் வைத்தன. குறிப்பாகப் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் மிகவும் கடுமையான கிளர்ச்சிகளைச் செய்தது. 1942ஆம்அண்டு ஜூன் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதான தடை நீக்கம் பெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தடைநீக்கப்பட்ட உடன் மீண்டும் ஜனசக்தி வெளியிடுவதற்கு முயற்சிகள் தொடங்கப்பெறுகின்றன. 1942ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி மீண்டும் ஜனசக்தி பிறப்பெடுத்தது.

தடை நீங்கி, வெளிவந்த ஜனசக்தியின் முதல் இதழ் தலையங்கம் கீழ்க் கண்டவாறு பிரகடனத்தை வெளியிட்டது.

"ஜனசக்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்ப் பத்திரிகை. தேசீய சர்வதேசீய ரீதியாக நடைபெற்று வரும் சம்பவங்களின் உட்கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு, நமக்கு வழிகாட்டியாகத் துணை நிற்பது மார்க்சீயத்தின் லெனினியத்தின் அடிப்படை தத்துவங்களே! புரட்சிக் கொடியின்கீழ் நின்று பாட்டாளி மக்களின் ரத்தத்தினால் புனிதப்படுத்தப்பட்டுள்ள செங்கொடியின் கீழ்நின்று, நமது மக்களுக்காகத் தொண்டாற்றி, நமது புராதன நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட முயற்சி செய்வோம். . . . நம்முடைய ஜனங்களின் சக்தியில் முழுநம்பிக்கை கொண்டு அவர்களுடைய தேசப்பக்தியிலும் சுதந்திர ஆர்வத்திலும் நம்பிக்கை வைத்து, மனிதவர்க்கத்தையும், இந்திய மகாஜனங்களையும் பாதுகாக்கவல்ல, இந்த ஒரே சக்தியாகிய ஜனசக்தியைத் திரட்ட, ஜனசக்தி பாடுபடும்".

தலையங்கத்திற்கு 'நாம்' என்னும் தலைப்பு தரப்பட்டுள்ளது. பாசிச அபாயத்திற்கு எதிராக உலகமக்கள் ஒன்றுபட வேண்டிய அவசியத்தையும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தப் போராட்டத்தில் காங்கிரஸ் முஸ்லீம் லீக் ஒன்றுபடுவதன் அவசியமும்

மொழிவழி தேசிய ஜனங்களின் உரிமைகளும் இந்த தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலக அரங்கில் 1942 ஆம் ஆண்டு மிகவும் நெருக்கடியாக உணரப்பட்டது. பூவுலகு முழுவதையும் ஆட்சிபுரிய வேண்டும் என்ற வெறிபிடித்த பாசிசம் உலகம் முழுவதையும் ஆதிக்கப்படுத்துவதில் முன்னேறிக்கொண்டிருந்தது. நாசிஹிட்லர் தலைமையில் செயல்பட்ட, ஜெர்மனி, ரஷ்யாவைக் கைப்பற்றி, ஈராக் ஆப்கானிஸ்தான் என்று இந்தியாவை வெற்றிகொள்ளும் திட்டத்தில் செயல்பட்டது. இத்தாலிய பாசிசத் தலைவன் முசோலினி, ஆப்பிரிக்கா முழுவதையும் எடுத்துக் கொள்ளும் நோக்கத்திலும் தீவிரமானான். ஆசிய நாடுகளில் ராணுவ வலிமையோடு விளங்கிய ஜப்பான், ஆசியாவில் பல பகுதிகளை வெற்றி கொண்டாலும், இந்தியா, சீனா ஆகிய இரண்டையும் அடைவதுதான் அதன் இறுதி நோக்கமாக இருந்தது. இந்திய அரசியலில் பல்வேறு நெருக்கடிகளை இது உருவாக்கியது. இந்த காலத்தில் ஜனசக்தி பங்களிப்பு மிகவும் தீவிரமடைந்திருந்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு 1948ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் தேதி முதல் ஜூன் 1-ஆம் தேதி முடிய பம்பாயில் கூடியது. புதிய சூழலில் காங்கிரஸ் கட்சி, முஸ்லீம் லீக், கம்யூனிஸ்ட் கட்சி மூன்றும் இணைந்து தேசவிடுதலைக்காகப் போராட வேண்டும் என்ற கொள்கை முன் வைக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியிலிருந்து பிற்போக்காளர்கள், இவர்களின் இந்தக் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்குக் காந்தியைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தார்கள். இந்தக் காலத்தில்தான் 'காந்தி - ஜோஷி கடிதங்கள் பரிமாறப்பட்டன. அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகப் பணியாற்றிய பி.சி. ஜோஷி கம்யூனிஸ்ட்கள்மீது காங்கிரஸ் பரப்பிய அவதூறுகளுக்குப் பகிரங்கமாகப் பதில் சொல்லும் வாய்ப்பாக, இந்தக் கடித போக்குவரத்தைப் பயன்படுத்தினார்.

கட்சியின் இந்த அரசியலை ஜனசக்தி தமிழில் விரிவாக வெளியிட்டது.

இதுகுறித்து 1945ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் தேதி ஜனசக்தியில் கட்சியின் இந்திய பொதுச்செயலாளர் பி.சி. ஜோஷி ஒரு கட்டுரை எழுதினார். இது அன்றைய அரசியல் நிலைமையைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

"முஸ்லீம் லீக்குடன் சமரசம் செய்து கொள்ள காங்கிரஸ் மறுக்கிறது. இது இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான ஐக்கிய

முன்னணியை ஏற்க மறுப்பதை போன்றதாகும். லீக்கை எதிர்த்துப் போராடுவோம் என்று சர்தார் வல்லபாய் படேலும், நேருவும் பிரகடனப்படுத்தும்போது இந்துக்களையும் முஸ்லீம்களையும் எப்படி ஒன்றுபடுத்த முடியும். லீக்கை அடக்க பிரிட்டிஷ் சர்க்கார் முன்வர வேண்டுமென்று காங்கிரஸ் தலைமை சொல்லும் போது, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கைப்பாவையாக உபயோகப்படுகிறதோ என்ற சந்தேகம் உண்டாகிறது. இதனால் இந்திய சுதந்திரம் பெறுவது ஒத்திப் போடப்படுகிறது. . . . . . காங்கிரஸ், லீக், கம்யூனிஸ்ட் ஒற்றுமைக்கு வழிவகுப்போம். காங்கிரஸ், லீக் சகோதரர்களின் தேசப் பக்தியில் குன்றாத நம்பிக்கை கொண்டு, இந்த உழைப்பின் மூலம் இந்திய சுதந்திரத்திற்காக ஒரே ஐக்கிய முன்னணியை ஸ்தாபிக்கும் பொருட்டு காங்கிரஸ், லீக், கம்யூனிஸ்ட் ஒற்றுமைக்கு வழிவகுப்போம்."

யுத்தம் தந்த நோய் பசி, பஞ்சம் போன்ற கொள்ளை நோய்கள், மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான அரிசி, துணி, மண்ணெண்ணெய் முதலியவை கடும் பற்றாக்குறையானது. எல்லா இடங்களிலும் மிக கடுமையான பாதிப்பு மக்களுக்கு ஏற்பட்டது.

மக்களுக்குத் தேவையான அடிப்படை உணவு பொருட்களுக்கான பற்றாக்குறை கடுமையாக ஏற்பட்டபோது உணவு பொருட்களைப் பதுக்கிக் கொள்ளையடிக்கும் பதுக்கல்காரர்களின் நடவடிக்கைகள் கூடுதலானது. இதனை எதிர்த்து ஜனசக்தி கடுமையான பிரச்சாரத்தைச் செய்தது.

விவசாயிகளின் நெருக்கடி கூடுதலான இந்தக் காலக்கட்டத்தில்தான் விவசாய சங்கங்கள் அமைக்கும் பணி தமிழ் நாட்டில் அதிகரித்தன. உரக்கட்டுப்பாடு கூடுதலானதால் விவசாயம் மிகப்பெரிய நெருக்கடிக்குள்ளானது. ஆறு, குளம், ஏரி, முதலியவற்றுக்கான பராமரிப்பு, மராமத்து முதலிய முக்கிய கோரிக்கைகளைத் தமிழ்நாடு விவசாய சங்கம் வெளியிட்டது.

நில வெளியேற்றம் ஆண்டாண்டு காலமாகக் குத்தகை விவசாயம் செய்பவர்களை எந்தவிதமான பாதுகாப்பு - வெளியேற்றும் கொடூரம் நிறைந்தது. இதற்காகத் தொடர்ந்த இயக்கங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், விவசாய சங்கமும்தான் நடத்தியது. இதைப்போலவே விவாசயத் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறை மிகவும் சோகம் நிறைந்தது. சவுக்கடி, சாணிப்பால் கொடுமைகள் எழுதப்படாத சட்டமாகச் செயல்பட்டது. நிலப்பிரபுக்கள், விவசாயத் தொழிலாளிகளுக்குக் கூலி தருவதற்கென்று, தனியான 'மரக்கால்'

வைத்திருந்தார்கள் (தானியங்களை அளக்கும் அளவீடு) முத்திரை மரக்காலில்தான் கூலி வழங்க வேண்டும். முதலிய கோரிக்கைகள் வைக்கப்பட்டன. தஞ்சை, சேலம், நெல்லை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை முதலிய மாவட்டங்களில் போராட்டம் வெடிக்கத் தொடங்கியது.

ஜனசக்தி, இந்த இயக்க நடவடிக்கைகளை உணர்வுபூர்வமாக வெளியிட்டது. 'உழவர் உலகம்' 'உழவர் தோழன்' தனி தலைப்புகளில் செய்திகள் வெளியிட்டன.

உலக இந்திய நிலைமைகளில் நிகழ்ந்த மாற்றங்கள், தொழிலாளர்களிடையே மிகுந்த விழிப்புணர்வை ஊட்டியது. தொழிற்சாலைகளில் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) வலுப்பெற்றது.

அன்றைய 'சென்னை ராஜதானி'யை இணைத்த ரயில் தடத்தின் நீளம் 2,500 மைல்கள். தென்னிந்திய ரயில்வே லேபர் யூனியன் என்னும் பெயரில் சங்கம், பல்லாயிரக்கணக்கான ரயில்வே தொழிலாளர்களை ஒன்று திரட்டும் பணியை ஏற்றிருந்தது. 1944ஆம் ஆண்டில் இதன் உறுப்பினர் 35 ஆயிரம் என்றும் கிளைகள் 35 என்றும் ஜனசக்தியின் குறிப்பு ஒன்று கூறுகிறது.

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தில் பணியாற்றிய அர்ப்பணிப்பு மிக்க தலைவர், என். கிருஷ்ணசாமி. இவர் 1987இல் ஜனசக்தி பொன்விழா மலரில் கீழ்க்கண்டவாறு ரயில்வே போராட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

"விசாரணை இல்லாமல் யாரையும் பணி நீக்கம் செய்யக்கூடாது என்பது, ரயில்வே தொழிலாளர்களின் அடிப்படை உரிமை. ரயில்வே நிர்வாகம் இந்த உத்தரவை ரத்து செய்தது. இதன் பின்னர் செங்கல்பட்டு தோழர் வாரியர், விருத்தாசலம் வி. இராமசாமி, பொன்மலை பெயிண்ட் ஒர்க்ஷாப் தோழர் விழுப்புரம் ஈட்டி வேலாயுதம் பிள்ளை ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். இதன் விளைவாகப் பொன்மலைத் தொழிலாளர்களின் உள்ளிருப்பு வேலை நிறுத்தமும் நடைபெற்றது. ரயில்கள் ஓடவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர்கள் ரயில்வே ஸ்டேஷனைப் பூட்டிவிட்டார்கள். பொன்மலை சங்கத் தலைவர் இஸ்மாயில்கான் கைதுசெய்யப் பட்டதை அறிந்து தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தனர். 1946ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் தேதி பொன்மலை தொழிற்சங்கத் திடலில் அமைதியாகக் கூடிய தொழிலாளர்கள்மீது ஹாரிஜீன் என்ற வெள்ளைக்கார டி.எஸ்.பி.

துப்பாக்கியால் சுட்டார். இதில் தங்கவேலு, ராஜீ, கிருஷ்ணமூர்த்தி, தியாகராஜன் ஆகிய நான்கு தோழர்கள் கொல்லப்பட்டார்கள். . . . இதன்பின்னர் பஞ்சப்படி போராட்டம் ஒன்று நடந்தது. இடைக்கால நிவாரணம் கிடைத்தது. இதில் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஐந்து ரூபாய் நன்கொடை அளித்தனர். ரயில்வே தொழிலாளர்களின் எழுச்சிமிகு போராட்டங்களுக்கு, ஜனசக்தியும் 'தொழிலரசு' (ரயில்வே சங்க பத்திரிக்கை."

'தென்னகத்தின் வீரவரலாறு' என்னும் தலைப்பில், தோழர் என். கிருஷ்ணசாமி எழுதிய கட்டுரை ஜனசக்தி 1987 பொன் விழா மலரில் வெளிவந்துள்ளது.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்துடன் (ALL INDIA STUDENTS FEDERATION) இணைக்கப்பட்ட சென்னை மாணவர் சங்கம், (MADRAS STUDENTS ORGANISATION) மதுரை மாணவர் சங்கம் (MADURAI STUDENTS ORGANISATION) ஆகியவை மிக தீவிரமாகச் செயல்பட்டன. நாட்டின் விடுதலையைப் பெற வேண்டும் என்ற விருப்பம் மாணவர்களிடம் வேகமாக எழத் தொடங்கியது. கல்லூரி, நிர்வாக சீர்கேடுகள், பொதுவான அரசியல் பிரச்சினைகள் என்று மாணவர் போராட்டங்கள் பெருகத்தொடங்கியது. மாணவர்கள் எழுச்சியை அடக்குவதற்குக் கல்வி நிர்வாகமும், காவல்துறையும், மிகக் கடுமையான அடக்குமுறையைப் பிரயோகித்தனர். இந்தப் போராட்டங்கள், அவ்வப்போது சமரசம் செய்யப்பட்ட போதிலும், நீறுபூத்த நெருப்பாக நின்று விடுதலைப் போராட்டத்தின் உச்சத்தில் பெரும் துணை புரிந்தன.

மாணவர் போராட்டங்களில் கீழ்க்கண்டவை, முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, ஜனசக்தியில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1940 ஆம் ஆண்டு நேரு கைது செய்யப்பட்டார். தமிழகம் முழுவதும் மாணவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். மதுரையில் சங்கரையா தலைமையில் ஒரு மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போலீஸ்காரர் தடியடி நடத்தினர். மாணவர்களில் பலர் காயமடைந்தனர். போராட்டத்தின் முடிவில், ஆறுமாணவர் கைது செய்யப்பட்டனர்.

1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தீவிரமடைந்தது. தேசியத் தலைவர்கள் எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல், மிகுந்த எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டார்கள். அண்ணாமலை பல்கலைக் கழகம், சென்னை நெல்லை, மதுரை, திருச்சி, கடுமையான போராட்டம் வெடித்தது. மதுரையில் சங்கரய்யா கைது செய்யப்பட்டார்.

திருச்சியில் இந்த காலத்தில் மாணவர்கள் கல்லூரி வளாகத்தை விட்டு வெளியேறி தங்கள் போராட்டங்களை நடத்தினர். கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் மிகவும் குறிப்பிட்டு சொல்லப்பட்ட புனித ஜோசப் கல்லூரி மாணவர்களே போராட்டத்தில் பங்கேற்றனர். நிர்வாகம் மாணவர்களைத் தற்காலிக நீக்கம் செய்தது. மாணவர்கள் உறுதியோடு ஒன்றுபட்டு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். வேறுவழியில்லாமல் நீக்கப்பட்ட மாணவர்களைக் கல்லூரி நிர்வாகம் மீண்டும் சேர்த்துக் கொண்டது.

1943ஆம் ஆண்டு வங்கத்தில் பஞ்சம் ஏற்பட்டது. 'தாயைக் கொல்லும் பஞ்சம்' இது என்று கூறப்பட்டது. மக்கள் ஆயிரக்கணக்கில் உணவின்றிச் செத்துக் கிடந்தார்கள். தொற்று நோய்கள் அதிகரித்து, சாவின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றது. மாணவர் குழுக்கள் - வங்கப் பஞ்சத்திற்கு நிவாரணம் உதவிகள் அனைத்தையும் திரட்டி அனுப்பியது. சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மருத்துவ உதவி செய்வதற்கு ஒரு குழுவாகச் சென்றார்கள். யாரும் செல்லுவதற்கு அச்சப்படும் இந்த காலத்தில் மாணவர்களின் இந்த செயல் அனைவராலும் பாராட்டப் பெற்றது.

1944ஆம் ஆண்டு காந்தி - ஜின்னா சந்திப்பு முக்கியமானதாகக் கருதப்பட்டது. இந்து - முஸ்லீம் ஒற்றுமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த, மாணவர் பெருமன்றத்திற்கு இது உற்சாகத்தைத் தந்தது. இந்த நிகழ்ச்சி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தொடர்ந்த முயற்சியால் நடைபெற்றது என்று ராஜாக் குறிப்பிட்டுள்ளார்.

1945ஆம் ஆண்டு பிப்ரவரி 3,4 நாட்களில் தமிழ்நாடு மாணவர் பெருமன்றத்தின் மாநில மாநாடு திருச்சியில் கூடியது பல தீர்மானங்களை இயற்றியது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (PROGRESS WRITTERS ASSOCIATION) இந்திய மக்கள் நாடகமன்றம் (INDIAN PEOPLE THEATER'S ASSOCIATION) போன்ற செயல்பாடுகள் தொடங்கி யிருந்தன. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1943 ஏப்ரலில் பம்பாயில் கூடியது. தமிழகத்தில் அதனுடைய செயல்பாடு முழுமையாக ஜனசக்தியில் வெளியிடப்பட்டது. இதைப் போலவே, இந்திய மக்கள் நாடக மன்றத்தின் அகில இந்திய செயல்பாடுகளும் ஜனசக்தியில் வெளியிடப்பட்டன.

சோவியத்துமக்களும் பெருஞ்சேனையும் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் செய்த தியாகம் உலகமுழுவதும் தெரியத் தொடங்கியது.

சோசலிச சமுதாயத்தின் மேன்மையை உலகமக்கள் மதிக்கத் தொடங்கினார். ஜனசக்தி முழுமையாகச் செய்திகளைப் பரிமாறுவதிலும், ரஷிய எதிர்ப்பு விளக்கம் தருவதிலும் முன்னணியில் நின்று செயல்பட்டது. சோவியத்து நண்பர்கள் சங்கம், இந்தப் பணியில் ஜனசக்தியோடு இணைந்து பங்காற்றியுள்ளது.

ஆரம்பகாலங்களில் உற்பத்தி - வினியோகம்

ஜனசக்தியின் ஆரம்பகாலப் பணிகளில் உற்பத்தி - வினியோகம் என்று கூடுதல் சிரமங்களைக் கொண்டதாகத் தெரிகிறது. அடிப்படையில் நின்று ஆராய்ந்து பார்த்தால் இயக்கத் தோழர்களின் அர்ப்பணிப்புதான் ஜனசக்தியின் மூலதனம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தோழர்களின் திறமை மிகுந்த உழைப்பு தனித்துவமிக்க சகாப்தத்தைப் படைத்தது என்று கூறினால் அது தவறாகி விடாது.

ஜனசக்தி தொடங்கிய 1937 ஆண்டுகளில் அச்சகத் தொழிலாளர்களின் உதவியோடு தோழர் பி. சீனிவாசராவ் அவர்களின் முன் முயற்சியில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலில், உற்பத்தி பணி தொடங்கியது. 1942 ஆம் ஆண்டுக்குப் பின் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத்தில் சட்டபூர்வமாக இயங்கத் தொடங்கியது. கட்சியும், வெகுஜன அமைப்புகளும் புத்துணர்ச்சியுடன் வளர்ச்சி நிலையில் காணப்பட்டன. புதிய தேவையை நிறைவு செய்யும் பொறுப்பை ஜனசக்தி ஏற்றிருந்தது. இந்த காலகட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக ஜனசக்தியின் எண்ணிக்கை பெருகியது.

தோழர் இராமநாதன், தமிழ்த் தென்றல் திரு.வி.க.வுடன் இணைந்து செயல்பட்டவர். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் சிறிது காலம் பங்காற்றிவிட்டு ஜனசக்தி ஆசிரியர் குழுவில் 1942க்கு பின் 15 ஆண்டு காலம் பணியாற்றியவர். இவருடைய கருத்துக்கள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவர் கூறிய கருத்துக்கள் ஜனசக்தியில் வெளிவந்துள்ளன.

“நான் ஒரு முழுநேர ஊழியன்.

வாழ்க்கை முழுவதையும் ஜனசேவையில் புரட்சிகரப் பணியில் ஈடுபடுத்தும் தன்மை இங்கு ஓங்கி நிற்கிறது. போராட்டத்தின் மையத்திலிருந்து, முன்னணியில் நின்று நிரந்தரமாகப் பணியாற்றும் நிலை, இங்கு காணப்படுகிறது.

பத்திரிகைக்கு எழுதுவது, செய்திகளைத் திரட்டுவது, புரூப் பார்ப்பது, காகிதம் எடுத்து தருவது, பத்திரிகைகளை மடிப்பது, பார்சல்

கட்டுவது, ரயில்வே ஸ்டேஷன் போய் அனுப்புவது, இத்தியாதி சகல வேலைகளையும் செய்தோம். ஆடிட்டர் அலுவலகங் களுக்குச் சென்று புள்ளி விபரங்களைத் திரட்டுவது தொழிலாளர் கூட்டங்களில் பேசுவது போன்று எல்லா வேலைகளையும் செய்தோம். இதில் தலைவர்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தார்கள்."

தோழர் ஜே.எம். கல்யாணம் ஜனசக்தியின் அச்சுமுதலான உருவாக்கத்தோடு மிகவும் நெருக்கமான தொடர்பை நீண்டகாலமாகக் கொண்டிருந்த தோழர். இவரது பின்னணி பல சுவையான தகவல்களைக் கொண்டிருக்கிறது. 1940-41ஆம் ஆண்டு இவர் மாணவர் இயக்கத்தில் திருச்சியில் பணியாற்றியுள்ளார். அப்பொழுது மாணவர் அமைப்பாளர்களாக தோழர்கள் சுப்ரமணிய சர்மா, ஏ.கே. கோபால், சி.எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் செயல்பட்டிருக்கிறார்கள். இவர்கள் திருச்சி மாணவர்களுடன் தொடர்பு கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி யூனிட் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். கட்சி யூனிட்டின் வழிகாட்டுதல்படி இவர் பிரிட்டிஷ் இந்திய விமானப்படையில் சேர்ந்திருக்கிறார். இதன் பின்னர் தோழர்கள் சீனிவாசராவ், மோகன் குமாரமங்கலம் ஆகிய இருவரும் சந்தித்து, கட்சியின் முடிவை விளக்கி சொல்லியிருக்கின்றனர். ஜே.எம். கல்யாணம் விமானப்படையின் பணியை ராஜினாமா செய்து விட்டு முழுநேர ஊழியராகப் பொறுப்பேற்றவர். அவர் தனது அனுபவங்களை ஜனசக்தியில் எழுதியிருக்கிறார்.

"1942 அக்டோபர் மாதம் நான் சென்னை வந்து சேர்ந்தேன். கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரில் சட்ட ரீதியாகச் செயல்பட்ட பத்திரிகையான ஜனசக்தியின் அச்சகம் அது. தடை நீங்கப்பட்ட பிறகு அப்பொழுதுதான் ஜனசக்தி புதிதாக வெளிவரத் தொடங்கியிருந்தது. அலுவலகம் அப்பொழுது ஜோன்ஸ்லேன் 2ஆவது இல்லத்தில் இருந்தது. மிகச் சிறிய இடம். கட்சியின் மாகாணகமிட்டி அலுவலகம் மாடியில் இருந்தது. மாடியின் கீழ்ப்பகுதியில் சில கம்போஸிங் கேசுகள், காலால் மிதிக்கும் பிளேட்மிஷின் ஒன்று கட்டிங் மிஷின் கூட கிடையாது. இதுதான் ஜனசக்தி அச்சகம். நன்கு ஈடுபாடுகொண்ட நான்கு கம்பாசிட்டர் தோழர்கள். இங்கு அச்சு கோர்க்கத்தான் முடியும். அதைப் பக்கங்களாக அடுக்கி, நம் அச்சகத்தின் எதிரில் செயல்பட்ட வேறு ஒரு அச்சகத்திற்குத் தூக்கிச் செல்வோம். இதன் பெயர் விநோதினி அச்சகம். இதன் முதலாளி ஆஜானு பாகுவான நாயுடு. அவர் மகன்தான் நிர்வாகி, நம்மிடம் மிகவும் பணிவாகக் கூலிக்காக அச்சடித்துக் கொடுத்தார்கள். பல மாதங்கள் ஜனசக்தி, இப்படித்தான் வெளிவந்தது.

1943ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் நாம் புது இடத்திற்கு நகர்ந்தோம். தற்பொழுதுள்ள அச்சகத்திற்குப் பின்புறம் இருந்த டேவிட்சன் தெரு, அதில் 6ஆம் நம்பர் தெருவில் தெம்புடனும், மகிழ்ச்சியுடனும் நுழைந்தோம். நமக்கென்று பழையதானாலும் ஓர் அச்சு இயந்திரம் வாங்கினோம். கோர்த்த அச்சுக்கள் இப்பொழுது நம்மிடமே அச்சாகும். அப்பொழுது சொந்தமாக ஓர் அச்சு இயந்திரம் வாங்கினோம். அந்த அச்சு இயந்திரத்தின் விலை என்ன தெரியுமா? ரூபாய் 2200. அது அன்றைக்குப் பெரிய தொகை. செஞ்சுரி போனி (Centurry Pony) என்னும் அமெரிக்க மிஷின். 1948 ஆம் ஆண்டு நான் தலைமறைவாகும் வரை, ஒருநாள் கூட இந்த இயந்திரம் பழுதாகி, வேலை நின்றதில்லை.

டேவிட்சன் தெரு, ஆபிஸ்மாடி, அன்றைய தேவைக்குப் போதுமானது. மாடியின் முன்பகுதி கட்சி ஆபிஸ். பின்பகுதி ஜனசக்தி ஆசிரியர் குழு. மாடியின் கீழ்ப்பகுதி முழுவதும் ஜனசக்தி அச்சகம். ஒரு அவுட் ஹவுஸ் உண்டு. அது கட்சி தோழர்களின் கம்யூன். (உணவு, இருப்பிடம் ஆகியவற்றில் தலைவர் தொண்டர் என்ற பாகுபாடு இல்லாமல் கூடி வாழ்தல்) பணி செய்வதில் நேரமா? காலமா? 16 மணி நேரம் சுயமாக வேலை செய்தோம். பம்பாயில் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது. இதன் பின்னர், நாங்கள் அனைவரும் இரவு ஷிப்ட் போட்டுக்கொண்டு, கட்சியையும், ஆபிஸையும் அச்சகத்தையும், காவல்காத்த பெருமிதம். அனைவரும் சைனா பஜார் தெருக்களில் ஜனசக்தி இதழ்களைத் தெருவில் விற்ற உத்வேகம். வேலைமுடிந்து மாலை வெளிவரும் போது "நான் இத்தனை லைன் செய்தேன்" நீ எத்தனை லைன் செய்தாய்? (அச்சுக் கோப்பதில்) என்று போட்டி மனப்பான்மையுடன் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்ட உற்சாகம்; உழைப்பில் அப்படியொரு பெருமிதமான ஈடுபாடு அந்தக் காலத்தில்".

இதனைப்பற்றி மேலும் பலவிபரங்கள், கம்யூன் என்னும் செயல்பாட்டுக் கூட்டு வாழ்க்கை பற்றிய அடிப்படைகளை உணர்வு பூர்வமாக விவரிக்கிறார். 1944ஆம் ஆண்டில் ஜனசக்தி 7ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன என்ற தகவலும், இதில் அடங்கியிருக் கின்றன.

இவ்வாறாக, தோழர்களின் சிறப்புமிக்க தியாக உணர்வு ஜனசக்தியின் உருவாக்கத்தோடு தொடர்புற்று இருக்கிறது. மாபெரும் ஆதிக்க சக்திகளை வலுவுடன் எதிர்த்துத் தாக்குப் பிடித்ததற்கும், பல நெருக்கடிகளை மிக சுலபமாக ஜனசக்தி கடந்து வந்ததற்கும் இந்த தியாக உணர்வே முக்கிய காரணமாகிறது. இத்தகைய வியத்தகு அனுபவங்கள் வேறு இதழ்களில் பணியாற்றியவர்களுக்கு நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை.

சுதந்திரத்திற்கான இறுதிப் போராட்டம்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றின் கடைசி அத்தியாயத்தின் நிறைவு பெறும் பக்கங்கள் பல்வேறு திருப்புமுனைகளைக் கொண்டு திகைப்பு தருவதாக இருக்கிறது. தங்களின் முழுமையான ஆதிக்கத்தை உள்ளடக்கிய சுதந்திரத்தை இந்தியாவிற்கு வழங்கும் திட்டத்திலேயே பிரிட்டிஷ் ஆட்சி செயல்பட்டது. இந்திய முதலாளிகளின் நன்மையே காங்கிரஸ் கட்சியின் தவிர்க்க இயலாத நோக்கமாக இருந்தது. காங்கிரஸ் கட்சியில் இவர்களின் ஆதிக்கம் பலம்பொருந்தியதாக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய சுதந்திரத்தைப் பாட்டாளி மக்களோடு இணைத்துப் பார்த்தது. உழைக்கும் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட, சுதந்திரத்தை இது கோரியது.

இது மட்டுமல்லாது, மத அடிப்படையில் தேசத்தைப் பிரிவினை செய்யும் அடிப்படை இந்தக் காலத்தில் எழுந்தது. பிரித்தாளும் சூழ்ச்சி என்னும் தனது பலம்பொருந்திய ஆயுதத்தைப் பயன்படுத்துவதற்குரிய புதை குழிகளைப் பிரிட்டிஷ் ஆட்சி தயாரித்துக்கொண்டிருந்தது.

இந்தச் சூழலில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பார்வையை விளக்கித் தெளிவுபடுத்தல் அவ்வளவு எளிதான செயல் அல்ல. இந்தப் பணியைப் பல்வேறு சிரமங்களுக்கு இடையே ஜனசக்தி செய்தது என்பதை உறுதிபடக் கூறலாம்.

அண்ணல் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். நாடு முழுவதும் கொந்தளித்தது. இந்தக் காலகட்டம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மிக நெருக்கடியானதாக இருந்தது. உலகத்தை விழுங்க பாசிசம், வாயை அகலப் பிளந்து, கோரப்பற்களைக் காட்டி நின்றது. சோசலிச ஆட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் முதல் எதிரி என்று அறிவித்து மிருகங்களைப் போல வேட்டையாடியது. ஆயிரக்கணக்கில் கம்யூனிஸ்ட்கள் கொல்லப்பட்டார்கள். சித்ரவதைக் கூடங்களில் அடைக்கப்பட்டனர். ஹிட்லர் தன் முழு சக்தியையும் திரட்டி சோவியத்து ரஷியாவை வெற்றி கொள்வதற்குச் சகல திட்டங்களுடன் போர்க்களத்தில் இறங்கினான். இந்தியா விடுதலை பெற வேண்டும் என்ற கொள்கையுடன், பாசிச அபாயத்தை முறியடிக்க வேண்டும் என்பதையும் உடனடியாகக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி கருதியது. இது பிரிட்டிஷ் ஆதரவு என்பதாகவும், நாட்டின் சுதந்திரத்தைப் பெறவிடாமல், நாட்டுக்குத் துரோகம்

இழைக்கும் செயல் என்றும் கம்யூனிஸ்ட் மீது கடுமையான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

கம்யூனிஸத்தின் எதிரிகள் காங்கிரஸ் கட்சியை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் கட்சி மக்களின் ஆதரவைப் பெற்று வளர்நிலையில் இருந்தது. கம்யூனிஸ்ட்களின்மீது அவிழ்த்துவிடப்பட்ட பொய்ப் பிரச்சாரத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை ஜனசக்திக்கு ஏற்பட்டது.

தேசபக்தியற்றவர்கள் கம்யூனிஸ்ட்கள் என்னும் குற்றச்சாட்டை முறியடிக்கும் அரசியல் விவாதங்களை, ஜனசக்தி வெளியிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மூர்க்கத்தனமான சுரண்டலாலும், யுத்தம் ஏற்படுத்திய கொடுமையாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்திய மக்களிடம் அர்ப்பணிப்பு மிக்க சேவையின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி நெருக்கம் கொண்டது. மக்கள் நிவாரணப் பணிகளில், கம்யூனிஸ்ட் தொண்டர்கள் ஈடுபட்டதை, இந்தக் காலத்திய ஜனசக்தி விரிவாக வெளியிட்டது.

பம்பாய் கப்பற்படை எழுச்சி, சுதந்திரப் போராட்டத்திலேயே பல்வேறு நுட்பமான நுண்தள செயல்பாட்டைக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் கப்பற்படையில் பணியாற்றிய இந்திய வீரர்கள் எழுச்சி பெற்று வேலை நிறுத்தம் செய்தனர். இதைப் போல விமானப்படையின் சிக்னல் பிரிவும், வேலை நிறுத்தத்தை நடத்தியது. இதனால் கப்பற்படை, விமானப்படை வீரர்களை அடக்குவது என்ற முடிவுக்கு பிரிட்டிஷ் ராணுவம் வந்தது.

கப்பற்படை எழுச்சிப்பற்றிய விபரங்களை ஜனசக்தி முழுமையாக வெளியிட்டது. 1946 ஆம் ஆண்டு மார்ச்சு 3ஆம் தேதி ஜனசக்தி வெளியிட்ட செய்தி.

'இரண்டாம் உலகப்போர், 1945ஆம் ஆண்டு முடிந்தபின், இந்தியாவில் அரசியல் எழுச்சி அலை அலையாக எழுந்து புரட்சி சிகரத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தது. இந்த மக்கள் எழுச்சியால் உந்தப்பட்ட ராயல் இந்திய விமானப்படையினர் 1946ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி முதல் ஸ்ட்ரைக் செய்தனர். இரண்டாவது ஸ்ட்ரைக் ஜனவரி 25ஆம் தேதி நடந்தது. மூன்றாவது ஸ்ட்ரைக் பிப்ரவரி 7இல் நடந்தது. அதன் எதிரொலியாகப் பிப்ரவரி 12இல் ராயல் இந்தியக் கப்பற்படையினர் ஸ்ட்ரைக் நடந்தது. எல்லாத் துறைமுகங்களுக்கும் இது பரவியது. ஜபல்பூரில் ராணுவ சிக்னலர்கள்

ஸ்ட்ரைக் செய்தனர். இந்திய மக்களைச் சுட்டுத்தள்ள உத்தரவு பிறப்பித்த போது பிரிட்டிஷ் படையினர் சுட்டுத்தள்ள மறுத்து விட்டனர். இந்தப் புரட்சி எழுச்சியைக் கண்டுதான் பிரிட்டிஷ் அரசு, அவசர அவசரமாகச் சமரசத்திற்குத் 'தூது கோஷ்டி'யை அனுப்பியது".

இந்த அரசியல் வரையறுப்பு வழங்கிய ஜனசக்தி போர்க்களத்தில் போரிட்ட மக்கள் சக்திப்பற்றி தந்த விவரிப்பு.

"ஜனங்களை ரத்தவெள்ளத்தில் மூழ்கடிக்க பிரிட்டிஷ் ராணுவத்தின் பயங்கர ஆட்சி முற்பட்டது. சுட்டுப் பொசுக்கி விடலாம் என்று எண்ணிற்று. ஆனால் ஜனங்கள் ஓட்டம் பிடிக்கவில்லை. அடிபணிந்து சரணடைந்து விடவில்லை. மெஷின்கன்களை எதிர்த்து நின்றனர். பிரென்கன்களை எதிர்த்து நின்றனர். பாரிகேடுகளைக் கட்டினர். கொரிலாக்களைப் போல ஏகாதிபத்தியப் படைகளைத் தாக்கினர். பிரென்கன்களின் குண்டுகளுக்குச் சோடா பாட்டில்கள் பதில் தந்தன.

நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஊர்க்காலிகள் கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்று கூறி மக்கள் போராட்டத்தைக் காலிகள் ராஜ்ஜியம் என்று கூறப்பார்க்கின்றனர். ஆனால் ஜனங்களுக்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை. காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் கொடிகளை ஏந்திய மக்கள் போலீசை எதிர்த்துக் கொடிபிடித்து, ஒன்றுபட்டு நின்றனர்.'

கப்பற்படை எழுச்சி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை ஒரு முடிவுக்கு வர வைத்தது. கிரிப்ஸ் திட்டம், வைஸ்ராயின் வட்டமேஜை மாநாடு, பெரிக் லாரன்ஸ் திட்டம் என்று பல்வேறு சமரச ஆட்சிமாற்றத் திட்டங்களுக்கு முயற்சி செய்தார்கள். கடைசி மௌண்ட் பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்டது. நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஜனசக்தி இந்தப் போராட்டத்துக்கு ஆங்கில ஆட்சியாளர்களின் மறைமுகத் திட்டங்களையும் காங்கிரஸ் கட்சியின் ஊசலாட்டங்களையும் பெருமுதலாளிகளின் சார்பு நிலையையும் எடுத்துரைத்து விளக்கங்களை எழுதிவந்தது.

சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது. சமஸ்தான மன்னர்கள் இந்தியாவுடன் இணையமறுத்து, அவர்கள் தங்கள் சமஸ்தானங்களைச் செய்தனர். சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைப்பதில் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பு மகத்தானது.

சமஸ்தானங்களின் மக்கள் விரோதக் கொள்கைகளை ஜனசக்தி ஆரம்பகாலம் முதலே தீவிரமாக எதிர்த்துப் போராடி வந்துள்ளது.

சமஸ்தானங்களில் மறைந்து கிடந்த பல ரகசியங்களை அம்பலப்படுத்தி வந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டுகள் நிறையவே இருக்கின்றன என்றாலும் தோழர் கே. முருகேசன் கட்டுரையை மேற்கோள் காட்டுவது இங்கு அவசியமாகிறது. கே. முருகேசன் அவர்களின் வாழ்க்கை முழுத்தியாகம் நிறைந்தது. திருமணம் செய்துகொள்ளாத இவர் கடைசி நிமிடம் வரை பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு உயிர் துறந்தார். சுயமரியாதை இயக்கத்தில் ஆரம்ப காலத் தொடர்புகளைக் கொண்ட இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் வீரர்களுக்கு முன்னுதாரணம் ஆவார். 1938ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி ஜனசக்தியில் இவருடைய கட்டுரை வெளியிடப் பட்டுள்ளது.

"இந்தியாவில் சுதேச சமஸ்தானங்கள் 563 இருக்கின்றன. அவைகளில் 119 பெரிய சமஸ்தானங்கள் 444 சிறிய சமஸ்தானங்கள். இந்திய நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி சமஸ்தானங்களில் அடங்கியுள்ளன. எட்டு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இந்த சமஸ்தானங்களில் வாழுகின்றார்கள். 47.5. கோடி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சமஸ்தானங்களிலிருந்து வருமானமாகக் கிடைத்தது.

ஹைதராபாத், மைசூர், பரோடா, திருவாங்கூர், மற்றும் பல சமஸ்தானங்களில் அந்த சமஸ்தானாதிபதிகளே, தங்கள் இஷ்டப்படி சட்டதிட்டங்கள், நீதி நியாயங்களை ஏற்படுத்திக் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் நன்கு தயாரான திவான்கள் மூலமாக, தான் தோன்றித்தனமாக ஆட்சி நடத்தி வருகின்றனர்.

இங்கிலாந்து தேசத்தின் மொத்த வருமானத்தில் அரசன் 1600-இல் ஒருபகுதியையும், பெல்ஜியத்தின் அரசன் 1000-இல் ஒரு பங்கும், இத்தாலிய அரசன் 500-இல் ஒரு பங்கும், டென்மார்க் அரசன் 800-இல் ஒரு பங்கும் ஜப்பான் அரசன் 400-இல் ஒரு பங்கும் நார்வே அரசன் 700-இல் ஒரு பங்கும் அந்தந்த தேசத்தின் வருமானத்தில் செலவு செய்தனர்.

ஆனால், இந்தியாவில் முன்னேறிய சமஸ்தானம் என்று கூறப்படும் திருவாங்கூர் இளவரசர், சமஸ்தான வருமானத்தில் 17-இல் ஒரு பங்கும், ஹைதராபாத் நிஜாம், பரோடா மகாராஜா ஆகியோர் வருமானத்தில் 13-இல் ஒரு பங்கும், காஷ்மீர் பிகானூர் ஜமீன்கள் வருமானத்தில் 5-இல் ஒரு பகுதியையும் செலவுசெய்தனர். இதைத் தவிர சமஸ்தான வருமானத்தில் சரிபாதியை வருமானமாக எடுத்துக் கொள்பவர்கள் கூட இருக்கிறார்கள்.

பீகானீர் என்பது ஒரு சமஸ்தானம். 1929-30 ஆம் ஆண்டுகளில், இதன் ஆண்டு வருமானம் எப்படி செலவு செய்யப்பட்டுள்ளது என்பது கீழே கூறப்பட்டுள்ளது.

சிவில் லிஸ்ட்	-	ரூ.1,255,00
இளவரசர் கல்யாணம்	-	ரூ.82,000
ரோடுகள்	-	ரூ.618,381
மன்னர் அரண்மனையை விசாலப்படுத்த	-	ரூ.426,611
மன்னர் குடும்பச் செலவு	-	ரூ224,861
கல்விச் செலவு	-	ரூ.222,988
வைத்தியம்	-	ரூ.188,138
பொதுச்செலவு	-	ரூ.30,761
சுகாதாரம்	-	ரூ.5,729

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதைப்போல, சமஸ்தானாதிபதிகளின் செலவினங்களுக்கு இது உதாரணம். மக்கள் நலன்பற்றிக் கவனம் இல்லாமல், மனம் போன போக்கில் செலவு செய்ததாக இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சரியான சந்தையாக சமஸ்தானங்கள் விளங்கின. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வெறும் ஆடம்பரத்திற்காக இங்கிலாந்திலிருந்து, சமஸ்தானாதிபதிகள் வாங்கினர். இதைத் தவிர, சமஸ்தானங்களுக்கு வேண்டிய தோட்டா, துப்பாக்கி, வெடிமருந்து, மற்றும் சேனை தளவாடங்கள் சப்ளை செய்வதில் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர் பிரிட்டிஷ் முதலாளிகள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் சமஸ்தானங்கள் இருப்பதால், பிரிட்டிஷ் கம்பெனிகள் வியாபாரத்திலும் ஏற்றுமதி, இறக்குமதி, பொருள்களிலும் விசேஷ சலுகைகளையும் பிரத்யேக வசதியையும் பெறுகின்றன.

இதுதான் இந்தியாவில் சமஸ்தானங்களின் உண்மையான நிலவரம். இந்த கொடுமை மிகுந்த மக்கள் விரோதத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தியுள்ளது. பொதுமக்களும், அனைத்து ஜனநாயக உணர்வு கொண்டவர்களும் தீவிரமாக, சமஸ்தான எதிர்ப்பு இயக்கங்களில் பங்கு பெற்றனர். இவையெல்லாவற்றையும் ஜனசக்தி, உடனுக்குடன் வெளியிட்டது. நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தபின், 1947ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி ஒரு செய்தி ஜனசக்தியில் வெளியிடப்பட்டது. சர்தார்

படேல் என்ன செய்கிறார் என்ற தலைப்பில், இந்த செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதை எழுதியவர் யார் என்று குறிப்பிடப் படவில்லை. இது ஆசிரியர் குழுவால் எழுதப் பட்டிருக்கலாம்.

"கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மைசூர் ஜனங்கள் சர்வபரித்தியாகம் செய்து போராடி வருகின்றார்கள். வெற்றி பெற்று முன்னேறுகிறார்கள். இந்திய யூனியன் சர்க்காரில் சமஸ்தானங்களின் மந்திரியாக இருக்கும் சர்தார் வல்லபாய் படேல் இந்த ஜனங்களுக்கு உதவி செய்ய இதுவரை எதுவும் செய்யமாலிருப்பது, சகல தேசபக்தர்களுக்கு ஏமாற்றமளிக்கிறது. கத்திவாரிலும், ராஜபுதனத்திலும், உள்ள சமஸ்தானாதிபதிகள் தேசிய சர்க்காரைக் கவிழ்ப்பதற்குப் படைத் திரட்டுவதையும், பாக்கிஸ்தானுடன் சண்டையை மூட்டி விட பிரிட்டிஷாருடன் சதிசெய்வதையும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை விட்டு, வெளியேறி பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்து கொள்வோம் என்று பகிரங்கமாக மிரட்டுவதையும் பார்த்த பிறகுகூட, சர்தார் பட்டேல் மைசூர் எதேச்சதிகாரத்தை வீழ்த்துவதற்கு ஜனங்களுக்கு, உதவி செய்ய வரவில்லை என்றால், இதைவிட, பிற்போக்கு பிரிட்டிஷ் ஐந்தாம் படை, எதேச்சதிகாரிகளுக்கு உதவிகரமான செய்கை எதுவும் இருக்க முடியாது என்று தேசப்பக்தர்கள் நினைப்பது தவறாகுமா?" தமிழ்நாட்டின் சமஸ்தானம் என்பதில் கடைசியில் எஞ்சியது புதுக்கோட்டை மட்டும்தான். சுதந்திர இந்தியாவில் இதனை இணைப்பதில் பெரும்பிரச்சினை எழுந்தது. எதேச்சதிகாரத்திற்கும் ஊழலுக்கும் அந்த காலத்தில் மிகவும் பிரசித்திப்பெற்றது புதுக்கோட்டை சமஸ்தானம். ஏகாதிபத்தியத்தின் நேரடி ஏஜெண்டாகச் செயல்பட்ட தார் கலிபுல்லா என்பவர்தான் திவானாகப் பணியாற்றினார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கென்று தனியான சட்டசபை அப்பொழுது செயல்பட்டிருக்கிறது. திவான்தான் இதன் தலைவர். மொத்தம் 50 உறுப்பினர்கள். இதில் 35 பேர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். 15 பேர் நேரடியாகச் சமஸ்தானத்தால் நியமனம் செய்யப்படுவார்கள். ஆனால் வசதிபடைத்த செல்வந்தர்களுக்கு மட்டும் தான் வாக்குரிமை. சமஸ்தானத்தின் அன்றைய மக்கள் தொகை 4 லட்சம் 50 ஆயிரம். இதில் 10 ஆயிரம் பேருக்கு மட்டும்தான் வாக்குரிமை இருந்தது.

சமஸ்தானத்தில் 1946ஆம் ஆண்டில்தான் காங்கிரஸ் கட்சியைத் தொடங்க முடிந்தது. கம்யூனிஸ்ட் கட்சியால் செயல்பட இயலவில்லை. தொழிற்சங்கங்களை ஏற்படுத்தி, இதன் மூலம் செயல்பட்டனர். மக்களின் உணர்வைப் புரிந்துகொண்ட சமஸ்தானம், மக்களை ஏமாற்ற

ஒரு சமரச திட்டத்தை அறிவித்தது. 1947ஆம் ஆண்டு ஜூலை மகாராஜா பிறந்த தினத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. சமஸ்தான மந்திரிசபையில் சட்டசபையில் உள்ள உறுப்பினர்களில் இரண்டு பேர் இணைத்துக் கொள்ளப் படுவார்கள் என்பது தான் இந்த அறிவிப்பு. இதற்கு முன் யாரும் மந்திரிசபையில் இடம் பெறவில்லை. இந்த அறிவிப்பில் மக்கள் மயங்கிவிடவில்லை. மாறாக எதிர்வினை நிகழ்ந்தது. திவான் ஆட்சி ஒழிந்து, மக்களாட்சி வேண்டும் என்ற கோரிக்கை பலமாக எழுந்தது. மிகத் தந்திரக்காரரான திவான் 1947ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் தேதி அதாவது இந்தியா சுதந்திரம் பெற்ற அடுத்த மாதம் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். தனியான அரசியல் நிர்ணயசபை அமைக்கப்படும் என்றும் இதன் எண்ணிக்கை மொத்தம் 20 என்றும், இதில் 16 பேர் பொதுமக்கள் வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என்று இந்த அறிவிப்பு தெரிவித்தது.

இந்த திட்டங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து போராட்டங்கள் வெடித்தன. வேறு வழியில்லாமல் புதுக்கோட்டை சமஸ்தானம் இணைந்தது. 1947ஆம் ஆண்டு அக்டோபர் 29ஆம் தேதி ஜனசக்தியில் புதுக்கோட்டை மக்கள். . . என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை விளக்கமாக வெளியிடப் பட்டுள்ளது.

முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் எம். நாகரத்தினம், சமஸ்தான எதிர்ப்பு போராட்டங்களில் மாணவப் பருவக்காலத்திலேயே பங்கேற்றவர். அவர் ஜனசக்தி பொன்விழா மலரில் எனது அனுபவங்கள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். கட்டுரையின் விவரிப்புகள், சமஸ்தானத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

தமிழக நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் இரணியன், சிவராமன், தலைமையில் மிகப்பெரிய போராட்டம் நடந்தது. கட்சி தடைசெய்யப் பட்டபின், தஞ்சைப் போராட்டத்தில் தோழர் சிவராமன், கே. வெங்கட்ராமன் (இவர் கே.வி. ராமன் என்னும் பெயரில் கம்யூனிஸ்ட் கட்சியின் பணி சென்னை மாவட்டக் குழுவில் பணியாற்றி வருகிறார்) புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குள் நுழைந்தார்கள். சிறிதுகாலம் இங்கு தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்கள்.

புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குள் கம்யூனிஸ்ட் தலைவர்கள் நுழைந்து செயலாற்றியது- மாணவர், இளைஞர்களிடம்

உற்சாகத்தைக் கொடுத்தது. அப்பொழுது புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் ஏ.எம்.கோபு, எம். சேதுராமன் இருவரும் மாணவர்கள். ஏ.எம். கோபு இப்பொழுது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில முன்னணித் தலைவர். ஜனசக்தியின் ஆசிரியர் பி. சேதுராமன் இப்பொழுது உயிருடன் இல்லை. இவரது புதல்வி திருமதி கல்பனா, எழுத்தாளர் அறந்தை நாராயணன் துணைவியார் ஆவார். மாணவர் பருவத்தில் இந்த இரண்டு தோழர்களும் மார்க்சீய- லெனினியத்தில் ஈடுபாடு கொண்டு, மாணவர்களிடம் செயல்பட்டனர்.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி பொன்விழாவுக்குத் திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவான் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அழைக்கப்பட்டார். இவர் திருவாங்கூர் சமஸ்தானத்தில் மிகவும் கொடூரமான கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர் என்று அறியப்பட்டவர். யானையை விட்டுத் துரத்தி 12 கம்யூனிஸ்ட்கள் தெப்பக்குளத்தில் விழுந்து இறந்து போனதற்கு இவர் காரணமானவர். கல்லூரி பொன்விழாவிற்கு வருகை தந்த சிபி. ராமசாமி அய்யருக்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்று கம்யூனிஸ்ட்கள் முடிவு செய்தனர். சர்வாதிகாரி சிபி. ராமசாமி அய்யரே! திரும்பி போ என்று கண்டன வாசகங்கள் சுவர்களில் எழுதப்பட்டிருந்தன.

பொறுப்பாட்சி வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டது. மக்களாட்சி என்பதுதான் பொறுப்பாட்சி என்று கூறப்படுகிறது. இந்தப் போராட்டத்திற்கு கே. முத்துசாமி வல்லத்தரசு தலைமை தாங்கினார். இளைய தலைமுறையிடம் எழுச்சியை உருவாக்கிய இந்தப்போராட்டத்தில் கம்யூனிஸ்ட்களாகிய பி. சேதுராமன், எஸ். அய்யாசாமி, பி. கந்தசாமி, சி.கே. வடிவேல், டேவிட், மாணிக்கம் போன்ற பல தோழர்கள் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் பற்றி இதனைப் போன்ற பல்வேறு சிறப்பான பல விபரங்கள் ஜனசக்தியில் காணப்படுகின்றன.

அடக்குமுறை காலம்

தொடர்ந்து அரசாங்கத்தின் எதிர்ப்பைக் கடைப்பிடிக்கும் இதழ் என்ற அடிப்படையில் ஜனசக்தி, அரசாங்கத்தின் கண்காணிப்புக்கு உட்பட்ட இதழாகவே செயல்பட்டு வந்துள்ளது. ஆனால் மிகக் கடுமையான அடக்கு முறை காலம் உண்டென்றால் 1948க்கும் 52க்கும் இடைப்பட்டக் காலத்தைத்தான் சொல்ல வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது அகில இந்திய மாநாடு, சுதந்திரம் பெற்ற இந்திய அரசாங்கம் நடத்துவது ஏகாதிபத்தியத்தின்

மறைமுகமான ஆட்சியைத்தான் என்று ஏகாதிபத்திய ஏஜெண்டான நேருவின் ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தது. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. முன்னணித் தலைவர்களில் சிலர் கைது செய்யப்பட்டனர். பெரும்பகுதி கட்சி அணியினர் தலைமறைவானார்கள். ஜனசக்தியின்மீது தடை விதிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு மே 16 ஆம் நாளோடு ஜனசக்தி நின்றுபோனது.

ஜனசக்தி நின்று போனாலும், உழைக்கும் மக்களின் கருத்துக்களை உறுதியோடு எடுத்துச் சொல்ல ஜனசக்தியின் பிரநிதிநிதியாக வேறு பத்திரிக்கைகள் செயல்பட்டன. சட்டபூர்வமாக ஏற்படும் சிக்கல் தவிர்க்கும் யுத்தியாக, இந்த இதழ்கள் தொடங்கப் பட்டன என்பதை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது. முன்னணி, (1949-50) உலக அரசியல் (1950-51) என்று இதழ்கள் செயல்பட்டன. தலைசிறந்த கவிஞரும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் பயிற்சிபெற்றவருமான தமிழ்ஒளி, மற்றொரு கவிஞர் குயிலன் ஆகியோர் இந்த இதழ்களை முன்னின்று நடத்தினர். இதழ்கள் மாதம் இரு இதழ் என்ற வகையில் வெளிவந்தது.

இந்த இதழ்களிலும் சட்டபூர்வமாக பல விபரங்களை வெளியிட முடிவதில்லை. புதிய தேவைகள் எழுந்தன. இந்த தேவையை பூர்த்தி செய்துக் கொள்ள சிறுபிரசுரங்கள், இந்தக் காலத்தில் நிறைய வெளிவந்துள்ளது. ஜனசக்தியில் போராட்ட அனுபவங்கள் வெளிவந்ததை புதிய சூழலில் ஈடுசெய்வதற்காகத்தான் இந்த பிரசுரங்கள் வெளிவந்துள்ளதாக தெரிகிறது.

ரயில்வே தொழிலாளர்கள் போராட்டம், தஞ்சை விவசாயிகளின் போராட்டம், சேலம், திருச்சி, நெல்லை, மதுரை மாவட்டங்களிலும் விவசாயப் பிரச்சனைகள் மிகவும் தீவிரமடைந்திருந்தன. கோவை, மதுரை மாவட்டங்களில் தொழிலாளர்கள் புத்துணர்வுடன் கோரிக்கைகளுக்காக ஒன்று திரண்டிருந்தனர். 1948ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதுமட்டுமல்லாது, கம்யூனிஸ்ட்களின் தியாகம் பொருந்திய வாழ்க்கை இந்தக் காலத்தில்தான் வெளியுலகுக்கு தெரியத் தொடங்கியது. மதுரை சிறைச்சாலையில் பாலு தூக்கிலிடப்பட்டார். தஞ்சையில் சிவராமனும், இரணியனும், தூக்கிலிடப்பட்டனர். களப்பால் குப்பு சிறையில் விஷமிட்டுக் கொல்லப்பட்டார். அனைத்திற்கும்

மேலாக சேலம்சிறையில் 22 கம்யூனிஸ்ட்கள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். சட்டபூர்வம் இல்லாத கம்யூனிஸ்ட் கட்சியால் தங்கள் இதழ்களில் முழுமையாக கொண்டு வர இயலவில்லை. இந்த செய்திகளை வெளியிட ஜனசக்தியின் பதிலீடாக சிறு பிரசுரங்கள்தான் பெரிதும் பயன்பட்டன.

அடித்தளவாசகர்களுக்கும் பத்திரிகைக்குமான உறவு

ஜனசக்தியின் வாசகர்களில் பெரும்பான்மையினர் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்தான். அரசு எதிர்ப்பு, அடக்குமுறை தலைமறைவு-என்று இயங்கிய ஜனசக்திக்கும் அதன் வாசகனுக்குமானத் தொடர்பு மிகவும் ஆழமானதாக இருக்கிறது. ஆரம்பகாலங்களிலும் நெருக்கடி காலங்களிலும் இந்த உறவு காவியச் சிறப்புகளை உள்ளடக்கிய பல நிகழ்வுகளைக் கொண்டதாக இருக்கிறது.

இதைப்போலவே ஜனசக்தியின் முகவர்களும் முக்கியமானவர்கள். இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டே பெரும்பான்மை முகவர்கள் மத்தியில் அடக்குமுறைகளை எதிர்த்து, இலட்சிய வேட்கையுடன் உணர்வுபூர்வமாகச் செயல்பட்ட பெருமை ஜனசக்தி முகவர்களுக்கு உண்டு.

மதுரையைச் சார்ந்த எம்.ஆர். மணி, கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆரம்பக் காலத்தைச் சார்ந்தவர். முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் கே.டி.கே. தங்கமணி அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர். அரசியல், இலக்கியம் என்று பல்துறை தேறிய கல்வியாளர். இவர் ஜனசக்தியுடனான ஆரம்பக்கால தொடர்புகளை விளக்கி பசுமையான ஜனசக்தி பொன்விழா மலரில் எழுதியிருக்கிறார்.

காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு, இயங்கி வந்தது. அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டிருந்தது. அன்று கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பிரச்சாரமே காங்கிரஸ்-சோசலிஸ்ட் கட்சியின் பெயரால் நடந்து வந்தது. அதில் தோழர் ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, முத்துராமலிங்கத் தேவர், சசிவர்ணத்தேவர் ஆகியோர் பங்கேற்றனர். இந்தக் காலக்கட்டத்தில் தான் நான் ஜனசக்தியைப் படிக்க நேர்ந்தது. ஜனசக்தி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் வாராந்திர இதழாக, லைட்ரோஸ் கலர் மேலட்டையுடன் வெளிவந்தது. ஜனசக்தியைப் படிக்க ஆரம்பித்த வுடனேயே வேறு உலகங்கள், இருவேறு வர்க்கங்கள், இருவேறு அரசியல் என்பதைச் சட்டெனப்புரிந்து கொண்டேன். குறிப்பாக ஏழைகளுக்காக, உழைப்பாளிகளுக்காக வரும் ஏடு. அவர்களுக்காக

உழைக்கும்- காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி; காங்கிரஸ் முதலாளிகளின் கட்சி எனப் புரியவைத்தது. அத்தோடு தோழர் ஜீவாவின் சிம்மக்குரல் பி. ராமமூர்த்தியின் அரசியல் விளக்கவுரை. முத்துராமலிங்கத் தேவரின் நளினமான சொல்லாற்றல் ஆகியன வெகு ஜனங்களைக் கவர்ந்தன.

தஞ்சை மாவட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களில் தோழர் எம். காத்தமுத்து குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். நாடாளுமன்ற உறுப்பினராகப் பிற்காலத்தில் பணியாற்றியவர். ரயில்வே தொழிலாளியாகப் பணியைத் தொடங்கிய இவர் பதவியைப் பாதியிலேயே இழந்து கட்சியின் முழுநேர ஊழியராகச் செயல்பட்டார். ஜனசக்தியின் பொன்விழா மலரில் இவர் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்.

'ஜனசக்தி உண்மை நிலைமைகளை விளக்கியும், தொழிலாளர் - விவசாயிகள் ஆகியோருக்குத் துணை நின்றும் வெளியிடும் செய்திகள் என்போன்ற தொழிற்சங்க ஊழியர்களுக்கு வர்க்கப் பார்வை ஏற்பட பெரிதும் உதவியாக இருந்தது.

ஊழியர்களை உருவாக்குவதில் ஜனசக்தியின் பங்கு மகத்தானது. சுதந்திரப் போராட்டக் காலத்தில், உலகப் பார்வை, நாட்டுப் பார்வை அவசியம் என்று என்போன்றோருக்கு உணர்வு ஏற்படுத்தியதில் ஜனசக்திக்கு முக்கிய பங்கு உண்டு.

தோழர் ஜே. செல்லையா, பல ஆண்டுகள் தொடர்ந்து நெல்லை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். அடக்குமுறை காலத்தில் தண்டிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்தவர். இவரும் ஜனசக்தி பொன்விழா மலரில் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

"யுத்த நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க ஜனங்களை ஒன்றுதிரட்டுவது, உணவுக் கமிட்டிகளை அமைப்பது, தனிப்பட்டவர்கள் சேமித்து வைத்திருக்கும் உணவு தானியங்களைக் கணக்கெடுப்பது, ரெவின்யூ அதிகாரிகளுக்கு இந்த தகவல்களைத் தெரிவிப்பது, இதுதான் அன்றைய எங்கள் வேலை. இப்படி கிட்டத் தட்ட 3 ஆயிரம் மூட்டை தானியம் எடுக்கப்பட்டு, வினியோகிக்கப் பட்டது.

உளுத்த சோளம், ரேஷனில் வழங்கினார்கள். இதனை எதிர்த்துப் போராடினோம். கடத்தி செல்லப்படும் உணவுப்பொருட்கள் தடுத்து நிறுத்தப் பட்டு, கூட்டுறவு பண்டகசாலையில் ஒப்படைக்கப் பட்டு ஜனங்களுக்கு வினியோகிக்கப்பட்டது.

இந்த சம்பவங்களில் ராமச்சந்திர நெடுங்காடி, ராஜகோபாலகிருஷ்ணன், ஆர். வேலுச்சாமிதேவர் போன்றவர்கள் இந்த இயக்கத்திற்கு வழிகாட்டி ஊக்கமளித்து வந்தார்கள். இப்படிப்பட்ட பதுக்கல் எடுப்பு போராட்டங்களில் சட்டத்திற்குப் புறம்பானது என்று சில வழக்குகளும் போடப்பட்டன.

கோர்ட்டுக்குச் செல்வதையே ஒரு இயக்கமாக நடத்தினோம். ஒவ்வொரு வாய்தாவிற்கும் (கோர்ட் உத்தரவு) கட்சிக் கொடியைப் பிடித்துக் கொண்டு, கோஷம் போட்டுக் கொண்டே கட்சிப் பிரச்சாரம், ஜனசக்தியில் என்ன தகவல்கள் வந்துள்ளது, இதை ஏன் வாங்கிப் படிக்க வேண்டும் என்பன போன்ற பிரச்சாரங்கள் செய்து கொண்டே ஒவ்வொரு ஊராகச் செல்வோம். கடைசியில் கோர்ட்டுக்குப் போய்ச் சேருவோம் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுவிடும். அப்பொழுது கோர்ட் முகாம்களாக வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பெறும். சில நேரங்களில் கோர்ட்டார் (நீதிபதி) செங்கொடி, மெக்கப்போனைக் கோர்ட்டுக்குக் கொண்டு வராதீர்கள் என்று கண்டிப்பார். அவர்களுக்கும் சொல்லி சொல்லி அலுத்துப் போயிருக்க வேண்டும். அப்புறம் இதுபற்றி எதுவுமே சொல்வதில்லை. இப்படிப்பட்ட போராட்டங்களை நடத்திய போது செய்திகளை முழுமையாக வெளியிட்டு, நியாயங்களை உலகுக்குத் தெரியப்படுத்தியதிலும் எங்களுக்கான அரசியல் பயிற்சியை வழங்கி இயக்கமாக வளர்த்தெடுத்ததிலும் ஜனசக்திக்கு முக்கியமான பங்கு உண்டு.

ஒரு கொடுமையான பஞ்சம். பொதுமக்களிடம் பணம் இல்லை. நாட்டின் முதல் பிரதமர் நேரு, உணவு திருடர்களை விளக்கு கம்பங்களில் கட்டி தண்டனை வழங்க வேண்டும் என்று ஆவேசமாக பேசிய செய்திகள் வெளிவந்திருந்தன. இந்த நேரத்தில்தான் அரிசிக் கடத்தல் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மூட்டை மூட்டையாகக் கடத்தப்பட்ட அரிசிக் கடத்தலைக் கம்யூனிஸ்ட் தொண்டர்கள் மறித்துப் பிடித்து ஜனங்களுக்கு வினியோகித்தோம்.

நாங்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறோம் என்று போலீசுக்குத் தவறான தகவலை அனுப்பிவிட்டார்கள். போலீஸ் வரப்போகிறது; ஊரையே அழித்துவிடப் போகிறார்கள் என்ற பீதி மக்களிடம் உருவாக்கப்பட்டது. ஊர் ஜனங்களிடம் ஒரே பதட்டம். பீதி பிரச்சாரத்தைத் தடுத்து மக்களிடம் அமைதியை உருவாக்க 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. செங்கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு, பயப்படவேண்டாம், நியாயத்திற்காகத்தான் போராடுகிறோம்

என்பதை விளக்கி, பிரச்சாரம் செய்துகொண்டே சென்றோம். ஓரிடத்தில் ஆயுதப்படை திரண்டு வந்து, லத்தி சார்ஜ் செய்து, எங்களைக் கைது செய்தது. மக்கள் திரண்டு சிவகிரி போலீஸ் ஸ்டேஷன் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆயுதம் தாங்கி கும்பலாகக் கொள்ளையடித்தோம் என்று வழக்குப் போடப்பட்டது. 18 தோழர்கள் தண்டிக்கப்பட்டோம். ஒவ்வொருவருக்கும் 3 முதல் 7 ஆண்டுகள் வரை தண்டனை வழங்கப்பட்டது. இதில் வழி நடத்தியதில் ஜனசக்திக்குச் சிறப்பான பங்கு இருந்தது."

ஜனசக்தி ஆரம்பகாலத் தொடர்பாளர்களில் முக்கிய தொடர்புகொண்டது தஞ்சை மாவட்டம். இதில் இயக்கம் தொடங்கிய காலத்திலேயே ஆழமான தொடர்பைக் கொண்டவர் ஆர். அமிர்தலிங்கம். தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் முன்னோடியான இவர், ஜனசக்தியின் தேர்ந்த வாசகராகவும், பொறுப்புள்ள முகவராகவும், செயல்பட்டுள்ளார். இவருடைய அனுபவ பகிர்வு, ஜனசக்தியின் பொன்விழா மலரில் வெளியிடப்பட்டுள்ளது.

"1937முதல் நான் மன்னார்குடியில் ஜனசக்தி சந்தாதாரராக இருந்து, 1939 வாக்கில் இருந்து வார ஏடாகிய ஜனசக்தி விற்பனையாளராக (ஏஜெண்ட்) 20 முதல் 25 பிரதிகள் வரை விற்று வந்தேன். இந்த காலகட்டத்தில்தான் மன்னார்குடியிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ள தோழர் வெங்கடேசன் (சோழகர்) வந்து ஜனசக்தி வாங்கலானார். இவருடன் தோழர் ராமானுஜம் என்பவரும் தொடர்பு கொண்டு வாசகரானார்கள். நகரத்திலும் கிராமங்களிலும் எங்களுக்குத் தொடர்புடைய தேசபக்தர்களிடம் ஜனசக்தியின் பிரத்யேகத் தன்மைகளை விளக்கிக் கூறி, தொடர்ந்து பலரைப் படிக்கும்படி செய்தோம். சில சந்தாதாரர்களும் சேர்ந்தனர்."

ஜனசக்தி - வாசகர் தொடர்பில் தனக்கு அறிமுகமான வெங்கடேசன் (சோழகர்) என்பவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர்தான் 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தஞ்சை மாவட்டத்தின் நிலப்பிரபுத்துவத்தின் தலைமை பீடமாகக் கருதப்பட்ட குன்னூர் சாம்பசிவ அய்யரைத் தோற்கடித்து சட்டமன்ற உறுப்பினராகப் பணிபுரிந்தார். இவரும் ஜனசக்தி பொன்விழா மலரில் தனது அனுபவத்தை விவரித்திருக்கிறார். இவருடைய அனுபவம் வேறுவகையானது. மலேய தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றி ஆறுமாதம் தண்டனை விதிக்கப்பட்டு, தண்டனைக்காலம் முடிவதற்குள் மீண்டும் விடுதலை பெற்று தமிழகம் திரும்பியவர்.

"1939ஆம் ஆண்டு தாயகம் திரும்பினேன். அப்பொழுது தமிழ்நாட்டில், தோழர் ப. ஜீவானந்தம் ஜனசக்தி என்ற பத்திரிகையைத் தொடங்கியுள்ளார், அதன் பிரதியை வாங்கி அனுப்புங்கள் என்று மலேயா கணபதி (அரசாங்கத்தால் கம்யூனிஸ்ட் என்பதற்காகச் சிங்கப்பூரில் தூக்கிலிடப்பட்டவர்) என்னிடம் கூறினார்.

அதன்படி, ஊர் வந்ததும் அன்றைய ஜனசக்தி ஏஜெண்டான மன்னார்குடி அமிர்தலிங்கத்துடன் தொடர்பு கொண்டு, ஜனசக்தி வாங்கி படித்தேன். மலேயா கணபதிக்கும் அனுப்பினேன். நான் படித்த முதல் ஜனசக்தியில் தஞ்சை மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கும் நிலப்பிரபுதுவக் கொடுமையும், அதனை எதிர்த்து விவசாயிகள் நடத்திக் கொண்டிருந்த வீரம் செறிந்த போராட்டங்களும் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருந்தன".

கோவை மாவட்டத்தைச் சார்ந்த தோழர் ஆர். கிஸன் கட்சியின் ஆரம்பகாலத் தோழர். சுயமரியாதைச் சங்கம், சுயமரியாதை சமதர்மக் கட்சி, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி என்று எல்லாவற்றிலும் ப. ஜீவானந்தம் தொடர்பால் அவருடன் சேர்ந்து செயல்பட்டவர். இவருடைய அனுபவமும் ஜனசக்தியில் விவரிக்கப்பட்டுள்ளது.

"பொன்மலை ரயில்வே தொழிலாளர் சங்கம், மதுரை பசுமலை மகாலட்சுமி மில் தொழிலாளர் போராட்டம், விக்ரமசிங்கபுரம் மில் தொழிலாளர் போராட்டம், கோவை பிரசித்திபெற்ற லட்சுமி மில் தொழிலாளர் போராட்டம் ஆகிய இவையெல்லாம் நடந்து கொண்டிருந்த காலத்தில்தான் ஜனசக்தி உதயமாயிற்று. என்னைப் பொறுத்தவரையில் நான் கோவை, ஈரோடு, ஊட்டி, திருப்பூர், விஜயமங்கலம் போன்ற இடங்களில் கூட்டுறவு பணியாளனாக இருந்ததன் மூலம் பரந்த அளவின் மக்களுக்குப் பழக்கமாயிருந்தேன். இந்தப் பழக்கத்தைப் பயன்படுத்தி, நிறைய ஜனசக்தி சந்தாதாரர்களையும், வாசகர்களையும் என்னால் உருவாக்க முடிந்தது. மாற்றுக் கட்சியினரில் நேர்மையானவரைக் கண்டால் ஜனசக்தி வாசகராக்காமல் நான் விட்டதில்லை. அப்போது கோவையில் வசித்து வந்த சி. சுப்பிரமணியம் (மராட்டிய மாநில ஆளுநராகப் பணியாற்றிய சிஎஸ்) ஆர்.கே. சுந்தசாமி போன்ற எண்ணற்ற காங்கிரஸ்காரர்களை, ஜனசக்தி சந்தாதாரர்களாக மாற்றியிருக்கிறேன். சுற்றுவட்டார ஊர்களுக்கெல்லாம் ஓயாமல் சைக்கிளில் சுற்றித் திரிந்து சந்தா சேர்த்திருக்கிறேன். கோவையில் இப்பொழுது 500 பிரதிகள் ஜனசக்தியும் நேஷனல் பிரண்ட் (NATIONAL FRONT - கட்சி தேசிய இதழ்) 400 பிரதிகளும் என் பொறுப்பில் விற்கப்பட்டன."

முதுபெரும் இயக்கத் தோழர் பவானி பி.என். பாலு இயக்கத்தின் ஆரம்ப காலம் முதலே கட்சியில் செயல்பட்டவர்.

1987ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் தேதி ஜனசக்திக்கு இவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ஜனசக்தியின் வாசகர் செயல்பாட்டைப் பற்றிய விபரங்கள் இந்தக் கடிதத்தில் கிடைக்கின்றன.

"1937ஆம் ஆண்டு நாங்கள் இளைஞர்கள், பி.ஏ. ராஜகோபாலன் என்ற காங்கிரஸ்காரரின் வீட்டிற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். இங்குதான் ப. ஜீவானந்தம் எங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அது சமயம் ஜீவா, "ஜனசக்தி என்ற பத்திரிகையை வெளியிடுகிறோம். இதை நீங்கள் எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டும். மற்றவர்களுக்கும் இதைப் படித்துக் காட்ட வேண்டும். விலைக்கு விற்க வேண்டும்" என்று கூறினார்.

இதற்குப் பின் சில கடைகளில் ஜனசக்தி போடத் தொடங்கினோம். பலர் முன்னிலையில் நாங்களாகவே இது என்ன பத்திரிகை என்று கடைக்காரரிடம் கேட்டு, பின் கையிலெடுத்துச் சப்தம் போட்டு வாசிக்கத் தொடங்கிவிடுவோம். பலருக்கும் ஜனசக்தியை அறிமுகம் செய்துவைக்க இந்த தந்திரத்தைக் கடைப்பிடித்தோம்.

ஒரு ஜனசக்தியை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய் மணலில் சுற்றி அமர்ந்து ஒரு தோழர் ஜனசக்தியை வாசிக்க மற்றவர்கள் கேட்போம். இதில் வெளிவந்த விஷயங்கள் பற்றி விவாதிப்போம். இப்படித்தான் பவானியில் காங்கிரஸ் - சோசலிஸ்ட் பத்திரிகையான ஜனசக்தி அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

மீண்டும் ஜனசக்தி

இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பொறுத்தவரை 1948-51ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டக் காலம் கொடிய அடக்குமுறை நிறைந்த காலம் என்பது முன்னரே அறிந்ததுதான். 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டமும் வெளியிடப்பட்டது. புதிய அரசியல் அமைப்புச் சட்டப்படி கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்தது செல்லத்தக்கதல்ல என்று உயர்நீதிமன்றம், உச்சநீதி மன்றம் இரண்டிலும் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டன. முதலில் சென்னை உயர்நீதிமன்றத்திலும், பின்னர், டெல்லி உச்சநீதிமன்றத்

திலும் வெளியான தீர்ப்பு, கம்யூனிஸ்ட் கட்சியின் மீதான தடையை ரத்து செய்தது. கம்யூனிஸ்ட் கட்சி சட்டபூர்வமாக இயங்கத் தொடங்கியது.

கட்சியின் மீதான தடை நீக்கப்பட்டிருந்தாலும், முன்னணித் தோழர்கள் பலர்மீது பல்வேறு வழக்குகள் பதிவாகியிருந்தன. இவர்களெல்லாம் தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள். அநேகர் பாதுகாப்புக் கைதிகளாக இருந்தனர்.

ஜி. ஆளவந்தார், நெல்லை மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பணியாற்றியவர். வி.இராஜா கிருஷ்ணன் பொள்ளாச்சியில் மாணவர் பருவ காலத்திலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியோடு நெருக்கமான தொடர்புகொண்டு வந்துள்ளார். பிந்தைய காலங்களில் இவர்கள் இருவரும் சோவியத்து நாடு இதழின் சென்னைப் பிரிவில், நீண்ட காலம் பணியாற்றினார்கள். இந்த அனுபவம் குறித்து, பின்வருமாறு ஜி. ஆளவந்தார் குறிப்பிடுகிறார். புனர் ஜென்மம் என்னும் தலைப்பில், ஜனசக்தி பொன்விழா மலரில் இந்த அனுபவம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"மாகாணகக் கமிட்டியின்கீழ் நேரடியாகச் செயல்பட்ட தோழர்களில் நான் ஒருவன் மட்டுமே விடுதலையானேன். தலைமறைவாக இருந்த தோழர் வி. இராதா கிருஷ்ணன்மீது, எந்த வழக்குகளும் இல்லை. எனவே நாங்கள் இருவரும் மாகாணக் கமிட்டியின் சார்பில் செயல்பட வேண்டும் என்று எங்களுக்குக் கூறப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி வெறும் பெயரளவில்தான் சட்டபூர்வமாயிற்று, போலீஸ் அடக்குமுறை தொடர்ந்து நீடித்தது. கட்சி அலுவலகம் திறக்க நானும் இராதாகிருஷ்ணனும் வாடகை வீடு தேடி அலைந்தோம். பலர் போலீஸுக்குப் பயந்து கொண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்கு வீடு தரமுடியாது என்று மறுத்துவிட்டார்கள். பின்னர் என் சொந்தப் பெயரில் சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ணச் செட்டித் தெருவில், ஒரு மாடி அறையை வாடகைக்கு எடுத்தேன். அதில் கம்யூனிஸ்ட் கட்சி என்னும் பெயர் பலகையை மாட்டினேன். உடனே போலீஸ்காரர்கள் வீட்டுக்காரரை மிரட்டினார்கள். கம்யூனிஸ்ட் என்று கைது செய்து சிறையில் அடைக்கப் போவதாக அச்சுறுத்தினார்கள். அவர் எங்களிடம் ஓடி வந்து வீட்டைக் காலி செய்யும்படி வலியுறுத்தினார். போலீஸ்காரர்கள் எங்களிடம் வரட்டும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். வீட்டைக் காலிசெய்ய முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டோம்.

மீண்டும் ஜனசக்தி தொடங்க வேண்டும் என்று தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை எங்களைக் கேட்டுக் கொண்டது. ஜனசக்தி தொடங்குவது குறித்து பெரும் மகிழ்ச்சி கொண்டேன். பத்திரிகையையும், அச்சகத்தையும் நாங்கள் ஆரம்பிக்கும் முன் நாங்கள் அனுபவிக்க நேர்ந்த இன்னல்கள், இடையூறுகள் போலீசார் ஏவிவிட்ட மறைமுக நிர்ப்பந்தங்களுக்கு அளவில்லை. சிந்தாதிரிப் பேட்டையில் செல்வம் பிரஸ் என்ற ஓர் அச்சகம் இருந்தது. அதன் உரிமையாளர் ஒரு திராவிடக் கழக அனுதாபி. அவரை அணுகியபோது, போலீஸைப்பற்றி அச்சமில்லை என்றும், பத்திரிகை அச்சடித்துக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். ஜனசக்தி 1951ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் பிறந்தது

பெரம்பூர் நேரு பிரஸ் உரிமையாளர், திரு. ஆறுமுகம் பிள்ளை உதவியுடன் மறுபடியும் சொந்தமாக ஜனசக்தி அச்சகத்தை ஆரம்பிக்கும்படி தலைமறைவாக இருந்த கட்சியிடமிருந்து, மேலும் ஒரு வழிகாட்டுதல் வந்தது........ பல முயற்சிகள் எடுத்தும் இடம் கிடைக்கவில்லை. கடைசியில் சிந்தாதிரிப் பேட்டையில் சுவாமி நாயக்கன் தெருவில் ஒருவர் எங்களுக்கு இடமளித்தார். இவர் ஒரு மலையாளி, அவருடைய மகன் ஒரு கட்சியின் அனுதாபி என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டோம்.

1951 வாக்கில் அரசியல் நிலைமைகள் மிக வேகமாக மாறிக் கொண்டு வந்தன. ஜனசக்தி அச்சகம் விரிவடைந்தது. 'ஹோஅண்ட் கோ' டபுள் டம்மி சிலிண்டர் மெஷினை வாங்கினோம். 1952 தேர்தலை எதிர்நோக்கியிருந்ததால், ஜனசக்தியைத் தினசரியாக்குவது என்று முடிவெடுத்தோம். 1951ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து ஜனசக்தி நாள்தோறும் சிறிய அளவில் வெளிவரத் தொடங்கியது. பத்திரிகையின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு சென்றது. ஒரு கட்டத்தில் 18,000 பிரதிகள் விற்பனையாயின."

"ஜனசக்தியில் தனது அந்தக் காலத்தின் அனுபவத்தை வி. இராதாகிருஷ்ணன் ஜனசக்தி 1987 டிசம்பரில் 'பழைய நினைவுகள்' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார்.

ராயப்பேட்டையில், 3, அந்தோணித் தெருவில், கட்சியின் மாநிலக்குழு அலுவலகமும், ஜனசக்தி அலுவலகமும் ஒரே இடத்தில் நடத்துவதற்கு இடம் கிடைத்தது. சென்னை மாகாணத்தில் 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 61 இடங்கள் நமக்குக் கிடைத்தது. காங்கிரஸ் எதிர்ப்பு கொண்ட கட்சிகளுடன் ஐக்கிய ஜனநாயக முன்னணி அமைத்தோம். கம்யூனிஸ்ட்களுக்கு மந்திரிசபை அமைக்கும் வாய்ப்பு

ஏற்பட்டது. எதிர்க்கட்சிகளிடையே பிளவை உருவாக்கி, கூட்டணிக்குத் துரோகம் செய்ய வைத்து, காங்கிரஸ் கட்சி மந்திரி சபையை ஏற்படுத்தியது. இந்தச் சந்தர்ப்பத்தில் மவுண்ட் ரோட்டில், டி.வி.எஸ். பஸ் ஸ்டாண்டுக்கு அருகில், ஜனசக்தி பெரிய சைஸில் தினசரியாக வெளிவந்தது."

மூலதனம்

ஒவ்வொரு தொழிலுக்கும் மூலதனம் அவசியம். தொழில் தன் வளர்ச்சியில் இலாபத்தைத் தரவேண்டும். இலாபம் இல்லையேல் வளர்ச்சியில்லை. தொழில் காலத்தால் சிறிது சிறிதாக அழிந்து போகும். பத்திரிகைத் தொழில் என்று ஆராய்ந்தால் ஜனசக்தி எந்தக் காலத்திலும் லாபம் ஈட்டித்தரும் தொழிலாக இல்லை. தொடர் நஷ்டங்களைச் சந்தித்து வரும் பத்திரிகை இலட்சிய வேட்கையோடு பல இதழ்கள் மிக வேகமாகத் தொடங்கப்பெறுகின்றன. வந்த வேகத்தில், குறிப்பிட்ட காலத்திலே மறைந்து விடுகின்றன. உயர்ந்த எண்ணங் கொண்டவர்களின் நன்கொடையால், இதழ்கள் தொடங்கப் பெறுகின்றன. நிதி தீர்ந்து கொஞ்சக் காலம் நெருக்கடிகளோடு போராடி பார்த்துவிட்டு கடைசியில் வேறுவழியில்லாமல் இதழ்கள் நின்றுபோய் விடுகின்றன. இதனால் இலட்சியப் பயணம் தடைப்பட்டு விடுகின்றது. உயர்ந்த இலட்சியத்துடன் பிறந்த கம்யூனிஸ்ட் கட்சி நெடும் பயணத்தின் வெற்றிக்கு இதழை முக்கிய கருவியாகக் கருதியது. கட்சியைப் போலவே, இதழும் லட்சியத்திற்கான மதிப்புமிக்க கருவி என்பதில் தெளிந்தால்தான் விவரிக்க முடியாத இன்னல்களின் ஊடாகக் கட்சியின் பயணமும் ஜனசக்தியின் பயணமும் தடைபடாமல் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

ஜனசக்திக்கான நிதியைக் கட்சியின் தொண்டர்கள்தான் வழங்குகிறார்கள். வழங்கும் நிதியால் ஜனசக்தி பொருளாதார லாபத்தை ஈட்டித் தராது என்பது தெரிந்தே, இந்த நிதி வழங்கப்படுகிறது. இது லட்சிய வெற்றிக்கான முதலீடு என்று கருதுகிறார்கள். ஒவ்வொரு தொண்டனும் இதழுக்கான நிதியை வழங்குகிறான். வெகுமக்களிடம், இதழுக்கான முக்கியத்துவத்தை உணர்த்தி நன்கொடை திரட்டி தருகிறார்கள். ஆரம்பம் முதலே ஜனசக்திக்கு எழும் நிதி தட்டுப்பாடு இவ்வாறுதான் தீர்த்துக் கொள்ளப்படுகின்றது.

கட்சி வளர்க்க நிதி, கம்யூனிஸ்ட்கள் ஆண்டுதோறும் திரட்டுகிறார்கள். மக்களின் அடிப்படையான மாற்றங்களுக்காக அர்ப்பணித்துள்ள கட்சி மக்கள் தரும் நிதியில்தான் உயிர் வாழ

வேண்டும், செயல்பட வேண்டும் என்ற கருதுகோள் இதன் பின்னணியில் அமைந்துள்ளது. கொச்சைப்படுத்தப்பட்ட மலிவான எதிர்ப்புப் பிரச்சாரங்களின் மூலம் இந்த மேன்மையை அவமானப் படுத்தும் முயற்சிகள் நடந்த போதிலும், இதைப்பற்றி இதன் தொண்டர்கள் கவலை கொள்வதில்லை. இந்த நிதியின் ஒரு கணிசமான பகுதி இதழுக்கான செலவாகிறது. இது தவிர சில நேரங்களில் இதழ்கள் தீவிர பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொள்ளும் போது தனியாக நிதி அறிவிப்புகளுக்கு முடிவாகி, நிதி திரட்டுவதில் ஒரு இயக்கமாக நடைபெறுகிறது.

1948ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி ஜனசக்தியில் வெளிவந்த செய்தி, பத்திரிகை நிதி திரட்டுவதில் எப்படிப்பட்ட சுவையான அனுபவங்களெல்லாம் விளைகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள உதவுகிறது.

ஒரு லட்சம் சேர்ந்தது

"ஜனசக்தி தினசரி நிதிக்கு 21-1-48 லெலின் தினம் முடிய வசூலானது 99 ஆயிரம் ரூபாய்தான். இதை இன்றே ஒரு லட்சமாகப் பூர்த்தி செய்வதற்கு நமக்கு ஆவலாய் இருந்தது.

படவுகிலும், நாடகத்துறையிலும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை நகைச்சுவை மூலம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி வரும், திரு.என்.எஸ். கிருஷ்ணன் அவர்களை அணுகினோம். "பாட்டாளிகளின் பத்திரிகைக்கு இதோ ஆயிரம் ரூபாய்" என்று தோழர் ஜீவாவிடம் அன்புடன் கொடுத்தார். அவ்வளவுதான் ஒரு லட்சம் பூர்த்தியாயிற்று."

ஜனசக்தியில் வெளிவந்த இந்த தகவலைப் போன்று, நூற்றுக்கணக்கான நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர் திரு. கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கடிதமும், இவற்றுள் குறிப்பிடத்தக்கது. 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் தேதி ஜனசக்தியில் கல்கியின் கடிதம் பிரசுரமாகியுள்ளது.

'கல்கி' ஆசிரியரின் நன்கொடையும் பாராட்டும்

('கல்கி' ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நம் கட்சி நிதிக்காக ரூபாய் 50 அளித்திருக்கிறார். அதோடு அவர் எழுதியிருக்கும் கடிதத்தையும் கீழே தருகிறோம்)

"ஜனசக்தி"

ஆசிரியர் அவர்களுக்கு

தங்களுடைய பத்திரிகையில் 'பொதுவுடைமைக் கட்சி நிதி' விண்ணப்பத்தைப் படித்தேன். மேற்படி நிதிக்காக எனது சிறு நன்கொடை (ரூபாய் 50) இத்துடன் அனுப்பி உள்ளேன். நான் பொதுவுடைமைக் கட்சி அங்கத்தினர் அல்ல. அங்கத்தினராகச் சேரும் உத்தேசமும் இல்லை.

பொதுவுடைமைக் கட்சியின் சமுதாய லட்சியங்களையும், பொருளாதாரத் தத்துவங்களையும், நான் பரிபூரணமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், பொதுவுடைமைக் கட்சியின் தற்கால வேலைத் திட்டம் முறைகள் இவற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

என்னுடைய சிறு நன்கொடையை நான் அனுப்பியிருப்பது, முக்கியமாகத் தமிழ்நாட்டில் வேலை செய்யும் பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்களிடம் நான் கொண்டுள்ள நன்மதிப்பைக் காட்டுவதாகும். அவர்களுடைய தியாகம் ஒப்பற்றது. அவர்களுடைய நோக்கம் மாசுமறுவற்றது. ஏழை மக்களுக்கு அவர்கள் செய்துவரும் தொண்டு இணையற்றது. அவர்களுடைய ஊக்கமும் உழைப்பும் அபாரமானவை. இத்தகையவர்களைப் புதல்வர்களாகப் பெற்ற தேசம், இத்தகையவர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஸ்தாபனம் அதிர்ஷ்டம் செய்த ஸ்தாபனம்.

என்னுடைய சிறு நன்கொடையை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
ரா. கிருஷ்ணமூர்த்தி

திட்டமிட்டு மறைக்கப்பட்ட கம்யூனிஸ்ட்களின் மனிதநேயமுள்ள பகுதியை இவ்வாறு நன்கொடை வழங்குவதன் மூலம் கல்கி தெரிவித்துள்ளார். இதைப் போலவே காலங்கள்தோறும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜனசக்திக்கும் நிதி வழங்கி பெருமைபடுத்தியவர்கள் பலர் உண்டு. முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரர் விஸ்வநாததாஸ், எல்லாக் காலங்களிலும் ஜனசக்திக்கு உதவிபுரிந்து வந்துள்ளார். 1938ஆம் ஆண்டு ஜூலை மாதம் இவரது உதவி பற்றி ஒரு குறிப்பு ஜனசக்தியில் வெளிவந்துள்ளது. முக்கியத்துவம் கருதி, ஜனசக்தியில் தனிக்கட்டமிடப்பட்டு, இந்த தகவல் குறிப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜனசக்திக்கு உதவிய நாடகம்

சென்ற 19-6-38 ஞாயிற்றுக்கிழமையன்று திண்டுக்கல்லில் ஜனசக்தி நிதிக்காக ஓர் உதவி நாடகம் பல நடிகர்களால் இலவசமாக

நடத்திக் கொடுக்கப்பட்டது. செலவு போக ஜனசக்தி நிதிக்கு ரூபாய் 100 கொடுக்கப்பட்டது. இந்த நாடகத்தில் பங்கு கொண்ட தோழர்கள் எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ், கே.டி. நடராஜ் பிள்ளை, கே.பி. ஜானகியம்மாள், வி.எஸ். சிவமய்யர், பி.எம். காதர் பாஷா சாகிப், என்.பி.லெட்சுமிபாய், கே.கே. நாராயணன், எம்.கே. துரைசாமி பிள்ளை, எம்.ஆர். பாலசுந்தரம், டி.எஸ். அருணாசலம், ஏ.என். நடராஜன், கே.டி.என். மேனகா, ஏ. பேபி முதலியோராவார்கள். இந்த நாடகம் நடைபெற பேருதவியாக இருந்தவர் மதுரை நாடக சங்கத்தின் காரியதரிசி எஸ். குருசாமி ஆவார்.

மேற்கூறிய அன்பர்களுக்கும் இன்னமும் இந்த விஷயத்தில் உதவிபுரிந்த நண்பர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

- ஆசிரியர்.

குறிப்பு : இந்த செய்தியில், பங்கேற்ற நடிகர்களின் பெயர், நடித்த எழுத்தாளர்களில் அடையாளமிடப்பட்டுள்ளது.

இதழுக்கான நிதியைத் திரட்டுவதில், கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை, இவ்வாறு சில அடிப்படை விதிகளைக் கொண்டிருக்கிறது. சுதந்திரப் போராட்டக்காலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு முழு ஆதரவளித்து வந்த சில இதழ்கள் பிற்காலத்தில், பெரும் செல்வத்தைக் குவிக்கும் பெரும் முதலாளிகளின் இதழ்களாக மாறிவிட்டன. அரசியல் கட்சிகள் நடத்தும் பத்திரிகைக்களுக்கு கட்சியின் செல்வாக்குள்ள காலங்களில் மட்டும் தோற்றம் காட்டி, மறையக் கூடியதாக இருக்கிறது. கட்சி உறுப்பினர்கள், ஆதரவான உழைக்கும் மக்கள் இவர்கள் திரட்டி, சேமித்து வழங்கும் மூலதனத்தில்தான் ஜனசக்தி செயல்படுவதால் அது தன் உறுதிப்பாட்டை எப்பொழுதும் குலைத்துக் கொள்ளவில்லை. இன்றுவரை இதே பாதையில் தன் வழிப்பயணத்தைத் தொடருகிறது.

1952க்குப் பின்

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை, 1951க்குப் பின் பெரிதும் மாறுதல் பெறுகிறது. 1953இல் மதுரையில் நடைபெற்ற கட்சியின் மூன்றாவது அகில இந்திய மாநாடு, இந்த மாறுதலைப் பகிரங்கமாக அறிவித்தது. சுதந்திரப் போராட்டக் காலத்தின் சூழலை எதிர்கொள்ள வேண்டிய நிலவரம் இப்பொழுது இல்லை. ஏகாதிபத்தியத்தின் முகவர்களாகச் செயல்பட்ட காங்கிரஸ் ஆட்சியை, ஓர் ஆயுதம் தாங்கிய புரட்சியால் தூக்கியெறிய வேண்டும் என்று 1948இல் எடுக்கப்பட்ட கொள்கையும் மாற்றம் கண்டு விட்டது. தேர்தலில் போட்டியிடுல்,

ஜனநாயகத்தை வலுவாக்கி, இதன்மூலம் சோசலிச லட்சியங்களை நிறைவேற்றுவதற்காகக் கட்சி அதிகாரத்தை அடைத்தல் - என்பதாகப் பாதை வகுக்கப்பட்டது. இந்த பாதைப் பற்றிய விழிப்புணர்வையும் ஊக்கத்தையும் வழங்குவதற்கு ஜனசக்தி தனது கருத்துக்களை விரிவாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கியது.

கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் காலத்தில் நாட்டின் எதிர்க்கட்சி என்னும் தகுதியைப் பெற்றிருந்தது. சில மாநிலங்களில், ஆட்சியைக் கைப்பற்றும் வலுவுடன் செயல்பட்டது. 1957ஆம் ஆண்டு, கேரளத்தின் ஆட்சியைக் கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியது என்பது குறிப்பிடத் தக்கதாகும். காங்கிரஸ் அன்றைய நிலையில், நிலப்பிரபுக்கள், பெருமுதலாளிகளின் கூடாரம் என்பதான குற்றச்சாட்டுகள் இருந்தன.

தங்களுக்கான புதிய முகங்களை உருவாக்கிக் கொள்ள காங்கிரஸ் கட்சிக்குச் சோசலிசம் தேவைப்பட்டது. இந்தத் தேவையையொட்டித்தான் ஆவடி சோசலிஸத்தைக் காங்கிரஸ் முன் வைத்தது.

இந்தச் சூழலில் கட்சியின் கொள்கை என்ன என்பதை, தோழர் எம்.ஆர். வெங்கட்ராமன் 1955ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி ஜனசக்தியில், காங்கிரஸ் மாடல் சோசலிஸம் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இவர் கட்சியின் ஆரம்பகாலத் தலைவர்களில் மிக முக்கியமானவர். கட்சியின் மாநிலச் செயலாளராகப் பணியாற்றியவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இரண்டாகப் பிளந்தபோது, (மார்க்சிஸ்ட்) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தலைமையேற்று செயல்பட்டார்.

காங்கிரஸ் கட்சியின் சித்தாந்தப் பின்னணியை இந்தக் கட்டுரை கட்டவிழ்த்துக் காட்டுகிறது. இதில் மறைந்து கிடக்கும் மறைபொருளை வெளிஉலகுக்குக் துலக்கிக் காட்டுகிறது.

'ஒரு சோசலிஸ ரீதியான சமுதாயத்தை இந்த நாட்டில் அமைக்கப் போவதுதான் தங்கள் லட்சியம் என்று காங்கிரஸ் கட்சி இப்பொழுது கூறுகிறது. இது உண்மைதானா?

தொழில் வளர்ச்சி அவசியம் என்றும் இதில் தனிப்பட்ட முதலாளிகளும் இருக்கலாம்; அரசாங்கம் சில தொழில்களை நடத்தும் என்றும் கூறுகின்றனர். நம் நாட்டில் இப்பொழுது ரயில்வே தொழில் அரசாங்கத்தால்தான் நடத்தப்படுகிறது. சென்னை மோட்டார் பஸ் போக்குவரத்து அரசாங்கத்தின் உடைமையாகும். இந்தத் தொழில்கள்

அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருப்பதால் நாடு சோசலிஸம் அடைந்துவிட்டதாகக் கூறமுடியாது.

இது சம்பந்தமாகச் சரியான முடிவுக்கு வருவதற்கு யார் அரசாங்கத்தை நடத்துகிறார்கள்? முதலாளி வர்க்கமா? அல்லது முதலாளிகள் இல்லாத இதரர்களா? என்பது குறிப்பாகக் கவனிக்க வேண்டிய பிரச்சினையாகும். தேசிய வருமானம் வேண்டிய பிரச்சினையாகும். தேசிய வருமானம் எங்கிருந்து பிரதானமாகக் கிடைக்கிறது. தனிப்பட்ட முதலாளிகளின் தொழிலுற்பத்தியி லிருந்தா? அல்லது அரசாங்கம் நடத்தும் தொழில்களிலிருந்தா? என்று பார்க்க வேண்டும். மேலும் அரசாங்கம் நடத்தும் தொழில்களிலிருந்து பெறப்படும் ஆதாயம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது மிக முக்கியமான பிரச்சினையாகும்.

காங்கிரஸின் இந்த சோசலிஸத் தீர்மானத்தை இந்தியப் பெருமுதலாளி, ஜி.டி. பிர்லா வரவேற்றிருக்கிறார். சென்னை ரோட்டரி கிளப்பில் மத்திய அரசாங்க மந்திரி, டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் சென்ற வாரம் பேசும்போது, “காங்கிரஸின் சோசலிஸத் திட்டத்தைக் கண்டு மிரள வேண்டாம்” என்று முதலாளிகளுக்கு மேலும் வாக்குறுதி அளித்துள்ளார்.

நாட்டின் நலனை உத்தேசித்து, உண்மையாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் கம்யூனிஸ்ட்கள் கட்டாயம் இதனை வரவேற்பார்கள். ஆனால் காங்கிரஸ் தலைவர்களின் கடந்த 7 வருடகால நடைமுறைகளைப் பார்த்தால் இவர்கள் பேச்சை நம்புவதற்கு இடமில்லை.”

இரண்டாவது தேர்தலில், கேரள சட்டமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மை இடங்களில் வென்று, 1957-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. தேர்தல் மூலம் கம்யூனிஸ்ட்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் உலகத்திலேயே இதுதான் முதல் நிகழ்ச்சி. இந்தியா முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட்களுக்கு, இது புத்தெழுச்சியை உருவாக்கித் தந்தது. ஜனசக்தியும் இதில் முழுமையாகப் பங்கேற்றது. 1957ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி தலையங்கம் கீழ்க்கண்டவாறு எழுதியது.

“கேரள ராஜ்ஜியத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மந்திரிசபை அமைவது, கேரள மக்களின் வெற்றி சாதனைமட்டுமல்ல, நாடு முழுவதுமுள்ள முற்போக்கு சக்திகளின், ஜனநாயகச்சக்திகளின் ஒப்பற்ற வெற்றியாகும்...... வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்த சாதனையை வெற்றிகரமாக்கிய கேரள மக்களைப் பாராட்டுவோம். கேரளத்தில்

ஆட்சி நிலைபெற்று ஓங்கவும், அதன் செழுமையான அனுபவங்கள் நமக்கு மதிப்பு மிக்க படிப்பினையாகத் திகழவும், தமிழ் நாட்டு மக்கள் தமது பூரண ஆதரவைக் கேரள சர்க்காருக்கு அளிக்க வேண்டும்.

நமது அண்டை நாட்டில் நடைபெறும் இந்த மகத்தான நிகழ்ச்சி, நமக்கு மட்டற்ற பெருமையைக் கொடுக்கிறது. மக்கள் நலனில் ஆர்வமும், ஜனநாயகப் பாரம்பரியமும் உள்ள மக்கள் கேரள தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடித் தமது சகோதர ஆதரவைப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்".

கேரளாவின் இந்த வெற்றிக்குப் பின், ஜனசக்தியின் எண்ணிக்கையும், அரசியல் செல்வாக்கும் மிகவும் அதிகரித்ததாகக் கூறப்படுகிறது. இந்த மாற்றங்கள் இந்தக் காலத்தில் வெளிவந்த ஜனசக்தியில் காணப்பெறுகின்றன.

தமிழ்மொழி வளர்ச்சி

மொழி வளர்ச்சி குறித்து கம்யூனிஸ்ட் கட்சி கவனமற்று இயங்குகிறது என்ற கருத்து தொடர்ந்து முன் வைக்கப்பட்டு வருகிறது. ஜனசக்தியில் வெளிவந்துள்ள தமிழ் வளர்ச்சி குறித்த அணுகுமுறை இத்தகைய கருத்துகள் ஆதாரமற்றவை என்பதை நிரூபிக்கின்றன. நின்ற தேச விடுதலைப் போராட்டம் கிளர்ந்த காலத்தில் 'தனிமாகாணம்' என்ற கிளர்ச்சி எழுந்தது. ஆந்திரர்களுக்குத் தனிமாகாணம் வேண்டும் என்ற கோஷம் சிலரால் எழுப்பப்பட்டது. இதில் கம்யூனிஸ்ட் கட்சியின் வழி எது? என்பதை விளக்கி ஜனசக்தி தலையங்கம் எழுதியுள்ளது. 1938 ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி இந்த தலையங்கம் வெளியிடப்பட்டுள்ளது.

"சோசலிஸ்ட்களாகிய நாங்கள், பாஷா வாரியாக, மாகாணங்களைப் பிரிக்கவேண்டும் என்பதை எதிர்க்கவில்லை. ஒவ்வொரு பாஷைக்காரர்களும் அவர்களின் தாய்மொழியிலும், கலையிலும், நாகரீகத்திலும் பூரண அபிவிருத்தியடைய வேண்டுமென்பதை மேளதாளத்துடன் வரவேற்கிறோம். குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு இரையாகிக் கிடக்கும் குறவர், தொம்பர் ஆகியவர்களுக்கு மட்டுமல்ல; நீலகிரி தோதுவர்களும் (Backward tribal groups) ஏனைய காட்டு ஜாதியர்களும் கூட மெய்யான கலாச்சார வளர்ச்சியில் ஓங்க வேண்டும்."

நாடு விடுதலை பெற்ற பின்னர், மிகவும் கொதித்து நின்ற ஒன்று, ஆந்திர தமிழக எல்லைப் பிரச்சினை. ஆந்திர மகாசபை என்னும்

அமைப்பு, தனியாக ஒரு மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டில் சென்னையை ஆந்திராவின் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்றக் கோரிக்கையை முன் வைத்தார்கள். இவர்கள் நடத்திய மாநாட்டில் சர். இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு சென்னையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை ஆந்திராவிற்கும் மறுபகுதியைத் தமிழகத்திற்கும் ஒதுக்குவதுதான் சரியான தீர்வு என்றார். ஜனசகக்தியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், சென்னை தமிழகத்திற்குச் சொந்தமானது என்பதில் உறுதியோடிருந்தன. 1952ஆம் ஆண்டு, ஜூலை, 22ஆம் தேதியின் ஜனசக்தி, இது குறித்து கொள்கை நிலையைத் தெளிவாக அறிவித்திருக்கிறது.

"சென்னையை ஆந்திராவில் இணைக்க வேண்டும் என்பதில் துளிகூட நியாயமில்லை. ஆந்திரக் கம்யூனிஸ்ட் கட்சியும், சென்னை தமிழ்நாட்டிற்கே உரியது என்று ஆரம்ப காலத்திலிருந்தே அழுத்தம் திருத்தமாகக் கூறி மேற்படி கோரிக்கையின் அநியாயத்தை அம்பலப்படுத்தியுள்ளது."

எழுத்தாளர் அறந்தை நாரயணன், ஜனசக்தி ஆசிரியர் குழுவில் தொடர்ந்து பணியாற்றியவர். இவர் 'அரியணையில் தமிழ் அகமகிழ்வில் ஜனசக்தி என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். இதில் கீழ்க்கண்ட ஜனசக்தியின் கட்டுரைகள் தமிழ், தமிழர் வளர்ச்சி குறித்த விஷயங்களை விவாதிக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

1. தமிழர் இனவளர்ச்சிக்கு ஆதரவு
   எஸ். இராமகிருஷ்ணன்
   14-2-1945

2. தமிழர் வளர்ச்சி - எஸ். இராமகிருஷ்ணன்
   21-2-1945

3. தமிழர் குடியரசு - 7-11-1945

4. ஐக்கியத் தமிழர் குடியரசு - எஸ். இராமகிருஷ்ணன்
   14-8-1946

விடுதலைக்குப் பின்னர்

புதிய தமிழகம் மீதான ஜனசக்தியின் போராட்டம் புதுவேகம் பெறுகிறது.

இந்தக் காலத்தின் இதற்கான விபரங்கள் முழுமையாகக் கிடைக்கின்றன. 1952ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் தேதி தலையங்கத்தில் இது தெளிவாக விவரிக்கப்படுகிறது.

"சட்டசபைகளிலும், சட்டசபைக்கு வெளியிலும், மொழிவழி மாகாணக் கோரிக்கைக் கிளர்ச்சி மேலோங்கி நிற்கிறது. அரசாங்க நிர்வாகத்தில் மக்களின் பிரதிநிதிகள் முழுமூச்சுடன் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், தேசிய மக்களிடையே வளர்ந்து வரும் மனக்கசப்புத் தணிய வேண்டுமென்றால், உடனடியாக மொழிவழி மாகாணம் அமைய வேண்டும். உடனடியாகப் புதிய தமிழகம் உருவாகி, தீர வேண்டும்."

ஐக்கிய தமிழகப் போராட்டத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டவர் ப. ஜீவானந்தம் என்பது அனைவரும் அறிந்ததே! 1952ஆம் ஆண்டு, அக்டோபர் 20ஆம் தேதி 'புதிய தமிழகம் ஏன்? என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

சென்னை ராஜ்ஜியத்திற்குத் தமிழ் நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்த தியாகி சங்கரலிங்கனார் உயிர் நீத்தபின்னர் 'தியாகியின் வாக்கு' என்ற தலைப்பில் 1956ஆம் ஆண்டு, அக்டோபர் 15ஆம் தேதி தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. அது தமிழ்நாடு என்ற பெயர் சூட்டலில் ஜனசக்திக்கு உள்ள ஈடுபாட்டையும் தியாகி சங்கரலிங்கனார்மீது கொண்ட ஈடுபாட்டையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

"இன்றைய ஆட்சியின் போக்கைக் கண்டு, மனம் வெந்து, உருகி, அணு அணுவாய் செத்து மடிந்தார் சங்கரலிங்கனார். தமிழ்த்தாய் பெற்றெடுத்த உத்தமப் புதல்வர்களில் உத்தமராய்- சுத்த வீரராய்க் கொள்கைக்காக உயிர்நீத்த தியாகியாய் மடிந்தார். ஒரு தேசபக்தர். . . . 40 ஆண்டு காலம் தேசத் தொண்டு ஒன்றையே ஜீவிதமாகக் கொண்டு வாழ்ந்த அந்த தியாகியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

"காங்கிரஸ் ஆட்சி திருந்தாவிட்டால், பட்டினிப் பட்டாளம், பசிப் பட்டாளம், வேலையில்லா திண்டாட்டப் பட்டாளம், மொழிவழி ராஜ்ஜிய அமைப்புப் பட்டாளம் இன்னமும் அதிருப்தி கொண்ட பட்டாளங்கள், பட்டாளம் பட்டாளமாகப் புறப்பட்டுக் காங்கிரஸ் ஆட்சியைத் தகர்த்தெறிவது நிச்சயம்".

இதுவே சங்கரலிங்கனாரின் இறுதிக்கடிதம், திருந்த மறுக்கும் ஆட்சிக்கு விடுத்துள்ள சாபம். வாசித்த மரண ஓலை.

தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து ஜனசக்தி வலியுறுத்தி வந்துள்ளது. சுதந்திரப் போராட்டக்

காலத்திலிருந்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஜனசக்திக்கும் இந்தக் கோரிக்கையில் முழு உடன்பாடு உண்டு.

தமிழக சட்டமன்றத்தில் 1956ஆம் ஆண்டு, டிசம்பர் 27இல் தமிழ் ஆட்சி மொழி சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சியாகச் செயல்பட்ட, கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப் பூர்வமான நாளேடு, எந்தவிதமான எதிரியாகப் பார்க்காமல் முழு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருக்கிறது. அந்தக் காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் இந்தப் பண்பைச் சில பத்திரிகைகள் புகழ்ந்து எழுதியுள்ளன. கீழ்க்கண்டவாறு 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 28 இல் ஜனசக்தியின் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது. இதன் தலைப்பு, 'அன்னை அரியணையில் ஏறினாள்'.

"இந்த நூற்றாண்டுத் தமிழனின் வரலாற்றில் நேற்று ஒரு நிகரற்ற நிகழ்ச்சி நடந்திருக்கிறது. 3 கோடித் தமிழ் மக்களும் ஒரு சேரப் பூரிப்படையும் வகையில், சட்டசபை உறுப்பினர் அனைவரும் ஒரே குரலில் 'தமிழ் வாழ்க' என்று முழங்க, தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதா கோலாகலமாக நிறைவேறியது. முன்னர் மூவேந்தர்களான செங்குட்டுவன், பெருவளவன், செழியன் அரியணைகளிலும், இடைக்காலத்தில் ராஜராஜன் அரண்மனையிலும் புகழோடு வீற்றிருந்த-நாடாண்ட அன்னைத் தமிழ் பின்னர் சாபத்தீட்டால், சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகத் தரங்கெட்டுத் தாழ்வுற்றுக் கிடந்தாள். நேற்று மீண்டும் அரியணை ஏறிவிட்டாள்."

இதைப் போலவே, இதற்கு அடுத்த நாள் வெளிவந்த தலையங்கத்தின் வாசகங்கள், மொழி குறித்துக் கம்யூனிஸ்ட்களின் அணுகுமுறை என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன.

"தமிழ்மொழியை ஆட்சிமொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஒளிவிடச் செய்வதற்கு ஆங்கிலத்திடமும், ஆரியத்திடமும் காழ்ப்புணர்வு கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வள்ளுவன் போலும் கம்பன் போலும் பாரதி போலும் தமிழ்மொழியின் உயிராற்றலில் நம்பிக்கை வைத்து, 'தனிவெறிபோக்கிற்கு' இடம் தராமல் தமிழை வளர்க்க தமிழ் அறிஞர்களும், தமிழ் மக்களும் முன்வர வேண்டும்.

பண்டைய பெருமையிலும், பெருமை, தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்படப் போவது உறுதி"

கலை, இலக்கியம்

கலை, இலக்கியம் குறித்து, ஒரு தெளிந்த பார்வையை ஜனசக்தி கொண்டிருந்தது. ஆதிக்க சக்திகள், பாட்டாளி மக்களின்

மேன்மைமிகுந்த பண்பாட்டைப் புதைத்துவிட்டன. மனித நம்பிக்கைகள் அனைத்தையும் சிதைத்து, அவனை விதவிதமான போதைகளில் மூழ்க வைப்பதற்கே ஆதிக்க கலை இலக்கிய முயற்சிகள் செயல்பட்டன. ஜனசக்தி ஆதிக்க வர்க்கத்தின் கலை, இலக்கியம் ஒடுக்கப்பட்ட மக்களின் கலை, இலக்கியம் என்ற தத்துவப் பின்னணியில் ஜனசக்தி தெளிவாகப் பிரித்துப் பார்த்தது. ஆரம்ப காலம் முதல் இன்றுவரை இந்த நிலைப்பாட்டிலிருந்து, ஜனசக்தி விலகிச் சென்றதில்லை.

பொதுவுடைமைக் கொள்கைக்குப் புகழ் சேர்க்கும் கவிதைகளும் பாடல்களும் ஜனசக்தியில் வெளிவந்துள்ளன. பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன், தமிழ்ஒளி, கே.சி.எஸ். அருணாசலம், வெ. திருமூர்த்தி முதலிய கவிஞர்களின் கவிதைகள் ஜனசக்தியில் வெளிவந்துள்ளன. ப. ஜீவானந்தம் ஆசிரியர் என்பதாலும், அவரே சிறப்பான கவிஞர் என்பதாலும் ஜனசக்தியின் கவிதை முகம் சிறப்பாக அமைந்திருந்தது.

ஜனசக்தியின் மூன்றாவது இதழில் அதாவது 1937ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் "புதிய தோர் உலகம் செய்வோம்...... பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்" என்ற கவிதை பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகப் பொதுவுடைமைக் கவிஞர்களில் முன்னணி கவிஞர் தமிழ்ஒளி. பாரதிதாசனின் மாணவர். சிறந்த கவித்துவத்தை இயல்பாகப் பெற்றவர். இவருக்குரிய திறமை இன்னமும் தமிழகத்தில் அங்கீகாரம் பெறவில்லை என்னும் விமர்சனம் இன்னமும் தொடர்கிறது. 'ஜனசக்தி வாராய்' என்பது இவருடைய கவிதையின் தலைப்பு.

பொங்குகடல் ஓசைநிகர் சங்கொலி முழங்க
போதமொடு நாலுதிசை பேரிசை முழங்க
சங்கமொடு மக்களோடு ஜனசக்தி வாராய்
தாளமொடு, மேளமொடு வரவேற்க வந்தோம்

இந்தக் கவிதை 1952ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் தேதி வெளிவந்தது.

புகழ்பெற்ற திரை இசைக்கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒரு பொதுவுடைமைக் கவிஞர் என்பது அனைவரும் அறிந்ததுதான். தஞ்சைமாவட்டத்தின் விவசாயப் போராட்டங்களில் முழுமையான தொடர்பைக் கொண்டவர். இவருடைய புகழ்பெற்ற

பொதுவுடைமை இயக்கப்பாடல் 'புதிய ஒளி வீசுது பார்' என்பதாகும். இது சோவியத்து ரஷியாவின் பெருமைகளை உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறும் இயல்பைக் கொண்டது. 1954ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி நவம்பர் புரட்சிதினத்தில் ஜனசக்தியில் இந்தக் கவிதை வெளியிடப்பட்டுள்ளது.

கவியரசு கண்ணதாசன், பல்வேறு அரசியல் கொள்கைகளில் இயங்கியவர் என்றாலும், 1960க்குப்பின் கம்யூனிஸ்ட் இயக்கத்துடனான தொடர்புகளை இவர் வலுவாக்கிக் கொண்டார். ஜனசக்திக்கும், இவருக்கும் நெருங்கிய தொடர்பு அமைந்துள்ளது. 'போர்பரணி' என்னும் தலைப்பில் கவிஞர் எழுதிய கவிதை 1962 நவம்பர் 5ஆம் தேதி ஜனசக்தியில் வெளியிடப்பட்டுள்ளது.

சமுதாய எதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் பலநூறு சிறுகதைகள் ஜனசக்தியில் வெளிவந்துள்ளன. இவர்களில் குறிப்பிட்டு சொல்லத்தக்கவர்கள் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், ஜி. நாகராஜன் முதலானோர் ஆவர். புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற 'பொன்னகரம்' என்னும் சிறுகதை முதன்முதலில் ஜனசக்தியில்தான் வெளிவந்தது. பிற்காலத்தில் தமிழகத்தின் சிறுகதை உலகில் புதிய சாதனையை உருவாக்கிய ஜெயகாந்தன் 'என்னை உருவாக்கிய அன்னை' என்ற தலைப்பில், ஜனசக்தி பொன்விழா மலரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

"இந்தியா சுதந்திரமடைய இன்னமும் சில நாட்கள்தான் இருக்கின்றன என்று என் மனம் குதிபோட்டுக் கொண்டிருந்தது. சென்னைக்கு ஒரு அரை டிக்கட்டும், மாற்றுத்துணிகள் அடைத்த ஒரு துணிப்பையும், அதில் அம்மா கொடுத்தனுப்பிய ஒரு கடிதமுமாக 1947 ஜூலை 27ம் தேதி நான் ஜனசக்தி அலுவலகத்திற்கு வந்தேன்.

அப்போது மாநிலத் தலைமையகமும் ஜனசக்தி அலுவலகமும், அச்சுக்கூடமும் டேவின்சன் தெருவில் ஒரே கட்டிடத்தில் இயங்கி வந்தன. சென்னை நகரிலுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்களின் கம்யூனும் அங்குதான் இருந்தது.

பின்னாளில் ஜெயகாந்தன் என்ற எழுத்தாளன் உருவானதற்கான எல்லா அடிப்படைப் பண்புகளும், உலக அறிவும், கல்வி அறிவும், சமூகப் பார்வையும், மானுட நேயம் எல்லாம் .... எல்லாம் இங்குதான், இந்த சிறுவனுக்குப் புகட்டப்பட்டன.

சூழ்நிலைதான் மனிதனை உருவாக்குகிறது. ஆ! அது எத்தகைய சூழ்நிலை! என்னைச் சுற்றி இருந்தவர்கள் எத்தனை லட்சியப்

புருஷர்கள்! எத்தகு அறிவுஜீவிகள்! அவர்கள் எனக்குத் தோழமை என்றால் என்னவென்று வாழ்ந்து காட்டினார்கள். சரித்திரம், ஆங்கிலம், அரசியல், இலக்கியம் என்று எல்லாத் துறைகளிலும் என்னை ஈடுபடுத்தி பயிற்சி தந்த ஆசான்கள் அவர்களே! . . . . . . எப்படி ஒரு மனிதன் தாயின் வயிற்றில் அவள் அங்கத்தோடு, அங்கமாகத் தோன்றி அவளது உயிர்ப்பில் சுவாசித்து, உருவெடுத்து வெளிப்போந்து நஞ்சு கொடி பந்தத்தை அறுத்துக் கொண்டு, தனிமனிதனாக வாழ்ந்து வளர்ந்தாலும், அத்தாயின் பண்புகளை, குணங்களை, லட்சியங்களை, கனவுகளையெல்லாம் சுமந்து கொண்டிருக்கிறானோ, அதுபோலவே நான் கட்சியிடமிருந்தும், ஜனசக்தியிடமிருந்தும், விலகி நிற்பதைப் போல, தோன்றினாலும், ஜனசக்தியின் ஓர் அங்கமாகத்தான் இன்னமும் வாழ்ந்து வருகிறேன்."

திறனாய்வுத் தமிழை வளர்த்த பெருமை ஜனசக்திக்கு உண்டு. 1958ஆம் ஆண்டுதான் இலக்கியத்திற்காகத் தாமரை என்னும் இதழ் தொடங்கப்பெற்றது. இதற்கு முன்னர் இலக்கியம், சினிமா முதலிய விமர்சனங்கள் ஜனசக்தியில் வெளிவந்தன. தாமரை வெளிவந்த பின்னரும், இலக்கியம் திரைப்படம் முதலியவற்றிற்காக ஜனசக்தியில் சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டன.

தமிழகத்தில் திறனாய்வுத் துறையில் புதிய பாரம்பரியத்தை உருவாக்கிய தொ.மு.சி. ரகுநாதன், என்.வானமாமலை, தி.க. சிவசங்கரன் முதலானவர்கள், ஆரம்பகால ஜனசக்தியால் வளர்ந்து, புதிய தலைமுறையை வளர்த்தெடுத்தவர்கள். பிற்காலத்தில் திரைப்பட விமர்சனத்தில் புதிய சிகரங்களை எட்டிய எரிமலை அறந்தை நாராயணனின் பங்களிப்பு மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

அண்மைக்காலம்

ஜனசக்தியின் சோதனை மிகுந்த காலமாக 1964ஆம் ஆண்டைக் கருதலாம். ஆளும்கட்சியின் பல்வேறு அடக்குமுறை களைச் சந்தித்த ஜனசக்தி, கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எழுந்த முரண்பாடுகளைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் தவித்தது. ஒரு விதத்தில் பார்த்தால் நுட்பமான பல முரண்பாடுகளை உள்ளடக்கிய போராட்டம் இது. இதனை எதிர்கொள்ளுதல் சிக்கல் நிறைந்தது.

ஜனசக்தியைக் கேள்விக்குறியாக்கியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளந்தது. இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) என்ற மற்றொருக்கட்சி தொடங்கப்பட்டது. தீக்கதிர் என்ற தனிஇதழை இவர்கள் தொடங்கினார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வமான இதழாக ஜனசக்தி தொடர்ந்தது. 1967இல் திராவிட முன்னேற்றக் கழகமும் இதன்பின்னர் 1977இல் அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகமும் ஆட்சி பொறுப்பை ஏற்றன. இந்தக் கட்சிகளின் கொள்கைகளும், இதனால் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளையும் ஜனசக்தி கூர்ந்து கவனித்தது.

மக்களை ஒன்று திரட்டுவதிலும், போராட்டங்களுக்கான காரணங்களை விளக்குவதிலும், தொடர்ந்து மக்களின் குரலாகவே ஜனசக்தி செயல்பட்டு வருகின்றது. இந்தக் காலத்தின் அரசியலும், ஜனசக்தியின் செயல்பாடும், நம் அனைவருக்கும் மிகத் தெளிவாகத் தெரிந்தது என்பதால் இதனைக் கூடுதலாக விவரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

1968டிசம்பர் 25, கீழ் வெண்மணிக் கிராமத்தில் 44 மனித உயிர்கள் கொளுத்தப்பட்டன. கூலி உயர்வு கேட்டதால், இந்த விவசாயிகள் மிகக் கொடூரமாகக் கொளுத்தப்பட்டார்கள். இது ஒரு மாபெரும் கண்டன இயக்கமாக இந்தியா முழுவதும் நடைபெற்றது. ஜனசக்தி இதனைத் தொடர்ந்து, பிரச்சாரப் போராட்டத்தை மிக செழுமையுடன் செய்தது.

இதைப்போன்ற தொழிலாளர்கள் போராட்டங்கள், மாணவர் இளைஞர்களின் போராட்டங்கள் மாதர் போராட்டங்கள் ஆகிய அனைத்திலும், இணைந்து நின்று தொடர்ந்து ஜனசக்தி செயல்பட்டு வருகிறது.

கடந்த 62 ஆண்டுகளாகப் பணிகளைச் சிறப்புற ஆற்றிவரும் ஜனசக்தி, தமிழுக்குக் கிடைத்துள்ள தியாகமும், போர்க்குணமுமிக்க மாற்றத்தை விரும்பும், தனித்துவமிக்க இதழ் என்று உறுதியாகக் கூறலாம். கருத்துப் போராட்டத்தில் இதனுடைய சாதனைகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. பழமையும், பிற்போக்கும் நிறைந்த பல கருத்துக்களை வலுவுடன் நின்று, இது தகர்த்துள்ளது. தமிழின் சாளரங்கள் நன்றாகத் திறந்து வைத்து, புதிய சுவாசத்தைத் தமிழுக்கு வழங்கியுள்ளது. இதன் பணிதொடர்கிறது. இன்னமும் சிறப்புற தொடரும் என் உறுதியாக நம்பலாம்.

பின் இணைப்பு

அ-15 இரண்டாம் உலகப்போர் 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி தொடங்கியது. செப்டம்பர் 16ஆம் தேதி ஜனசக்தி

நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் தொடர்ந்து நான்காண்டுகள் ஜனசக்தி வெளிவரவில்லை.

ஆ47ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றவுடன் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்ற முழு நம்பிக்கை மக்களிடமிருந்தது. ஆனால் நிலைமை வேறு விதமாக இருந்தது. பசி, பஞ்சம், வறுமை ஆகியவை கோர உருவம் கொண்டு மக்களை வதைபுரியத் தொடங்கியது. இதன் முழு தகவல்களும், ஜனசக்தியில் வெளிவந்துள்ளன.

"நெல்லை, ராமநாதபுரம் ஜில்லாக்கள் பஞ்சத்தின் பிடிப்புக்குட்பட்டு, பதைபதைக்கின்றன. ஒருபுறம் கிராமாந்திர ரேஷன் தகர்ந்துவிட்டது. மறுபுறம் வெள்ளாமை தீர்ந்துவிட்டது.

பட்டினிச் சாவுகள் கூட, சம்பவித்துவிட்டன. ஏராளமான விவசாயிகள் அகதிகளாகி, பஞ்சம் பிழைக்கப் பயணம் கிளம்பி விட்டனர்.

மதுரை, கோவை, சேலம், தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு ஜில்லாக்களின் கிராமங்களிலும் உணவு நெருக்கடி முற்றிக் கொண்டிருக்கிறது.

-ஜனசக்தி 21 - 12 - 1947

அரிசி ரூபாய்க்கு அரைப்படி, மொச்சைப் பயறும், கிழங்கும் தின்று மக்கள் உயிர் வாழ்கிறார்கள். பட்டினிச்சாவுகள் அதிகரித்திருக்கின்றன.

உணவு நெருக்கடி தீவிரமாகிவிட்ட சில ஜில்லாக்களிலிருந்து கூக்குரல் கிளம்புகிறது. இது நகர்புறங்களுக்குக் கேட்பதில்லை. பஞ்சத்தின் பிடியில் நெல்லை ஜில்லா சிக்கித் தவிக்கிறது. கிராமங்களே காலியாகின்றன.

வங்கப் பஞ்சத்தின் மரணப்படுகுழியில் வீழ்ந்த பின்னர்தான் கண்ட்ரோல், ரேஷனிங் அமலுக்கு வந்தது. நெல்லை ஜில்லாவில் இதெல்லாம் இல்லை. நெல்லை ஜில்லாவின் அவசர சுற்றுப் பயணம் செய்து, பஞ்சத்தின் கோரத்தை நேரில் பார்த்த தோழர் என்டி. வானமாமலை இந்தக் கட்டுரை எழுதியுள்ளார். - ஜனசக்தி 11-1-42

5 பேர் அடங்கிய குடும்பம் 6 அணாவில் காலம் தள்ளுகிறது. மத்தியதர வர்க்கமும் பாப்பராகி வருகிறது. 1 - 2 - 42

இவ்வாறு பிரச்சினைகளை முன் வைத்த ஜனசக்தி, இதற்கான காரணங்களையும், வாசகர்களுக்கு விளக்கத் தவறவில்லை. இருநூறு ஆண்டுகாலப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஏற்படுத்தியிருந்த சுரண்டல் கொடுமையான சுமையுடைய சுதந்திர இந்தியா தலையில் சுமக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனை ஜனசக்தி மிகத் தெளிவாகவே உணர்ந்திருந்தது. நிலைமை மேலும் மோசமடைவதற்கு, பதுக்கலும் கள்ள மார்க்கெட்டும்தான் அடிப்படைக் காரணம். புதிதாகப் பதவியேற்ற காங்கிரஸ் அரசு இந்தச் சமூக விரோதிகள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இதில் பலர், இந்த சமூக விரோதிகளுடன் மறைமுகத் தொடர்பு கொண்டிருந்தனர். காங்கிரஸ் இயக்கத்தின் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி தியாகி திரு. ஏ. வைத்திய நாதய்யர். மதுரையைச் சார்ந்தவர் மந்திரி திரு. டேனியல் தாமஸ் மாவட்ட கலெக்டரும் கலந்துகொண்ட கூட்டத்தில் பகிரங்கமாகப் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தள்ளார். ஜனசக்தி 1947ஆம் ஆண்டு, அக்டோபர் 8ஆம் நாள் இதழில் இது வெளியிடப்பட்டுள்ளது.

"மக்கள் அவதியுறும் இந்தச் சமயத்தில் கள்ள மார்க்கெட் பகிரங்கமாகவே நடைபெறுகின்றது. அதிகாரிகள் தூங்குகிறார்கள். கள்ளமார்க்கெட் கயவர்களின்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். இதற்கு மந்திரி பதில் சொல்லியாக வேண்டும்.

பொதும்பில் உணவுக் கமிட்டித் தலைவன் வீட்டில் 160-மூட்டைகள் பிடிபட்டதே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஏன் அவனுக்கு விலங்கு போடவில்லை? மதுரையில் ஒரு ரைஸ்மில் வியாபாரியிடம் 700 மூட்டை நெல் பிடிபட்டுள்ளது. அவனுக்குக் கொஞ்சம் அபராதம். இந்த காதகர்களுக்குச் சலுகை காட்டினால் இந்த நாடு உருப்படுமா?

இங்கு வீற்றிருக்கும் கலெக்டர் என்னை நோக்கி உத்தியோகஸ்தர்களில் எத்தனைபேர் யோக்கியமானவர்களாக இருப்பார்கள் என்று கேட்டார். நான் 100க்கு 3பேர் கூட நேர்மையுள்ளவர்களாக இல்லை என்று சொன்னேன். வந்தே மாதரம் என்று கோஷத்தால் வருஷ தண்டனை கொடுக்கச் சட்டமிருந்தது. இன்று ஆயிரக்கணக்கான நெல்மூட்டையைப் பதுக்கி வைத்திருப்பவர்களுக்குத் தண்டனை இல்லையா?

கனம் டேனியல் தாமஸ் அவர்களிடம் மனக்கொதிப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். கையும் களவுமாகச் சில இளைஞர்களால் பிடிக்கப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள

கள்ளமார்க்கெட் காதகர்கள் எந்தவிதமான தண்டனையும் இன்றித் தப்பி விட்டார்கள். அத்துடன் கதரையும் போட்டுக் கொண்டு காந்தி ஜெயந்திக்குக் கொஞ்சம் பணமும் கொடுத்து விட்டு தேசபக்தர்களைப் போல அலைகிறார்கள் இவர்கள். . . . . இவ்வளவு நாள் பொறுத்துப் பார்த்துப் பார்த்து, நிலைமை சரிவராததால்தான் இப்படி வயிற்றெரிச்சலுடன் பேசுகிறேன்."

பஞ்சம், பட்டினிக் கொடுமைகளையும், அதற்கான இயக்கங்களையும், தீர்வுகளையும் முன் வைத்த ஜனசக்தி, இந்தக் காலகட்டத்தில், வகுப்புவெறி எதிர்ப்பில் தீவிரம்கொண்டது. சுதந்திரம் பெற்றபின் இந்திய பாகிஸ்தான் பிரிவினையை ஆதரமாகக் கொண்டு, இந்து - முஸ்லீம் கலவரத்திற்கு ஆர்.எஸ்.எஸ். - திட்டமிட்டிருந்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளும், சர்தார் வல்லபாய் பட்டேல் போன்றவர்கள் இதற்கு முழு ஆதரவைத் தந்து உதவி செய்து வந்தனர். இதன்பின்னர் காந்தி அடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காந்தி அடிகளின் படுகொலை இந்திய மனசாட்சியை உலுக்கியது. மதவெறியன் கொலை செய்யும் அரசியலை மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்கள். இது குறித்த ஆராய்ச்சிப்பூர்வமான தகவல்களை ஜனசக்தி வெளியிட்டது. முன்னணித் தலைவர்களின் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

டாக்டர் ஜி. அதிகாரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்; தத்துவ அரசியல் விவரங்களில் விரிவாகப் பல பார்வைகளை வழங்கியவர். மகாத்மா காந்தியடிகள் இறந்தவுடன், இந்தக் கொலையின் அரசியல் பின்னணி குறித்து விரிவான கட்டுரை ஒன்றை 1948ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி ஜனசக்தியில் எழுதியுள்ளார்.

"ஐந்து வகுப்புவாதப் பிற்போக்கை எதிர்ப்பதற்கும், முஸ்லீம் மைனாரிட்டியைப் பாதுகாப்பதற்கும், தன் சொந்த வழியில் ஈடுபட்டார் மகாத்மா காந்தியடிகள். இந்த தீரமிக்க சேவையைக் கண்ட இந்துமகா சபை, ஆர். எஸ். எஸ். இயக்கத்திலுள்ள இந்து மத வெறியர்கள் இவர் மீது கோபம் கொண்டனர். ரத்தவெறிபிடித்து அலைந்தனர். கொலைக்காரத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தினர். காந்தியடிகள் அகால மரணமடைந்தார். . . . . இது ஒரு கொலை வெறியனின் தனிப்பட்ட நடவடிக்கை அல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டாகச் செயலாற்றும், இந்து வகுப்புவாதப் பிற்போக்கின் நிலப்பிரபுக்களாலும் சமஸ்தானாதிபதிகளாலும்

கோடீஸ்வர முதலாளிகளின் ஒரு பகுதியாலும் போஷித்து வளர்க்கப்பட்ட இந்து வகுப்புவாத சதியின் முதல் பகுதி இது. . . . . ஆனால் உண்மையில், மகாத்மாவைக் கொலைசெய்த நாதாரம் கோட்சேயின் நெருங்கிய சகாவும், அகில இந்திய இந்துமகா சபையின் பொது காரியதரிசியுமான தேஷ்பாண்டேயை ஆசிரியராகக் கொண்ட 'ஹிந்த் அவுட்லுக்' பத்திரிகைதான் கடந்த அக்டோபரில் மனித பதர்கள் மத்திய சர்க்காரிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று எழுதியது. இந்த பத்திரிகைகள் மகாத்மா காந்தி, பண்டித நேரு, மௌலானா ஆசாத் ஆகிய மூவரையும் மிக கேவலமாகத் தூற்றி எழுதியது. பர்மாவில் இங்ஸானுக்கும் அவருடைய சகாக்களுக்கம் ஏற்பட்டக் கதி, காந்திக்கும் நேருவுக்கும் ஏற்பட வேண்டும் என்று இந்தக் கும்பல்தான் அந்த நாளில் கடல்வழியில் பகிரங்கமாகப் பேசியது."

தோழர் ஜி. அதிகாரியின் இந்த கட்டுரை பல தகவல்களைத் தரக்கூடியவை அப்பொழுது வெளிவந்த ஜனசக்தியில் காணப்படுகிறது. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றொரு கட்டுரை பசுத்தோலைப் போர்த்திக் கொள்கிறது புலி என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 8-ஆம் நாள் ஜனசக்தியில் இது வெளி வந்துள்ளது. காந்தியடிகளின் கொலைக்குப் பின், இந்துமகாசபையும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் 'கோட்சேயை அரக்கன் என்றும் தங்களுக்கும் இவனுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லையென்றும் தங்கள் இயக்கங்கள் அரசியல் அதிகார ஆசை எதுவுமில்லாத பற்றற்ற அமைப்பென்றும் ஒரு தோற்றத்தை வரைந்து காட்ட முயற்சித்தார்கள். இதில் மூடிமறைக்கப்பட்டவற்றை அம்பலப்படுத்துகிறது இந்தக் கட்டுரை. இதற்கான ஆதாரங்களைத் தெளிவாக்க, 1947ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதி 'இந்து அவுட் லுக்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியை எடுத்துக்காட்டுகிறது. இந்து அவுட்லுக் பத்திரிகையில், இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றின் செயல்திட்டங்கள் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளன.

"1. மனிதப் பதர்களடங்கிய இன்றைய அரசாங்கத்தை நீக்கி, வைரம் பாய்ந்த இந்துக்களடங்கிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

2. இந்திய யூனியனை, இந்துக்களின் யூனியனாக அறிவிக்க வேண்டும்.

3. பாகிஸ்தானுடன் யுத்தம் நடத்தும் அடிப்படையில், இந்தியாவைத் தயார் செய்யவேண்டும்.

4. சகல இந்து இளைஞர்களையும் ஒன்றுதிரட்டி, கட்டாய ராணுவப் பயிற்சியளிக்க வேண்டும்.

5. சகல முஸ்லீம்களையும் ஐந்தாம் படையினராகக் கருத வேண்டும்.

6. இஸ்லாம் மதத்தைச் சட்டவிரோதமாக்க வேண்டும்."

இதுமட்டுமல்லாது வேறு சில தெளிவையும், இந்தக் கட்டுரை நமக்கு வழங்குகிறது. டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி இந்து மகாசபையின் முக்கியமான தலைவர். இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது மிகவும் வேதனைமிக்க இந்து-முஸ்லீம் படுகொலை நடைபெற்றது. வகுப்புவெறி தீயை அணைக்கப் பெரும் முயற்சி எடுக்கப்பட்டும், கலவரம் கட்டுக்குள் வரவில்லை. அப்பொழுது டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி பேசியதை ஜனசக்தியின் இந்தக் கட்டுரை, மேற்கோள் காட்டி வெளியிடப் பட்டிருந்தது.

"ஜனநாயகம்தான் அரசியலின் லட்சியமா? அரசியலின் கடைசி வார்த்தையா?

உலகத்தைப் பொறுத்தவரை திறமை மிக்க ஒரு மனிதனின் ஆட்சி அதிக பலமுள்ளது என்பது நிச்சயம். ஜெர்மனியும், இத்தாலியும் போரில் தோற்கடிக்கப்படாமலிருந்தால் லட்சியங்கள் கூட மாறியிருக்கும்.

ஹிட்லர், முஸோலினியின் பாஸிஸ்ட் மிலேச்சனத்தை ஆதரிக்கிறார் முகர்ஜி."

கொலை நடப்பதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு காந்தி அடிகளின் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் வெடிகுண்டு வீசப்பட்டது. இதில் காந்தியடிகள் தப்பிவிட்டார். மதன்லால் என்னும் ஆர். எஸ். எஸ். தொண்டன்தான் இந்தக் குண்டை வீசியது. இதன் பின்னர் டெல்லியில் கூடிய இந்துமகாசபைக் கூட்டத்தில் 'வீரன் மதன்லால் வாழ்க' 'காந்தி வீழ்க' என்று கோஷமிட்டார்கள்.

இதையொட்டி, கட்டாக் நகர ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் காந்தியடிகளின் மார்பில் குண்டு பாய்வதைப் போல ஓர் ஓவியம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கோட்சே பூனாக்காரன், பம்பாய் சதி ஆலோசனைக்குக் காரியாலயமாக விளங்கியிருக்கிறது. டெல்லியில் கொலை நடந்தது. இதில் நாக்பூருக்கும் தொடர்பு இருக்கிறது. கட்டாக் - நாகபுரி - பம்பாய் - டெல்லி என்று நீண்ட சங்கிலித் தொடரைக் கொண்ட சதி இது. இதுதான் தனிப்பட்ட பைத்தியக்காரன் செயல் என்று சொல்லப்படுகிறது.'

காந்தியடிகளின் கொலையில் புதைந்திருந்த மர்மங்களைச் சரியான அரசியல் தெளிவோடு, பலதகவல்கள் ஜனசக்தியில் இந்தக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

அன்றைய அரசியலில் எழுந்த ஒரு முக்கிய கேள்விக்கு விடையளிப்பதாகத் தலையங்கம் ஒன்று அமைந்துள்ளது. காந்தியமும் மார்க்கியமும் எந்த இடத்தில் முரண்பட்டுப் பிரிந்து செல்கின்றன என்பதை, இந்தத் தலையங்கம் வரையறுத்துக் காட்டுகிறது. தொழிலாளர்கள் போராடுவதை விமர்சனம் செய்த காந்தியடிகளின் அடிப்படையான கொள்கைக்குப் பதிலுரைப்பதாக இந்தத் தலையங்கம் அமைந்துள்ளது. 1938ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் தேதி இது அஹிம்சையா? ஹிம்சையா? என்னும் தலைப்பில் வெளியிடப் பட்டுள்ளது.

"சமாதான மறியல் முறையின் ஸ்ருஷ்டிகர்த்தா என்ற ஹோதாவில் மகாத்மாஜி தொழிலாளர்கள் சுவர் வைப்பதுபோல் நின்று கொண்டு, மறியல் செய்து வேலைக்குப் போகும் தொழிலாளர்களைத் தடுப்பது பலாத்காரம் அன்றி வேறில்லை" என்கிறார். அஹிம்சை தத்துவத்தின் இந்தப் புதிய வியாக்யானம் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கே உலை வைத்துவிடும் போலத் தெரிகிறது. ஆகவே காந்தியடிகள் முன் வைக்கும் விவாதங்களை சற்று நன்கு பரிசீலனை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது."

1835ஆம் வருஷத்திலேயே - நூறு வருஷங்களுக்கு முன்பே, இங்கிலாந்தில் டார்சென்டர் என்னும் இடத்தில் ஆலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்த காலத்தில், இம்முறையைக் கையாண்டனர். அக்காலத்தில் இங்கிலாந்தில் அமுலிலிருந்த சட்டத்திற்கு இது விரோதமானது என்பதால் மறியல் செய்த ஐந்து தோழர்களும், சிறைவாசம் செய்தனர். இப்பொழுது எல்லாத் தொழில் தகராறுகளிலும் கையாளப்பட்டு, சட்டபூர்வாகத் தொழிலாளர்கள் அடைந்த உரிமையாக, இது ஆக்கப்பட்டது. இந்தியாவில் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம், ஆரம்பிப்பதற்கு முன்னால், நடந்த 1918ஆம் வருஷத்திய வேலைநிறுத்தங்களில், இம்முறை கையாளப்பட்டது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட வரையில், சமாதான மறியல் முறையில் கிருஷ்டி கர்த்தா காந்திஜி என்பதை நாம் மறுக்கிறோம். . . . .

தர்ஸனா உப்பளத்தைக் கைப்பற்றியபோது, சர்க்கார் உத்யோகஸ்தர்களை, உப்பளத்திற்குள் வரவிடாமல் சுவர் வைத்தாற்போல் நின்று விட்டதை, ஒருவர் காந்திஜிக்கு உதாரணமாக

எடுத்துக் காட்டினாராம். அதற்கு காந்திஜி, 'தர்ஸனா சம்பவத்திற்கும், தொழிலாளர் மறியல் சம்பவத்திற்கும் பொருத்தமில்லை. தர்ஸனாவில் நமது லஷ்யம் சர்க்காரை எதிர்ப்பது. உப்பளத்தைக் கைப்பற்றிப் பாதுகாப்பது' எனக் கூறுகிறார். . . .

தொழிலாளர்கள் சமாதான மறியல் செய்வது பலாத்காரம் எனில், சத்தியாகிரகிகள் சர்க்கார் ஊழியர்களை, உப்பளத்திற்குப் போகவிடாமல் தடுத்ததும் பலாத்காரம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, சர்க்காரை எதிர்த்துப் பலாத்காரத்தைக் கையாளலாம். ஆனால் தொழிலாளர்கள் மட்டும் முதலாளிகளை எதிர்த்துப் போராடும் காலத்தில், அப்படிப்பட்ட முறையை அனுஷ்டிப்பது கூடாது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?"

மக்கள் போராட்டங்களின் பல்வேறு பரிமாணங்களை இந்தக் காலத்திய ஜனசக்தி வெளியிட்டுள்ளது. இதில் குறிப்பிட்டு சொல்லத் தக்கது மாணவர்கள் போராட்டம். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நடைப்பெற்றது. பிற்கால அரசியலில் மாவீரனாகக் கருதப்பட்ட, கே. பாலதண்டாயுதம் இந்தப் போராட்டத்திற்குத் தலைமையேற்றிருந்தார். 1938ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி ஜனசக்தியில் இதுபற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இது தவிர 'அண்ணாமலை சர்வ கலாசாலையில் அடக்குமுறை தாண்டவம்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. தோழர் கே. பாலதண்டாயுதம்தான் இந்தக் கட்டுரையையும் எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"எங்கள் சர்வகலா சாலைப் பேரவையில் ஒரு நாள் ஒழுங்கற்ற முறையில் அவைத் தலைவர் நடந்து கொண்டதால், இதைக் கண்டித்து, நான் வெளியேறினேன். என்னைப் பின் தொடர்ந்து, நாற்பது மாணவர்கள் வெளியேறினர்.

என்னை மன்னிக்கப் போவதில்லை என்றும், என்னுடன், சோஷியலிஸ்ட் மாணவர்களையும் சேர்த்து வெளியேற்றத் தீர்மானித்து விட்டதாகவும், சாஸ்திரியார் (சீனிவாச சாஸ்திரி, துணை வேந்தர்) கூறினார்.

அன்றைய தினம், அவசரக் கூட்டத்தைச் சாஸ்திரியார் கூட்டினார். என்னைத் தண்டிக்கவே கூட்டியதாக தெரிகிறது. கமிட்டியில் ஒன்பது மாணவர்கள் அங்கத்தினராக இருந்தனர். சோஷியலிஸமென்றாலே வேப்பங்காயாகக் கசக்கும் ஒருவர் தலைவர். இரண்டு காரியதரிசிகள் அந்த ஒன்பது மாணவர்களில் இருந்தனர்.

சாஸ்திரியார் என்னைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது, 'அநியாயமாகப் பாலதண்டாயுதத்தைச் சர்வகலாசாலையிலிருந்து நீக்கினால் எங்கள் பதவியை ராஜினாமா செய்யத் தயார்! என்று ஆறு மாணவர்கள் கூறவே, சாஸ்திரியார் என் விஷயத்தை அப்பொழுது நழுவவிட்டு விட்டுப் பிறகு என்னுடன் சமாதான பேச்சு நடத்தினார். இறுதியாக, சமரசமும் ஏற்பட்டது.

நவம்பர் 23இல் மேற்படி காரியதரிசிகளில் ஒருவன் சோசலிஸ்ட் மாணவர்களுக்குத் தலைவனாக இருந்த என்னைக் கத்தியால் குத்தப்போகிறேன் என்று தேடித் திரிந்ததாக மாணவர்கள் சொன்னார்கள். இதனை வைஸ்சான்ஸ்சலரிடம் தெரிவிக்கும்படி மாணவர்கள் என்னை அனுப்பினார்கள். போகும் வழியில் அந்த மாணவனைச் சந்திக்கவே இருவருக்கும் குஸ்தி நடந்தது. வைஸ்சான்ஸ்லரைக் காணமுடியாமல் ஹாஸ்டலுக்குத் திரும்பி விட்டேன். பின் பியூன்கள் வைஸ்சான்ஸ்சலர் என்னைக் கூப்பிடுவதாகத் தெரிவிக்கவே அவரைப் பார்த்து நடந்த விபரத்தைக் கூறினேன்.

உடனே, என்னைச் சர்வகலாசாலையை விட்டுப் போய்விட வேண்டுமென்றும், ஏதோ, என் உயிர் ஆபத்திலிருப்பதாகப் பாசாங்கு காட்டி, காரில் ராமசாமி செட்டியார் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போய், பிறகு இரவு சென்னைக்கு ரயிலில் போகத் தெரிவித்தார்.

சென்னை வந்தவன், சென்னை மாணவர் சங்கத்தாரிடம் தகவலைத் தெரிவித்தேன். உடனே என்னை, சர்வகலாசாலைக்குப் போகச் சொன்னார்கள்.

நான் ஹாஸ்டலுக்குத் திரும்பியபோது, என்னுடைய சோஷியலிஸ்ட் தோழர்களான கே. சுப்பிரமணியம், கே. கணேசன், ஆர். சாம்பசிவம், எம்.ஏ. அய்யாசாமி, எம்.என். விவேகானந்தம் ஆகிய ஐந்து மாணவர்களையும் சஸ்பென்ட் செய்திருப்பதாகவும், நான் சர்வகலா சாலையிலிருந்து நீக்கப்பட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

இதனை ஆட்சேபித்து, எங்கள் சர்வகலாசாலையில் உள்ள இரண்டு பிரிவுகளும் (சோஷியலிஸ்ட் குரூப் ஒன்று, சோஷியலிஸ்ட் அல்லாத குரூப் மற்றொன்று) ஒன்று சேர்ந்து, 800 மாணவர்களும் ஸ்டிரைக் செய்தனர். . . . .

மாலை நான் பால்கனியில் நின்று கொண்டிருந்தபோது இரண்டு கான்ஸ்டேபிளோடு வந்த இன்ஸ்பெக்டர் என்னை 'அரஸ்ட்' செய்து கொண்டு போக வந்திருப்பதாகக் கூறினார்கள். அவருடன் செல்ல சித்தமானேன். எந்தவிதமான குற்றத்தையும் செய்யாத என்னைக்

கைது செய்ததைக் கண்டு, மாணவர் ஆத்திரங்கொண்டனர். ஆயினும் சாத்வீகத்திலிருந்து, இம்மிகூட பிசகவில்லை. எனக்கு மாலை சூட்டி, என்னுடன் சுமார் 600 மாணவர்கள் போலீஸ் ஸ்டேஷன் வரை வந்தனர். சிதம்பரத்தில் அண்ணாமலை சர்வகலாசாலை, வைஸ்சான்சலரின் அடக்குமுறையை எதிர்த்துக் கோஷமிட்டுக் கொண்டே, வந்தனர்"

மாணவர் போராட்டம் பற்றிய இந்த விவரிப்புகளைப் போலவே, விவசாயிகளின் கடன்பிரச்சினையும், தொழிலாளர் போராட்டங்களின் தொடக்க நிலைமைகளும், ஜனசக்தியில் விளக்கப் பட்டிருக்கின்றன.

இந்தப் போராட்ட அலை, இந்தியா முழுமையையும் கொந்தளிக்க வைத்தது. குறிப்பாக முக்கிய நகரங்களில், இந்தப் பாதிப்பு பெரிதாக வெடித்தது. அரசியலிலும், தொழில் வளர்ச்சியிலும், இந்தியாவில் முக்கியத்துவம் பெற்ற முதல்வரிசையில், சென்னை நகரமும் ஒன்று. தொழிலாளர்கள் மாணவர் மத்தியில் மிகுந்த செல்வாக்குள்ள கட்சியாகக் கம்யூனிஸ்ட் கட்சி, இங்கு விளங்கியது. கப்பற்படை எழுச்சியின் தாக்கங்கள் சென்னை நகரத்தையும் பற்றிக் கொண்டன. 1945 பிப்ரவரி 21, 22, 23 ஆகிய மூன்று நாட்களும் பம்பாய் கடற்படை எழுச்சி உச்சத்தை அடைகிறது. பிப்ரவரி 25ஆம் தேதி கண்டன எதிர்ப்பலைகள் சென்னையில் எழுகின்றன. இதனை ஜனசக்தி கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது.

"பம்பாயில் ஜாலியன்வாலாபாக் படுகொலையை விட மிக பயங்கரமான படுகொலை நடந்திருக்கிறது.

இக்கோரக் கொலையை கண்டிப்பதற்கே அன்று சென்னை தொழிலாளர் வர்க்கம் கொதிப்படைந்த உள்ளத்துடன் ஆர்த்தெழுந்து நின்றது. 24ஆம் தேதி மாலை, கம்யூனிஸ்டு கட்சி, மாகாணத் தொழிற்சங்கக் காங்கிரஸ், டிராம்வே, பிரஸ், கார்ப்பரேஷன், ஆட்டோ மொபைல், ரயில்வே முதலிய தொழிலாளர் சங்கங்கள், மாணவர் சங்கம் (M.S.O.) ஆகியவை கூடி ஒரு அறிக்கையை வெளியிட்டன. பம்பாய் படுகொலையைக் கண்டித்து வேலை நிறுத்தம் செய்யும்படி தொழிலாளி வர்க்கத்தை அழைத்தன.

பொது வேலைநிறுத்தம்

25ம் தேதி காலையில் டிராம் ஓடவில்லை. ஓட்டி வந்த பஸ்களை, பஸ் தொழிலாளர்கள் திரும்ப கொண்டு போய் ஷெட்டில் விட்டு விட்டனர். கார்ப்பரேஷன் தொழிலாளர் வேலை செய்யக் கொண்டு வந்த கூடைகளையும், கடப்பாறைகளையும் தொடவில்லை.

எழும்பூர் ரயில்வே லோகோ ஷெட் தொழிலாளர் வெளியேறினர். பிரஸ் தொழிலாளர் ஒவ்வொரு பிரஸிலிருந்தும் கிளம்பிவிட்டனர். இவ்விதம் காலை பத்து மணிக்குள் அநேகமாக பெரும்பாலான தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்துவிட்டனர். சிம்ஸன், அடிஸன்ஸ் பென்ஸர்ஸ் முதலிய ஓர்க்ஷாப் தொழிலாளரும், கன்னிமரா ஹோட்டல் தொழிலாளரும், சுருட்டு பீடி தொழிலாளரும், எஞ்னியரிங் தொழிலாளரும்-எல்லோரும் வேலை நிறுத்தம் செய்து ஊர்வலங்களாகக் கிளம்பினர். தொழிலாளி வர்க்கத்தின் கட்டுப்பாடான இக்கண்டனத்தைக் கண்ட வியாபாரிகளும் குமாஸ்தாக்களும் ஹர்த்தாலில் பங்கெடுத்துக் கொண்டனர். பார்க் டவுன், ஜார்ஜ் டவுன் வட்டாரங்களில் காலை 9 மணிக்கே எல்லா கடைகளும் அடைக்கப்பட்டு விட்டன. ஹிந்துவென்றும் முஸ்லீம் என்றும் ஜனங்கள் வித்தியாசம் பாராட்ட வில்லை.

எம்.எஸ்.எம். ரயில்வே பெரம்பூர் ஓர்க்ஷாப் தொழிலாளரும், பார்க் டவுன் ஆபீஸிலுள்ள குமாஸ்தாக்களும் வேலையை விட்டு வெளியே வந்துவிட்டனர்.

கான்ஸ்டபிள்களுக்குப் பயம்

சுமார் 3 லட்சம் பேருக்குமேல் காலை 9 மணிக்கு வீதிகளில் நின்றனர். எவ்விதமான கலவரமோ, குழப்பமோ கல்வீச்சோ நிகழவில்லை. சிறுசிறு ஊர்வலங்களாகப் புறப்பட்டுத் தொழிலாளர் சென்றனர். ஒரு கூட்டத்தை நடத்தி விட்டு அமைதியாகக் கலைந்தனர். கட்டுப்பாடு என்றால் அவர்களிடம் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஆரம்பத்தில் அவ்வூர்வலங்களை வெகு சுலபமாகக் கலைத்துவிடலாம் என்று போலீஸ் எண்ணிற்று. பாரீஸ்கார்னருக்கு வந்த டிராம்வே தொழிலாளர் ஊர்வலத்தைக் கலைந்துவிடும்படி உத்தரவிட்டது. ஆனால் நேரம் போகப் போக, ஏராளமான தொழிலாளர்களும், பொது மக்களும் கட்சி வித்தியாசமின்றி ஒன்று திரளுவதைக் கண்டு கான்ஸ்டபிள்கள் கலங்கி விட்டனர். ஜனங்களைத் தொடுவதற்குப் பயப்பட்டார்கள். சைனாபஜாரில் டெலிபோன் எக்சேஞ்சுக்கு முன் நின்று கொண்டு, கோஷமிட்டுக் கொண்டிருந்த ஒரு பெரிய கூட்டத்தைக் கலைக்க வந்த கான்ஸ்டபிள்கள் திரும்பிச்சென்றனர். "நமக்கு ஏண்டா இந்தத் தண்டனை?" என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டனர்.

ரிசர்வ் போலீஸ் ஆத்திரமூட்டிற்று

ஆனால் ரிசர்வ் போலீஸை லாரிகளில் கொண்டு வந்த போலீஸ் அதிகாரிகள் ஜனங்களுக்கு ஆத்திரமூட்டவும், தடியடி பிரயோகம்

செய்யவும் பலமுறை முயற்சித்தனர். கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தலைமை தாங்கி நடத்திய நம் தோழர்கள் அம் முயற்சிகைள் முறியடித்தனர். நம் தோழர்கள் முன்னணியில் இல்லாத சில ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் ஆத்திர மூட்டும் போலீஸ் முயற்சி வெற்றி கண்டது.

மௌண்ட் ரோடு தொழிலாளர் மாபெரும் ஊர்வலமாகப் புறப்பட்டுக் காலையில் பீப்பிள்ஸ் பார்க்கிற்கு வந்து ஒரு பெரிய கூட்டத்தை நடத்தினார்கள். அங்கிருந்து அந்தக் கூட்டம் தோழர்கள் ஜீவானந்தம், ஏ.எஸ்.கே. அய்யங்கார் ஆகியவர்கள் தலைமையில் புறப்பட்டுப் பெரம்பூரை நோக்கிச் சென்றது. போகப் போக இன்னும் ஏராளமான ஜனங்கள் சேர்ந்து கொண்டனர். மிகப் பெரிய ஊர்வலமாக இருந்தது. பி அண்டு ஸி மில்லுக்கு அருகில் சென்றதும் அதைப் போலீஸ் ரிஸர்வ் படைதடுத்து நிறுத்திவிட்டது. ஆறு லாரிகளில் ரிஸர்வ் போலீஸ் கொண்டு வரப்பட்டிருந்தது. கெட்டித் துப்பாக்கிகளைத் தூக்கிப் பிடித்து அவர்கள் ரோட்டை அடைத்துக் கொண்டு குறுக்கே நின்றார்கள். அந்த வழியாக ஊர்வலம் போகக்கூடாது என்றனர். சட்ட விரோதமான ஊர்வலம் என்றனர். இது அனாவசியமாக ஊர்வலத்தினருக்குக் கோபமூட்டும் காரியம், முன்னணியில் நின்ற தம் தோழர்கள், "கண்டிப்பாய் அந்த வழியாகப் போகத்தான் வேண்டும்'' என்றனர். துப்பாக்கியைத் தூக்கிப் பிடிக்கும்படி போலீஸிற்குக் கமிஷனர் உத்தரவிட்டார். "இது என்ன பலப்பரீட்சையா? பார்ப்போம். முதலில் எங்களைச்சுடு" என்றார் அய்யங்கார். ஜனங்கள் அசையாது நின்றார்கள். சிறிது நேரம் போலீஸ் கமிஷனர் வெறிக்கப் பார்த்தார். பிறகு ரிஸர்வை வாபஸ் வாங்கிக் கொண்டார். ஜனங்கள் ஜெயித்தார்கள்.

பெரம்பூரில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. ஜீவானந்தம், ஏ.எஸ்.கே. அய்யங்கார் முதலியோர் பேசினர்.

மத்தியானத்திற்குப் பிறகு பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் தொழிலாளரும்வேலை நிறுத்தம் செய்துவிட்டனர்."

சமரன்

1953 **வீ. அரசு**

அரசியல் அமைப்புகள் தங்களது அமைப்புச் செயல்பாடுகளில் ஒன்றாக அச்சு ஊடகத்தைப் பயன்படுத்துவது மரபு. ஒவ்வொரு அமைப்பும் தமக்கென இதழ்களை நடத்துவதைக் காணமுடியும். அரசியல் அமைப்புகள் மற்றும் சமூக இயக்கங்கள் நடத்தும் இதழ்களை அடிப்படையாகக் கொண்டே அரசியல் இதழியல் வரலாற்றைக் கட்டமைக்கலாம். தமிழில் அரசியல் இதழியல், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கி செயல்பட்டு வருவதைக் காணலாம். பாரதி (1906), சுப்பிரமணிய சிவா (1913), திரு.வி.க. (1917), ஈ.வெ.ரா. (1925), பா. ஜீவானந்தம் (1937) என்று இதழ்களை நடத்திய பெரியோர்களை அரசியல் இதழியலில் பட்டியலிட இயலும்.

இடதுசாரி இயக்கம் சார்ந்த அரசியல் இதழியலின் முன்னோடியாக ஜீவா அவர்களையே குறிப்பிட முடியும். 1937இல் ஜனசக்தி இதழைத் தொடங்கியதில் இருந்து இடதுசாரி இயக்கம் சார்ந்த அரசியல் இதழியல் வரலாறு தொடங்குகிறது. இவ்வரலாற்றில் இடம்பெறும் தகுதியை இஸ்மத் பாஷா நடத்திய 'சமரன்' இதழ் பெறுகிறது. 1953-54ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சமரன் இதழ், தமிழக அரசியல் இதழியல் வரலாற்றில் பெறும் இடத்தைப் புரிந்து கொள்வது அவசியம்.

சமரன் என்ற பெயரில் 1950களின் இறுதியில் விஜய பாஸ்கரன் அவர்களும் 1980களில் தமிழக மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்டுக் கட்சியும் நடத்திய இதழ்கள், இஸ்மத் பாஷாவின் 'சமரன்' இதழின் பெயர் தொடர்ச்சி மட்டுமே. 'மக்களுக்காகச் சமர் புரியும் இதழ்' என்ற தலைப்பு வாசகத்துடன் சமரன் இதழை நடத்திய இஸ்மத் பாஷா அவர்கள் குறித்தும் இங்குப் பதிவு செய்வது அவசியம்.

இஸ்மத் பாஷா 1942 - 1952 காலங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். 1920களில் படிப்படியாக உருப்பெறத் தொடங்கிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, 1942இல் தான் 'கம்யூனிஸ்ட் கட்சி' என்ற பெயரில்

செயல்பட அனுமதிக்கப்பட்டது. 1937 முதல் 'காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சி' என்ற அமைப்பின் இதழாக 'ஜனசக்தி' நடத்தப் பெற்றது. 1943 முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் இதழாக 'ஜனசக்தி' வெளிவரத் தொடங்கியது. 'ஜனசக்தி'யின் அன்றைய ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்தவர் இஸ்மத் பாஷா. இவர் ஜனசக்தியில் எழுதிய கட்டுரைகளின் பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. (காண்க: பி.இ. இரண்டு)

இஸ்மத் பாஷா அவர்கள், வளர்ச்சி நிலையில் செயல்படக் கம்யூனிஸ்ட் கட்சியின், தீவிரச் செயல்பாட்டாளராக இருந்தார். கட்சி 1943–48 காலங்களில், தமிழில் மிகுதியாக வெளியீடுகளைக் கொண்() வந்தது. சிறுபிரசுரங்கள், சிறு நூல்கள், புத்தகங்கள், மொழி பெயர்ப்புகள் என்று அச்சு ஊடகத்தில் சிறப்பாகவே செயல்பட்டது கம்யூனிஸ்ட் கட்சி. சோவியத் ஒன்றியம், சீனக் குடியரசு ஆகியவை உருப்பெற்றிருந்த சூழலில், இந்தியாவில் இடதுசாரி இயக்கம் வளர்முகத்தில் இருந்தது. அறிவாளிகள் பலர் இடதுசாரி இயக்கச் செயல்பாடுகளுக்கு ஆதரவு தந்தனர். சோவியத் நண்பர்கள் கழகம், இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இந்திய மக்கள் நாடக மன்றம் ஆகியவை இடதுசாரி கண்ணோட்டத்தில் செயல்பட்டன. இவற்றின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முக்கியப் பங்காற்றியது. இந்தச் சூழலில்தான் இஸ்மத் பாஷா கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்டார். இவர் எழுதிய சிறுநூல்கள், மொழிபெயர்த்தவை ஆகியவை மிகவும் குறிப்பிடத்தக்கவை. இவரது மொழிபெயர்ப்பில் முதன்முதல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு தமிழில் வெளிவந்தது. இவ்வகையில் இவர் எழுதியவை மிகுதி. (காண்க: பி.இ. மூன்று)

கம்யூனிஸ்ட் கட்சியின் நேரடிச் செயல்பாடுகளிலிருந்து, 1953 முதல் இஸ்மத் பாஷா வெளியேறியதைக் காண முடிகிறது. இதற்கான காரணங்களை அறிய வேண்டும். 1953–54இல் சமரன் இதழை இஸ்மத் பாஷா நடத்தினார். 1.5.1953இல் சமரன் இதழ் தொடங்கப் பெற்றதை அறிய முடிகிறது. முதலில் மாத இரு முறை இதழாக ஓராண்டு வந்துள்ளது. பின்னர் வார இதழாகவும் வெளிவந்திருப்பதைக் காண முடிகிறது. 1.5.53 முதல் 29.8.54 வரை இதழ் வெளிவந்திருப்பதை அறியமுடிகிறது. தொடர்ந்தும் இதழ் வந்திருக்கலாம். ஆனால், அது பற்றிய தகவலை அறிய இயலவில்லை. மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் கிடைத்த எட்டு இதழ்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வறிமுகக் கட்டுரை அமைகிறது. குறைந்த இதழ்களே கிடைத்திருந்தாலும், இஸ்மத் பாஷா பற்றியும் சமரன் இதழின் போக்கு பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது.

அரசியல் இதழியல் என்பது முழுமையான சார்போடு செயல்படும் ஊடகச் செயல்பாடு ஆகும். சமரன், மார்க்சியக் கோட்பாடு சார்ந்து செயல்பட்ட இதழாகும். அன்றைய காலச் சூழலில் தமிழகத்தின் அரசியல் செயல்பாடுகள் மும்முறைகளில் செயல்பட்டன. இடதுசாரி இயக்கம், காங்கிரஸ் கட்சி, திராவிட இயக்கம் என்பவை அவை. இந்தியாவிற்கு அரசியல் அதிகாரம் மற்றும் ஆட்சி அதிகாரம் கிடைத்திருந்த சூழல் அது. அச்சூழலில் பல்வேறு சாதிய மற்றும் வட்டார அமைப்புகளும் உருப்பெற்றிருந்தன. மக்களிடத்தில் இடதுசாரி இயக்கங்களுக்குச் செல்வாக்கு இருந்ததைக் காணமுடிகிறது. இந்தியாவில் முதல் பொதுத்தேர்தலில் (1952), சென்னை மாகாணத்தில் இடதுசாரி இயக்கம் 13 சட்டமன்ற தொகுதிகளைப் பெற்றிருந்தது. இராமசாமி படையாட்சி கட்சியுடன் இடதுசாரி இயக்கம் தேர்தலில் இணைந்து செயல்பட்டது. இடதுசாரி இயக்கத்தின் செயல்பாட்டைக் கண்டு பயந்துபோன ஆளும் வர்க்கம் இராஜாஜி துணையோடு இராமசாமி படையாச்சி அவர்களின் கட்சியை, இடதுசாரி இயக்கங்களுக்கு எதிராகச் செயல்பட வழி கண்டது. இதனால் சென்னை மாகாணத்தில் இடதுசாரி அமைப்புகள் ஆட்சி அதிகாரத்தைக் கைக்கொள்ளும் வாய்ப்பை இழந்தன. இந்தச் சூழலில்தான், இஸ்மத் பாஷா சமரன் இதழை நடத்திக் கொண்டிருந்தார். இந்த அரசியல் விளையாட்டில், திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பாக சி.என். அண்ணாதுரை, இராஜாஜி, பெரியார் ஆகியோர் செயல்பாடுகள் குறித்த விமரிசனக் கண்ணோட்டத்தோடுதான் சமரன் இதழ் வெளிவந்தது. திரு. சி.என்.அண்ணாதுரை அவர்கள் குறித்த கடுமையான விமர்சனங்களை சமரன் முன்வைத்தது. திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகப் பண்பாட்டுத் தளத்தில் சீரழிவுகளைச் செய்வதாக இஸ்மத் பாஷா கருதினார். எனவே அவ்வியக்கம் தொடர்பான தலையங்கம், தொடர் கட்டுரைகள், அட்டைப்பட சித்திர ஓவியம் ஆகியவற்றைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். நேருவின் செயல்பாடுகளைச் சமரன் ஆதரித்து வந்திருப்பதைக் காணமுடிகிறது. நேருவின் செயல்பாடுகளால், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் போக்குகள் குறித்து 15.10.1953 சமரன் தலையங்கம் பின்வருமாறு.

தமிழக அரசியல் வானில் நேரு!

"தமிழ்நாட்டு அரசியல் சக்திகளின் இயங்கு திசையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. மாறுதலைத் தெளிவாகப்

> புரிந்து கொள்வது தொழிலாளி வர்க்கத்தின் கடமை. . .
> . . . .
> . . . .
> . . . . நேருவின் தலையீடு கோஷ்டிகளின் இயங்கு திசையில் மாறுதலை உண்டாக்கியது. அக்கோஷ்டிகள் வகுப்பு துவேஷ திசையில் பகிரங்கமாக இயங்கி மோதிக் கொள்ளக்கூடிய நிலையில், நேரு குறுக்கிட்டு திசையை மாற்றிவிட்டிருக்கிறார்.
>
> நேரு இதை எப்படி செய்தார்?
>
> வகுப்பு துவேஷத்திற்கு அதிக இடம் கொடுக்கப்பட்டு விட்டதாகக் குறிவைத்து இரண்டு கோஷ்டிகளையும் தாக்கினார். அவருடைய பேச்சுகள் (1) பிராமணத்தொழில், சூத்திரத் தொழில் என்பது போன்று வேற்றுமைகளைப் பகிரங்கமாகப் பேசி தி.க; தி.மு.க.வுக்கு ஜனங்களைப் பிளக்க வாய்ப்புக்களை மேன்மேலும் அதிகமாக உண்டாக்கிக் கொடுத்த ராஜாஜிக்கு எதிரானவை; (2) தேவ அசுர பதப் பிரயோகங்களைச் செய்து ராஜாஜி கோஷ்டியை வகுப்புவாத அடிப்படையில் தாக்கிய காமராஜ் பத்திரிகைகளுக்கு எதிரானவை; (3) பொதுவாக வகுப்பு துவேஷத்தை மட்டும் அரசியல் கருவியாகக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற கனவு கண்ட கட்சிகளுக்கும் அக்கட்சிகளின் ஜனவிரோத போக்குகளை மூடி மறைத்து அரசியலில் கூட்டாளிகளாக ஆக்கிக்கொள்ள கனவு கண்ட சக்திகளுக்கும் எதிரானவை . . . .

சமரன் இதழ் தலையங்கம், அன்றைய அரசியல் போக்குகளில், தான்கொண்டிருந்த அணுகுமுறையைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. இவ்வகையில் மார்க்சியக் கருத்துநிலையை முன்னெடுத்து பிற கட்சிகள் அனைத்தையும் விமரிசனம் செய்யும் அணுகுமுறை சமரனிடம் இருப்பதைக் காணலாம். இடதுசாரி இயக்கம், தமிழக அரசியலில் மொழி, இனம் சார்ந்த அரசியலை முன்னெடுத்த இயக்கங்களை முதலாளித்துவ, மதவாத இயக்கங்களோடு இணைத்துப் பார்த்தது. இவ்வகைப் பார்வையை, இடதுசாரி இயக்கங்கள் மூன்றாம் உலக நாடுகளில் பரவலாக நடைமுறைப் படுத்தியதைக் காணலாம். இப்பார்வை தவறானது என்பதைப் பிந்தைய கால வரலாறுகள் வெளிப்படுத்தியுள்ளன. அன்றைய இடதுசாரி இயக்கத்தின்

அணுகுமுறை குறித்து அறிவதற்கான அரிய ஆவணமாக இவ்வகையில் சமரன் தலையங்கம் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

தமிழக அரசியல் நிகழ்வுகளைத் தமது நிலைபாட்டிலிருந்து சமரன் வெளிப்படுத்தியதைப் போல், தமிழகத்தில் நிகழ்ந்த முக்கிய அரசியல் நிகழ்வுகள் குறித்தும் சமரன் அக்கறையோடு பதிவு செய்திருப்பதைக் காண முடிகிறது. இராஜாஜியின் 'குலக் கல்வித் திட்டம்', தமிழக அரசியலில் 1954இல் பெரிதும் விவாதிக்கப்பட்ட ஒன்று. அந்நிகழ்வு தொடர்பான சமரன் தலையங்கம் (23.5.1954) பின்வருமாறு அமைகிறது.

மகிழ்கிறோம் . ஆனால் . . . . ?

ராஜாஜியின் புதிய கல்வித்திட்டத்தை வருகிற பள்ளிக் கல்வி ஆண்டில் அமுல் நடத்துவதில்லை என்று கல்வி மந்திரி கனம் சுப்பிரமணியம் 18.5.54இல் சட்டசபையில் அறிவித்தார். இப்புதியக் கல்வித் திட்டம் உருவாவதற்கு முன்பு அமுலிலிருந்து பழைய ஏற்பாடுகளே வருகிற ஆண்டில் அமுல் நடத்தப்படும் என்றார். அதே சமயம், ராஜாஜியின் கல்வித் திட்டத்தையும் பழைய கல்வித் திட்டத்தையும் நாட்டின் தேவைகளையும் சர்க்காரின் நிதிநிலைமைகளையும் புதிதாகப் பரிசீலிக்கப் புதியதோர் திட்டம் தயாரிக்க ஒரு கமிட்டியை காமராஜரின் சர்க்கார் அமைப்பதாகவும் அவருடைய பேச்சிலிருந்து தெரிய வருகிறது.

"வர்ணாசிரம கல்வித் திட்டம்" ஒழிந்துவிட்டதாக வகுப்பு துவேஷப் பார்வையுடையவர்கள் வெற்றி முரசு கொட்டுகின்றனர். இயந்திரத் தொழில் வளர்ச்சிக்குக் காலத்திற்கு ஒவ்வாத கிராமத்திற்கும் நகரத்திற்கும் போட்டியை வளர்க்கக் கூடிய, இளைஞர்களை நவயுகத்திற்கு ஏற்ற தொழிலாளர்களாக ஆக்காத, கல்வித்திட்டம் ஒழிந்தது என்று, வகுப்பு துவேஷபார்வையற்ற ஜனநாயகவாதிகளாகிய நாம் சந்தோஷப்படுகிறோம்.

அதே சமயத்தில், காங்கிரஸ் கட்சியின் உள் விவகாரங்களையும், லட்சியத்தையும் அறிந்தவர்கள், கனம் கல்வி மந்திரியாருடைய அறிவிப்பைக் கேட்டு எல்லை மீறி சந்தோஷப்பட்டு துள்ளிக் குதித்துவிடக் கூடாதுதென்று மக்களை எச்சரிக்கிறார்கள்.

> கனம் கல்வி மந்திரியாருடைய அறிவிப்பு, ராஜாஜி கோஷ்டியின் பரிபூரண தோல்வியினால் வரவில்லை; காமராஜ் கோஷ்டியின் பூரண வெற்றியினாலும் வரவில்லை. ராஜாஜி கோஷ்டிக்கும் காமராஜ் கோஷ்டிக்குமிடையே ஏற்பட்டுள்ள சமரஸத்தினால் வந்திருக்கிறது.
>
> சமரஸம், கல்வித் திட்டத்தின் சில அம்சங்களின் பேரில் ஏற்பட்டிருக்கிறது . . . . அந்த சமரஸத் திட்டம் உருவாகி வெளியிடப்படும் வரையில், ராஜாஜியின் கல்வித் திட்டம் தற்காலிகமாக வாபஸ் வாங்கப்பட்டிருக்கிற தென்பதையே கனம் கல்வி மந்திரி அவர்களின் அறிவிப்பு உணர்த்துகின்றது. . . .

தமிழக அரசியல் சூழலில், இடதுசாரிக் கண்ணோட்டம் உடையவர்கள், நிகழ்வுகளை எவ்விதம் தனித்தும் கூர்ந்தும் அணுகினார்கள் என்பதைப் புரிந்து கொள்ள சமரனின் இத்தலையங்கம் உதவக்கூடும்.

இவ்வகையில் சமரன் தலையங்கங்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிட்டால், அது அக்காலத்திய தமிழக அரசியல் நிகழ்வுகளின் சிறந்த ஆவணமாக அமையும். இலங்கையில் நடைபெறும் சிக்கல்கள் குறித்து அப்போதே (15.11.53) சமரன் தலையங்கம் எழுதியுள்ளது. 'இலங்கையில் வாழும் ஒரு தமிழன் கண்ட பயங்கர கனவு' என்ற அத்தலையங்கம் இன மோதல்கள் உருவாவதற்கான அடிப்படைகள் உருப்பெற்றுவிட்டதாக எச்சரிக்கை செய்துள்ளது. அரசியல் இதழியலில் தலையங்கம் முதன்மையானது. அவ்விதழின் அரசியல் கண்ணோட்டம் மற்றும் ஈடுபாட்டைத் தலையங்கமே தெளிவுபடுத்தும். அவ்வகையில் இஸ்மத் பாஷா அவர்களின் 'சமரன்' தலையங்கங்கள் மிகவும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

அரசியல் இதழியலில், தலையங்கங்களைப் போல அவ்விதழில் கலந்துரை வடிவில் விவாதிக்கப்படும் செய்திகளும் அமையும். சமரன் 'கேள்வி பதில்' என்ற பகுதிக்கு முதன்மை கொடுத்திருப்பதை அறியமுடிகிறது. இதில் வெளிவந்த கேள்வி பதில்களைத் தொகுத்துத் தனி நூலாகவே (சமரன் அநுபந்தம் - 15.10.53) வெளியிடுவதாக இதழில் அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. சமரனில் வெளிவந்துள்ள பின்வரும் கேள்வி பதில், இஸ்மத்பாஷா கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து 1953களில் வெளியேறியிருப்பதைக் காட்டுகிறது. அப்பகுதி (15.11.53):

> கேள்வி : நான் உன்னை அசல் கம்யூனிஸ்ட் கைக்கூலி என்கிறேன். என்ன பதில்?
>
> பதில் : நல்லவேளை! பூர்ஷ்வா ஏஜெண்ட் என்றோ, பெட்டி பூர்ஷ்வா என்றோ தொழிலாளியாகிய நீங்கள் சொல்லாமல் இருந்தீர்களே! கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிக்கை மார்க்ஸீய வேஷதாரி என்று என்னைச் சித்திரிக்கிறது.

திராவிட இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடுகளை விமரிசனம் செய்ததைப் போல், அவர்களின் பண்பாட்டு, கலை நிகழ்வுகள் குறித்தும் சமரன் விரிவாக விவாதித்திருப்பதைக் காணமுடிகிறது. திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவரான சி.என். அண்ணாதுரை அவர்களின் திரைப்படம் தொடர்பான பின்வரும் கேள்வி பதில் பகுதியைக் தமிழக கட்சி ஊடகம் சார்ந்த ஆய்வில் பெரிதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகக் கருதலாம் (15.11.53).

> கேள்வி : அண்ணாதுரை எழுதிய 'வேலைக்காரி' என்ற படத்தின் மூலம்தான் தமிழ்ப்பட உலகில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும் அதன் காரணமாக "சம்பூர்ண ராமாயணம்" போன்ற படங்கள் தூங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதாகவும் சில "தம்பிகள்" கூறுகிறார்களே, அது உண்மையா? (சண்முகசுந்தரம், பிரெஞ்சு ஆசிரியர் தெரு, காரைக்கால்)
>
> பதில் : பொய்! புராணப் படங்களைப் பார்த்து ஜனங்கள் சலிப்படைந்தபோதுதான், லாபத்தில் குறியாக இருந்த பட முதலாளிகள் புதுக்கருத்துகள் பேரில் கவனம் செலுத்தத் தொடங்கினர். ஜனங்கள் மென்மேலும் புராணப் படங்களை ரசித்து வந்திருந்தால், அண்ணாதுரையை பட முதலாளிகள் திரும்பிக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். ஜனங்கள் புராணப் படங்களை ரசிக்கவில்லை. முதலாளிகளுக்கு நஷ்டமேற்பட்டது. புதிய ஆசாமிகளைத் தேடினர்; அண்ணாதுரைக்குச் சான்ஸ் கிடைத்தது. அந்தச் சான்ஸை துஷ்பிரயோகம் செய்து வெறும் எத்தர்களின் கூட்டத்தை வளர்க்கக் கூடிய கதையை எழுதிக்கொடுத்தார். அதன் விளைவு, எத்தர்களின் கடபுடா பேச்சுக்கும் கதைகளுக்கும் மதிப்பு குறைந்து மீண்டும் ஒளவையார் போன்ற படங்களுக்கு மதிப்பு ஏற்பட ஆரம்பித்திருக்கிறது.

தலையங்கம், கேள்வி-பதில் போன்ற இதழியல் செயல்பாடுகளைப் போலவே, சமரன் தொடர்ந்து 'பத்தி'கள் (columns) பகுதிகளையும் கொண்டிருந்ததைக் காணமுடிகிறது. 'சர்வதேச அரங்கு', 'செய்தி விமரிசனம்', மொழிபெயர்ப்புகள், கவிதை, சிறுகதைகள், 'பகுத்தறிவுக் கேள்விகள்', தமிழரின் வான்நில அறிவு (தொடர்), 'செய்திக் கடிதம்' போன்ற பல பகுதிகளையும் கொண்டு சமரன் இதழ் வெளிவந்தது. மாலி அவர்களின் கருத்துப்படம் இதழின் அட்டையாக வெளியிடப்பட்டது. கருத்துப்படங்கள் பெரிதும் திராவிட இயக்க நிகழ்வுகளை விமரிசனம் செய்யும் போக்கில்தான் அமைந்திருந்தன. சமரன் இதழில் தொடர்ந்து சினிமா விமர்சனம் பகுதியும் வெளியிடப்பட்டது.

திரு. சி.என். அண்ணாதுரை அவர்களின் 'சொர்க்கவாசல்' என்ற திரைப்படத்திற்கு 'எத்தன் வைரி' என்ற புனை பெயரில் தொடர்ந்து இரண்டு இதழ்களில், மிக விரிவான விமரிசனம் எழுதப்பட்டுள்ளது. இவ்விமரிசனம் தொடர்பாகச் (6.6.1954) சமரன் இதழில் வெளியிடப்பட்டுள்ள பின்கண்ட பெட்டிச் செய்தி குறிப்பிடத்தக்கது.

> இராமாயணம், மகாபாரதம் முதலிய காவியக் கதைகளைத் தி.மு. கழக அறிஞர்கள் எவ்விதம் பகுத்து அறிந்திருக்கிறார்களோ, அதே முறையில் தி.மு. கழக தத்துவாசிரியர் அண்ணாதுரை எழுதியுள்ள 'சொர்க்க வாசல்' என்ற கதையை 'எத்தன் வைரி' பகுத்து அறிகிறார் இந்த விமர்சனத்தில்! . . பகுத்தறிவு வளர்க! மடமைப் பிரச்சாரகர்கள் ஒழிக

மேற்குறித்த பெட்டிச் செய்தியைத் தொடர்ந்து, அத்திரைப்படம் தொடர்பான விமரிசனத்தின் அடிப்படை கருத்துகளாகப் பின் கண்டவற்றை விமரிசகர் வெளிப்படுத்துகிறார். இவ்விமரிசனம் இஸ்மத் பாஷா அவர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

> பல பாட்டுக்களும் நடனங்களும் அடுக்குமொழி வசனங்களும் காதல் சல்லாபங்களும் காட்சி ஜோடனைகளும் மக்கள் மனதை மயக்குகின்றன. இவற்றின் மூலம் மக்கள் மனதில் அண்ணாதுரை பதியவைக்க முயற்சிக்கும் கருத்துக்கள் அவருடைய கழக உறுப்பினர்களிலேயே பலருக்கும் கசப்பாக இருக்கின்றன. இந்தக் கதையில் அண்ணாதுரை, தன்னை (1) பிராமண

எதிரி அல்ல; (2) மத எதிரி அல்ல; (3) நாஸ்திகன் அல்ல; (4) அரசாங்க எதிரி அல்ல என்று தெளிவாகக் கூறிக்கொள்கிறார். தன்னுடைய லட்சியம் சமரச சன்மார்க்கமே என்றும் காட்டிக் கொள்கிறார். . . .

இவ்விதம் திராவிட இயக்க விமரிசனமே அனைத்துத் தளங்களிலும் சமரனில் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இவ்வகை விமரிசனங்கள், அரசியல் இதழியல் துறைசார்ந்த செய்திகளாகவே உள்ளன. செய்தியைக் கடந்த ஆழமான தத்துவார்த்த விமரிசனமாக அமையவில்லை என்று கருதமுடியும். சமரனின் நோக்கமும் உடனடியான இதழியல் தேவை கருதிய செயல்பாடாகவே இருந்ததைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இவ்விதழின் மொழிநடை என்பது, திராவிட இயக்க மொழிநடையாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இவ்விதழில் காணப்படும் புனைபெயர்கள், திராவிட கருத்தியலை எதிர்கொண்டும் இருப்பதைக் காணமுடிகிறது. 'மெய் மொழியன்', 'புரலிட்டேரியன்', 'குத்துவீசி', 'சடபுடா', 'மார்க்ஸ் மாணவன்', 'சிலேடையார்', 'உழவர் ஊழியன்' ஆகியவை இவ்விதழில் உள்ள புனைபெயர்கள். இப்பெயர்கள் அனைத்திலும் இஸ்மத் பாஷா அவர்களே எழுதியிருக்கக்கூடும். மொழிநடையில் பெரிய மாற்றங்களைக் காணமுடியவில்லை. இதன்மூலம் ஒருவரே எழுதி இருக்கக்கூடும் என்பது தெளிவாகிறது. இவ்வகையில் தனிமனிதராக நின்று, 'சமரன்' இதழை இஸ்மத் பாஷா நடத்தியிருப்பார் என்று கருதத் தோன்றுகிறது.

சமரன் இதழின் மிக முக்கியமான பங்களிப்பாக ஜெயகாந்தன் சிறுகதைகளைச் சொல்லமுடியும். கிடைத்த சமரன் இதழ்களில் ஜெயகாந்தன் அவர்களின் ஐந்து சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. அவை 'சட்டம் வந்த நள்ளிரவில்', (23.5.54), 'மரண வாயிலில்' (30.5.54), 'சாந்தி சாகரம்' (13.6.54), 'எச்சரிக்கை' (20.6.54), 'லட்சியச் சிலுவை' (29.8.54) ஆகியவை. இக்கதைகளில் ஒன்று மட்டுமே, கவிதா பப்ளிகேஷன் (2001) தொகுத்து வெளியிட்டுள்ள ஜெயகாந்தன் அவர்களின் முழுத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளது. பிற கதைகள் தொகுக்கப்படவில்லை. ஜெயகாந்தன் கதைத்தொகுதி முதல் தொகுதியில் முதன்முதல் இடம்பெற்றிருக்கும் கதை சமரனில் வெளிவந்தது. சாந்தி சாகரம் (13.6.54) என்னும் பெயரில் சமரனில் வெளிவந்த கதை, தொகுப்பில் 'சாந்தி பூமி' என்று இடம்பெற்றுள்ளது. இயற்கையை அழிக்காமல், இயற்கைக்கு எதிராகச் செயல்படாமல்

வாழ்வதற்கு அறைகூவல் விடும் மனிதநேயக் கதை இது. இக்கதையைத் தவிர எஞ்சியுள்ள நான்கு கதைகள் குறித்துப் பதிவு செய்வது அவசியமாகப்படுகிறது.

'சட்டம் வந்த நள்ளிரவில்' (23.5.54) என்ற கதை, தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை குறியீடாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. ஏழை மக்கள், தமது வறுமையால் உடலை விற்று வாழ நேரிடும் கொடுமை குறித்த கதை இது. தன் மகளையே விலைமகளாக்கி வாழும் தாய்; இவ்வேழை மக்களைச் சுரண்டும் காவல்துறை; இம்மக்களிடம் வாடிக்கையாளர்களான மைனர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்குகிறது கதை. உடலை விற்று வாழும் சிறுமியின் சோக மொழியே கதையாக வடிவம் பெற்றுள்ளது. கதை இப்படி முடிகிறது. . . ." இந்த சமுதாயத்திலிருந்து கொண்டு, சன்மார்க்கச் சபைகளிலும் சட்டசபைகளிலும் கற்பைப் பற்றிக் கதைக்கும் மனிதர்களை என்னவென்று சொல்வது?".

'மரண வாயிலில்' (30.5.54) என்ற கதை, சென்னை நகரில் ஓடிக்கொண்டிருந்த டிராம் வண்டிகள் நிறுத்தப்பட்டபோது, அதில் பணிபுரிந்த அறுநூறு குடும்பங்களின் கதியைக் குறியீடாகச் சொல்லும் கதை. கமலா-சிவராமன் என்ற காதல் தம்பதியர். டிராம் வண்டியில் கண்டக்டர் பணி புரிந்து, அப்பணி இல்லாமல் வறுமையில் வாழும் குடும்பம். வறுமையால் அவர்களது ஒரு குழந்தையும் இறந்து போனது. வறுமைக்கு ஆட்பட்ட அக்குடும்பம் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வதாக அமைந்துள்ள கதை. ஜெயகாந்தனின் மொழிநடை வீரியம் இந்தக் கதையில் சிறப்பாகவே இடம்பெற்றுள்ளது. கடிதவடிவில் தொடங்கும் கதை, சமூகத்தைப் பார்த்து கேட்கும் கேள்வியோடு முடிகிறது. கதையின் சொற்கள் முழுமையாக உணர்வுத்தளத்தில் இயங்குகின்றன. பின்னர் சிறந்த படைப்பாளியாக ஜெயகாந்தன் உருப்பெற்றதற்கான மொழியை இக்கதையில் காணலாம். ஜெயகாந்தன் தொகுப்புகளில் அவசியம் இடம்பெறவேண்டிய கதை இது. கதையின் இறுதிப் பகுதிகளில் காணப்படும் வரிகள். . . .

> ". . . . . . .
>
> அதோ இரண்டு ஜீவன்கள் ஒன்றையொன்று தழுவி, உடலைத் தழுவி, உயிரைப் பிரிய சித்தமாகிவிட்டன! கீழ்வானத்தில்... சூரியன் இந்தக் கொடிய நிகழ்ச்சியைக்... கோரசமுதாயத்தை முகம் சிவக்கப் பார்க்கிறான்... அவர்களைத் திரும்பிச் செல்லும்படி, வாழ்க்கையை நடத்தும்படி கடலலைகள் சைகை காட்டுகின்றன. அவர்கள் திரும்பிப்போக வேண்டுமா?"

இக்கதையின் மூலம் சாதாரண மக்களிடம் ஜெயகாந்தன் கொண்டிருந்த பார்வையை அறியமுடிகிறது.

'எச்சரிக்கை' (26.6.54) என்ற கதை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தோழர்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. பிரித்தானியரால் காவல்துறையில் பயிற்சி அளிக்கப்பட்ட இந்தியக் காவலர் ஒருவரின் மனநிலையை ஆழமாகக் காட்சிப்படுத்துகிறது. இக்கதையும் தொகுப்பில் இடம்பெற வேண்டும். ஜெயகாந்தனின் 'லட்சியச் சிலுவை' (29.8.54) என்னும் கதை கவிஞர் தமிழொளியைச் சிற்றம்பலம் என்னும் பெயரில் வெளிப்படுத்தும் கதை. தமிழொளி வாழ்க்கை, சிறுகதையாக வடிவம் பெற்றுள்ளது. இக்கதையில் அமைந்துள்ள பின்கண்ட வரிகள், ஜெயகாந்தனின் அன்றைய நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ள உதவும்.

> "இதுதான் கவிஞர்களின் இலக்கிய
> கர்த்தாக்களின் கதை. . .
> பாரதியை யானையா கொன்றது! இல்லை... சத்தியமாக இல்லை!... புதுமைப்பித்தனுக்கு டி.பி.யா?...இல்லை! சிற்றம்பலத்திற்கு டாக்டர் சொன்னானே, வாயில் நுழையா ஆங்கிலப் பெயருடைய ஒரு நோய், அதுவா? அல்ல; அல்ல!
>
> எல்லோருக்கும் ஒரே வியாதிதான்... லட்சியத்தைச் சிலுவையாக்கி, அவர்களை அதில் அறையப்பட்ட 'கர்த்தனின் தேவதூதர்'களாக்கியது! அந்த வியாதி புரியாததல்ல! எல்லோருக்கும் புரியக்கூடிய, எல்லோரும் அநுபவிக்கக்கூடிய ஒரே வியாதி!
>
> அதுதான்! வறுமை; பட்டினி.
>
> தமிழொளி வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதிய இக்கதையில் பாரதி, புதுமைப்பித்தன் ஆகியோர்களையும் கொண்டுவருகிறார் ஜெயகாந்தன். சமரன் இதழின் முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாக, ஜெயகாந்தன் கதைகள் எழுதுவதற்கு வாய்ப்பு நல்கியதைக் கூறமுடியும். தமிழின் மிக முக்கியமான படைப்பாளியை உருவாக்கியதில் இவ்விதழ் பங்களிப்பு முதன்மையானது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரபல மேடைப்பாடகர் கோவை எம். இராமதாஸ் அவர்களின் பல பாடல்கள் சமரனில் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இவ்வகையில் செயல்பட்ட

'சமரன்' இதழ் தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில் பெறுமிடத்தைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ள இயலும். தமிழக அரசியல் இதழியல் வரலாற்றைக் கட்டமைக்கும் போது அதில் 'சமரன்' இதழ் தனித்த இடத்தைப் பெறுகிறது.

- 1942-52 கால இடைவெளிகளில், கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றிய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, சமரன் இதழை இடதுசாரி அரசியல் இதழாக இஸ்மத் பாஷா அவர்கள் நடத்தியுள்ளார். அமைப்பிலிருந்து வெளியே சென்ற போதும், தான் நம்பிய கருத்தியலை வளர்த்து முன்னெடுப்பதற்கான பணியில் தொடர்ந்து செயல்பட்டுள்ளார். அந்த வகையில், இடதுசாரி இயக்கக் கருத்துநிலை சார்ந்த அரசியலை முன்னெடுத்துள்ளார்.
- பிரித்தானியர்களிடமிருந்து அரசியல் அதிகாரத்தைப் பெற்றவர்கள், அதனை நடைமுறைப்படுத்துவதில் குழப்பம் எய்தினர். இக்காலங்களில், இடதுசாரி இயக்கச் செயல்பாட்டின் மூலம் நாட்டின் வளத்தை உருவாக்க முடியும் என்னும் கருத்தை இடதுசாரி இதழ்கள் வெளிப்படுத்தின. இந்த இதழ்களில் 'சமரன்' இதழும் குறிப்பிடத்தக்க ஒன்று.
- அரசியல்சார் இதழாக வெளிவந்தாலும் ஜெயகாந்தன் போன்ற படைப்பாளிகள் உருப்பெறுவதற்குச் சமரன் இடமளித்திருப்பதைக் காண முடிகிறது.

பின்னிணைப்பு - I

வாழ்க்கைக் குறிப்புகள்

கும்பகோணத்தில் பிறந்தவர் தோழர் இஸ்மத்பாஷா அவர்கள். 1943இல் கம்யூனிஸ்ட் கட்சி மீது இருந்த தடை நீக்கப்பட்டபோது அவ்வியக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்டவர்.

1946இல் வெளிவந்த ஜனசக்தி ஆசிரியர் குழுவில் இடம்பெற்றிருந்தார். ஜனசக்தியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். (அவை கிடைத்த வரை இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.)

1948 கம்யூனிஸ்ட் கட்சி இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். கட்சியோடு ஏற்பட்ட கருத்துமுரணால், கட்சியிலிருந்து பிரிந்துசென்றார்.

1950இல் கும்பகோணத்தில் நகராட்சி மன்ற உறுப்பினராகச் செயல்பட்டுள்ளார்.

1953-54இல் 'சமரன்' இதழை நடத்தியுள்ளார்.

பின்னிணைப்பு - II

கட்டுரை

1943-48 காலங்களில் தோழர் இஸ்மத்பாஷா ஜனசக்தியில் எழுதிய கட்டுரைகள். முழுமையான பட்டியல் அன்று; கிடைத்தவரை தொகுக்கப்பட்டுள்ளது.

1.12.43

'இந்திய வீரரின் மரணம்' - இக்கட்டுரை சீனாவிற்குச் சென்று, அங்கிருந்த செஞ்சேனையில், மருத்துவராகப் பணிபுரிந்த 'துவாரநாத் கோட்னிஸ்' பற்றியது.

2.2.44

'இந்திய அரங்கத்தில் முஸ்லீம்லீக் சரித்திர பூர்வமான வளர்ச்சி - முதல்சட்டம்' இக்கட்டுரை, இந்திய விடுதலைப் போராட்டச் சூழலில் முஸ்லீம்லீக் கட்சியின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து எழுதப்பட்டது.

19.7.44

'தேசீய இனங்கள்' - இக்கட்டுரை தேசீய இனங்கள் குறித்து ஆங்கிலத்தில் எழுதியதை மொழியாக்கம் செய்தது ஆகும்.

19.12.45

'பஞ்சாபிலும் எல்லைப்புறத்திலும் முஸ்லீம் மக்களிடையே உற்சாகம்' பிரித்தானியர்களிடமிருந்து, இந்தியா அரசியல் அதிகாரத்தைப்பெறும் சூழலில் முஸ்லீம் மக்கள் கொண்டிருந்த மனிநிலையை விளக்கும் வகையில் அமைந்த கட்டுரை.

26.12.45

'சென்னை மாகாண லீக் அபேட்சகராகம் தலைமைப் பதவி யாரைப் பொறுக்கும்' - சென்னை மாகாணத்தில் தேர்தல் நடைபெறும்

சூழலில் முஸ்லீம் லீக் தலைமை எவ்வகையில் அமையவேண்டும் என்பது தொடர்பான விவாதக் கட்டுரை.

20.3.46

'பஞ்சாப் மந்திரிசபை - தேசீய இயக்கத்திற்கு வெட்கம்' பஞ்சாபில் அமைந்த மந்திரிசபை இடதுசாரி கோட்பாடுகளுக்கு எதிராக அமைந்தமை குறித்த விமரிசனக் கட்டுரை.

31.7.46

'தேசம் எங்கே செல்கிறது? சீரழிவைத் தடுப்போம்' அன்றைய அரசியல் போக்கு குறித்த விமரிசனக் கட்டுரை.

பின்னிணைப்பு - III

நூல்கள்

தோழர் இஸ்மத்பாஷா அவர்கள் எழுதிய நூல்கள் (பட்டியல் முழுமையானது அன்று)

1946 *அணுகுண்டும் அரசியலும்,* ஜனசக்தி பிரசுராலயம், சென்னை.

இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டு பயன்படுத்தப்பட்ட பின்புலத்தில், உலகம் முழுதும் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைக் கூறும் நூல். "அணுசக்தி உலகில் மிகப்பெரிய பொருளாதார, சமூக,

அரசியல் புரட்சியை உண்டு பண்ணுகிறது. கம்யூனிஸ்டு சமூகத்திற்கு வழி திறந்துவிடுகிறது" என்ற இந்நூலில் எழுதியுள்ளார்.

1946 *காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு கம்யூனிஸ்டுகளின் பதில்;* தோழர், பி.ஜி. ஜோஷி, மொழியாக்கம்: இஸ்மத்பாஷா, ஜனசக்தி பிரசுராலயம், சென்னை

கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சியில் செயல்பட்டு, பின்னர் கம்யூனிஸ்டுக் கட்சியாகச் செயல்பட்டனர். இத்தன்மைகள் குறித்த மிக முக்கியமான ஆவணம் இந்நூல்.

1946 ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு, ஏ.எஸ். அய்யங்கர் முன்னுரை, இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சி, தமிழ் மாகாணக் கமிட்டி, சென்னை.

சென்னையில் சட்டசபைத் தேர்தலில் தோழர் ஜீவா போட்டியிட்ட போது, தேர்தல் வெளியீடாக இந்நூல் வந்தது. இதில் ஜீவா குறித்துப் பல அரிய தகவல்களைப் பெறமுடிகிறது. இந்நூலின் முன்னுரையில் தோழர் ஏ.எஸ்.கே. அய்யங்கார், இஸ்மத்பாஷா குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார். "இவர் ஒரு இளம் புரட்சிக்காரர். எங்கள் கட்சியின் 'ஜனசக்தி' பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவர். லெனின் வழியில் அதாவது தொழிலாளிகளின், விவசாயிகளின் எளிய பாஷையில் எழுதக்கூடியவர். ஜனசக்தி வாசகர்கள் இவரை நன்கு அறிவார்கள். இச்சிறு வாழ்க்கை வரலாற்றைத் தோழர் இஸ்மத் பேனாவினால் எழுதவில்லை; சித்திரங்களாகச் சித்தரிக்கிறார். இச்சிறு வெளியீட்டில் மகிழ்ச்சியையும் நன்மையையும் தமிழர்கள் அடைவார்கள் என்று நம்புகிறேன்".

1946 ஸ்தாபன வேலைமுறை, ஜே.வி. ஸ்டாலின், மொழியாக்கம்: எம். இஸ்மத்பாஷா, ஜனசக்தி பிரசுராலயம், சென்னை.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மிக முக்கியமான ஆவணங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஸ்டாலின் நூலை, இஸ்மத்பாஷா முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

1946 எல்லோருக்கும் உணவு, டாக்டர் ஜி. அதிகாரி, மொழிபெயர்ப்பு: இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு கமிட்டி 1/6 டேவிட்சன் தெரு, ஜிடி. சென்னை.

தேர்தல் வெளியீடான இப்பிரசுரம் அன்றைய சூழலில் இந்தியாவின் வறுமையைப் படம் பிடிக்கிறது. மிகச்சரளமாகத் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

1947 கூலி உழைப்பும் மூலதனமும், காரல் மார்க்ஸ்; மொழிபெயர்ப்பு: இஸ்மத்பாஷா, ஜனசக்தி பிரசுராலயம், சென்னை

மார்க்சியத்தின் மிக அடிப்படையான நூல்களில் ஒன்றான இதனை மிகவும் சரளமாகத் தமிழில் மொழியாக்கம் செய்திருக்கிறார்.

1947 சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம் (போல்ஷ்விக்). மொழிபெயர்ப்பு; எம். இஸ்மத்பாஷா, ஜனசக்தி பிரசுராலயம், சென்னை

மிக முக்கியமான ஆவணம் இந்நூல். பொன்மலை, உறையூர், புன்னப்புரா, வயலார், கோவை, கோலார், மதுரை, திண்டுக்கல் ஆகிய ஊர்களில் போராடிய தோழர்களுக்கு அர்ப்பணம் செய்யப் பட்டுள்ளது.

1954 வாழ்வுப் போராட்டம் இஸ்மத்பாஷா அவர்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்பு.

1954 கற்காலத்திலிருந்து தற்காலம் வரை - தமிழர் வரலாறு மற்றும் தமிழ்மொழி வரலாறு பற்றிய நூல்.

1954 கற்காலத் தமிழர்கள் - தமிழர் வரலாறு குறித்த நூல் (மேற்குறித்த மூன்றுநூல்களும் சமரன் வெளியீடு - கும்பகோணம்)

குறிப்பு

தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில் சமரன் பெறும் இடத்தை மதிப்பீடு செய்ய சமரன் இதழ்களைக் கொடுத்த மறைந்த தோழர் என்.எஸ். ருக்குமணி அம்மாள் அவர்களுக்கு நன்றியுடையேன்.

சரஸ்வதி

1955 **வல்லிக்கண்ணன்**

இலக்கிய உலகில் தடம் பதித்து, தமிழ் இதழியல் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள சிற்றிதழ்கள் பலவாகும். அவற்றுள்ளும் தனித்தன்மையுடன் சாதனைகள் படைத்து முக்கியத்துவம் பெற்றுள்ள இதழ்கள் என்ற பெருமை ஒரு சில இதழ்களுக்கே உண்டு.

அத்தகைய சிறப்புடைய சிற்றிதழ்களில் 'சரஸ்வதி'யும் ஒன்று.

முற்போக்கு இலக்கிய வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட 'சரஸ்வதி' மாத இதழ் பல அரிய சாதனைகளைப் புரிந்த தனிப்பெருமை பெற்றுள்ளது.

தமிழில் 1940களிலிருந்து முற்போக்கு இலக்கியம் வேகம் பெற்று வந்தது. சுத்த இலக்கியம், ஆழ்ந்த இலக்கியம் (Pure Literature, Serious Literature) என்ற கருத்தோட்டத்துக்கு மாறாக, இலக்கியம் மக்களுக்கு நன்மை பயப்பதற்கும் நம்பிக்கை ஊட்டுவதற்குமாகவே படைக்கப்பட வேண்டும் என்ற நோக்கு வலுப்பெற்று வளர்ந்தது. இந்த நோக்குடையவர்கள் மார்க்சிசத்திலும் பொதுவுடைமைக் கொள்கைகளிலும் நம்பிக்கையும் பற்றுதலும் உடையவர்களாவர். இவர்கள் வளர்த்தது 'முற்போக்கு இலக்கியம்' என அறியப்பட்டது.

இந்த இலக்கிய நோக்குடன் பொதுவுடைமைக் கட்சி சில பத்திரிகை முயற்சிகளை ஆரம்பித்து நடத்தி, வெற்றி காணாது நிறுத்தியிருந்தது. பின்னர், தூய ஆழ்ந்த இலக்கியவாதியாக இருந்து, கால ஓட்டத்தில் மார்க்சியக் கண்ணோட்டமும், கம்யூனிசப் பற்றுதலும் பெற்றிருந்த தொ.மு.சி. ரகுநாதன், 1954 டிசம்பரில், திருநெல்வேலியில் 'சாந்தி' என்ற பெயரில், முற்போக்கு இதழ் ஒன்றைத் தொடங்கினார். இலக்கிய வட்டாரத்தில் ஓரளவு கவனிப்பும் பாராட்டுதலும் பெறமுடிந்த சாந்தி 1956 ஏப்ரலில் மறைந்து விட்டது.

சாந்தி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே, முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல முறையில் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன், வ. விஜயபாஸ்கரன் சென்னையில் சரஸ்வதியை ஆரம்பித்தார்.

விஜயபாஸ்கரன் பத்திரிகைத் துறையில் போதிய அனுபவம் பெற்றிருந்தார். ஒரு பத்திரிகையை நடத்துவதில் உள்ள சிரமங்களையும் சோதனைகளையும் அவர் நன்கு அறிந்தவர்தான். இலக்கிய இதழ்களின் வரலாறுகளை அவர் தெரிந்து வைத்திருந்தார். அவரே 1950-51இல் 'விடிவெள்ளி' என்றொரு முற்போக்கு இதழை நடத்தி அனுபவம் பெற்றிருந்தார்.

அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்த வாரப் பத்திரிகை விடிவெள்ளி. அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் அது வசீகரமும் தரமும் பெற்ற இதழாகத்தான் இருந்தது. ஆயினும் அது ஒரு வருட காலத்துக்கு மேல் வாழ இயலவில்லை. இந்த முயற்சியில் விஜயபாஸ்கரன் மூவாயிரம் ரூபாய் இழந்து அனுபவம் பெற்றிருந்தார்.

பின்னர் 'ஹனுமான்' என்ற பெயர் பெற்ற வாரப்பத்திரிகையின் இறுதிக்கட்ட ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. அதே சமயத்தில் 'சக்தி' என்ற சிறந்த மாத இதழின் துணை ஆசிரியராகவும் செயலாற்றிக் கொண்டிருந்தார்.

வை. கோவிந்தன் எனும் பத்திரிகை - பதிப்பகத்துறை முன்னோடியும் வழிகாட்டியுமாக விளங்கியவர், சக்தி என்ற இதழை டைஜஸ்ட் பாணியில் நல்லமுறையில் வளர்த்து வந்தார். தி.ஜ. ரங்கநாதன், சுப. நாராயணன், கு. அழகிரிசாமி, தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோர் சக்தியில் பணிபுரிந்துள்ளனர். அதன் கடைசி காலத்தில் ஆசிரியராக உழைத்தார்.

சக்தி தமிழ்ப் பத்திரிகை உலகில் சிறப்பான தன்மையுடன் விளங்கியது. ஆனாலும் லாபகரமாக வளரவில்லை. சக்தியை தொடர்ந்து நடத்துவதா வேண்டாமா? என்று வை. கோவிந்தன் முடிவு செய்ய இயலாமல் தவித்தார். பத்திரிகையை நிறுத்தவும் மனமில்லை.

வை.கோ.வின் மனநிலை பற்றி விஜயபாஸ்கரன் இவ்வாறு அறிவித்துள்ளார்: 'பத்திரிகையை நிறுத்திவிட்டால் நான் என்ன செய்வேன் என்ற கவலை அவருக்கு. ஏனென்றால், எனக்குத் திருமணமாகி ஆறுமாதங்கள் ஆகவில்லை. சக்தியை நிறுத்தி விட்டால் உடனடியாக நான் என்ன செய்யப் போகிறேனோ? என்ற கவலை அவருக்கு. இந்த மனப் போராட்டத்தில் அவர் உழன்று வருவதை அறிந்தேன். நானே அவரிடம் பத்திரிகையை மேற்கொண்டும் நஷ்டத்தில் நடத்துவதை விட மூடிவிடலாம் எனத் தெரிவித்தேன்.

என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் சொந்தத்தில் பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறேன்' என்று கூறி, பத்திரிகை டிக்ளரேஷனுக்கு விண்ணப்பித்தார்.

அவர் பெற்றிருந்த அனுபவம் காரணமாக நன்கு திட்டமிட்டுச் செயலாற்ற முனைந்தார். பத்திரிகையை வெற்றிகரமாக நடத்துவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்தார். ஐந்து ஆண்டுகள் நஷ்டத்துக்குத் தயாராக இருந்த பத்திரிகையைத் தொடங்கி நடத்தினால், ஆறாம் ஆண்டில் தன்னைக் கட்டிப் போடும்படி செய்யலாம் என்று அவர் நம்பினார். அதற்குத் தேவையான மூலதனத்தோடுதான் அவர் 'சரஸ்வதி' வேலையை ஆரம்பித்தார்.

விஜயபாஸ்கரன் தனது பத்திரிகைக்கு 'சரஸ்வதி' என்ற பெயரைத் தேர்ந்து எடுத்ததற்குத் தனியான காரணங்கள் உண்டு. அது பற்றி அவர் குறிப்பிட்டிருப்பது -

'நான் ஒரு மார்க்சிஸ்ட். படைப்பிலக்கியத்தைப் பற்றி எனக்கென்று ஒரு பார்வை உண்டு இடதுசாரி பத்திரிகைகள் ஒன்றுகூட வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பது வரலாறு. தங்கள் வட்டத்தைத் தாண்டி சராசரி வாசகர்களை அவை சென்றடையவில்லை என்பது யதார்த்த உண்மை. இலக்கிய ஆர்வலர்கள் மத்தியிலும் ஒரு சிறு சலசலப்பைக்கூட அவை ஏற்படுத்தவில்லை. ஆகவே, ஏற்கனவே வெளிவந்து தோல்விகண்ட முற்போக்குப் பத்திரிகைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக ஒரு இதழைக் கொண்டுவர முடிவு செய்தேன். இதற்கு முதற்கட்டமாகப் பெயரிலேயே வித்தியாசம் தெரியவேண்டும் என்று விரும்பி, கலைகளின் தெய்வமாகப் போற்றப்படும் சரஸ்வதியின் பெயரைத் தேர்ந்தெடுத்தேன். இதற்கு எனக்கு முன்னோடி, இந்திய முற்போக்கு இலக்கியத்தின் தலைமகன் பிரேம்சந்த். அவர் நடத்திய இதழ் 'சரஸ்வதி'.

இரண்டாவதாக, 'என் மனைவியின் பெயரும் அதுவே. ஆகவே சரஸ்வதி என்ற பெயரையே முடிவு செய்தேன்' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சரஸ்வதி முதல் இதழ் 1955 மே மாதம் முதல் தேதியிட்டு, ஏப்ரல் இறுதியில் வெளிவந்தது. பத்திரிகை அலுவலகம், வேப்பேரி, ராஜா அண்ணாமலை செட்டியார் ரோடு, 1-ஆம் எண் கட்டிடத்தில் அமைந்திருந்தது.

சிறிய அளவில் (கிரவுன் சைஸ்), 40 பக்கங்களுடன் 2அணா விலையில், சரஸ்வதி பிரசுரம் பெற்றது.

சரஸ்வதி தனக்காக வகுத்துக்கொண்ட பாதை பற்றி முதல் இதழில் இவ்வாறு அறிவித்தது.

நமது பாதை

வணக்கம். சரஸ்வதியின் முதல் இதழைத் தமிழ் மக்களின் முன் சமர்ப்பிப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாரதி வழிவகுத்துக் காட்டினார். அவர் காட்டிய இந்த பாதை. உலக மொழிகள் பல அரிய கருத்துக்கள் தினம்தினம் வெளியாகி வருகின்றன. இவைகளைத் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா? அசுர வேகத்தில் வளர்ந்து வரும் இன்றைய உலகத்தில் நாம் மட்டும் பின்தங்கிவிடலாமா? ஆகவே, மேலை நாட்டில் வளர்ந்து வரும் புத்தம் புதிய கருத்துக்களைத் திரட்டித் தமிழர்களுக்குத் தரவேண்டும்; அத்துடன் நமது மறைந்து வரும் கலைச் செல்வங்களைத் தேடி எடுத்து வெளியிடவேண்டும்; தமிழில் சிறந்த சிறுகதைகள், கவிதைகள் வெளிவருவதற்கு நம்மால் ஆனப் பணிகளைச் செய்யவேண்டும் என்ற இந்த ஆசைகளால் உந்தப்பட்டு சரஸ்வதியை வெளியிடுகிறோம். 'நாட்டு மக்களை உயர்த்துவதற்காக எழுதவேண்டும், சமூகத்தைச் சக்தி வாய்ந்ததாக்குவதற்காக எழுதவேண்டும்., கிராமவாசியும் புரிந்து கொள்ளக்கூடிய தமிழில் எழுதவேண்டும்' என்று அமரர் வ.ரா. அவர்கள் காட்டிய இந்தப் பாதைதான் நாங்கள் விரும்பும் பாதை; செல்லும் பாதை.

முதல் இதழ் அட்டையில் வரா. படம் தான் அச்சாகியிருந்தது. அதில் ஜெயகாந்தன் கதையும், தமிழ் ஒளி கவிதையும் பிரசுரமாயின. தமிழ்ஒளி விஜயரங்கம் என்ற பெயரில் ஒரு கதையும் எழுதியிருந்தார். மற்றும் சி.எஸ். சுப்ரமணியம், அ.லெ. நடராஜன், இஸ்மத் பாஷா ஆகியோரும் எழுதியிருந்தார்கள்.

ஜெயகாந்தன் அறிமுகம் பற்றி விஜயபாஸ்கரன் அறிவிப்பது இது: 'சரஸ்வதி ஆரம்பிப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்தான் ஜெயகாந்தன் எனக்கு அறிமுகமானார். சக்தி - ஹனுமான் காலத்தில் ஒருநாள் தமிழ்ஒளி அவரை என் வீட்டுக்கு அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார். இஸ்மத் பாஷாவின் சமரன் பத்திரிகையில் அவர் இருந்ததும், அதில் அவர் எழுதி வந்த ஒரு சில கதைகளும் எனக்குத் தெரியும். இந்த அறிமுகத்திற்குப் பின்னர் ஹனுமானில் அவரது

ஒன்றிரண்டு கதைகளை வெளியிட்டேன். சரஸ்வதி ஆரம்பித்ததும் அதில் தொடர்ந்து எழுதினார்.

'சரஸ்வதி'யில் முதலாவது ஆண்டில் ஜெயகாந்தன் மூன்று இதழ்களில் தான் (1,2,4) எழுதியிருக்கிறார். இரண்டாவது ஆண்டில் தான் தொடர்ந்து எழுதலானார்.'

எஸ். ராமகிருஷ்ணன், சாமி. சிதம்பரனார், இஸ்மத் பாஷா முதலியோர் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிவந்தனர். கே.சி.எஸ். அருணாசலமும் தமிழ் ஒளியும் கவிதைகள் எழுதினார்கள். வல்லிக்கண்ணன் கதை ஒன்று நான்காவது இதழில் வெளிவந்தது.

ஆர்.கே. கண்ணன் 'பாரதி நோக்கு' என்ற தலைப்பில் பாரதி பற்றிய ஆய்வுரையை 5ஆவது இதழ் முதல், தொடர் கட்டுரையாக எழுதினார். பின்னர், 8ஆவது இதழிலிருந்து புதுமைப்பித்தன் கதைகள் பற்றித் தொடர்ச்சியாக எழுதினார்.

சரஸ்வதி ஏழாவது இதழில் ஆசிரியர் ஒரு நீண்ட தலையங்கம் எழுதியிருந்தார். சரஸ்வதியில் தொடர்ந்து எழுதும் எழுத்தாளர்களுக்கு நன்றி தெரிவித்தார். 'அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கதைகளும், கலை இலக்கிய விமர்சனங்களும், பிறமொழிக் கதைகளின் மொழி பெயர்ப்புகளும், பிறநாட்டுக் கலைவேந்தர்கள் பற்றிய சொற் சித்திரங்களும் மாதந்தோறும் கிடைத்து வரும்', என்று அறிவித்ததுடன், மேலும் குறிப்பிட்டிருந்ததது இது:

'புதிய ஒளியிலே நமது இலக்கிய, சரித்திரப் பொக்கிஷங்களை அனுபவித்துப் பேணுவதோடு சரஸ்வதி நின்றுவிடவில்லை. நமது இலக்கிய பரம்பரையுடன் பிரிக்க முடியாதபடி ஒன்றிவிட்ட அமரர்கள் திரு.வி.க., வ.ரா., வ.வே.சு. ஐயர், ரசிகமணி டி.கே.சி. முதலிய பல அறிஞர்கள் விட்டுச் சென்ற கலைச் செல்வத்தையும் அடிக்கடி சுவைத்து அனுபவிக்க சரஸ்வதி வாய்ப்பளிக்கிறாள். தமிழ் இலக்கியம் எந்தப் பாதையில் வந்தது, எந்தப் பாதையிலே போய்க்கொண்டிருக் கிறது என்கிற கால - திசை உணர்வு சரஸ்வதி இதழ் ஒன்றை எடுத்துப் பார்ப்போருக்கு உடனே ஏற்படும். சுருங்கச் சொன்னால், ஒரு குறிக்கோளுடனும், அதைச் செயல்படுத்தக்கூடிய ஒரு திட்டத்துடனும் சரஸ்வதி இயங்குகிறாள். குறுகிய நோக்கோடு முற்போக்கு, பிற்போக்கு அம்சங்களைக் கணித்து ஒதுங்கிப் போகாமல், மனித வளர்ச்சிக்குப் பாடுபடும் சகல சக்திகளையும் அரவணைத்துப் பேணுவதே சரஸ்வதியின் இலட்சியம்.'

சரஸ்வதி தலையங்கத்தின் ஒரு பகுதி தான் இது.

'கை வருந்தி உழைப்பவர் தெய்வம்; கவிஞர் தெய்வம்; கடவுளர் தெய்வம்' என்ற பாரதியின் வரிகளை மூலவாக்கியமாக முகப்பில் பொறித்துக் கொண்ட சரஸ்வதி முற்போக்கு இலக்கியவாதிகளின் பத்திரிகையாகத்தான் பிறந்தது; அப்படியே வளர்ந்தது. முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள்தான் அதில் அதிகம் எழுதிக் கொண்டிருந்தார்கள், ஆரம்ப வருடங்களில்.

ஆயினும், சரஸ்வதி ஆசிரியர் விஜயபாஸ்கரன், சில முற்போக்கு இலக்கியவாதிகளைப் போல, குறுகிய நோக்கு கொண்டிருக்கவில்லை.

மார்க்சியக் கண்ணோட்டத்துடன், லெனினியக் கோட்பாடுகளுக்கும் கம்யூனிசத் தத்துவத்துக்கும் ஏற்ப, எழுதப்படுகிற எழுத்துக்களே முற்போக்கு இலக்கியம் என்பது அவ்விலக்கியத்தில் தீவிரப் பற்று கொண்டிருப்பவர்களின் கருத்து. அவர்களது கருத்துக்கு ஒத்துவராத படைப்புகளை 'பிற்போக்கு இலக்கியம்' என்றும், 'நசிவு இலக்கியம்' என்றும் குறிப்பிடுவது அவர்கள் இயல்பு. அந்த இலக்கியக் கொள்கையிலும், கம்யூனிச தத்துவத்திலும், கட்சியிடமும் மிகுந்த பற்றுதல் உடையவர்கள், தங்கள் நோக்கின்படி எழுதப்படாதவற்றை இலக்கியம் என ஒப்புக் கொள்ளவே மனம்கொள்வதில்லை. அவர்கள் கருத்துப்படி, முற்போக்கு இலக்கியம் மட்டுமே இலக்கியம் ஆகும்.

இதற்கு நேர்எதிரான கருத்து கொண்டிருப்பவர்கள் தூய அல்லது ஆழ்ந்த இலக்கியவாதிகள். இவர்கள் முற்போக்கு இக்கியத்தை அங்கீகரிப்பதேயில்லை. முற்போக்குச் சிந்தனையும் சமூகப் பார்வையும் கொண்ட எழுத்துக்கள், எவ்வளவு சிறப்பான படைப்புகளாக இருந்தபோதிலும், தனி மனித உயர்வையும் உணர்வுகளையும் பதிவு செய்கிற இலக்கியவாதிகளால் அலட்சியமாகப் புறக்கணிக்கப் படுகின்றன.

எனவேதான், 'குறுகிய நோக்கோடு முற்போக்கு, பிற்போக்கு அம்சங்களைக் கணித்து ஒதுங்கிப் போகாமல், மனித வளர்ச்சிக்குப் பாடுபடும் சகல சக்திகளையும் அரவணைத்துப் பேணுவதே சரஸ்வதியின் லட்சியம், என்று விஜயபாஸ்கரன் அறிவிக்க நேர்ந்தது. இந்த விசால நோக்கு 'சரஸ்வதியின் இலக்கியத்தரமான வளர்ச்சிக்குப் பலமான அஸ்திவாரமாக அமைந்தது.

வேப்பேரி ராஜா அண்ணாமலை செட்டியார் ரோடில் இருந்த சரஸ்வதி அலுவலகம் 1956 ஜூலை மாதம், மவுண்ட் ரோடை

அடுத்துள்ள லேவ்ஸ் கார்டன் ரோடு 19-ஆம் எண் வீட்டுக்கு இடம் மாறியது.

அவ் வருடம் நவம்பர் இதழ் 'தமிழக மலர்' ஆக வெளிவந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது நடைமுறையிலிருந்த மாகாணப் பிரிவினையை மாற்றி, இந்தியாவில் மொழி வழி மாநிலம் அமைக்கப்பட்டது. 1956 நவம்பரில்தான், அத்திட்டத்தின்படி தமிழ் மாநிலம் உருவாயிற்று. அதுவரை சென்னை மாகாணம் என்ற பெயர் தான் வழக்கில் இருந்தது. ஆயினும், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந் நிகழ்ச்சியை வரவேற்றுப் பாராட்டவும், தமிழ் மாநிலம் உதயமாவதால் எழுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும், சரஸ்வதி சிறப்பு மலர் தயாரித்து வெளியிட்டது.

வழக்கமாக வெளியிடப்பெறும் 40 பக்கங்களுக்கு மாறாக இம்மலர் 72 பக்கங்கள் கொண்டிருந்தது.

1957 ஜனவரியில் சரஸ்வதி மூன்றாவது ஆண்டில் அடி எடுத்து வைத்தது. அந்த ஆண்டு அதன் வரலாற்றில் விசேஷங்கள் நிறைந்த ஆண்டு ஆகும். இவ் வருடம் சரஸ்வதியில் பல புது அம்சங்கள் சேர்க்கப்பட்டன. சூடான விவாதங்களும் சுவையான விளக்கங்களும் இடம்பெற்றன.

'ரகுநாதனைக் கேளுங்கள்' என்ற பகுதி புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. வாசகர்களின் கேள்விகளுக்கு ரகுநாதன் விரிவான பதில்கள் எழுதிவந்தார்.

இந்திய சினிமாவின் தலைசிறந்த ஒளிப்பதிவாளர்களில் ஒருவரான நிமாய் கோஷ் திரைப்படத் தொழில் பற்றித் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.

ந. வானமாமலை 'பள்ளுப் பாட்டு' பற்றி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையும், கே.சி.ஸ். அருணாசலம் எழுதிய 'வீழ்ந்திலன் என்ற போதும்' எனும் கதையும் தொடர்களாகப் பிரசுரமாயின.

ஒவ்வொரு மாதத்திய முக்கிய நிகழ்ச்சிகளையும் அலசுகிற 'வம்பு மடம்' ஆக 'ரிக்ரியேஷன் கிளப்' என்ற பகுதி தொடங்கப் பட்டது.

'திரை உலகம்' என்ற பகுதியில் சினிமா விமர்சனங்களும், பட உலகச் செய்திகளும், சிற்சில படங்களுடன் வெளியிடப்பட்டன. ஆரம்பத்தில், 'மாஜினி' திரைப்பட விமர்சனம் எழுதினார். சில இதழ்களுக்குப் பிறகு இந்தப் பொறுப்பை தி.க. சிவசங்கரன் ஏற்றுக் கொண்டார்.

மூன்றாவது ஆண்டிலிருந்து தான் சுந்தர ராமசாமி சரஸ்வதியில் தொடர்ந்து எழுதலானார். முதலில் அவரது சிறுகதைகள் வந்தன. பிறகு, தகழி சிவசங்கரன் பிள்ளையின் 'தோட்டியின் மகள்' நாவல் அவரால் மொழிபெயர்க்கப்பட்டு, தொடர்கதையாக வெளியாயிற்று.

ஆர்.கே. கண்ணனும், ஆர். கார்த்திகைவேலும் கட்டுரைகள் எழுதுவதுடன், புத்தக மதிப்புரையும் கவனித்துக் கொண்டார்கள்.

இந்த ஆண்டு முதல் தான் சரஸ்வதிக்கு எனது எழுத்துப் பணியும் அதிகம் ஆகியது. மாதம் தோறும் சிறுகதை எழுதியதோடு, பெரிய மனிதர்களைப் பற்றிய சுவையான விஷயங்கள், அயல் நாட்டுக் கதைகளின் மொழிபெயர்ப்பு போன்றவற்றையும் எழுதலானேன்.

சாமி. சிதம்பரனாரும் இதழ் தோறும் கட்டுரை எழுதி உதவினார்.

ஜெயகாந்தன் எழுதிய கதைகள் இவ் ஆண்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தின. பாராட்டுகளையும் கண்டனங்களையும் அதிகமாகப் பெற்றுக்கெண்டிருந்தன.

சரஸ்வதியின் பக்கங்கள் 80 என அதிகரிக்கப்பட்டு, விலை 25 பைசா ஆக உயர்த்தப்பட்டது.

அவ்வப்போது வேறு புதுமைகளும் சேர்க்கப்பட்டன. சதுரங்கம் கற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில், அவ்விளையாட்டு பற்றி விளக்கக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. 'போட்டோ பிடிக்கலாம் வாருங்கள்' என்று, போட்டோக் கலை பற்றி ஜே.எம். கல்யாணம் எழுதலானார்.

ஆறாவது இதழ் முதல் 'புத்தகச் சுருக்கம்' இணைக்கப்பட்டது. இலியா எரன்பர்க்கின் 'இந்திய நினைவுகள்', ஆன்டன் செகாவின் 'கண்மணி', டால்ஸ்டாயின் 'மனிதனுக்கு எவ்வளவு நிலம் தேவை?', டிக்கன்சின் 'டேவின் காப்பர்பீல்ட்',' எமிலி ஸோலாவின் 'நிலம்' ஆகியவை இவ் ஆண்டில் இடம் பெற்றன.

அ. நடராஜன் எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகளும், டி. செல்வராஜின் சிறுகதைகளும் அவ்வப்போது பிரசுரமாயின.

ஜூலை மாத இதழ் புதுமைப்பித்தன் மலர் ஆக வெளிவந்தது. புதுமைப்பித்தன் இறந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் நினைவைக் கௌரவிக்கும் வகையிலும், அவரது எழுத்தாற்றலையும் படைப்புகளின் தன்மையையும் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லும்

முறையிலும் இந்த மலர் தயாரிக்கப்பட்டிருந்தது. சிந்தனையைத் தூண்டும் விதத்தில் இம்மலரின் தலையங்கம் அமைந்திருந்தது. எஸ். வையாபுரிப்பிள்ளை, க. கைலாசபதி, ரகுநாதன், வல்லிக்கண்ணன், ஜெயகாந்தன், புதுமைப்பித்தன் பற்றிய கட்டுரைகள் எழுதியிருந்தனர். புதுமைப்பித்தன் எழுதிய 'சாமியாரும் குழந்தையும் சீடையும்'; அதில் என்ன இருக்கிறது? என்று ஒரு விமர்சனக் கட்டுரையை ஆர்.கே. கண்ணன் எழுதியுள்ளார். புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' 'சாமியாரும் குழந்தையும் சீடையும்' ஆகிய கதைகள் பிரசுரமாகியிருந்தன. மற்றும் இதர அம்சங்களும் வழக்கம் போல் வந்திருந்தன.

மலரில், 'வீர வணக்கம் வேண்டாம்' என்ற தலைப்பில் தி.க.சிவசங்கரன் விவாதத்துக்கு உரிய கருத்துக்களை வெளியிட்டிருந்தார். 'புதுமைப்பித்தனுக்கு வீரவணக்கம் செலுத்துவது, உண்மையை மறந்த சாமியாட்டம் தான். தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களிலேயே தலைசிறந்தவர் என்று என்னால் புதுமைப்பித்தனை ஏற்கமுடியவில்லை' எனக் கூறி, தனது எண்ணங்களை விரிவாக எழுதியிருந்தார் அவர்.

மலரைப் பாராட்டி அதிகமான கடிதங்கள் வந்தன. தி.க.சி. கருத்துக்களை ஆதரித்தும் குறைகூறியும் பல கடிதங்கள் இருந்தன.

தி.க.சி. தனது கருத்துக்களை மேலும் தெளிவுபடுத்தும் விதத்தில், 'புதுமைப்பித்தனைப் பற்றி இன்னும் கொஞ்சம்...' என்றொரு கட்டுரையை ஆகஸ்ட் மாத இதழில் எழுதினார். புதுமைப்பித்தன் நல்ல இலக்கியத்தையும் எழுதியிருக்கிறார்; நசிவு இலக்கியத்தையும் எழுதியிருக்கிறார். அவர் எழுத்துக்களில் விஞ்ஞானமும் இருக்கிறது; அஞ்ஞானமும் இருக்கிறது. அமுதமும் உண்டு; நஞ்சும் உண்டு. அவருடைய யதார்த்தவாத சிருஷ்டிகளை வரவேற்க வேண்டும். பழைமைவாதப் படைப்புகளை ஒதுக்கித் தள்ள வேண்டும் என்று தொடங்கி, அவரது கண்ணோட்டத்தில் புதுமைப்பித்தன் சிறுகதைகளை மதிப்பிட்டிருந்தார்.

தி.க.சி.யின் கருத்துக்களுக்கு எதிரான விவாதக் கட்டுரை எதுவும் வரவில்லை. அவருடைய விமர்சனப் பார்வை முழுமையானது அல்ல என்று சுட்டிக்காட்டி, ஆர்.கே. கண்ணன் எழுதிய கடிதம் ஒன்று செப்டம்பர் இதழில் பிரசுரமாயிற்று. அதற்கு மேல் அந்த விவகாரம் வளரவில்லை.

மூன்றாவது ஆண்டில், சரஸ்வதியில் ஜெயகாந்தன் எழுதிய கதைகள் 'ஆபாசம்' என்ற கூச்சலை அதிகம் எழுப்பின. பலப்பல

ஊர்களிலிருந்தும் ரசிகர்கள்-ஆண்களும் பெண்களும்-அவர் கதைகளில் எடுத்தாண்ட விஷயங்களையும் எழுத்தில் சித்திரித்த முறைகளையும் குறைகூறியும் கண்டித்தும் மாதம் தோறும் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

தனது கதைகளுக்காக வாழ்த்துவதும் வசைபாடுவதும் அதிமாகிவிடவும், ஜெயகாந்தன் ஜூன் இதழில் ஒரு விளக்கம் எழுதினார்.

'மனிதராசியின் வாழ்க்கை வக்கிரங்களைப் பார்த்தால் சிலசமயம் நம் முகம் சுருங்கத்தான் செய்கிறது. அதனால் நாம் வாழ்க்கையை வெறுத்து விடுகிறோமா என்ன? இலக்கியமும் அப்படித்தான். கதையைப் படித்துவிட்டு நீங்கள் முகம் சுளித்திருப்பீர்களானால் அது தான் எனது வெற்றி' என்று குறிப்பிட்டு, தனது கதை குறித்து மேலும் தன் எண்ணத்தை வலியுறுத்தியிருந்தார் அவர்.

ஆகஸ்ட் இதழில் 'பால் பேதம்' எனும் ஜெயகாந்தன் கதை வெளிவந்தது. அதில் ஆபாசமான வர்ணிப்புகள் இடம் பெற்றிருப்பதாகப் பலர் கண்டித்துக் கடிதங்கள் எழுதினார்கள். அதற்கு ஜெயகாந்தன் பல பக்கங்களில் நீண்ட பதில் ஒன்று எழுதினார்.

'பாத்திரத்தோடு, எழுதுபவரின் மனோதர்மத்தோடு இழைந்து மிதந்து லயித்துச் செல்லும் ரசனை தான் உயர்ந்தது, சிறந்தது. முலை என்ற வார்த்தையைப் படித்ததுமே நாம் கதை படிக்கிறோம் என்பதையே மறந்து சம்பந்தமில்லாத உணர்ச்சிக் கிறக்கத்துக்குப் படிப்பவர் ஏன் ஆளாகவேண்டும்? அப்படிப்பட்ட ஆபாசங்களைத் தன் மனசில் சுமந்து கொண்டிருப்பவர்கள் கதை படித்துத்தான் கெட்டுப் போக வேண்டுமா என்ன? எழுதும் நான் என் இதயத்துக்குத் திரைபோட்டு எழுத முடியாது. இதயத்தை வஞ்சிக்காமல் எழுதும் தெம்பும், அந்தத் திராணியும் எனக்கு இருந்தால் தான் எந்த விஷயத்தைப் பற்றியும் எழுத முடியும். எனக்குத் தெரிந்த உண்மைகளையும் எனக்கு ஏற்படும் உணர்ச்சிகளையும் என்னுடைய இதயத்தையும், என்னுடைய ரசனையையும் கொன்றுவிட்டு நான் என்னத்தை எழுதிக் கொட்ட வேண்டியிருக்கிறது? என்று அவர் அந்த விரிவுரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஜெயகாந்தனின் விரிவான விளக்கத்தை ஏற்றுப் பாராட்டியும் விமர்சித்தும் எதிர்த்தும் ஏகப்பட்ட கடிதங்கள் வந்தன. அவற்றில் இரண்டு முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை.

தூத்துக்குடி கம்யூனிஸ்ட் எஸ்.ஏ.முருகானந்தம் நீண்ட விமர்சனம் எழுதியிருந்தார். 'மக்களிடம் விஷயங்களை விளக்க வேண்டும். உண்மையையும் கூறவேண்டும். அதற்காகப் பண்பாட்டுக்கு விரோதமாகச் சொல்வது மக்களை நல்வழிப் படுத்தாது. இதயத்தை வஞ்சிக்காமல் எழுதும் தெம்பும் திராணியும் வேண்டும்தான். ஆனால் அந்தத் தெம்பும் திராணியும் மக்களுக்குப் பயன்படும் முறையில் இருக்க வேண்டுமல்லவா?. . . மக்களின் வாழ்வுக்கு வழிகாட்ட, அவர்களுக்குச் சரியான பண்புக்குத் திசை வழிகாட்ட, எழுத்து உதவியாக இருக்கவேண்டும்' என்று அவர் கருத்து தெரிவித்தார்.

பேராசிரியர் நா. வானமாமலை கடிதமும் விரிவானது தான். பழம் தமிழ் இலக்கியம், உலக இலக்கியங்களிலிருந்து சான்றுகள் காட்டிவிட்டு, 'இனி கேள்விக்கு வருவோம். சிற்றின்ப உணர்ச்சிக்கு இலக்கியத்தில் இடமுண்டா? மற்றெல்லா மனிதப் பண்புகளைப் போல் அதற்கும் இடமுண்டு. பின் ஆபாச இலக்கியம் என்று ஒன்றுமே இல்லையா? இருக்கிறது' என்று கூறி விளக்கம் தந்திருக்கிறார்.

'ஆண் பெண் உணர்ச்சியைக் கீழ்த்தரமாக்கி கேலிசெய்து, குறும்புக்காரச் சிறுவர்கள் மறைவாகக் கரியால் சித்திரம் தீட்டுகிறார்களே, அதுபோல் ஆண்பெண் உணர்ச்சியையும் உறவையும் மாசுபடுத்திச் சித்திரிப்பது ஆபாசம். இவ்வாறு எழுதும் எழுத்தாளர்கள் உள்ளத்தில் இந்த ஆபாசம் இருக்கிறது. அவர்கள் கற்பின் பாதுகாவலர் என்று நினைத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்குக் கற்பென்பது சமூகம் விதிக்கும் முறையில் உணர்ச்சியை ஒடுக்கும் மக்கள் 'மரியாதையாக' வாழ்வது. உண்மையை மறக்க வேண்டும். பொய்மையைப் போற்ற வேண்டும். சமூகத்திலிருந்து பிரித்து, மனிதப் பண்புகளை ஒழுக்கமுடையதென்றும், ஒழுக்கமற்றதென்றும் காட்டி, அவற்றின் சமூக அடிப்படைகளை மறைப்பது அவர்களுடைய நோக்கம்...

'ஜெயகாந்தன் கதைகளில் புலனுணர்வு சரியாகப் பயன்படுத்தப் படுகிறது. சிற்றின்பத்தைத் தூண்டிவிடுகிறது என்றால், அது அவருடைய தவறல்ல. நம்முடைய மனத்தில் ஒழுக்கத்தைப் பற்றிய எண்ணங்களைச் சமூகத்தின் பாதுகாவலர்கள் உருவாக்கியிருப்பதே இவ்வாறு இணைவிழைச்சின் உண்மைகளை நாம் காண மறுப்பதற்குக் காரணம்' என்று நா. வானமாமலை குறிப்பிட்டிருந்தார்.

'ஜெயகாந்தன் கதைகளைப் பற்றிய விவாதம் இத்துடன் முடிவடைகிறது' என்று ஆசிரியர் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

என்றாலும், இந்த விவகாரம் இத்துடன் முடிந்து விடவில்லை.

அந்த சந்தர்ப்பத்தில், எமிலி ஸோலாவின் 'எர்த்' நாவலை நான் படித்து முடித்திருந்தேன். அதன் கதையையும் நயங்களையும் நண்பர்கள் ஜெயகாந்தன், விஜயபாஸ்கரன் இருவரிடமும் விவரித்தபோது, 'இதை எழுதிக் கொடுங்கள். சரஸ்வதியின் புத்தகச் சுருக்கமாக வெளியிடலாம்' என்றார்கள். அவ்விதமே எழுதினேன்.

'நிலம்' என்ற நாவலின் சுருக்கம் டிசம்பர் இதழில் பிரசுரமாயிற்று. சரஸ்வதியில் 25 பக்கங்கள்.

'எடுத்துக்கொண்ட விஷயத்தை நாவலாக உருவாக்கியுள்ள முறையாலும், குணசித்திரங்களைப் படைத்திருக்கிற திறமையாலும், சோகம், குரூரம், கருணை, நகைச்சுவை, காமம் முதலிய மனித குணங்களைக் கலந்து கொடுத்துள்ள வகையிலும் இது எமிலி ஸோலாவின் இதர நாவல்களை விடச் சிறந்தது ஆகும்.

அனுபவத்திற்கு ஒவ்வாத கற்பனாலங்காரத்தையும் (ரொமான்டிசிஸம்) சமுதாய யதார்த்தவாதத்தையும் (சோஷியல் ரியலிசம்) கலந்து அற்புத நாவல்களைச் சிருஷ்டித்த பத்தொன்பதாம் நூற்றாண்டு நாவலாசிரியர்களில் முக்கியமானவர்களில் ஸோலாவும் ஒருவன். மத்தியதர வர்க்கத்தினரிடையே மலிந்துள்ள சிறுமைகளையும் குணக்கேடுகளையும் வக்கிரப் பண்புகளையும் அவன் அளவுக்கு அதிகமான தன்மையில் மிகுந்த உற்சாகத்தோடு வர்ணித்தவர் வேறு எவருமில்லை என்று அநேகர் குறைகூறுவது உண்டு. ஆயினும் அவன் காட்டும் சித்திரங்களில் உண்மை இல்லை என்று யாரும் கூறத் துணிந்ததில்லை. மண்மீது மனிதர் கொள்ளும் மோகம் அவர்களை எப்படி எப்படி ஆட்டிப் படைக்கிறது, நிலம் எனும் நல்லாள் எத்தகைய வேசியாக விளங்குகிறாள் என்பதை எல்லாம் அழகாகவும் உணர்ச்சிகரமாகவும் வர்ணிக்கிறது நிலம் என்கிற நாவல். அதன் வனப்பை உணர்வதற்கு இந்தச் சிறு சுருக்கம் ஓரளவாவது துணைபுரியும்' என்ற முன்னுரையுடன் அது வெளிவந்தது.

அந்த இதழில் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்ற பகுதியில், விஜயபாஸ்கரன் 'புத்தகச் சுருக்கத்தைப் படிக்குமுன்' என்று ஒரு கட்டுரை எழுதினார்.

இப்படி ஒரு பகுதியை அவர் நவம்பர் இதழ் முதல் எழுத ஆரம்பித்திருந்தார். 'தமிழில் பிற மொழி நூல்கள்' என்ற தலைப்பில், தமிழ்நாட்டில் நடைபெற்ற மொழி பெயர்ப்பு வேலைகள் பற்றியும்,

மொழிபெயர்ப்பாளர்களின் திறமைக் குறைவு பற்றியும் விரிவாக எழுதியிருந்தார்.

டிசம்பர் இதழில் விஜயபாஸ்கரன் எழுதியது -

சில மாதங்களாக சரஸ்வதியில் வெளியான நண்பர் ஜெயகாந்தனின் சில கதைகளைப் பற்றிப் பலவிதமான விமர்சனங்களைப் பலரும் எழுதி வந்தனர். அந்த விமர்சனங்களுக்கெல்லாம் அவரே ஒரு முறை பதில் எழுதினார். மற்றும் பல முகம் அறிந்த, அறியாத அன்பர்கள் 'உங்கள் குரல்' மூலம் பதிலளித்தனர். அந்த விமர்சனப் பகுதியை, பலவிதமான வாதப் பிரதிவாதங்களுக்குப் பின், முடிவுற்றுவிட்டதாக அறிவித்தேன்.

எனினும் தொடர்ந்து எனக்கும், 'உங்கள் குரல்' பகுதிக்கும் பல நண்பர்கள் கடிதம் எழுதுகிறார்கள். அவற்றில் சில ஆபாசத்தைக் கண்டிக்கப் புகுவதாகக் கூறிக்கொண்ட போதிலும் ஆபாச விமர்சனமாக இருப்பது குறித்து வருந்தினேன்.

இன்னும் சிலர், எனக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதத்திலும், நேரிலும், மெத்த வளரும் மேற்கத்திய இலக்கிய சிருஷ்டிகளைப் பாருங்கள். கார்க்கி என்ன, டால்ஸ்டாய் என்ன, செக்காங் என்ன, மாபசான் என்ன, ஹ்யூகோ என்ன, எமிலி ஸோலா என்ன, இன்னும் நமது நாட்டின் முற்போக்கு எழுத்தாளர்களான முல்க்ராஜ் ஆனந்த், அப்பாஸ், கிருஷ்ணசந்தர் முதலியவர்கள் என்ன- அவர்களின் எழுத்தை யெல்லாம் படித்துப் பார்த்தீர்களா? மனித உணர்ச்சிகளும், மனித வாழ்வும், எதார்த்த நோக்கும் எப்படிப் பரிமளிக்கின்றன! அவர்களைப் போல் எழுத வேண்டாமா? அந்த முயற்சிகளை எல்லாம் நாமும் கைக்கொள்ள வேண்டாமா? ஜெயகாந்தனைப் போல, அபத்த ஆபாசக் களஞ்சியங்களை சிருஷ்டிக்க இடம் தரலாமா என்றெல்லாம் எழுதினார்கள்; பேசினார்கள்.

நான் மௌனமாய் இருந்தேன். ஜெயகாந்தனின் கதைகளைப் பற்றி நடந்த வாதப் பிரதிவாதங்களின்போது நான் எப்படி மௌனம் சாதித்தேனோ அதே மௌனத்தை சாதித்தேன். என் மௌனத்தைக் கலைக்கும் சந்தர்ப்பத்தை இம்மாதப் புத்தகச் சுருக்கம் எனக்கு அளித்தது குறித்து நண்பர் வல்லிக்கண்ணனுக்கு என் நன்றி.

- இலக்கியத்தில் ஆபாசம்! ஆபாசம் எது என்பதைப் பற்றிப் பிறகு வைத்துக் கொள்வோம். இலக்கியத்தில் ஆபாசம் இருக்கலாமா, கூடாதா? ஆபாசம் இல்லாத 'சந்நியாசி இலக்கியம்' உண்டா இல்லையா? சந்நியாசி இலக்கியத்திலாவது ஆபாசம் இல்லாமலிருந்ததா?

இதற்குப் பதிலளிக்க முயற்சிப்போம். இலக்கியத்தில் ஆபாசம் இருக்கலாம். (ஆம். முற்போக்கு இலக்கியத்திலும் கூட) ஆபாசம் இல்லாதது 'காற்றடைத்த பையடா' இலக்கியம்தான். அதிலும் கூட ஆபாசத்தை வெறுக்கும் முறையில் எத்தனையோ ஆபாசங்கள் இருப்பதைக் காணமுடியும். . . .

இப்படி மேலும் விளக்கங்கள் கூறிவிட்டு விஜயபாஸ்கரன் எழுதியிருந்தார் :

ஒருசில வார்த்தைகளுக்காக ஒருவரின் எழுத்தையே அபத்தமென்றும் ஆபாசமென்றும் முடிவுகட்டிவிட்டு, பிற நூல்களைப் படிக்காமலேயே அதைப் படித்துப் பார், இதைப் படித்துப் பார், அவரைப் போல எழுது என்று சிலர் எழுதியதனாலேயே, எமிலி ஸோலாவின் இந்த 'நிலம்' புத்தகச் சுருக்கமாக வருகிறது.

இந்த நூலில் பல இடங்களில் நீங்கள் எதை 'ஆபாச'மென்று கருதுகிறீர்களோ அவை வருகின்றன. அவை ஆபாசமா? இல்லை என்பதே என் அபிப்பிராயம். இந்த நவீனம் பிறந்த சூழ்நிலையை மனதில் கொண்டால்தான் இந்த உண்மையை அறியமுடியும். ஆம். அன்றைய பிரெஞ்சு நாட்டு விவசாயியின் வாழ்க்கை அப்படியெல்லாம் இருந்திருக்கிறது. அதில் கிளைத்து நிற்கும் மண்ணாசை – அதையும் கவனியுங்கள். எமிலி ஸோலாவின் உலகப் புகழ் பெற்ற நாவல் 'நிலம்'. உலகம் இதை ஆபாச இலக்கியம் என்று கூறவில்லை என்பது கவனத்திற்குரியது.

ஜெயகாந்தனின் கதைகளை ஆபாசமென்று கூறிய அன்பர்கள் இந்தப் புத்தகச் சுருக்கத்தைப் படித்துவிட்டு மீண்டுமொரு முறை அவருடைய கதைகளைப் பரிசீலிக்கவும்.

இந்த டிசம்பர் இதழில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு முக்கிய விசேஷமும் இருந்தது. அதுவரை 'முற்போக்கு இலக்கிய' அம்சங்களைக் கொண்ட கதைகளை மட்டுமே எழுதிக் கொண்டிருந்த சுந்தர ராமசாமி இதர ரகமான, சுவாரஸ்யம் மிகுந்த, சிறுகதைகளைப் படைப்பதில் ஆர்வம் காட்டலானார். அத்தன்மையில் அவரது முதல்கதை என்று சொல்லப்பட வேண்டிய 'கைக்குழந்தை' இந்த இதழில் இடம் பெற்றிருந்தது.

இந்த விதமாக சரஸ்வதி வரலாற்றுச் சிறப்புக்கு உரிய நவமான இலக்கிய சாதனைகளைப் புரிந்து வந்த போதிலும், விஜயபாஸ்கரன் முன்கூட்டியே திட்டமிட்டது போல் நடக்கவில்லை. பத்திரிகையில்

நஷ்டம் அதிகரித்துக்கொண்டிருந்தது. அதைப் பற்றி இதழில் அவர் அவ்வப்போது குறிப்பிடலானார். இலக்கிய அபிமானிகள் பலரும் சந்தாக்கள் சேகரித்து உதவிபுரிய வேண்டும் என்ற கோரிக்கை சரஸ்வதியில் அடிக்கடி இடம்பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பத்திரிகையை நிறுத்திவிட வேண்டிய நெருக்கடி நிலைமை தோன்றிவிடுமோ? என்றுகூட வி.பா. சஞ்சலப்பட்ட சமயங்கள் உண்டு. ஆயினும், மன உறுதியோடு, சிறப்பான ஆண்டு மலர் ஒன்றுகொண்டு வந்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்டார் அவர்.

பத்திரிகை நடத்துவதில் உள்ள சிக்கல்களை அதிகரிக்கும் விதத்தில், காகிதத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்து கொண்டிருந்தது. போட்டோ தொழிற் பொருள்களின் விலை, பிளாக்குகள் செய்யும் செலவு ஏற்றம் என்று பல வகைகளிலும் நெருக்கடி உண்டாயிற்று. எனினும், 60 பைசா விலையில், 144 பக்கங்களில் சரஸ்வதி மலர் வெளியிடப்பட்டது.

வண்ணப் படங்கள் வெளியிட இயலவில்லை. நான்கு பக்கங்களில், நடராஜர் சிலை, கன்னியாகுமரி, மதுரை மீனாட்சி கோயில், மாமல்லபுரம் கோயில்கள், மயிலை கபாலீஸ்வரர் கோயில் தோற்றங்களைக் கறுப்பு மையில் அச்சிட்டுத் திருப்திப்பட நேரிட்டது. ஆகாய நீலத்தைப் பின்புலமாகக் கொண்டு எடுப்பாக நிற்கும் மாமல்லபுரம் கற்கோயிலின் காட்சி வசீகரமான அட்டைப்படமாக அமைந்தது. உள்ளடக்கத்தில் மலர் தரமும் சுவையும் மிக்கதாக விளங்கியது.

தி.ஜ.ர., எஸ். ராமகிருஷ்ணன், வை. கோவிந்தன், டி. செல்வராஜ், கே. ராமநாதன், எச்.எம்.பி. முஹிதீன், தி.க. சிவசங்கரன், இஸ்மத் பாஷா, சி.எஸ். சுப்ரமணியம், கண. முத்தையா, நா. வானமாமலை, க. கைலாசபதி, சாமி. சிதம்பரனார் கட்டுரைகள்; ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, விந்தன், வல்லிக்கண்ணன் கதைகள்; ரகுநாதனின் 'சுரவியப்பரிசு' எனும் கவிதை நாடகம் - இவை மலருக்குச் சிறப்பு அளித்தன.

தமிழில் சிறந்த இலக்கியப் பத்திரிகை என்ற பெருமையை மூன்றாவது ஆண்டில் சரஸ்வதி அடைந்துவிட்டது. இலக்கிய ஆர்வம் கொண்ட எழுத்தாளர்களும் ரசிகர்களும், புத்தக வெளியீட்டாளர்களும் சரஸ்வதியின் ஒவ்வொரு இதழையும் எதிர்பார்த்து, வரவேற்று, படித்துப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

என்றாலும், ஒவ்வொரு இதழும் ஆசிரியர் விஜயபாஸ்கரனுக்கு ரூ.150 'கைப்பிடித்தம்' ஏற்படுத்தி வந்தது. அந்நாட்களில் நூற்றைம்பது ரூபாய் என்பது பெரும்தொகைதான். இந்த இழப்பு பற்றி அவர் நண்பர்கள் பலரிடமும் சொல்லிக் கொண்டிருந்தார். பத்திரிகை வளர்ச்சியில் அக்கறை காட்டிய அன்பர்களும் இதை உணர்ந்து உதவிபுரிவது பற்றி யோசனைகள் தெரிவித்தார்கள்.

தூத்துக்குடி தோழர் எஸ்.ஏ. முருகானந்தம், 'சரஸ்வதி வளர்ச்சி நிதி' திரட்டுவதற்கான கோரிக்கையை முன்வைத்து, தன்னால் இயன்ற சிறு தொகையை அனுப்பினார். மு.ரா. சீனிவாசன் என்ற வாசக நேயர் சந்தாக்கள் சேர்த்து உதவிக் கொண்டிருந்தார். வளர்ச்சி நிதி யோசனையை வரவேற்று ஒன்பது ரூபாய் அனுப்பினார். இருப்பினும், நிதி உதவி உற்சாகம் அளிக்கக்கூடிய விதத்தில் வந்து சேரவில்லை.

நான்காவது ஆண்டில், சரஸ்வதியின் அளவில் மாற்றம் செய்தார் விஜயபாஸ்கரன். அதுவரை சிறிய வடிவத்தில் - கிரவுன் சைசில் வந்து கொண்டிருந்த இதழை 'டெம்மி சைசு'க்கு பெரிது படுத்த அவர் திட்டமிட்டார்.

திடீரென்று பத்திரிகைக் காகிதம் சந்தையிலிருந்து பதுங்கிவிட்டது. யுத்த காலத்தில் காகிதத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது போல, 1958லும் ஏற்பட்டது. ஆகவே, அதிக விலை கொடுத்து காகிதம் வாங்கி இதழை வெளியிட நேரிட்டது. அதனால் அவருக்கு அதிகப்படியாக ரூ.200 நஷ்டம்.

எனினும், விஜயபாஸ்கரன் மனம் தளராமல், சரஸ்வதியை பெரிய அளவில் மாதம் தோறும் வெளியிட்டு வந்தார். 'விகடன்' அளவில் 80 பக்கங்கள், 40 பைசா விலை என்று சரஸ்வதி விஷய கனத்துடன் வளர்ந்து வந்தது.

வழக்கமான தொடர் அம்சங்கள் இருந்தன. ஒவ்வொரு இதழிலும் சாமி சிதம்பரனார் கட்டுரையும், ஜெயகாந்தன், வல்லிக் கண்ணன் கதைகளும் தவறாது வந்தன. டி. செல்வராஜ், வேந்தன், கு.சின்னப்ப பாரதி போன்றோர் அவ்வப்போது கதைகள் எழுதினார்கள். திருச்சிற்றம்பலக் கவிராயர் அதிகம் கவிதைகள் தந்தார். புத்தக விமர்சனம் இதழ் தோறும் இடம் பெற்றது. பெரும்பாலான புத்தகங்களுக்கு நான்தான் மதிப்புரை எழுதினேன். இலக்கிய உலகப் பெரியவர்களைப் பற்றிய சுவையான வரலாற்றுச் செய்திகள், ரசமான துணுக்குகள், ஒரு பக்கக் கதைகள் போன்றவற்றையும் நான் எழுதிக் கொண்டிருந்தேன்.

நான்காவது ஆண்டில் புதுமைகள் எனக் குறிப்பிடப்பட வேண்டியவை :

செக்கோஸ்லோவேகிய நாட்டின் தமிழ் அறிஞர் டாக்டர் கமில் ஸ்வெலபில் சென்னைக்கு வந்திருந்தார். ரகுநாதன் அவரைப் பேட்டி கண்டு, ஏப்ரல் இதழில், 'கமிலைச் சந்தித்தோம்' என்றொரு சிறப்பு கட்டுரை எழுதியிருந்தார். அந்த இதழின் அட்டையில் கமில் ஸ்வெலபில் படம் அச்சானது.

மே இதழ் முதல், அட்டையில் எழுத்தாளர் படம் வெளியிடும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. 'நமது எழுத்தாளர் வரிசை' என்று, அந்தந்த எழுத்தாளர் பற்றி ஒரு பக்கம் அறிமுகக் கட்டுரையை ஆசிரியர் எழுதினார். இந்த வரிசையில், சாமி சிதம்பரனார், எஸ். ராமகிருஷ்ணன், சிதம்பர ரகுநாதன், வல்லிக்கண்ணன் படங்கள் வெளியிடப்பட்டன. இது ஆகஸ்டு மாதம் முடிய அதற்குப் பிறகு சரஸ்வதி மாதம் இருமுறை வெளியீடாக ஆக்கப்பட்டது.

இதழ் தோறும் அரசியல் குறிப்புகள் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எஸ்.ஆர்.கே. 'தராசு' என்ற தலைப்பில் எழுத முன் வந்தார். ஒன்றிரு இதழ்களில்தான் இது இடம் பெற்றது.

மகாகவி வள்ளத்தோள், சக்கரைச் செட்டியார், ஆனந்த குமாரசாமி போன்ற பிரபலஸ்தர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளை கே. ராமநாதன் எழுதிக்கொண்டிருந்தார்.

பால் ரோப்சன், தகழியின் செம்மீன், லெபனான் போன்ற அவ்வப்போது செய்தி முக்கியத்துவம் பெறுகிற விஷயங்கள் பற்றி வி. ராதாகிருஷ்ணன் கட்டுரைகள் எழுதினார். மாஸ்கோ சென்று சில தினங்கள் தங்கி வந்திருந்த இலங்கை எழுத்தாளர் எச்.எம்.பி. முஹிதீன் 'கார்க்கியைக் கண்டேன்' என்றொரு நீண்ட கட்டுரையை எழுதினார். இது தொடர்ந்து பிரசுரமாயிற்று.

அவ்வப்போது 'இலங்கைக் கடிதம்' வெளிவந்தது. இதை 'எச்.எம்.பி' எழுதிக்கொண்டிருந்தார். சரஸ்வதி இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகளை வரவேற்றுப் பிரசுரித்தது. ஆகஸ்டு முதல், டொமினிக் ஜீவா, கே. டானியல், சில்லையூர் செல்வராஜன் முதலிய எழுத்தாளர்கள் கதைகள் எழுதலானார்கள்.

'மெய்கண்டான்' எழுதிய 'புதுக்குறள்' இதழ்தோறும் வந்தது.

சரஸ்வதி யின் வரலாற்றில் முதல் தடவையாக, 'மணிக்கொடி எழுத்தாளர்', சி.சு. செல்லப்பா கட்டுரை எழுதினார். 'தமிழ் நாவலும் பண்பாடும்' எனும் கட்டுரை மே இதழில் வெளியாயிற்று.

க.நா. சுப்ரமணியம் சரஸ்வதிக்குத் தனது ஒத்துழைப்பைத் தர முன்வந்தார். அவருடைய சிறுகதை ஜூன் இதழில் வந்தது. 'எது இலக்கியம்?' என்ற கட்டுரை ஜூலையில் வந்தது. திருக்குறள் இலக்கியம் இல்லை. அது 'பாராயண நூல்.' மேடைப் பிரசங்கிகளுக்கு நன்றாக எடுத்துக் கையாளுவதற்கு உபயோகமாகும் ஒரு Book of Quotations. பிறர் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று உபதேசிக்க விரும்புகிறவர்களுக்கு ஒரு சுரங்கம். இலக்கியம் என்கிற பெயரால் குறளைப் பெருமைப்படுத்துவதற்கு அர்த்தமேயில்லை என்றுதான் தோன்றுகிறது என்று க.நா.சு. தனது கருத்தை அழுத்தமாகக் கூறியிருந்தார் இக்கட்டுரையில். இலக்கியத்துக்குப் பதில் 'பக்தி இலக்கியங்கள்' வளர்ந்து தழைத்துக் கொண்டிருப்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

சரஸ்வதி பிறமொழிச் சிறுகதைகளின் மொழி பெயர்ப்புக்களுக்கும் நாடகங்களுக்கும் இடம் அளித்து வந்தது.

ஐந்தாம் ஆண்டில் சரஸ்தி மாதம் இருமுறைப் பத்திரிகையாக மாற்றப்பட்டது. 20-1-1958 அன்று, முதலாவது இதழ் வெளியாயிற்று. அத்துடன், 'சரஸ்வதியின் இலக்கிய வளர்ச்சிப் பணியை மேலும் மேம்படுத்த சிறந்த எழுத்தாளர்களைக் கொண்ட ஒரு ஆசிரியர் குழுவும் அமைக்கப்பட்டருக்கிறது. இந்தக் குழுவில் திருவாளர்கள் எஸ். ராமகிருஷ்ணன், ரகுநாதன், சுந்தர ராமசாமி, ஆர்.கே. கண்ணன் முதலிய நால்வரும் நானும் இருக்கிறோம்' என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய ஏற்பாட்டுக்கு அடிப்படையான காரணம் இருந்தது. விஜயபாஸ்கரன் கம்யூனிஸ்ட் ஆக இருந்த போதிலும் ஒரு நல்ல இலக்கியப் பத்திரிகை நடத்தவே ஆசைப்பட்டார். அவர் நடத்தும் பத்திரிகைக்கு 'கம்யூனிஸ்ட் கலர்' ஏதும் வந்துவிடக் கூடாது என்றும் விரும்பினார். என்றாலும், தனது பத்திரிகையை அவர் ஜனசக்தி அச்சகத்திலேயே அச்சிட்டு வந்தார். வேறு பிரசில் அச்சடிப்பதைவிட, ஜனசக்தி பிரசில் அச்சிட்டால் அந்தப் பணம் கட்சி நலனுக்குப் பயன்படுமே என்ற நல்லெண்ணம்தான் காரணம். ஜனசக்தி வெளியீட்டில் அதிக அக்கறையோடிருந்த கட்சி நண்பர்கள் சிலரின் யோசனையும் காரணமாயிற்று.

சரஸ்வதி வெற்றிகரமாக வளர்ந்து நல்ல பெயர் பெற்று வந்தது. கட்சி அபிமானி ஒருவர் நடத்துகிற இலக்கியப் பத்திரிகை இவ்வளவு சிறப்பாக வளர்கிறதே என்று கட்சித் தலைமையும், கட்சி நலனில் ஆர்வம் உடையோரும் மகிழ்ந்திருக்க வேண்டும். அதுதான் நியாயம்.

ஆனால் இங்கோ நிலைமை நேர்மாறாக இருந்தது. கட்சிப் பத்திரிகையான 'ஜனசக்தி' ஒரே சீராக, வெற்றிகரமாக வளரவில்லை. இது வரலாற்று உண்மை. அவ்வப்போது முற்போக்கு இலக்கியப் பத்திரிகை என்றும், அரசியல் தத்துவப் பத்திரிகை என்றும் தலைவர் ஜீவானந்தம் கட்சி ரீதியில் புதியபுதிய முயற்சிகளை ஆரம்பித்து, வெற்றி காண முடியாமல் நிறுத்தி விட்டதும் வரலாறுதான். ஆகவே, தனி ஆள் ஒருவர் இவ்வளவு வெற்றிகரமாக முற்போக்கு இலக்கியப் பத்திரிகை ஒன்றை நடத்துவது அவருக்குப் பிடிக்கவில்லை.

கட்சி அபிமானி ஒருவர், கட்சியின் கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் நல்லது செய்யும் செய்யும் முறையிலேயே, வெற்றிகரமாக ஒரு இலக்கியப் பத்திரிகை நடத்தும்போது கட்சித் தலைமையும், கட்சியின் முக்கியஸ்தர்களும் அந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஆதரவு நல்கினால், அது பாராட்டுதலுக்கு உரிய பண்பு ஆகும். மகிழ்ச்சி கொள்ளாமல், ஆதரவு காட்டாமல் போயினும் கூட, இடைஞ்சல்கள் ஏற்படுத்தாமலாவது இருந்திருக்கலாம். ஆனால், சரஸ்வதியின் வரலாறு காட்டுகிற பாடம் வேறு விதமாக உள்ளது.

சரஸ்வதியின் விற்பனையாளர்கள் பலர் 'ஜனசக்தி' ஏஜண்டுகளேதான். பல ஊர்களில் கட்சியின் முக்கியஸ்தர்களே பத்திரிகையைப் பரப்பும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுடைய ஆதரவைத் தொடர்ந்து பெறுவதற்காகத்தான் புதிதாக ஏற்பட்ட 'ஆசிரியர் குழு' அறிவிப்பு கட்சி நலனில் ஆர்வமும், கம்யூனிசக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடும் கொண்ட எழுத்தாளர்களை ஆசிரியர் குழுவாக்கினால், பத்திரிகைக்கு ஆதரவாளர்கள் குறையாமல் இருப்பார்கள் என்று விஜயபாஸ்கரன் எண்ணினார். வேறு சிலரும் இந்த யோசனையை ஆதரித்திருக்கலாம்.

பத்திரிகையின் தரம் மேலும் உயர்வதற்கு இந்த ஏற்பாடு எவ்வகையிலும் பலன் அளித்துவிடவில்லை. ஆசிரியர் குழு என விளம்பரப்படுத்தப்பட்டு வந்ததால், சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள், சிறிது காலத்துக்கு, அதிகமாக எழுதி உதவினார்கள். விஜயபாஸ்கரன் தான் ஆசிரியப் பொறுப்பு முழுவதையும் கவனித்து வந்தார். வழக்கமாக ஒத்துழைக்கும் நண்பர்கள் இடையறாது தங்கள் தொண்டினைச் செய்து கொண்டுதானிருந்தார்கள்.

சரஸ்வதியின் வளர்ச்சிக்கு ஊறு செய்யக்கூடிய விதத்தில் ஜீவானந்தம் கட்சியிலிருந்து 'தாமரை' என்ற பெயரில் ஒரு இலக்கியப் பத்திரிகையைத் தொடங்கினார். தாமரை வெளிவரத் தொடங்கியதும்,

ஜனசக்தி அச்சகத்தில் சரஸ்வதி அலுவல்கள் பின்னுக்குத் தள்ளப் பட்டன. எப்பொழுதும் தாமரை வேலைகளுக்குத் தான் முதலிடம் என்ற நிலை ஏற்பட்டது. தாமரை கட்சியின் சொந்தப் பத்திரிகை, சரஸ்வதி வெளி ஆள் பத்திரிகை என்ற நிலைமையும் தானாகவே ஏற்பட்டு விட்டது.

சரஸ்வதி மாதம் இருமுறை வெளியீட்டின் முதல் இதழில் (20-9-1958) இலங்கை எழுத்தாளர் எச்.எம்.பி. முஹிதீன் படம் அட்டைப் படமாக விளங்கியது. (அக்டோபர் 10ஆம் தேதி இதழில் மகாத்மா காந்தி படம்) 25-10-58 இதழ் அட்டையில் ஜெயகாந்தன் படம். நவம்பர் 10 இதழில் டொமினிக் ஜீவா. 25ஆம் தேதி இதழில் கே. ராமநாதன். டிசம்பர் 10இல் கே. டானியல். 25இல் நா. வானமாமலை ஆகியோரின் படங்கள் பிரசுரமாயின. 'நமது எழுத்தாளர் வரிசை' அறிமுகம் செய்யும் முயற்சி அத்துடன் முடிந்தது.

மாதம் இருமுறையின் முதல் இதழிலிருந்து சுவாரசியமான ஒரு புதிய பகுதி தொடரலாயிற்று. 'சென்னைக்கு வந்தேன்' என்ற கட்டுரை வரிசைதான் அது.

'எழுத்தாளர்கள் பலர் சென்னையைத் தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டிருக்கின்றனர். பல ஊர்களில் பிறந்து வளர்ந்தவர்கள் சென்னையில் எழுத்தாளராகக் குடியேறி இலக்கிய சேவை செய்து வருகின்றனர். எழுத்துலகில் புகுவதற்காகச் சென்னை வந்தபோது என்னென்ன அனுபவங்கள் இவர்களுக்குக் கிடைத்தன என்று அறிவது ரசமாக இருக்கும். இலக்கிய உலகத்தின் வளர்ச்சிப் போக்குகளையும் புரிந்துகொள்ள முடியும். இந்த நோக்கத்தோடு இந்தப் புதிய பகுதியைத் துவக்கியிருக்கிறோம்'என்று ஆசிரியர் குறிப்புடன் 'நினைவு அலைகள்' எனும் பொதுத்தலைப்பில் இவ்வரிசை ஆரம்பமாயிற்று.

சி.சு. செல்லப்பா, க.நா. சுப்ரமண்யம், வல்லிக்கண்ணன், கே. ராமநாதன், கு. அழகிரிசாமி, சாமி. சிதம்பரனார், அசோகன், ந. சிதம்பர சுப்ரமணியன், ஜெயகாந்தன் ஆகியோர், 'சென்னைக்கு வந்தேன்' என்று தங்கள் அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் சுவையாகவும் சூடாகவும் எழுதினார்கள். ஒவ்வொரு கட்டுரையும் தனித்தன்மையோடு அருமையான எண்ணக் களஞ்சியமாக அமைந்திருந்தது.

மாதம் இருமுறை காலத்தில் சரஸ்வதிக்கு க.நா.சு. வின் சேவை மிகுதியாகக் கிட்டியது. மயன் என்ற பெயரில் அவர் இதழ்தோறும்

கவிதைகள் எழுதினார். நாவலுக்கு விஷயம், தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, இலக்கிய விவாதங்கள், 'குசிகர் குட்டிக் கதைகள்' (அ. மாதவையா எழுதிய கதைகள் பற்றியது) என்ற கட்டுரைகளும் எழுதினார்.

எஸ். ராமகிருஷ்ணன், பாரதியின் கடவுட் கொள்கை, சர்வோதயம், சக்கரவர்த்தி, பீட்டர் போன்ற கட்டுரைகள் எழுதினார்.

சரஸ்வதி சிறுகதைக்கு எப்போதும் போல் தாராள இடம் அளித்து வந்தது. 'காலத்தால் சாகாத கதை'களும் புதிய சோதனை முயற்சிகளும், வளமான கற்பனைகளும், கலைநயப் படைப்புகளும் சரஸ்வதியில் மிகுதியாகவே வந்துள்ளன.

இலங்கை எழுத்தாளர்கள் டொமினிக் ஜீவா, கே. டானியல், காவலூர் ராசதுரை, சில்லையூர் செல்வராசன் கதைகள் அடிக்கடி வந்தன. வித்வான் நடராசா, முருகையன், எச்.எம்.பி. முஹிதீன், பிரேம்ஜி ஆகியோரும் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

இதழ் தோறும் கவிதைகள் பல இருந்தன. வழக்கம் போல் புத்தக விமர்சனப் பகுதியை நான் கவனித்து வந்தேன்.

சரஸ்வதி இலக்கியத் தரத்திலும் லட்சிய நோக்கிலும் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆனால், அச்சகத்தில் நல்ல ஒத்துழைப்பு கிட்டவில்லை.

சரஸ்வதியின் சாதனைகளைக் கொண்டாடும் விதத்தில் சிறப்பான முறையில் ஒரு ஆண்டு மலர் வெளியிடத் திட்டமிட்டார் விஜயபாஸ்கரன். 120 பக்கங்கள், ஒரு ரூபாய் விலை என்றும், மலரில் எழுதும் எழுத்தாளர்களின் பெயர்களையும் தெரிவித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். சுமார் 4000 பிரதிகளுக்கு ஆர்டர் கிடைத்திருந்தது. இந்த நிலையில் தாமரையும் ஒரு திடீர் மலரை வெளியிட முன்வந்து, அதற்கான அறிவிப்பைப் பெரிய விளம்பரமாக ஜனசக்தியில் பிரசுரித்தது. சரஸ்வதி மலரில் எழுதுபவர்கள் என்று யார் யார் பெயரெல்லாம் அறிவிக்கப்பட்டிருந்ததோ, அந்தப் பட்டியலை அப்படியே போட்டு விளம்பரம் வந்தது. பக்கங்கள் 128 என்றும், விலை எட்டணா என்றும் அறிவித்திருந்தார்கள்.

அதனால் ஆத்திரம் அடைந்த விஜயபாஸ்கரன் வீம்புடன் சரஸ்வதி மலரின் பக்கங்களை 156 எனக் கூட்டி ஜனசக்தியிலேயே விளம்பரம் செய்தார்

ஜனசக்திக்காரர்கள் சரஸ்வதி மலர் தயாரிப்பைத் தாமதப்படுத்தினார்கள். தாமரையின் அறிவிப்பு ஏஜண்டுகளின் நிலையைப் பெரிதும் பாதித்தது. சரஸ்வதி ஏஜண்டுகள்தான் தாமரைக்கும் ஏஜண்டுகள் என்பதால், அதே எழுத்தாளர்கள் எழுதும் தாமரை மலர் எட்டணாவுக்குக் கிடைக்கும் என்கிறபோது, சரஸ்வதி மலரை ஒரு ரூபாய் கொடுத்து ரொம்பப் பேர் வாங்கமாட்டார்கள் என்று கூறி ஆர்டரைக் குறைத்தார்கள். முன்பு 500 பிரதிகளுக்கு ஆர்டர் கொடுத்தவர்கள் இப்போது 250 பிரதிகள் போதும் என்று தெரிவித்தார்கள். இப்படியே எல்லோரும் குறைத்து விட்டார்கள். அச்சகத்திலும் வேண்டுமென்றே தாமதம் செய்து சரஸ்வதி மலரை அடுத்த மாதம் 15 தேதி வரை கூட வெளியிட முடியாதபடி ஆக்கிவிட்டார்கள்.

இதனால் விஜயபாஸ்கரனுக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளில் சரஸ்வதியால் ஏற்பட்ட மொத்த நஷ்டத்தில் பாதி இந்த ஒரு மலரிலேயே ஏற்பட்டுவிட்டது.

ஆனாலும் கூட, 'சரஸ்வதி ஆண்டுமலர்' (1959) 'ஆகச்சிறந்த தயாரிப்பாக', அருமையான இலக்கியக் களஞ்சியமாக விளங்கியது. 200 பக்கங்கள். அவ்வளவும் விஷயங்கள். படங்கள் கிடையாது. விளம்பரங்கள் இல்லை. கதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகம், ஒரு முழு நாவல் (வல்லிக்கண்ணன் எழுதிய 'துணிந்தவன்') - எல்லாம் இனிக்கும் இலக்கியப் படையல்கள். ரசிகர்களுக்கு நல்விருந்து அந்த மலர்.

ஆண்டு மலர் மிகுந்த கால தாமதத்துடன் வந்ததனால், அடுத்து வரவேண்டிய சாதாரண இதழும் பிந்திவர நேரிட்டது. 1959 பிப்ரவரியில் இதழ் வரவில்லை. மலர் 6 - இதழ் 2 என்று எண்ணிக்கை பெற்ற சரஸ்வதி மார்ச் 10ஆம் தேதிதான் வந்தது.

அதில் ஒரு முக்கியப் பிரச்சனை விவாதத்துக்கு உரியதாகியிருந்தது. சாகித்ய அகாடமி தமிழ் மொழியில் ஆண்டு தோறும் நூல்களுக்குப் பரிசு அளித்து வந்ததில் நேர்மையும் நியாயமும் இல்லை என்று குற்றம் சாட்டி ஆசிரியர் ஒரு கட்டுரை எழுதினார்.

1954இல் சாகித்ய அகாடமி தோற்றுவிக்கப்பட்டது. 1955இல் ரா.பி. சேதுப் பிள்ளை எழுதிய 'தமிழின்பம்' என்ற கட்டுரைத் தொகுதிக்குப் பரிசு வழங்கப்பட்டது. ரா.பி. சேதுப் பிள்ளை அகாடமியின் கமிட்டிகளில் முக்கிய அங்கத்தினராக இருந்தார். பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல் முதல் பதிப்பும் இல்லை.

மூன்றாம் பதிப்பு. அகாடமியின் விதிகளுக்கு முரணான விஷயங்கள் இவை.

இரண்டாவது ஆண்டில் (1956) பரிசு கல்கியின் 'அலைஓசை' நாவலுக்குத் தரப்பட்டது. அந்த ஆண்டுக்கு இரண்டு வருடங்கள் முன்பே ஆசிரியர் கல்கி இறந்துவிட்டார். இறந்து போன ஒருவரின் படைப்புக்குப் பரிசு வழங்கப்பட்டதற்குத் திரைமறைவுக் காரணங்கள் உண்டு என்று பேசப்பட்டது.

1957இல் எந்தப் புத்தகமுமே பரிசுக்குத் தகுந்ததாக இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது. கமிட்டி அங்கத்தினர்களில் முக்கியமான சிலபேர் பரிசு என் புத்தகத்துக்கு வேண்டும், எனக்கே வேண்டும் என்று சண்டை பிடித்துக் கொண்டதால், திருப்திகரமான சமாதானம் ஏற்படாததால் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது எனச் சொல்லிக்கொண்டார்கள்.

1958இல் ராஜாஜி எழுதிய 'சக்கரவர்த்தித் திருமகள்' என்ற நூலுக்கு அளிக்கப்பட்டது. முதலாவதாக, இது சொந்தப் படைப்பு இல்லை. வால்மீகி ராமாயணத்தின் கதைச் சுருக்கம். இரண்டாவதாக, இந்த நூலின் முதல் பதிப்பு 1956ஆம் வருடமே வந்துவிட்டது. அகாடமியின் 1957ஆம் வருட முடிவின்படி, 'நியாயமாக எந்த ஒரு ஆண்டிலுமே பரிசு பெறத் தகுதி இல்லாத' நூல்களில் அதுவும் ஒன்று என்றாகிவிட்டது. இருப்பினும், அடுத்த வருடமே அகாடமி அதற்குப் பரிசு கொடுக்கத் துணிந்தது. இதற்கும் திரைமறைவுக் காரணங்கள் இருந்ததாகப் பேச்சு வளர்ந்தது. கண்டனக் குரல்கள் எழுந்தன. இந்த நியாயமான சீற்றத்தின் குரலாகச் சரஸ்வதி செயல்பட்டது.

சாகித்ய அகாடமியின் செயலைக் கண்டித்து, விஜய பாஸ்கரன் 'நோக்கமும் செயலும்' என்று ஆசிரியர் குறிப்பு எழுதினார். அந்த இதழ் ஒரு கடிதத்துடன் அகாடமிக்கு அனுப்பிவைக்கப் பட்டது. அகாடமியிடமிருந்து வந்த பதிலும், அதன் மேல் 'ஆசிரியர் குழு'வைச் சேர்ந்த எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய கருத்துரையும் 10-4-1959 இதழில் பிரசுரமாயின.

சாகித்ய அகாடமி விவகாரம் பற்றி ரகுநாதன் 'சாகித்ய அகாடமியும் தமிழும்' என்ற தலைப்பில் விரிவாகவும் விளக்கமாகவும் ஒரு கட்டுரை எழுதினார். அது இரண்டு இதழ்களில் வெளிவந்தது. அகாடமியின் விதிகள், பரிசீலிக்கப்பட்ட நூல்களின் தன்மைகள், குழுவினர் பற்றிய விவரங்கள், அவர்கள் சம்பந்தமான திரைமறைவுச்

செய்திகள் முதலியவற்றைத் தெளிவாக எடுத்துச்சொல்லி, தனது கருத்தை அழுத்தமாகவும் ஆணித்தரமாகவும் வெளியிட்டிருந்தார். இவ்விவகாரத்தில் சரஸ்வதியின் பணியும், ரகுநாதன் கட்டுரையும் மிகுந்த கவனிப்பையும் பாராட்டுதலையும் பெற்றன.

சரஸ்வதி தொடர்ந்து கனமான கட்டுரைகளையும், தரமான சிறுகதைகளையும் பிரசுரித்து வளர்ந்தது. இளம் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் இடம் அளித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சரஸ்வதியில் புதிதாக வரத் தொடங்கிய 'ஓய்வு நேரத்தில்' எனும் பகுதி பலரது கவனத்தைக் கவர்ந்து, பெரும் பேச்சுக்குப் பொருளாயிற்று. அ. தைரியநாதன் எழுதிய இலக்கிய வம்பு அது. எழுத்தாளர்களைப் பற்றிய அக்கப்போர், குதர்க்கமாகவும் கிண்டலாகவும் குத்தலாகவும் எள்ளல் தன்மையோடும் சுவாரசியமாக எழுதிவந்தது யார் என்று தெரிந்து கொள்ள வாசகர்கள் பெரிதும் விரும்பினார்கள். 'அ. தைரியநாதன் தான் எழுதுகிறார்' என்றுதான் பதில் தரப்பட்டது. ஆயினும், க.நா. சுப்ரமண்யம்தான் அந்தப் பெயரில் எழுதிக் கொண்டிருந்தார் என்பது தெரியாமல் போகவில்லை.

ஆண்டுமலரை வெளியிட்டதற்குப் பின்னர் சரஸ்வதியின் சிரமங்கள் அதிகரித்தே வந்தன. சந்தா சேகரிப்பு முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதழ் வெளிவர முடியாமல் போன சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டன. விஜயபாஸ்கரன் தனது மனச் சோர்வையும் வேதனையையும் வெளிப்படுத்தி, 'தோற்றுவிட்டோமா?' என்று தலையங்கம் எழுதவேண்டிய அவசியமும் தலைகாட்டியது.

மே மாதம் 10/25-5-59 என்று சேர்ந்து வந்த இதழில் தனது மனத்துயரை அவர் வெளியிட்டிருந்தார். 'என் நம்பிக்கை பொய்த்து விட்டது. தோல்வியை ஒப்புக் கொள்வதில் தவறில்லை. ஐந்து ஆண்டுகள் முடிந்தும் நஷ்டம் குறையவில்லை. முன்னை விட அதிகரித்தே இருக்கிறது' என்று குறிப்பிட்டு நிலைமைகளை விரிவாக எழுதியிருந்தார்.

'பத்திரிகை நடத்துவதிலும், சரஸ்வதியின் இலக்கியப் பணியிலும் எனக்குப் பெருமிதம் நிறைய உண்டு என்பது உண்மை. எனினும் நான் சலித்துவிட்டேன். சக்திக்கு மீறி நஷ்டப்பட்டு விட்டேன் என்பதால் மன உளைச்சலும் சோர்வும் சேர்ந்து பத்திரிகையை நிறுத்தவைத்து விடுமோ என்று அஞ்சுகிறேன்' என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆயினும், சரஸ்வதி இம்முறை நின்றுவிடவில்லை. ஜூன் மாதம் மட்டும் இதழ் வரவில்லை. ஜூலை முதல் இதழ் வந்தது. புதிய பகுதிகளும் சேர்க்கப்பட்டன.

க.நா. சுப்ரமண்யம் உலகத்து நாவல்கள் பற்றி அறிமுகக் கட்டுரைகள் எழுதலானார். எழுத்தாளர்களின் அனுபவங்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் தன்மையில் 'நானும் என் எழுத்தும்' என்ற கட்டுரைத் தொடர் பிரசுரம் பெற்றது. வனா.கனா.வின் 'உதிரிப்பூக்கள்' என்ற புதிய முயற்சியும் தொடர்ந்தது. படித்த புத்தகங்களில் உணர்ந்த நயங்களும், நினைத்த எண்ணங்களும், பிறவும் சுவையான, சூடான - குதர்க்கமான மற்றும் பல ரகமான சிந்தனைகளும் இப் பகுதியில் இடம் பெற்றன.

புதுமையான வேறொரு விஷயமும் வெளிவந்தது. நல்ல கதைகள் எழுதும் திறமை பெற்ற ஜி. நாகராஜன், 'யாரும் கேட்டு விட்டால்?' என்ற தலைப்பில் 'க்விஸ்' தயாரித்து வெளியிட்டார். கேள்விகளையும் பதில்களையும் அவர் எழுதியிருந்த முறை ரசமாக இருந்தது.

புதிய நம்பிக்கையோடு விஜயபாஸ்கரன், அடுத்த இதழில், 'தோற்கமாட்டோம்' என்று தலையங்கம் எழுதினார்.

நல்ல முறையில், ஒரு லட்சிய இலக்கியப் பத்திரிகை நடத்த வேண்டும் என்ற ஆசையோடுதான் விஜயபாஸ்கரன் சரஸ்வதியை ஆரம்பித்து, தொடர்ந்து நடத்தி வந்தாரே தவிர, நாமும் பத்திரிகாசிரியர் என்ற பெயரும் பெருமையும் அடைய வேண்டும்; அதற்கேற்ற வகையில் ஆபீஸ் கெடுபிடிகள், தோரணைகளோடு பத்திரிகை நடத்த வேண்டும் என்று அவர் எண்ணியதேயில்லை. அப்படி எண்ணி அவர் செயல்பட்டிருந்தால், அதற்காக அவர் ஈடுபடுத்திய 'முதல்' ஒரு வருடத்துக்குக்கூட தாக்குப்பிடித்திராது.

விஜயபாஸ்கரன் ஆரம்பம் முதலே தனது லட்சியப் பத்திரிகையைக் 'குடிசைத் தொழில் ரீதியில்தான்' நடத்தி வந்தார். அதற்கென்று தனி ஆபீஸ் கிடையாது. அவரும் அவர் குடும்பத்தினரும் வசித்த வீட்டில் ஒரு சிறிய அறைதான் சரஸ்வதி அலுவலகம். அங்கேதான் புத்தகங்களும் பத்திரிகைகளும், தாள், பிளாக்குகள் வகையராவும், ஆசிரியரின் மேஜை நாற்காலி முதலியனவும் நெருக்கிக்கொண்டு காட்சி அளித்தன.

ஐந்தரை வருடங்களுக்கு மேலான போதிலும், சரஸ்வதிக்கு என்று தனி அலுவலகம் ஏற்பட்டதில்லை. ஆசிரியர் விஜயபாஸ்கரன்

சைக்கிளில்தான் எங்கும் போய்வந்து கொண்டிருந்தார். சரஸ்வதி எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பு என்று பணம் எதுவும் தந்ததில்லை. எழுத்தாளர்கள் லட்சிய இலக்கிய இதழுக்குத் தங்களால் இயன்ற ஒத்துழைப்பை முழுமனதுடன், அன்பளிப்பை எதிர்பாராமலே, அளித்து வந்தார்கள். ஏஜண்டுகளின் ஒத்துழைப்பின்மையாலும், உற்பத்திச் செலவுகள் அதிகரித்துக்கொண்டே போனதாலும்தான் பத்திரிகைக்கு நஷ்டமும் அதிகமாகி வந்தது.

சொந்த அச்சகம் அமைத்துக் கொண்டால் சிரமங்கள் ஓரளவு குறையலாம் என்று விஜயபாஸ்கரன் கருதினார். எனவே 'சரஸ்வதி பிரஸ்' ஏற்பட்டது. அதன்மூலம் சரஸ்வதிக்கும் தனி அலுவலகம் கிட்டியது.

சேப்பாக்கம், மியான்சாகிப் தெரு, 33ஆம் எண் கட்டிடத்தில் அச்சகம் இருந்தது. பத்திரிகையின் தபால் விலாசம், 19, லேங்ஸ் கார்டன் ரோடு, சென்னை-2 என்றே தொடர்ந்தது. அச்சகத்தில் அச்செழுத்துக்கள் போதுமான அளவு இருந்தன. டிரெடில் மிஷின் ஒன்று பெயரளவில் இருந்தது. இங்கு அச்சுக் கோர்த்து வெளியே எங்காவது கொண்டுபோய் ஒரு பிரசில் அச்சடித்து வரவேண்டிய நிலைமை.

ஆறாம் ஆண்டு சரஸ்வதியின் எட்டாவது இதழ் (10-8-1959) சொந்த அச்சகத்தில் தயாராயிற்று. அந்த இதழிலிருந்து பத்திரிகையின் அளவும் மாறுதல் பெற்றது. அகல சைஸ் - 'கணையாழி' பத்திரிகை அளவில் இருக்கும். 32 பக்கங்கள். தனிப் பிரதி விலை 25 நயா பைசா.

அந்த மாதம் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மாநாடு நிகழ்ந்தது. பரபரப்போடு, தாக்குதல்கள் மோதல்களோடும், அது நடைபெற்றிருந்தது. எழுத்தாளர் மாநாடு, உண்மையில் ஒரு அரசியல் மாநாடு போல் ஆகிவிட்டது. மகாநாட்டு நிகழ்ச்சிகள் விவாதங்கள் பற்றி சரஸ்வதியில் விரிவான விளக்க உரை வெளியிடப்பட்டது. எட்டாவது இதழும், அதன் பின் வந்த சில இதழ்களும் மொழி வெறியர்கள், குறுகிய நோக்குடைய பண்டிதர்கள் முதலியவர்களை எதிர்க்கும் கட்டுரைகள், கவிதைகளை அதிகம் கொண்டிருந்தன.

ஆகஸ்ட் இதழிலிருந்து சுந்தர ராமசாமியின் 'புளியமரம்' என்ற புதுமையான நாவல் தொடர்கதையாக வந்தது. 'தட்டுங்கள் - திறக்கப்படும்' எனும் தலைப்பில் கேள்வி பதில் பகுதி இடம் பெற்றது.

சொந்த அச்சகம் ஏற்பட்டும் தொல்லைகள் தீர வழி பிறக்கவில்லை. குறித்த காலத்தில் பத்திரிகையை வெளியிட இயலாத

நிலையே நீடித்தது. அதனால் சரஸ்வதி மீண்டும் மாதம் ஒரு இதழ் என்ற பழைய நிலைமையை அடைந்தது.

நல்ல நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்ட 'ஆசிரியர் குழு' அமைப்பினால் எவ்விதமான பயனும் விளையவில்லை. எனினும், இதழ்தோறும் 'ஆசிரியர் குழு' பெயர்ப்பட்டியல் அச்சிடப்பட்டு வந்தது. சரஸ்வதிக்கென்று சொந்த அச்சகம் அமைத்து, பத்திரிகையின் அளவை மாற்றியதும், பெயரளவில் இருந்து ஆசிரியர் குழு ஏற்பாடு கைவிடப்பட்டது.

1960ஆம் ஆண்டில் (சரஸ்வதியின் ஏழாவது ஆண்டு முதல்) சரஸ்வதி சந்தாதாரர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய 'தனிச்சுற்று இதழ்' ஆக மாறியது.

இலங்கை எழுத்தாளர்களின் ஒத்துழைப்பு அதிகமாகக் கிடைக்கலாயிற்று. நவம்பர் இதழ் இலங்கை எழுத்தாளர்களின் சிறப்பு இதழாக வெளிவந்தது.

இடையில் ஆறு மாதங்கள் இதழ் வரவில்லை. சரஸ்வதி மறுபடியும் விலாச மாற்றம் பெற்றிருந்தது. பைகிராப்ட்ஸ் ரோடில், ராயப்பேட்டைப் பகுதியில் உள்ள 393ஆம் எண் கட்டிடத்தில், 'தமிழ்ப் புத்தகாலயம்' பதிப்பகத்துடன்' 'ஒட்டுக்குடித்தனம்' புகுந்தது அது.

நவம்பர் இதழ் வேலைகளை முடித்துவிட்டு, அக்டோபர் இறுதியில் விஜயபாஸ்கரன் இலங்கை சென்றார். அங்கு அவர் ஐம்பது நாள்கள் தங்கி, பல்வேறு இடங்களுக்கும் சென்று, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களையும் சிங்கள எழுத்தாளர்களையும் சந்தித்தார். அவருக்கும், சரஸ்வதிக்கும் மிகப் பயனுள்ள நாள்களாக அவை அமைந்தன.

1960இல் சரஸ்வதி ஆறு இதழ்கள் தான் வெளிவந்தன. 1961 ஜனவரியில், சரஸ்வதியிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்த சாமி சிதம்பரனார் மரணம் அடைந்தார். பிப்ரவரி இதழ் அவரது நினைவு இதழாக வெளியாயிற்று.

சரஸ்வதி இலக்கியத்தரமான உள்ளடக்கத்துடன், கால ஒழுங்கற்று வந்து கொண்டிருந்தது. 1961 ஆகஸ்ட்டில் (மலர் 8இல் 5ஆவது இதழ்) வந்தது. அதன்பிறகு டிசம்பரில் தான் இதழ் வந்தது. பெரும்பாலான சரஸ்வதி வாசகர்களைப் பொறுத்தவரை இதுதான் கடைசி இதழ் ஆகும்.

அடுத்த இதழிலிருந்து புதிய தோற்றத்தில் சரஸ்வதி வெளிவரும். கையடக்கமாகப் புத்தக அளவில் வரும். விலையும் குறைக்கப்படுகிறது. 25 காசுதான் என்று அறிவிக்கப்பட்டது. சந்தாதாரர்கள் பற்றிய அறிவிப்பும் இருந்தது.

அதன்பிறகு, புத்தக வடிவில் - சிறிய அளவில், துண்டுப் பிரசுரம் போல் - அந்தக் காலத்து வைத்தியசாலைகள் மருந்து கேட்லாக் மாதிரி - வெவ்வேறு மாதங்களில் சரஸ்வதி நான்கு இதழ்கள் வெளிவந்த விஷயமே தமிழ்நாட்டில் சரஸ்வதி வாசகர்களுக்குத் தெரியாமலே போயிற்று.

சரஸ்வதி வடிவ மாற்றம் பெறுவதற்கு முன்னதாக இடம் மாறுதல் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பைகிராப்ட்ஸ் ரோடு கட்டிடத்தில் இருந்து, கிருஷ்ணம்பேட்டை டாக்டர் நடேசன் சாலை இறுதிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மாடிக்கு சரஸ்வதி அச்சகம் மாறியது. அந்த இடமும் வசதிப்படவில்லை என்று திருவல்லிக்கேணி தேரடித் தெரு 26ஆம் எண் 'ஜகன் மோகினி' கட்டிடத்தின் மாடிக்கு இடம் பெயர்ந்தது.

1962இல் சரஸ்வதி மலர் 9இல் 4 இதழ்கள் வெளிவந்தன. ஜனவரி, பிப்ரவரி, ஏப்ரல் - மே, ஜூன் என்ற கால அளவில் அவை பிரசுரம் பெற்றன. ஜூன் மாதம் வந்த 32 பக்க இதழ் தான் சரஸ்வதியின் கடைசி இதழ் என்றாயிற்று.

1962 மே மாதம் விஜயபாஸ்கரன் 'சமரன்' என்ற அரசியல் வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். அப்படி ஒரு இதழ் நடத்த வேண்டும் என்ற எண்ணம் 1960 முதலே அவருள் வளர்ந்து வந்தது. சரஸ்வதி இதழுக்கு ஆதரவு குறைந்து, இலக்கிய மாசிகையைத் தொடர்ந்து நடத்துவதில் சிரமங்கள் அதிகரித்து விடவும், அரசியல் இதழ் நடத்தும் முயற்சியில் அவர் தீவிரமாக ஈடுபட்டார்.

'சமரன்' முதலில் மூவாயிரம் அல்லது நாலாயிரம் பிரதிகள் தான் அச்சிட வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதல் இதழுக்கே ஆறாயிரம் பிரதிகளுக்கு ஏஜன்சி ஆர்டர் வந்து சேர்ந்தது. விரைவில் எட்டாயிரம் ஆகி, பத்தாயிரம் என்று விற்பனை அதிகரித்தது. இதில் உற்சாகமும் ஊக்கமும் மகிழ்ச்சியும் கொண்ட விஜயபாஸ்கரன் சஸ்வதியை மௌனமாகக் கைவிட்டு விட்டார். எனினும், சரஸ்வதியை நிறுத்தப் போவதில்லை. எப்படியாவது திரும்பவும் கொண்டுவர வேண்டும்' என்று ரொம்ப காலம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் சந்தர்ப்பங்கள் அவருக்குத் துணைபுரியவில்லை. 1962அக்டோபரில் சீனா இந்தியாமீது தாக்குதல் நடத்தியது. அவசரகால நடவடிக்கையாக, நவம்பரில் நாடு நெடுகிலும் உள்ள முக்கியமான கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். விஜயபாஸ்கரனும் சிறையில் அடைக்கப்பட்டார்.

1963 ஏப்ரலில் அவர் சிறையிலிருந்து வெளிவந்தபோது, 'சமரன்' நிலைமை மோசமாகியிருந்தது. அதை சீர்படுத்தி அந்த அரசியல் வாரப் பத்திரிகையை வளர்ப்பதில்தான் அவரது முழுகவனமும் சென்றது. அதுவே பெரும் போராட்டமாக அமைந்திருந்தது அவருக்கு.

விஜயபாஸ்கரன் இலக்கிய இதழ் சரஸ்வதியை எட்டரை வருடங்கள் நடத்தியதே அரும்பெரும் சாதனைதான். அவர் வியாபாரம் வெற்றி பெறமுடியவில்லை என்பது உண்மை. ஆனால் அது அவருக்குத் தோல்வி அல்ல. சரஸ்வதி போன்ற ஒரு இலக்கியப் பத்திரிகை இன்று இல்லையே என்று பிற்காலத்தில் எழுத்தாளர்களும் இலக்கியப் பிரியர்களும் அடிக்கடி வருத்தத்தோடு குறிப்பிடும் அளவுக்கு - அதன் தேவையை உணர வேண்டிய அளவுக்கு - அதற்கு முக்கியத்துவமும் தனித்தன்மையும் உண்டாகும்படி 'சரஸ்வதி' இதழை நடத்தியதே பெரும் வெற்றி ஆகும்.

சரஸ்வதிக்கு பெருமை சேர்த்த சாதனைகளாவன:

முதலாவதாக, தமிழ்ச் சிறு கதை வளர்ச்சிக்கும் வளத்துக்கும் கணிசமான பங்கு ஆற்றியுள்ளது. முற்போக்கு இலக்கியத் தன்மையுடைய சிறுகதைகளுக்கு அதிகம் இடம் அளித்தது. அதே சமயம் இதரவகை சிறுகதைகளுக்கும் சோதனை ரீதியான படைப்புகளுக்கும் இடம் அளித்தது.

முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களின் படைப்புகளை ஏற்றுப் பிரசுரித்த போதே, முந்தைய 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' ஆன சுத்த இலக்கியவாதிகளின் - க.நா.சுப்ரமண்யம், சி.சு.செல்லப்பா, ந.சிதம்பரசுப்ரமண்யன் போன்றவர்கள் எழுத்துக்களையும் தாராளமாகப் பிரசுரித்தது. அவர்களுக்குப் பிந்திய தலைமுறையைச் சேர்ந்த இலக்கியவாதிகளின் - எந்த 'இசம்கள்' மற்றும் அரசியல் போக்கையும் சார்ந்திராத எழுத்தாளர்களின் - எழுத்துக்களுக்கும் அரங்கமாகத் திகழ்ந்தது.

கட்டுரை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பெரும்பங்கு ஆற்றியுள்ளது. ஆழமும் கனமும் சிந்தனை வீச்சும் கொண்ட பலவகைக்

கட்டுரைகளையும் வெளியிட்டது. பழம் தமிழ் இலக்கிய விளக்கங்கள், புதுமை இலக்கியக் கட்டுரைகள், இந்திய தத்துவங்கள் பற்றிய கட்டுரைகள், உலக இலக்கியங்கள் பற்றிய அறிமுகங்கள், கலை-தொழில் சம்பந்தமான கட்டுரைகள், அறிவியல் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், 'சென்னைக்கு வந்தேன்' போன்ற புதிய நீதிக் கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள் - இப்படி வகைவகையான கட்டுரைகளை வெளியிட்டு ரசனைக்கும் சிந்தனைக்கும் விருந்தளித்தது.

ஆரோக்கியமான இலக்கிய விவாதங்களை வளர்த்தது. சுவாரசியமான சர்ச்சைகளுக்கு இடமளித்தது.

மரபுரீதியான கவிதைகளில் புதிய வேகமும் புதுப்பார்வையும், புதிய தொனிகளும் பரவுவதற்குப் பெரிதும் உதவியது. வளர்ந்து வந்த தனி வடிவமான பட்டிமன்றக் கவிதைக்குக் கணிசமான இடம் ஒதுக்கியது.

அனைத்திற்கும் மேலாக, தமிழ் எழுத்துலகில் கவனிக்கப் படாமல் ஓரம்கட்டப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை அறிமுகம் செய்து, அவர்களது படைப்புகளுக்கு முக்கியத்துவம் தந்தது.

தமிழ்நாட்டின் திறமையுள்ள இளைய படைப்பாளிகள் தங்கள் ஆற்றலைச் சுதந்திரமாக வெளிப்படுத்தி வளர்ந்து முன்னேறுவதற்கு அதிகம் துணைபுரிந்திருக்கிறது. வளர்ந்து கொண்டிருந்த ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி இருவரது முன்னேற்றத்துக்குச் சரஸ்வதி நற்றுணையாக அமைந்திருந்தது.

மொழிபெயர்ப்புகள் மூலம் பிற இந்திய மொழிகளின் படைப்புகள் தமிழில் அறிமுகமாவதற்கும், புத்தகச் சுருக்கம் மூலமாக உலக இலக்கியங்கள் தெரிய வருவதற்கும் உதவியது.

விரிவான புத்தக மதிப்புரைகள் வெளியிட்டு, புதிய புதிய நூல்கள் பற்றி வாசகர்கள் தெரிந்துகொள்வதற்குத் துணை செய்தது.

காமிராக் கலை, செஸ் விளையாட்டு போன்ற பயிற்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது.

தாமரை

1958 **சா.டி. செந்தில்குமார்**

செய்திப் பரிமாற்றம் என்பதை அடிப்படையயாகக் கொண்ட இதழியல், வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பத்தினால் பரந்துபட்ட பொருளுடையதாகப் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வருகின்றது. ஒருவித சமூகத் தொடர்புச் சாதனமான பத்திரிகை, மொழியின் இயந்திரவியல் விளைபொருளாகும். இன்றுள்ள ஜனநாயக உலகில் சமூகத்தின் பொதுக் கருத்தை உருவாக்கும் மிகப்பெரும் சக்தியாக இது விளங்குகின்றது. எனவே சமூக உணர்வுடையவர்கள் தமது சமூகக் கண்ணோட்டங்களில் சமூகத்தைப் பயிற்றுவிக்கவும், வளர்க்கவும் பத்திரிகையைப் பயன்படுத்துகின்றனர்.

பல்வேறு வர்க்கங்களாகப் பிளவுண்டு கிடக்கும் இன்றைய சமுதாயத்தில், ஒவ்வொரு வர்க்கமும் தனக்கென ஒரு இலட்சியத்தைக் கொண்டுள்ளது. வேறு வகையாகக் கூறினால், ஒவ்வொரு மனிதனுடைய இலட்சியமும் ஏதோவொரு வர்க்கத்தின் இலட்சியத்துடன் பொருந்தியிருக்கும். எனவே ஒவ்வொரு பத்திரிகையுமே ஏதோ ஒரு லட்சியத்தை முனைப்பாகக் கொண்டு தான் செயல்படுகின்றது. இந்த இலட்சியத்தை நோக்கிச் சமூகம் படிப்படியாக வளரும் வகையில் பத்திரிகையாளன் மனித அனுபவங்களையும் தகவல்களையும் தருகிறான். தன் லட்சியத்தின் அடிப்படையில் அவைகளை மதிப்பிட்டுத் தருவதன் மூலம் சமூகத்தின் நகர்வைத் தன் கட்டுப்பாட்டில் கொணர முயல்கிறான். அவ்வகையில் இன்று வெளிவருகின்ற எந்தவொரு பத்திரிகையின் பிரதான போக்கும், இறுதியான நோக்கும் இவ்வாறே இருப்பதை அறியலாம்.

தான் விரும்புகிற திசையில் சமூகத்தை நகர வைப்பது, அல்லது தான் விரும்பாத திசையில் சமூகம் நகர்ந்து விடாமல் தடுப்பது. இதுதான் எந்தவொரு பத்திரிகையாளனின் பிரதான சமூக நோக்கமாக இருக்கக் கூடும். எனவே பத்திரிகையாளனுக்குத் தெளிவான, அறிவியல் மயமான சமூக ஞானம் வேண்டும். இந்த ஞானத்தின் அடிப்படையில்

அனைத்துப் பொருள்களையும் செய்திகளையும் எடைபோட்டுத் தன் கண்ணோட்டத்தில் அணுகும்போது, இது தன் வர்க்கத்திற்கு லாபமானதா? நஷ்டமானதா? எனத் தீர்மானிக்கும் கணிப்புத்திறன் வேண்டும். இந்தக் கணிப்பின் அடிப்படையில் பத்திரிகையில் தரப்பட வேண்டிய ஒவ்வொரு செய்தியையும் செப்பனிட்டு வடிவமைத்து அதற்கொரு முகம் அமைக்க வேண்டும். படிப்பவர்கள், அது என்னவென்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்க வேண்டும். எந்தவொரு பத்திரிகையாளனுக்கும் இருக்க வேண்டிய பொதுவான இந்நியதி ப. ஜீவானந்தத்திடம் இயல்பாகவே அமைந்திருந்தது.

பொதுவுடைமை இயக்கமும் ஜீவாவும்

இந்து தர்மத்தின் வர்ணாசிரம அமைப்பு வலிவோடு திகழ்ந்த நாஞ்சில் நாட்டின் பூதப்பாண்டி எனும் சிற்றூரில் பட்டம் பிள்ளைக்கும், உமையம்மாளுக்கும் 21.8.1907இல் மகனாகப் பிறந்த ஜீவாவின் இயற்பெயர் சொரிமுத்து. பள்ளி வாழ்க்கையிலேயே பொது வாழ்வில் ஆர்வமும், சமூக அக்கறையும் மனிதாபிமானமும், சமதர்ம உணர்வும் நிரம்பப் பெற்றவராக ஜீவா விளங்கினார். இதே காலத்தில் பாரதியின் கவிதைகளைக் கற்றுணர்ந்த ஜீவா, கவிதை இயற்றும் ஆற்றலை வளர்த்துக் கொண்டதுடன், நாடகங்களை உருவாக்கவும் அறிந்திருந்தார்.

1919இல் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்ச்சி தேசத்தை உலுக்கியதைப்போல, ஜீவாவிடம் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. விடுதலை வேட்கை நிரம்பியவரான ஜீவா, அந்நியத்துணி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார். இதன் காரணமாகத் தம் வாழ்நாளின் இறுதிவரையில் கதராடையை மட்டும் அணிந்தார். கேரளத்தின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த நாஞ்சில் நாட்டில் நிலவிய தீண்டாமை, சாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிராக நடைபெற்ற பல்வேறு போராட்டங்களினால் கவரப்பட்ட ஜீவா, 1924இல் வைக்கத்தில் நடைபெற்ற ஆலய நுழைவுப்போராட்டம், மேலோர் தெருவில் கீழோரும் செல்லும் உரிமைக்காக நடைபெற்ற மாபெரும் போராட்டம் போன்றவற்றில் பங்கேற்றார். பொது வாழ்வில் அவரது கவனம் சென்றதைத் தொடர்ந்து ஜீவாவின் பள்ளி வாழ்க்கை முடிவுற்றது. பின்னர் பொது வாழ்விலேயே தம் முழுக்கவனத்தையும் செலுத்தத் தொடங்கினார்.

தொடக்கக் காலத்தில் ஜீவா காந்தீயத்தில் நாட்டம் நிரம்பியவராக விளங்கினார். காந்தியின் நிர்மாணத் திட்டங்களின்மேல்

இவர் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். நெல்லை மாவட்டத்தின் சேரன் மாதேவியில் வவே.சு. ஐயர் நடத்தி வந்த பரத்வாஜர் ஆசிரமத்தில் ஜீவா சில காலம் தங்கியிருந்தார். காந்திய நெறிப்படி ஆசிரமம் நடைபெறுவதாகக் கூறப்பட்டாலும், அங்கு நிலவிய வர்ணாசிரம நடைமுறைகளுக்கு எதிராக ஈ.வெ.ரா. மற்றும் வரதராஜுலு நாயுடு போன்றோர் நடத்திய போராட்டத்தில் ஜீவா தீவிரமாகப் பங்கு கொண்டார். இதன் விளைவாக ஆசிரமம் மூடப்பட்டது. ஜீவா காரைக்குடிக்கு இடம் மாறினார்.

காசி விசுவநாத செட்டியாரின் துணையுடன் ஜீவா சிராவயல் என்ற இடத்தில் காந்தி ஆசிரமம் ஒன்றைத் தொடங்கினார். தீண்டாமைக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை ஜீவா இங்கு நடத்தினார். இங்குதான் தன் இயற்பெயரான சொரிமுத்து என்பதைத் துறந்து ஜீவானந்தம் என்ற பெயருடையவரானார். இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கம், சுயமரியாதை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் ஆகியன ஆற்றலுடன் செயல்பட்டுக் கொண்டிருந்தன. ஆசிரமத்தின் பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் காந்தி, பெரியார் உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்களின் உறவும், அதன்மூலம் அவர் பெற்ற அனுபவங்களும் அவரை மேலும் தீவிரமாகச் செயல்பட வைத்தன. காந்திய நிர்மாணத் திட்டங்களை முன்னோடியாகக் கொண்டு இவரது ஆசிரமம் செயல்பட்டாலும், ஜீவா சுயமரியாதை இயக்கத்துடன் தமது தொடர்பை வளர்த்துக் கெண்டார். இதன் விளைவாகச் சாதி, மத விவகாரங்களில் மட்டுமல்ல, அரசியல் விவகாரங்களிலும் நாம் நமது சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்துடையவரானார்.

1931இல் கோட்டையூர் காங்கிரஸ் கமிட்டி தலைவராக ஜீவா தேர்வு செய்யப்பட்டார். ஜீவாவின் அரசியல் பிரவேசம் இதிலிருந்தே தொடங்குகின்றது. 1932இல் நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கப் போராட்டத்தின் விளைவாக ஜீவா சிறைத்தண்டனை பெற்றார். சிறைவாசத்தின் போது சோசலிசம், கம்யூனிசம் போன்றவற்றைத் தெளிவுபட உணர்ந்து கொண்டார். காங்கிரஸ்காரராகச் சிறை சென்றவர் சிறையில் இருந்து கம்யூனிஸ்ட்டாக வெளிவந்ததாக ஜீவாவே குறிப்பிட்டுள்ளார்.

1932இல் கம்யூனிச இயக்கத்தின் முன்னோடியான தோழர் மா. சிங்காரவேலரின் தொடர்பு ஜீவாவிற்குக் கிட்டியது. இதன்மூலம் கம்யூனிசத் தத்துவங்களைக் கற்றுத் தேர்வதற்குரிய வாய்ப்பைப் பெற்றார். தம் கருத்துக்களடங்கிய கட்டுரைகளைக் 'குடியரசு', 'பகுத்தறிவு', 'புரட்சி'

போன்ற பத்திரிகைகளில் ஜீவா வெளியிட்டார். இதன்மூலம் பத்திரிகைகளுடனான இவரது தொடர்பு ஆரம்பமானது. மாவீரன் பகத்சிங், தன் தம்பிக்கு எழுதிய நீண்ட கடிதத்தை, 'நான் ஏன் நாத்திகனானேன்? என்ற பெயரில் தனி நூலாக ஜீவா மொழிபெயர்த்தார். இதற்கென ஜீவா கைது செய்யப்பட்டு கடுந்துன்பங்களை அனுபவித்தார்.

பொதுவுடைமைக் கருத்துக்களின்பால் ஜீவாவின் நாட்டம் வளர வளர காங்கிரஸ் இயக்கத்துடனும், ஈ.வெ.ரா.வுடனும் இவர் முரண்பட நேரிட்டது. 1934இல் 'புரட்சி' இதழில் காந்திஜியை முற்றாகப் புறக்கணிக்க வேண்டுமென ஜீவா அறைகூவல் விடுத்தார். சுயமரியாதை இயக்கத்தினுள் சோசலிசக் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுவதாகக் கடும் கண்டனம் எழுந்த நிலையில் ஈ.வெரா. சுயமரியாதை இயக்கத்தை வெறும் சீர்திருத்த இயக்கமாகப் பின்தள்ளினார். இதன் விளைவாக ஜீவா 1934இல் 'சமதர்மம்' என்ற பத்திரிகையில் மேற்கண்ட இரு இயக்கச் சூழல்கள் பற்றிப் பல கட்டுரைகளை எழுதினர்.

1930இல் சென்னையில் பொதுவுடைமை இயக்கத்தை உருவாக்க அமீர் ஹைதர்கான் அனுப்பப்பட்டார். கல்வி கற்ற பல இளைஞர்களின் உதவியோடு இவர் 'யங் கம்யூனிஸ்ட் லீக்' என்ற அமைப்பை நிறுவினார். ஆங்கில அரசை ஒழிப்பதே இதன் முதன்மை நோக்கமாக இருந்தது. அரசின் கடும் அடக்குமுறைகளுக்கு உட்பட்ட இந்த அமைப்பு தோழர் சுந்தரய்யா போன்றவர்களால் 'தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம்' எனப் புதிய அமைப்பாக மாறியது. ஜீவா தம்மை இவ்வியக்கத்துடன் இணைத்துக் கொண்டார். தொழிற்சங்க இயக்கத்துடனான ஜீவாவின் தொடர்பு இதிலிருந்துதான் தொடங்குகின்றது.

ஈ.வெ.ரா.வுடன் ஜீவாவிற்கு ஏற்பட்ட கொள்கை முரண்பாட்டினால் சுயமரியாதை சமதர்மக் கட்சியை ஜீவா ஆரம்பித்தார். இதன்மூலம் எஸ்.கே. டாங்கே, எஸ்.வி. காட்டே, சித்துலே போன்ற பொதுவுடைமை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களின் தொடர்பையும் நட்பையும் பெற்றார்.

1934இல் காங்கிரஸ் சோசலிஸ் கட்சி தொடங்கப்பட்டது. அரசு கம்யூனிஸ்ட்களுக்கு எதிராகக் கடும் அடக்குமுறைகளைத் தொடர்ந்து செயல்படுத்தியமையால் சோசலிசப் பணியாற்றக் கம்யூனிஸ்ட்டுகள் இந்த அமைப்பில் இணைந்து செயல்பட்டனர். தமிழ்நாட்டில் ஜீவா தலைமையில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி

விரிந்து பரவியது. இதே காலத்தில் (1933-1937) கோவை மில் தொழிலாளர்களிடையே ஜீவாவின் புகழ் ஆழமாகப் பரவியது. 1937இல் தென்னக ரயில்வே சங்கத்தையும் ஜீவா உயிர்ப்பித்தார். கள் இறக்கும் தொழிலாளர்கள், நெல்லை மாவட்ட ஆலைத் தொழிலாளர்கள், சென்னை மோட்டார் தொழிலாளர்கள் எனத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தொழிலாளர்களுடன் ஜீவாவின் தொடர்பு நெருக்கமானது. இவற்றின் தொடர் விளைவால் ஜீவா ஒரு கம்யூனிஸ்டாகப் பரிணாமம் கொண்டார்.

1920களில் தமிழ்நாட்டில் வெளியாகிக்கொண்டிருந்த சுதேசமித்திரன், நவசக்தி, குடியரசு, இந்து போன்ற பத்திரிகைகள் தீவிர தேசிய எழுச்சி காரணமாகவும், நாட்டு விடுதலைக்கு ஆக்கம் தருபவை என்ற அடிப்படையிலும் தங்களுக்குள் பெரிய வேறுபாடுகள் இருப்பினும் செய்தி வெளியிடுவதில் ஒரு பொதுத்தன்மையைக் கடைபிடித்தன. இக்கால கட்டத்தில் தெளிவான அரசியல் சமூக அனுபவங்களையுடைய காந்தி ஒரு புறமும், அந்த அளவிற்கு அனுபவமற்ற இந்திய கம்யூனிஸ்ட்டுகள் மறுபுறமும் செயல்பட்டனர். மக்கள் சக்தி இவ்விரு துருவங்களையும் நோக்கிச் சிறிதேனும் நகரத் தொடங்கிற்று. எனவே அன்றைய பூர்ஷ்வா பத்திரிகைகள் வலதுசாரி முகம் கொள்ளத் தொடங்கின. இடதுசாரிகளும் சுயமரியாதைக் காரர்களும் தத்தமது நோக்கங்களுக்கேற்பப் புதிய பத்திரிகைகளைத் தொடங்கினர். இச்சூழலில்தான் ஜீவா பத்திரிகைத் துறையில் நுழைந்தார்.

குடியரசு, புரட்சி, சமதர்மம், பகுத்தறிவு, புது உலகம், அறிவு போன்ற பத்திரிகைகளில், சமூகத்தை அழுத்திக் கொண்டிருந்த பிரச்சனைகளை ஜீவா ஆற்றலுடன் எழுதினார். இவரது பல கட்டுரைகள் அரசின் தீவிர நடவடிக்கைகளுக்கு ஆட்பட்டன. எனவே எந்தவொரு பத்திரிகையிலும் ஜீவாவினால் நிலைத்திருக்க இயலவில்லை.

1937இல் ஜீவா முழுமையாக கம்யூனிஸ்டாக மலர்ந்த பிறகு பிற பத்திரிகைகளோடு இணைந்து செயல்படுவது கடினமாகவே, தம் கட்சிக்கெனவும் இடதுசாரி சிந்தனைகளின்பால் மக்களை ஈர்க்கவும் தனி பத்திரிகை வேண்டுமெனக் கருதியே ஜீவா 1937இல் 'ஜனசக்தி'யைத் தொடங்கினார். பி. ராமமூர்த்தி, ஏ.எஸ்.கே. முருகேசன் ஆகியோர் ஜீவாவின் முயற்சிக்கு உறுதுணையாக இருந்தனர். ஜனசக்தியை அச்சிடுவது அக்காலத்தில் பெரும் சவாலாக இருந்தது. அதே நேரத்தில் ஆளுவோர்க்கும் முதலாளி வர்க்கத்துக்கும் ஜனசக்தி சிம்ம

சொப்பனமாக விளங்கியது. பொதுமக்களிடமும் தொழிலாளர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றது. வார இதழான ஜனசக்தி பலமுறை அரசின் அடக்குமுறைகளுக்குட்பட்டது. அதனை அச்சிடுவதும் பெரும் சோதனையாக அமையவே, ஜீவா ஜனசக்திக்கென் தனி அச்சகம் ஒன்றைத் தொடங்க முயன்றார். டி.கே.எஸ். சகோதரர்கள் உதவி கிட்டியும் ஜீவாவின் இம்முயற்சி வெற்றி பெறவில்லை. 1939இல் அரசு கம்யூனிஸ்ட்டுகளைக் கடுமையாக வேட்டையாடிய சூழலில் ஜீவாவும் கைது செய்யப்பட்டார். 1942இல் சிறிது இடைவெளிக்குப் பின் 'ஜனசக்தி' மீண்டும் வெளியானது. இக்காலத்தில் தமிழில் வெளியான பூர்ஷ்வா பத்திரிகைகள் மூன்று விதமான பணிகளில் முனைப்புடன் செயல்பட்டன.

I தங்கள் வர்க்கத்திற்கு நேரடியான, அனுகூலமான விசயங்களை மக்கள் நலனுக்கு உகந்த விசயங்களாகத் திரித்துப் பிரமாதப்படுத்துதல், தங்கள் வர்க்க ஆதரவாளர்களின் அற்பச் சிறப்புகளையும் பெரிதாகத் தூக்கி வைத்துப் புகழுதல், தன் வர்க்க நலனுக்கு ஆதரவாக அமையும் ஆன்மீக வாதம், தனிநபர்வாதம் போன்றவற்றை அவை சார்ந்த கலை இலக்கியப் பண்பாடு அம்சங்களைப் பெரிதாக்குதல்.

II தங்கள் வர்க்க நலனுக்கு முரணான உழைக்கும் மக்கள் நலன்களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளின் சக்திகளைக் கொச்சைப்படுத்தி எதிரான பிரச்சாரங்களைச் செய்தல்.

III மக்களின் அடிப்படை விசயங்களில் புதிதாக வளரும் சக்தியின் கவனம் திரும்பிவிடாமல் இருக்கும் வகையில் வன்முறை மற்றும் காம விவகார, தனிமனித பலவீனமான விசயங்களில் மக்கள் கவனத்தைத் திருப்பிட அவற்றைப் பெரிதாக முதன்மை தந்து வெளியிடுதல்.

பத்திரிகையின் இத்தகு போக்கினை உணர்ந்த ஜீவா இவற்றுக்கெதிராகக் கூரிய போராட்டத்தை நடத்த முற்பட்டார். இதற்கு ஜனசக்தி பெரிதும் உதவியது எனினும் அது போதுமானதாக இல்லை என்பதை ஜீவா உணர்ந்தே இருந்தார்.

தாமரைக்கு முன் முற்போக்கு இதழ்கள்

ஜீவா 'தாமரை'யைத் தொடங்கும் முன்பே தமிழகத்தில் மார்க்சியச் சார்புடையோர் அல்லது மார்க்சியத்தை ஏற்றுக்கொண்ட சிலரால் முற்போக்குத் தன்மை பொருந்திய சில இதழ்கள் வெளிவந்தன.

இவைகளைப் பொதுவுடைமை இயக்க இதழ்கள் என்று கருதமுடியாதெனினும், சமூக மாற்றத்துக்கான சில அடிப்படை மதிப்புகளை உருவாக்குவதில் குறிக்கத்தக்க பங்கினை ஆற்றியுள்ளன. அவ்வாறு வெளியான இதழ்களுள் சமரன் (1953), சாந்தி (1954), சரஸ்வதி (1955), மனிதன் (1954), மனிதன் (1968) புதிய தலைமுறை ஆகியன குறிக்கத்தக்கவையாகும்.

தமிழகத்தில் 1940களின் பிற்பகுதியில் தமிழ்ப் பத்திரிகையுலகில் இருவித போக்குகள் நிலவின. ஒன்று ஜனரஞ்சகப் போக்கு, வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்ப்பது, வாழ்வின் துன்ப துயரங்கள், ஏமாற்றங்கள், வெறுமை, வறட்சி முதலியவைகளைக் காண மறுப்பது, இனிமைகளையும், சுகங்களையும் கிளுகிளுப்பூட்டும் விசயங்களையும் முதன்மைப்படுத்துவது இப்போக்காகும். மற்றது திராவிட இயக்கப் போக்கு, பார்ப்பனீய எதிர்ப்பு, வடவர் ஆதிக்க எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, மத ஒழிப்பு, மூடநம்பிக்கை, வறுமை, விபச்சாரம், பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை ஒழித்தல், இந்தி எதிர்ப்பு, தமிழ் - தமிழர் உயர்வு, சமூகச் சீர்திருத்தம் முதலியவை இதன் முக்கியத் தன்மைகளாகும்.

இவ்விரண்டுக்கும் மாற்றாக 'முற்போக்கு இலக்கிய நோக்கு' தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கியது. இது வர்க்க உணர்வை வலியுறுத்தும் பொருளாதாரத்துவப் பார்வையை அடிப்படையாகக் கொண்டது. பொதுவுடைமைக் கொள்கைகளை ஆதரிப்பதுடன் முதலாளித்துவ எதிர்ப்பு, முதலாளி வர்க்க ஒழிப்பு, பாட்டாளி வர்க்க உயர்வு, பொருளாதாரச் சமத்துவம் ஆகியவற்றை லட்சியமாகக் கொண்டது. சுருங்கக் கூறின் பொதுவுடைமைக்கும், அழகியல் கூறுகளுக்கும் முதன்மையளிப்பதை முற்போக்குத் தன்மை எனலாம். சமுதாயப் பார்வையோடும் மனிதநேயத்துடனும் படைக்கப் படுவனவற்றை முற்போக்கு இலக்கியம் என மதிக்கலாம்.

கம்யூனிஸ்ட் பத்திரிகையான ஜனசக்தி இக்கருத்தைப் பெரிதும் வலியுறுத்தியது. மேலும் ஜனயுகம், புதுமை இலக்கியம் போன்ற பத்திரிகைகள் தோன்றிச் சில காலத்துக்குப் பின் நின்றுவிட்டன. கம்யூனிஸ்டான விஜயபாஸ்கரன் முற்போக்குத் தன்மையுடன், ஓர் இலக்கிய இதழை நடத்திட எண்ணி 'சரஸ்வதி' இதழைத் தொடங்கினார். நாட்டு மக்களை உயர்த்துவதற்காக எழுத வேண்டும், சமூகத்தை சக்தி வாய்ந்ததாக ஆக்குவதற்கு எழுத வேண்டும் என்பனவற்றைத் தனது லட்சியமாகக் கொண்ட 'சரஸ்வதி' எட்டாண்டுகளே வெளிவந்தாலும், முற்போக்குப் பத்திரிகைகளுக்கு

ஒரு முன்னோடியாகவே திகழ்ந்தது. பிற்காலத்தில் 'தாமரை'யுடன் ஏற்பட்ட முரண்பாடே இது நின்றுபோகக் காரணம் என்ற கருத்து ஆய்வாளரிடையே உள்ளது.

மார்க்சியக் கண்ணோட்டமும், கம்யூனிசப் பற்றும் கொண்டிருந்த தொ.மு.சி. ரகுநாதன் 1954இல் 'சாந்தி' என்ற முற்போக்கு இலக்கிய இதழைத் தொடங்கினார். ஆளும் வர்க்கத்தின் போலி மதிப்புகளை அம்பலப்படுத்தியும் திராவிட இயக்கங்களின் சமரசப் போக்குகளைக் கண்டித்தும் போர்க்குணம் மிக்க மனிதாபிமானத்தை ஊட்டியும் படைப்புகளை வெளியிட்ட 'சமரன்' பத்திரிகையைப் பொதுவுடைமைக் கட்சி ஆதரிக்கவில்லை. அத்துடன் அதனை வாங்கக் கூடாது எனவும் வற்புறுத்தியது. எனினும் 'சமரன்' சிறந்த முற்போக்கு இதழாகவே செயல்பட்டது.

50களின் தொடக்கத்தில் முற்போக்குத் தன்மையுடனான பத்திரிகைகள் வெளியாகி, தம் சம காலத்தில் நிலவிய இருவிதப் போக்குகளுக்கு மாற்றான கருத்துக்களை முன்வைத்தன. ஜீவா தனது கவனத்தை ஜனசக்தியின் மேல் செலுத்தினாலும் முற்றாக முற்போக்கு இலக்கியத்திற்கென தனியொரு இதழ் வேண்டும் எனக் கருதினார். முற்போக்குக் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் மக்கள் மனத்தில் ஆழப் பதியவைக்க அரசியல் பொருளாதாரப் போராட்டங்களில் லட்சிய நோக்கத்துடன் பங்குபெறத்தக்க வகையில் இதயங்களைப் பண்படுத்த, கலையும் இலக்கியமும் சிறந்த கருவிகள் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்திருந்த ஜீவா இப்பணிகளுக்கென்று 1958இல் தாமரையை மாத இதழாகத் தொடங்கினார். ஜீவா தொடங்கிய தாமரை இன்றுவரை பெரிய இடைவெளிகள் ஏதுமின்றி வெளிவருகின்றது. தொடக்க காலத்தில் நிதிநெருக்கடி காரணமாகச் சில சமயம் இரு மாதங்களுக்கு ஓர் இதழ் என வெளியாகியுள்ளது. எனினும் இந்நிலை அடிக்கடி நேர்ந்து விடவில்லை.

கலை இலக்கியத்துறையில் முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டுசெல்லத் தனிப் பத்திரிகை வேண்டுமென்ற ஜீவாவின் எண்ணம் தாமரை மூலம் நிறைவேறியது. இதே காலகட்டத்தில் (150கள்) சாந்தி, சரஸ்வதி ஆகியவை இப்பணியில் ஆர்வம் காட்டின. என்றாலும் அவற்றின் பணிகள் போதுமானதாக இல்லையென உணர்ந்த ஜீவா தாமரையைக் கலை இலக்கியத்துறைக்கான முற்போக்கு இதழாகவே நடத்திட விழைந்தார். முதல் இதழின் தலையங்கத்தில் ஜீவா தாமரையின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கலை இலக்கியத் துறையில் வளரும் ஜனநாயக உணர்வோடு பணிபுரிய தாமரை மலர்கிறது. சென்ற காலக் கூறுகளின் சிறந்த வழித்தோன்றலாக விளங்கும்; நிகழ்கால அனுபவத்தைத் தன் வயமாக்க முன்னிற்கும்; வருங்கால முழு வடிவ லட்சியத்தை நோக்கித் தளராத முயற்சிக் கரங்களை நீட்டித் தாவித் தாவிச் செல்ல முன்னேறும். இவ்வாறு தாமரை, வளரும் தமிழகத்தின் சர்வ வல்லமை பொருந்திய கரங்களில் தவழ்ந்து, மென்மேலும் வாழ்த்தும் வளமும் பெற்றுச் சிறக்கும்.

பிற்போக்குக்கும் சீர்குலைவுக்கும் இடம்கொடுக்காமல் தாமரை ஜனநாயகம், சமதர்மம், சமாதானம் ஆகிய பெருநோக்கங்களோடு, கலை இலக்கியத் துறையைத் தனிச் சிறப்பாக்கிப் பாடுபடும். தேசியப் பண்பாடு சிதையாமல் இலக்கிய உலகிலும் சுக வாழ்வு வாழமுடியும் என்பதை நடப்பில் காட்டத் தாமரை ஆவன செய்யும். தன்னடக்கத்துடன் மற்றவர் கருத்தோட்டத்தை மற்றவர் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் நன்முயற்சி புரியும் (தாமரை, 1958, டிசம்பர், ப.1)

ஜீவா தலையங்கத்தில் குறிப்பிட்டபடி மக்களுக்குப் பயன்படும் இலக்கியத்தை முற்றிலும் சிறப்பாக வளர்க்கும் நோக்கத்துடன் தாமரை தனிப்பொலிவுடன் வெளியாகின்றது. ஜீவா தன் காலத் தாமரையில் ஒரு ஒழுங்கினைப் பேணினார். அன்று தமிழகத்தில் புகழ்பெற்ற படைப்பாளர்களாக விளங்கிய ஜெயகாந்தன், கு.அழகிரி சாமி, நா. பார்த்தசாரதி, நீல பத்மநாபன், கல்வியாளர்களான மு. வரதராசன், நா. வானமாமலை, மா. இராசமாணிக்கனார் மற்றும் நாடகக் கலைஞர் டி.கே சண்முகம், சாமி. சிதம்பரனார், கா. சுப்ரமண்யம் போன்று பலதரப்பட்டவர்களின் படைப்புகளையும் தாமரையில் வெளியிட்டார்.

1958 டிசம்பர் முதல் 1963 டிசம்பர் வரை ஐந்து ஆண்டுகள் ஜீவாவின்கீழ் தாமரை வெளிவந்தது. மார்க்சிய கண்ணோட்டத்தில் சமுதாயத்தைச் சீரமைப்பது லட்சியம். இதற்கெதிரான பிரச்சாரங்களைத் தகர்த்தெறியும் முறையில் படைப்புகளின் உள்ளடக்கம் அமைந்திருக்க வேண்டும் என்ற நோக்கம் ஜீவாவின் காலத் தாமரையில் வெளிப்படுகிறது. ஜீவா 1963இல் மறைகிறார். அவருக்குப் பின் மாஜினி இதழின் பொறுப்பை ஏற்கிறார். தொடர்ந்து சில இதழ்களுக்கு எஸ். கிருஷ்ணசாமி என்பவரும், மணலி சி. கந்தசாமியும் பொறுப்பேற்றனர். 1984-1986வரை கவிஞர் கே.சிஎஸ். அருணாசலம் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

மாஜினி தாமரையை நிர்வகித்தபோது தி.க. சிவசங்கரன், ஆ. பழனியப்பன், எம்.கே. ராமசாமி ஆகியோர் அடங்கிய குழு தாமரையை வழிநடத்தியுள்ளது. பத்து ஆண்டுகள் இக்குழு இப்பொறுப்பில் இருந்தது. இக்காலத்தில் தாமரை தனித் தன்மையுடன் ஏராளமான இலக்கிய ரசிகர்களையும் தன்பால் ஈர்த்ததுடன் பல புதிய எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தியது. சுமார் நூறு இதழ்களை வெளியிட்ட இக்குழுவினர் தம் பொறுப்பு களிலிருந்து விலகிக் கொண்டனர். இதற்குப் பிறகும் தாமரை வெளிவரத்தான் செய்தது. எனினும் போதிய இலக்கிய ஈடுபாடுடனும் அதன் தனித்தன்மையைப் பாதுகாத்திடவும் உரியவர் எவரும் முன்வராமையால் தாமரை மெல்ல தன் தனித்தன்மையை இழக்கத் தொடங்கியது.

உருவ அமைப்பு

தாமரை இதழ்கள் யாவும் செய்தி அச்சுத்தாளில் (News Print) அச்சிடப்பட்டன. தொடக்கம் முதலே 19X13 செ.மீ. அளவுடையதாக இருந்து வருகின்றது. தலையங்கத்தைத் தவிர தாமரையின் அனைத்துப் படைப்புகளும் 5 செ.மீ. உள்ள இரு காலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. தொடக்கத்தில் சில இதழ்கள் 96 பக்கங்களுடையன வாகவும் சில 64 பக்கங்களுடையனவாகவும் வெளிவந்தன. பின்பு 80 பக்கங்களுடையதாக வெளிவருகின்றன.

தாமரையின் முகப்பு சற்றே தடித்த அட்டையால் (Card Board) ஆனது. அட்டையின் மேற்புறம் நடுவிலோ அல்லது வலப்பக்கத்திலோ இதழ்ப் பெயரான தாமரை தடித்த பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கும். அதற்குக் கீழே ஆசிரியர் ப. ஜீவானந்தம் என்று உள்ளது. ஜீவாவின் மறைவுக்குப் பின் நிர்வாக ஆசிரியர் ப. ஜீவானந்தம் என்று உள்ளது. மேலட்டையின் பின்புறம் ஏதேனும் ஒரு விளம்பரம் இடம்பெற்றுள்ளது.

இதழின் முதற்பக்கத்தில் தாமரையின் சின்னமும் அதற்குக் கீழ் மலர் - மாதம் - ஆண்டு - இதழ் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. மலர் 20, இதழ் 1 முதல், முதற்பக்கத்தில் ஜீவாவின் புகைப்படம் இடம் பெற்றுள்ளது. இதழினுள் பக்க எண் தரப்பட்டுள்ளது. இதழின் இறுதிப் பக்கத்தில் கீழ்ப்புறம் ஆசிரியர், வெளியிடுபவர் ஆகியோரின் பெயர், முகவரி ஆகியன ஆங்கிலத்தில் இடம்பெற்றுள்ளன. சில இதழ்களில் இவை பின் அட்டையில் இடம்பெற்றுள்ளன. இதழின் உட்புறம் படைப்பின் தலைப்பு, ஆசிரியர் பெயர் ஆகியன தவிர மற்ற அனைத்தும் 10 புள்ளி (Point) எழுத்தால் ஆனவை. படைப்பின்

தலைப்புகள் பெரும்பாலும் 16 புள்ளி (Point) எழுத்துக்களால் ஆனவை. முதலிரண்டு ஆண்டு இதழ்களில் திரைப்பட, வணிக விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளன. அதற்குப்பின் ஜனசக்தி, ஆராய்ச்சி பிற பொதுவுடைமை இயக்க வெளியீடுகள் பற்றிய விளம்பரங்களே பின் அட்டையில் இடம்பெற்றன. தாமரையின் உட்புறம் தொடக்கக்கால இதழ்கள் சிலவற்றில் வணிக விளம்பரங்கள் இடம்பெற்றன. பிற்காலத்தில் இது தவிர்க்கப்பட்டுள்ளது. தாமரையில் செய்திகள், படைப்புகள் ஆகியவற்றுக்கான புகைப்படங்கள் குறைந்த அளவில்தான் இடம்பெற்றுள்ளன. தாமரை இவற்றில் போதிய ஆர்வம் காட்டவில்லை.

பல்வேறு உள்ளடக்கங்கள்

ஜீவா தம் காலத்தில் தாமரை முகப்பு அட்டையில் தனி கவனம் செலுத்தியுள்ளார். தரமான கலைப் படைப்புகளே முகப்பில் இடம்பெற்றன. உழைக்கும் மக்களின் காதல் உணர்வுகள், கலை உணர்வுகள், வறுமையில் செம்மை போன்ற உணர்ச்சிச் சித்திரங்கள் தாமரையின் முகப்பை அலங்கரித்தன. சில சமயம் பொதுவுடைமை இயக்கத் தலைவர்களின் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

பத்திரிகையின் இதயப் பகுதியான தலையங்கத்தை ஜீவா கவனமுடன் கையாண்டுள்ளார். பல்கலைக்கழக உயர்கல்விக்குத் தமிழே பயிற்று மொழியாக இருக்கவேண்டும்; தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாகத் தமிழே இருக்க வேண்டும். பாரதி, கம்பன் ஆகியோரது மேன்மையை மக்கள் உணர வேண்டும் என்பன போன்ற கருத்துக்களைத் தலையங்கத்தின் மூலம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

கலை இலக்கிய வடிவங்களுள் சிறுகதைக்குத் தாமரை அதிகம் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. ஆயினும் பிற்காலத்தில் தமிழ்ச் சிறுகதை வரலாறு எழுதியோர் தாமரையின் இப்பணியை உரிய முறையில் சுட்டிக்காட்டாதது வருந்துதற்குரியதே. சு. சமுத்திரம் போன்றவர்கள் இதனைச் சுட்டிக் காட்டிய போதிலும் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குத் தாமரையின் பங்களிப்பு இதுநாள் வரையில் எவராலும் மதிப்பிடப்படாமல் உள்ளது. மணிக்கொடி ஒருபுறம் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்குத் தளமானது போல, தாமரையும் மற்றொரு புறம் குறிக்கத்தக்க களமாக இருந்துள்ளது. தாமரை சிறுகதை வளர்ச்சிக்கென பல வழிகளைக் கையாண்டுள்ளது. புகழ்பெற்ற படைப்பாளர்களைத் தம் நோக்கிற்கேற்ப எழுத வைத்தல், புதிய

எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தல், இந்திய உலக மொழிகளில் இருந்து சிறந்த சிறுகதைகளை மொழிபெயர்த்தல், தமிழ், இந்திய மொழிச் சிறுகதைக்ள் பற்றிய விமர்சனங்கள், விவாதங்களை வெளியிடுதல், தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றுப் போக்கை மதிப்பிடுதல், தன் சமகால இதழ்களில் வெளியாகும் சிறுக்தைளை மதிப்பிடுதல், இலங்கைத் தமிழர் வாழ்வினை சித்திரிக்கும் கே. டானியல் போன்ற இலங்கை எழுத்தாளர் படைப்புகளை வெளியிடுதல், சிறுகதைப் போட்டிகளை நடத்துதல், அனைத்துக்கும் மேலாக 'கதைக்கொரு கரு' என்ற தலைப்பில் புகழ்பெற்ற படைப்பாளர்கள் பலரிடமிருந்தும் தம் கதைகளுக்கான கருவை எப்படி தேர்வு செய்து, கதையாக்கம் நிகழ்கிறது என்பதைத் தாமரை தொடர்ந்து வெளியிட்டது. இவை தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு உதவிய வேறெந்த இதழும் மேற்கொள்ளாத பணியாகும். மலையாளம், வங்கம், இந்தி, ருஷ்ய மொழிக் கதைகளை அறிமுகப் படுத்தும் பணியையும் தாமரை தொடர்ந்து செய்து வந்துள்ளது.

கு. அழகிரிசாமி, ஜெயகாந்தன், ராஜநாராயணன், விந்தன், நா. பார்த்தசாரதி, சுந்தர ராமசாமி, நீல. பத்மநாபன், மநு. ராமசாமி, கிருஷ்ணன் நம்பி, தி.சா. ராஜூ போன்ற புகழ்பெற்ற படைப்பாளர் களுடன் எண்ணற்ற புதியவர்களும், வளர்வதற்கான களமாகத் தாமரை செயலாற்றியுள்ளது. தகழி சிவசங்கரன் பிள்ளை, வைக்கம் முகம்மது பஷீர், பொற்றேகாட், பொன்குன்னம் வர்க்கி, கே.ஏ. அப்பாஸ், பிரேம்சந்த், கலீப் கிப்ரான், ஓ. ஹென்றி, மாப்பஸான், ஆன்டென் செகாவ், மார்க்ஸிம் கார்க்கி ஆகியோரது படைப்புகளை மூலத்தின் சுவை குன்றாமல் தாமரை மொழிபெயர்த்துள்ளது. தாமரை தமிழ்ச் சிறுகதைக்கென ஆற்றிய பணிகளை மதிப்பிடுவது, பரந்து விரிந்த பணி, எனினும் அது பயனுடையதாகும்.

தாமரை சிறுகதைகளுக்கு அடுத்துக் கட்டுரைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கியது. முதல் 25 ஆண்டுகளில் சுமார் 890 கட்டுரைகள் வெளிவந்துள்ளன (ஏழு இதழ்கள் ஆய்வாளர் பார்வைக்குக் கிடைக்காமையால் அவை தவிர எஞ்சிய இதழ்களில் இடம்பெற்றவை). சங்க இலக்கியம் பற்றிப் பதினைந்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் எட்டு சங்க நூல்களை அறிமுகப்படுத்துவன. எஞ்சிய ஏழும் சங்க இலக்கியம் சார்ந்த பொதுக் கட்டுரைகளாகும். அறிமுகக் கட்டுரைகள் சில பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ளன. நூலின் அமைப்பு, அது உணர்த்தும் பொருள், அதன் யாப்பு முறை, நூலின் சிறப்பு ஆகியனவற்றைக் கூறி

முடிவில் இந்நூல்கள் பற்றி விரிவாக அறிந்துகொள்ள மேலும் பயன்தரக்கூடிய நூற்பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பொதுக்கட்டுரைகளுள் சங்க காலச் சமூகம், அதில் நிலவிய வர்க்க முரண்பாடுகள், மன்னனின் முறையற்ற நடவடிக்கைக்கு எதிரான மக்கள் போராட்டம் ஆகியன சுவைபட எழுதப்பட்டுள்ளன. முத்து வாணிகமும் அதனால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் குறித்து நா. வானமாமலையின் நீண்ட தொடர் கட்டுரை, அடக்கப் பட்டோரிடையே போராட்ட உணர்வும் ஒற்றுமையும் எவ்வாறு தோன்றும் என்பதை விளக்கும் தொ.மு.சி.யின் கட்டுரை ஆகியவை வாசகரின் வரவேற்பைப் பெற்றவை.

தாமரை நீதி இலக்கியங்கள் தொடர்பாகப் பத்துக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளது. இவற்றுள் ஒன்பது திருக்குறள் பற்றியவை. எஞ்சிய ஒன்றும் திருக்குறளோடு நாலடியார், பழமொழி, நன்னெறி விளக்கம், நீதிநெறி விளக்கம் ஆகியவற்றை ஒப்பிடும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. இவற்றுள் மக்கள் சமுதாயத்திற்கு எக்காலத்திலும் பொருந்தும் மானிட தர்மம் நிரம்பியது திருக்குறள் என்று கூறும் அலெக்சாண்டர் பியதிகோஸ்கியின் கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும். அன்றியும் வள்ளுவர் குறிப்பிடும் ஊழ், திருவள்ளுவரின் அறிவுக் கொள்கை ஆகியன அன்றைய தாமரை வாசகரின் கவனத்தைக் கவர்ந்துள்ளன.

மணிமேகலை பற்றி இருபத்தி நான்கும் கம்பராமாயணம் பற்றி ஒன்பதும் சிலப்பதிகாரம் பற்றி ஏழும் பெரியபுராணம் பற்றி இரண்டும் காப்பியங்கள் பற்றிய பொதுக்கட்டுரை இரண்டும் ஆகத் தமிழ்க் காப்பியங்கள் குறித்து நாற்பத்தி நான்கு கட்டுரைகள் தாமரையில் இடம்பெற்றுள்ளன. கே.டி.கே. தங்கமணி மணிமேகலையை மிக விரிவாகவும் ஒப்பீட்டு முறையிலும் ஆராய்ந்துள்ளார்.

தத்துவ விசாரணை என்ற தலைப்பில் மணிமேகலையில் குறிக்கப்பட்ட சைவம், பிரமம், வைணவம், வேதம், ஆசீவகம், நிகண்டம், சாங்கியம், வைசேடிகம், பூதவாதம் போன்ற சமயங்களை அறிமுகப்படுத்தி மணிமேகலையில் வரும் இவை தொடர்பான செய்திகளை விளக்கி ஆறு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இக்காப்பியத்தின் நலம் பாராட்டும் கட்டுரைகள் இரண்டு வெளியாகியுள்ளன. பரத்தமை அமைப்பைச் சாடுதல், பெண்ணின் பெருமை உள்ளிட்ட எட்டுக் கருத்துகள் சாத்தனாரின் சாதனைகள் என ஒரு கட்டுரை குறிக்கிறது. மணிமேகலையில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் என்ற கட்டுரை நினைவில் நிற்கக் கூடியது.

கம்பராமாயணம் குறித்து ஏழு கட்டுரைகளைத் தாமரை வெளியிட்டுள்ளது. மானுட உயர்வைப் பாடிய கம்பனின் திறம், கம்பனின் அரசியற்பார்வை, கம்பனின் பாத்திரப் படைப்புகள் என்பன பற்றிய கட்டுரைகள் மற்றும் மூன்று தலையங்கங்கள் தாமரையில் வெளியாகியுள்ளன. திராவிட இயக்கத்தினர் இராமாயணத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த காலத்தில் தாமரை இராமாயணத்தின் உயர்வை நடுநிலையோடு விமர்சித்துள்ளது.

சேரன் சிலையெடுக்க இமயம் சென்றதை ஆரியர் திராவிடர் போராகக் கருத இயலாது எனல், அரச மரபில்லாதவர்கள், தலை மக்களாகக் கொள்ளப்பட்டமை, பதிகம் கூறும் மூன்று நெறிகள் மட்டுமே காப்பிய நோக்கமல்ல, அரசன் முறை தவறினால் குடி மக்களின் கடமை, சிலப்பதிகாரம் வர்க்கப் போராட்டம் நிரம்பிய சமுதாயப் பின்னணியைக் கொண்டது என்று கூறும் சிலப்பதிகாரம் பற்றிய ஏழு கட்டுரைகள் தாமரையில் வெளிவந்துள்ளன.

பெரியபுராணம் எழுந்த காலத்தின் சமயம், கலை இலக்கியக் கோட்பாடுகள், சடங்காச்சாரங்கள், அரசியல் அமைப்பு ஆகியவற்றை விரிவாக விளக்கி எழுச்சிகளும் கிளர்ச்சிகளும் கலவரங்களும் பேரரசுச் சிதைவும் ஒற்றுமையின்மையும் சாதிப் போராட்டங்களும் சூழ்ந்த ஒரு காலகட்டத்தில் நாயன்மார்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கைச் சோழ மன்னர்கள் எங்ஙனம் பயன்படுத்திக் கொண்டனர் என்பதை இரு கட்டுரைகளில் தாமரை வெளியிட்டுள்ளது. பெரியபுராணம் பற்றிய தாமரையின் இவ்வணுகுமுறை அன்றைய இலக்கிய உலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.

சமயங்கள் பற்றித் தாமரை மிகக் குறைந்த அளவிலேயே கவனம் செலுத்தியுள்ளது. பல்வேறு சமயங்கள் பற்றித் தாமரை பதினைந்து கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இவற்றுள் எட்டுக் கட்டுரைகள் பல்வேறு சமயங்களை அறிமுகம் செய்வனவாக உள்ளன. சித்தர்களின் வாழ்வும் பணியும் பற்றி இரு கட்டுரைகள் உள்ளன. வள்ளலார் பற்றியும் சமணர்களின் கழுவேற்றம் பற்றியும் இந்துமதச் சிறப்பு பற்றியும், சமயப் போர்கள் வர்க்க முரண்பாடுகளே என்பன பற்றியும் ஒவ்வொரு கட்டுரைகள் முறையே வெளிவந்துள்ளன. தத்துவ ஞானம் என்ற தலைப்பில் வைணவம், சைவம், பௌத்தம், சமணம், சாங்கியம், அத்வைதம், சாருவாகம் ஆகிய சமயங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

இலக்கணம் பற்றி ஐந்து கட்டுரைகளைத் தாமரை வெளியிட்டுள்ளது. உவமை பற்றி ஒன்றும் சொல் விளக்கக் கட்டுரைகள் இரண்டும், இந்திய மொழிகளுக்கான பொது வரிவடிவத்தை அறிமுகப்படுத்தும் கட்டுரை ஒன்றும் தாமரையில் இடம் பெற்றுள்ளன.

நாட்டுப்புற இலக்கியம் பற்றி நாற்பத்து மூன்று கட்டுரைகள் தாமரையில் வெளியாகியுள்ளன. நாட்டுப்புறக் கதைப்பாடல்களை அறிமுகம் செய்வதாகப் பத்தும், நாட்டுப்புற இலக்கியம் பற்றிய பொதுவான கட்டுரைகளாக முப்பத்து மூன்றும் வெளியாகியுள்ளன. தமிழில் நாட்டுப்புற இலக்கியம் இன்று ஓரளவு வளர்ச்சியுற்றுத் தனியொரு துறையாக விளங்குகிறது. ஆனால் இத்தகு இலக்கிய மதிப்புக் கிடைத்திடத் தாமரையின் பணியும் ஒரு காரணம். மேலும் பல்வேறு பகுதிகளில் வழங்கும் பலதரப்பட்ட ஐந்நூற்றுக்கும் அதிகமான நாட்டுப்புறப் பாடல்களையும் தாமரை தொடர்ந்து வெளியிட்டுள்ளது. தாமரையின் இப்பணி குறித்த ஆய்வு எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

நாவல் இலக்கியம் பற்றி எழுபத்தாறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் நாவல் இலக்கியம் பற்றிய பொதுக் கட்டுரைகள் பத்தும் பல்வேறு நாவல்களின் கதை மாந்தர்களை மதிப்பிடுவதாகப் பத்தும் தனியொரு நாவலை விமர்சிப்பனவாக நாற்பத்தியெட்டும் இவை தவிர இப்பகுப்புக்குட் படாத கட்டுரைகள் எட்டும் தாமரையில் வெளியாகியுள்ளன. தாமரையின் முதல் ஐந்து ஆண்டுகளில் நாவல் இலக்கியம் பற்றிக் கட்டுரை எதுவும் வெளி வரவில்லை.

சிறுகதை இலக்கியம் பற்றி அறுபத்தியாறு படைப்புகள் உள்ளன. பொதுக்கட்டுரைகள் ஏழும் தனிப்பட்ட சிறுகதை யாளர்களின் படைப்புகளை மதிப்பிடுவனவாகப் பத்தும் தனியொரு சிறுகதையை மதிப்பிடுவனவாக ஏழும் சிறுகதை நூல்கள் பற்றிய விமர்சனங்கள் ஐந்தும் பிற இதழ்களில் வெளியான படைப்புகளை விமர்சிப்பதாக நான்கும் முன்னர் குறிப்பிட்ட கதைக்கொரு கரு என்ற தொடர் பதினெட்டும் தலையங்கம் மூன்றும் வெளியாகியுள்ளன.

தாமரை, கவிதைகள் பற்றி அதிகம் கவனம் செலுத்தவில்லை எனக் கூறுவர். ஆனால் தாமரை கவிதை இலக்கியம் பற்றித் தனிக் கவனம் செலுத்தியுள்ளது. கவிதைகளை வெளியிட்டுள்ளதோடு கவிதை பற்றி இருநூற்று இருபத்தைந்து கட்டுரைகளைத் தாமரை வெளியிட்டுள்ளது. இவற்றைப் பாரதிக்கு முற்பட்ட காலம், பாரதி

காலம், பாரதிக்குப்பிற்பட்ட காலம் என வசதி கருதி நாம் பகுத்துக் காணமுடியும். இம்மூன்று பிரிவுகளுள் பாரதியின் கவிதை பற்றியவையே மிக அதிகமுள்ளன. ஜீவா தம் காலத்தில் ஒவ்வொரு செப்டம்பர் மாத இதழையும் பாரதி சிறப்பிதழாகவே வெளியிட்டுள்ளார். இந்நிலைப்பாடு அவரது மறைவுக்குப் பிறகும் சில ஆண்டுகள் பின்பற்றப்பட்டுள்ளது. பாரதியின் கவிதைகளைப் பரப்பும் பணியில் தாமரை மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டுள்ளது.

பாரதிக்குப் பிறகு பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆகியோர் படைப்புகளைத் தாமரை அதிகம் விமர்சனத்துக்கு ஆட்படுத்தியுள்ளது. தமிழ்ப் புதுக்கவிதை முயற்சித் தொடக்க காலத்தில் கடும் எதிர்ப்புக்கு உள்ளான சூழலில் தாமரையும் புதுக்கவிதை பற்றி அதிகம் கவனம் செலுத்தவில்லை. ஆனால் ஜீவாவின் மறைவுக்குப் பின் தாமரை புதுக்கவிதை இலக்கியம் பற்றிய தனது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளது. தாமரையின் இம்மாற்றத்திற்குக் காரணம் மேனிலைத் தழுவல், பிராமண மயமாதல் போன்ற சமூக மாற்றப்போக்குகளின் விளைவே எனலாம். புதுக்கவிதை பற்றி முப்பது கட்டுரைகளும், எண்ணற்றக் கவிதைகளும் தாமரையில் இடம் பெற்றுள்ளன. எழுத்து இதழில் வெளியானவற்றுள் தேர்ந்தெடுக்கப் பட்டவற்றின் புதுக்குரல்கள் என்ற தொகுப்புதான் தாமரையின் புதுக்கவிதை ஆய்வுக்கு வித்திட்டுள்ளது. எழுத்து, கணையாழி ஆகியவற்றின் கவிதைகளைத் தாமரை கடுமையாக விமர்ச்சித்துள்ளது. சி. மணி, ஞானக்கூத்தன், ந. பிச்சமூர்த்தி, தருமு சிவராம், பசுவையா போன்றோர் கவிதைகள் தாமரையின் கடுமையான விமர்சனத்துக்கு ஆளாயின. அதே வேளையில் வானம்பாடி இயக்கத்தைச் சார்ந்த மீரா, சக்திக்கனல், கோ. ராஜாராம், மு. மேத்தா, சிற்பி, இன்குலாப், அக்னி புத்திரன், நவபாரதி, வண்ண நிலவன், அப்துல் ரகுமான், ஹரி, சீனிவாசன், தமிழன்பன் போன்ற முற்போக்குக் கவிஞர்களின் படைப்புகளைத் தாமரை பெரிதும் வரவேற்றுள்ளது. தமிழில் புதுக்கவிதைகள் சமகாலச் சிக்கலைப் பிரதிபலிக்காமல் நோயுற்ற, நம்பிக்கையிழந்த அதீத கற்பனையுடன் இருண்மைமிக்க, பொருள் புரியாத் தன்மையுடன் இருப்பதாகத் தாமரை கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுள்ளது.

நாடக இலக்கியம் தொடர்பாகத் தாமரை பதினான்கு கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. சங்கரதாஸ் சுவாமிகள், விஸ்வநாததாஸ், டி.கே. சண்முகம் முதலிய நாடகக் கலைஞர்களின் நாடகங்களையும் பணிகளையும் விமர்சிக்கும் நான்கு கட்டுரைகளும்,

சமகாலத் தமிழ் மேடை நாடகங்களை விமர்சிக்கும் ஐந்து கட்டுரைகளும், தமிழ் நாடகக் கலை பற்றிய பொதுக்கட்டுரைகள் ஐந்துமாக வெளிவந்துள்ளன. இவை தவிர, 'உலக நாடக இலக்கியம்' என்ற தலைப்பில் பல்வேறு நாடுகளிலும் நாடகக் கலை எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை அறிமுகப்படுத்தும் மணிசாஸ்திரியின் தொடர்கட்டுரையும் தாமரையில் வெளியாகியுள்ளது.

ஐரோப்பியர் வருகையும் அச்சுப் பொறி அறிமுகமும் தமிழ் உரைநடையை இலக்கிய வெளிப்பாட்டுக் கருவியாக்கின. தமிழில் உரைநடை எவ்வாறு வளர்ந்தது என்பதை மதிப்பிடும் ஒன்பது கட்டுரைகளைத் தாமரை வெளியிட்டுள்ளது. இவற்றுள் இரண்டு பாரதி தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றியவை. தமிழ் உரைநடையின் முன்னோடியான மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் நடையைத் திறனாயும் ஒரு கட்டுரை. இது தவிர எஞ்சியவை தமிழ் உரைநடையின் பொதுத்தன்மை பற்றியவை.

பல்வேறு இலக்கிய வடிவங்களைத் திறனாய்ந்துள்ள தாமரை திறனாய்வுத் துறை பற்றியும், தமிழில் திறனாய்வு அடைந்துள்ள வளர்ச்சி குறித்தும் இருபத்து மூன்று கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இவற்றுள் ஃபிராய்டிசம், சோசலிசம், மார்க்ஸிய விமர்சனம், மார்க்சிய அழகியல், தற்காலத் திறனாய்வுப் போக்குகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சிறுவர் இலக்கியம் பற்றியும் தாமரை கவனம் செலுத்தியுள்ளது. மூன்று கட்டுரைகள் இது குறித்துத் தாமரையில் வெளியாகியுள்ளன. தமிழகத்தில் சிறுவர்களுக்கான வரலாற்று, அறிவியல் கதைகள், கவிதைகள் போதிய அளவு வளரவில்லை; வெளிவந்துள்ளவற்றின் தரமும் போற்றத்தக்கதாக இல்லையெனத் தாமரை கருத்துரைத்துள்ளது. தமிழ் இதழியல் துறையில் இடர்ப்பாடுகள், பிற இதழ்களின் போக்குகள், தாமரைப் படைப்புகள் பற்றிய விமர்சனம் அச்சுத் தொழிலாளர் நிலை ஆகியன பற்றியும் தாமரை கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. குமுதம், ஆனந்த விகடன், கல்கி, தினமணிக் கதிர், தினமணி போன்ற இதழ்களின் சில நடவடிக்கைகளைத் தாமரை கடுமையாக விமர்சித்துள்ளது. தவிரவும் தினமணி நாளேட்டில் பணியாற்றிய நா. பார்த்தசாரதிக்கும் தினமணி உரிமையாளருக்கும் இடையே எழுந்த சில முரண்பாடுகளால் பார்த்தசாரதி தினமணியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார். இதன் பின்னணியை விவரிக்கும் 'எனது வேலை நீக்கம்' என்ற தொடர் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், உழைக்கும்

எழுத்தாளர்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. இதழியல் நிறுவனமயமானதையும் உழைக்கும் பத்திரிகையாளர் எனும் தனியொரு பிரிவு தமிழில் உருவானதையும் மேற்கண்ட கட்டுரைகள் விளக்குகின்றன.

கலை இலக்கியத் தொடர்புடையோரின் வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்யும் பணியிலும் தாமரை முனைப்புடன் ஈடுபட்டது. சுப்ரமண்ய பாரதி, வ.உ. சிதம்பரம், ஜீவா, எஸ். வையாபுரிப் பிள்ளை, சாமி. சிதம்பரனார், கு. அழகிரிசாமி, நா. வானமாமலை, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், சி.ஏ. பாலன், கே.ஏ. அப்பாஸ், எஸ்.வி. சகஸ்ரநாமம், டி.கே. சண்முகம் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைத் தாமரை தனிக்கவனத்துடன் வெளியிட்டுள்ளது. இவர்களின் வரலாறு, சமகாலப் பின்னணி, தத்தம் துறையில் இவர்கள் ஆற்றியுள்ள பணிகள், வாழ்க்கை, இலக்கியம் ஆகியன குறித்து இவர்களது நோக்கம் போன்றவற்றை இக்கட்டுரைகள் விளக்குகின்றன.

சாகித்திய அகாடமி, உலகத் தமிழ் மாநாடு, சென்னைப் பல்கலைக்கழகம், கலை இலக்கியப் பெருமன்றம் ஆகியன குறித்தும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, சாகித்திய அகாடமியின் நடவடிக்கை ஒன்பது கட்டுரைகள் மூலம் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. தகழியின் மலையாள நாவலான 'இரண்டிடங்கழி' 'இரண்டு படி' எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டமைக்கு அகாடமி பரிசு வழங்கியதையும், ராஜாஜி, அகிலன் போன்றோர் பரிசு பெற்றமைக்கான பின்னணி பற்றியும் கடும் விமர்சனங்களைத் தாமரை வெளியிட்டது. மொழி வளர்ச்சியிலும் இலக்கிய வளர்ச்சியிலும் அகாடமி அக்கறை காட்டுகிறதா? மாறாக இலக்கிய உலகில் ஒரு புதிய ஏகாதிபத்தியம் ஒன்றை உருவாக்குவதாகக் குற்றமும் சாட்டுகிறது. பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழியாகத் தாய்மொழி இருக்க வேண்டியதன் அவசியத்தை 1961இல் தாமரை மூன்று கட்டுரைகளில் வலியுறுத்தியுள்ளது.

மேற்குறிப்பிட்ட இலக்கியங்களைத் தவிரக் கட்சிகளும் கலைஞர்களும், கலை இலக்கியத் துறையில் தி.மு.க.வின் பங்கு, கலைஞனின் சுதந்திரம் ஆகிய தொடர்பகுதிகள் கலை இலக்கியங்கள் பற்றிய தாமரையின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவன.

கட்சிகளும் கலைஞர்களும் என்ற தலைப்பில் ஏழு கட்டுரைகள் உள்ளன. கலைஞன் ஒரு கட்சிக்குள் தன்னைத் சிறைவைத்துக் கொள்ளலாமா? சமுதாயக் கட்சியில் கலைஞனுக்கு

என்ன லாபம்? சமுதாய முன்னேற்றத்துக்குப் பாடுபடும் எந்தக் கட்சியும் கலைஞர்களை ஒதுக்கிவிடுதல் இயலாது. கலைஞன் தனித்துச் செயல்பட்டால் அக்கலைப் படைப்பு பாழடையும் என்பன போன்ற கருத்துக்களை முன் வைத்து இத்தொடர்ப்பகுதி தொடங்கியுள்ளது. கலைஞர்கள் ஏதாவது ஒரு கட்சியில்-இயக்கத்தில் பங்கு கொள்ள வேண்டும். தனித்து நிற்பதில் பயனில்லை. ஒரு கட்சியின் முடிவுகள் என்பது கூட்டுச் சக்தியின் முடிவாகும். எனவே, தனி முடிவுக்கு மேலாக அதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். கட்சியினர் கலைஞர்களைத் தங்களது அரவணைப்புக்குள் கொண்டு வரவும், அவர்களுக்குரிய சுதந்திரத்தையும் உரிமையையும் கொடுக்கவும் முன்வர வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் இப்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

கலை கலைக்காகவா? வாழ்க்கைக்காகவா? என்ற விவாதத்தின் அடிப்படையில், கலைஞனுக்குச் சுதந்திரம் தேவையா? தேவையெனில் அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது பற்றி ஏழு பகுதிகளாக இத்தொடர்பகுதி வெளிவந்துள்ளது. கலைஞனுக்குச் சுதந்திரம் தேவையென ஒரு பிரிவினர் கருத்துரைத்துள்ளனர். இவர்தம் தரப்புவாதமாக, கலைஞன் பரிபூரண சுதந்திரம் பெற்றவன், அவனைக் கட்டுப்படுத்துகிற தேவைகள் எதுவும் இல்லை. அவன் எவ்வித அதிகாரத்துக்கும் பணிய வேண்டியதில்லை. அவன் அவனுக்கு மட்டுமே பொறுப்பாளி. அவன் எதையும் எப்படியும் படைக்கலாம். அவனது படைப்புகள் மற்றவர்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய அவசியமே இல்லை என்பன போன்ற கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

கலை இலக்கியத்துறையில் தி.மு.க.வின் பங்கினை விமர்சிக்கும் ஏழு கட்டுரைகள் தாமரையில் வெளியாகியுள்ளன. இவற்றுள் மூன்று தி.மு.க. கலை இலக்கியத்துறைக்குக் குறிப்பிடத்தக்கப் பணியினை ஆற்றியுள்ளதெனவும், நான்கு கட்டுரைகள் தி.மு.க.வினர் பணிகள் இலக்கியத் துறையின் வீழ்ச்சிக்கே பயன்பட்டன என்றும் கூறுகின்றன.

இனவெறி, மொழியுணர்வு ஆகியவற்றை முன் வைத்துத் தொடங்கப்பட்ட திமுக. கலை இலக்கியத் துறையில் மிகச் சாதாரண பணியைத்தான் செய்தது. அவர்களுடைய பிரச்சார பலம் பொதுமக்களிடையே ஒருவித மாயையை ஏற்படுத்தியுள்ளது. சமூக மாறுதலுக்கு மூலக்காரணம் பொருளாதாரம். தி.மு.க. இதனை மறைத்துவிட்டு இன உணர்ச்சியினை, மொழியுணர்ச்சியினை முதன்மைப்படுத்தியது என்பன போன்ற தி.மு.க.விற்கு எதிரான கருத்துக்கள் இப்பகுதியில் சுட்டப்பட்டுள்ளன.

மதிப்பீடு

பொதுவுடைமை இயக்க இதழ்கள் ஜனரஞ்சக, வணிகத் தன்மை கொண்ட இதழ்களில் இருந்து அடிப்படையில் மாறுபட்டவை. காரணம் ஜனரஞ்சக இதழ்களுக்கான நுகர்வோர் தளம் மிகவும் பரந்துபட்டதும் விரிந்ததும் ஆகும். மக்களைச் சென்றடைவதற்கான வாய்ப்பு பொதுவுடைமை இயக்க இதழ்களைவிட இவற்றிற்கே அதிகமுள்ளன. தமிழக மக்கள் தொகையில் சுமார் 5 முதல் 10 சதவீத மக்களே பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கமுடையவர்கள். இவர்களுள் கலை இலக்கிய இதழ்களைப் படிப்பவர் தொகை மிகவும் குறைவு.

வெகுஜனப் பத்திரிகைகள் பொழுதுபோக்கை விரும்பும் வாசகர்களால் மட்டுமே படிக்கப்படுபவை. பொதுவுடைமைப் பத்திரிகைகள் அவ்வாறில்லை. இதன் வாசகர்கள் சில கருத்துக்களைப் பெறவும் - மேலும் தெளிவுபெறவும் - விளக்கம் பெறவும் இவற்றைப் படிக்கின்றனர். இவ்விதழ்களின் வாசகர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பண்பு ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் ஒருவித நிறைவுத் தன்மை உடையவை. மேலும் பொதுவுடைமை இதழ்கள் குறிப்பிட்ட சில பண்பாட்டு மதிப்புகளைத் திட்டமிட்டு உருவாக்கும் நோக்கம் கொண்டவை. இவற்றுள் ஏதேனும் ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கம் பின்னணியாக இருக்கும். இந்நிலை வெகுஜனப் பத்திரிகைகளுக்கு இல்லை.

சாந்தி, சரஸ்வதி போன்றவை பொதுவுடைமை இயக்கத்தாரால் நடத்தப்படவில்லை. ஆனால் பொதுவுடைமை ஏற்றுக் கொண்டவர்களால் நடத்தப்பட்டன. செம்மலர் வெளியாகும் வரை தாமரை ஒன்றே பொதுவுடைமை இயக்க இதழ் எனப் பிரிக்கப் பட்டது. இத்தகு சிறப்புடைய தாமரையின் செயல்பாடுகள் பற்றிய மதிப்பீடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- முதல் இருபத்தைந்து ஆண்டுகளில் தாமரை ஐந்து போக்குகளை உடையதாக இருந்துள்ளது.

1. பண்டை இலக்கிய ஆய்வுக்கு இடம் தரல்.
2. புதிய இலக்கிய முயற்சிகளுக்கும் அவற்றுக்கான ஆய்வுகளுக்கும் வாய்ப்பளித்தல்.
3. சமூக அரசியல் பண்பாட்டுச் செய்திகளைத் தருதல்.

4. நாட்டுப்புற இயல் பற்றிய அறிமுகத்தையும் ஆய்வையும் விரிவாக்கல்.

5. இலக்கியங்களை மார்க்சிய நோக்கிலும் சமூக நோக்கிலுமான ஆய்வுக்கு உட்படுத்துதல்.

ஜீவாவின் காலத்தில் இவ்வைந்து நிலைகளும் வெளிப் பட்டுள்ளன. அவருக்குப் பின் சில மாறியும், சில கைவிடப்பட்டும் உள்ளன. இதற்குக் காரணம் அவ்வப்போது இருந்த ஆசிரியர் குழுவின் நடவடிக்கைகளே எனலாம்.

- ஜீவா காலம் வரை தாமரை தனது நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றியுள்ளது. ஜனநாயகத் தன்மையுடன் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக் கொண்டு செயல்பட்டுள்ளது. அன்றைய தமிழகத்தில் புகழ்பெற்றிருந்த படைப்பாளர்கள் பலரையும் ஜீவா தாமரைக்கெனப் பயன்படுத்தியுள்ளார்.

- தாமரையின் படைப்பாளர்களை மார்க்சியர், மார்ச்சிய சார்பினர், மார்க்சிய எதிர்நிலையினர் என மூன்று வகைகளாகப் பிரித்தறியலாம். இவர்களுள் மார்க்சியச் சார்பினரின் படைப்புகளே தாமரையில் மிக அதிகம் வெளிவந்துள்ளன. மார்க்சிய எதிரிநிலையினரின் நான்கு படைப்புகள் தாமரையில் வெளியாகியுள்ளது.

- மனித சமூகத்தின் நாசகார சக்திகள் சுயநலப் போக்கையும் அழிவு வேலைகளையும் சுட்டிக் காட்டியதுடன், அவற்றை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் தாமரை வழங்கியுள்ளது.

- தாமரை இலக்கியப் பணியில் நீண்ட காலம் இருந்து வந்தாலும் தமிழகத்தின் முன்னணி விமர்சகர்கள் தாமரையின் பங்களிப்பை மேம்போக்காக ஓரிரு வரிகளில் சுட்டிக் காட்டியுள்ளனர். இது கண்டனத்துக்குரியது. மக்களிடம் ஓரளவேனும் வரவேற்பைப் பெறாத எதுவும் நீடித்திருக்க முடியாது. நாற்பது ஆண்டுகளைக் கடந்தும் தொடர்ந்து தன் கலை இலக்கியப் பணியைச்செய்து வரும் தாமரையைக் குறைவாக மதிப்பிடுவதோ, அலட்சியப் படுத்துவதோ நியாயமல்ல. ஒரு சிலர் அவ்வாறிருப்பது இங்குள்ள குழு மனப்பான்மையைக் காட்டுகிறது.

- இடதுசாரி இயக்கத்தின் பலத்துடன் வெளிவரும் தாமரை கணிசமான வாசகர் வட்டத்தைப் பெற்றுள்ளது. கலாச்சார

சீரழிவை வளர்த்து வாழும் வணிக இதழ்களுக்கு எதிராக முற்போக்குச் சிந்தனைகளையும், முற்போக்கு இலக்கிய முயற்சிகளையும் முன்னெடுத்துச் செல்லும் பணியில் தாமரை தோய்வின்றி ஈடுபட்டு வருகின்றது.

- இடதுசாரி இயக்க இதழ் என்று தாமரையை அழைப்பது பொருத்தமற்றது என்கிறார் கோ. கேசவன். தம் நோக்கில் அதற்கான காரணங்களையும் குறிப்பிடுகிறார். அடிப்படையில் நமது இடதுசாரி இயக்கங்களே, இடதுசாரி அரசியலைக் கைவிட்டு முதலாளித்துவ சீர்திருத்த இயக்கங்களாக உள்ளன. திருத்தல்வாதத் தன்மையுடையனவாகவும் உள்ளன. எனவே இத்தகு இயக்கத்திலுள்ளவர்களால் நடத்தப்பெறும் தாமரையும் இத்திருத்தல் வாதத்தைப் பின்பற்றுவது இயற்கையே. எனினும் தாமரையில் எழுதிய அனைவரும் இத்தன்மையை உடையவர்களல்லர்.

- தாமரை பற்றிய கோ. கேசவனின் எதிர்மறை விமர்சனங்கள் விவாதத்திற்குரியவை மட்டுமல்ல, ஆழ்ந்த ஆய்விற்கும் உரியவை. இடதுசாரிகளிடையே மார்க்சியத்தை விளங்கிக் கொள்வதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதிலும் எழுந்த பல்வேறு கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் இடது சாரிகள் பல்வேறு குழுக்களாக இயங்குகின்றனர். அவ்வாறியங்கும் குழுக்கள் தமக்குள் அவரவர் செயல்பாடுகளே நியாயம் என்றும் மற்றவை இடதுசாரித் தீவிரவாதம், திருத்தல் வாதம் என்றோ குற்றம் சாட்டுவது மாறி மாறி நடைபெறுகின்றன. எனவே இரு பக்கக் கருத்துக்களின் அடிப்படையில் விருப்பு வெறுப்பற்ற முறையில் நடத்தப்படும் ஆய்வே இத்தகு விவாதத்திற்கு முடிவாக அமையும்.

- சமூக மாற்றத்துக்கான பண்பாட்டு மதிப்புகளை உருவாக்கும் பணியில் தாமரை போதிய அளவு ஈடுபடவில்லை என்ற எதிர்மறையான விமர்சனம் உள்ளது. தாமரையின் இருபத்தைந்து ஆண்டுகாலப் படைப்புகளை ஆராய்ந்தால், இது தாமரை பற்றிய மேலோட்டமான கருத்து என்பதை உணரலாம். தனக்குக் கிடைத்த வாய்ப்புகள், சூழல்கள், வாசகராதரவு ஆகியவற்றைச் சமூக மாற்றத்துக்கு முழுமையாகப் பயன்படுத்தாவிடினும், அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

- தாமரை, தன் சமகாலத்தில் புகழ்பெற்றிருந்த அகிலன், மு.வ. போன்றோர் படைப்புகளை விமர்சனத்துக்கு உள்ளாக்க வில்லை என்ற கருத்தைப் பொன்னீலன் தருகிறார். இது தவறு. மு.வ.வின் படைப்புகள், அவரது பாத்திரங்கள் முதலியன பற்றித் தாமரை நெடியதொரு விமர்சனத் தொடரை வெளியிட்டுள்ளது. அகிலனின் சில நாவல்கள் தாமரை விமர்சனத்துக்கு உட்பட்டுள்ளன. பொதுவாகத் தாமரை எதிரணியினரையும் அவர்தம் படைப்புகளையும் விமர்சிக்கும் பணியை அதிகம் செய்யவில்லை.

- ஒருமுறை திரைப்படத் துறை சார்ந்த துணுக்குகளை சில படங்களுடன் வெளியிட்டது. ஒருமுறை திரைப்பட நடிகையின் படமே அட்டையில் இடம் பெற்றது. கவர்ச்சியாக நடிப்பதில் தவறில்லை எனக் கூறிய ஒரு நடிகையின் ஆபாசமான படம் ஒருமுறை தாமரையில் இடம் பெற்றிருந்தது. இத்தகு நடவடிக்கைகள் வாசகர்களின் கடும் எதிர்ப்புக் குள்ளானது. இதனால் இப்போக்கைத் தாமரை பின்னர் கைவிட்டுள்ளது.

- வாழ்க்கையின் மேலும் உழைப்பின் மேலும் நம்பிக்கை ஏற்படுத்துதல், கூட்டு வாழ்வின் மேன்மையை மக்களிடையே கூறுதல், பெண்ணை அடிமைப்படுத்தலுக்கு மாறாகப் பெண்கள் பற்றிய ஆரோக்கியமான கண்ணோட்டத்தை உருவாக்குதல், நியாயத்துக்கெனத் துணிந்து போராடும் போர்க்குணத்தை உயர்த்தல் போன்ற உள்ளடக்கங்கள் தாமரையின் புனைகதைகளில் கையாளப்பட்டுள்ளன.

- தாமரையின் படைப்புகள் ஏழ்மை, அவலம், மனித நேயம், வேலையின்மை, வர்க்க முரண், திராவிட இயக்க எதிர்நிலை ஆகியனவற்றைப் பிரதிபலிப்பதாக உள்ளன.

- தாமரையின் கவிதைகள் பெரிதும் மரபு சார்ந்தவையே. புதுக்கவிதை பற்றி எவ்வித கருத்துமில்லாதிருந்த தாமரை பின்பு தனது நிலையை மாற்றிக் கொண்டுள்ளது.

- சோவியத், இத்தாலி, சீனா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் திரைப்படங்கள் பற்றியும், திரையுலகக் கலைஞர்கள் பற்றியும் தாமரை தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளது. வளரும் விஞ்ஞானம் என்ற தலைப்பில் அறிவியல் துறையில் ஏற்பட்ட

பல்வேறு மாற்றங்களை அறிமுகப்படுத்தும் எஸ். தோத்தாதிரியின் தொடர் கட்டுரை சிந்தனைக்குரியது.

- தாமரையின் சாதனைகள் என்று சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தொடங்கிய முதலாவது இலக்கிய இதழ் தாமரை. இதன் தொடக்கம் தனி நபர் (ஜீவா) முயற்சியே. என்றாலும் இடைவெளியின்றி இது தொடர்ந்து வெளிவருவது மிகப் பெரும் சாதனையே.

2. தொடக்கம் முதல் நாட்டுப்புற இலக்கியம் பற்றியும் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதிலும் தாமரை மிகுந்த அக்கறை காட்டியுள்ளது.

3. தமிழ்ச் சிறுகதைத் துறைக்குத் தாமரை ஆற்றியுள்ள பணி மதிப்புக்குரியதே.. சாரமற்ற, பிரச்சாரத் தன்மையுடைய கதைகளையே தாமரை வெளியிட்டது எனக் கூறுவது தவறாகும்.

4. மொழிபெயர்ப்புகளில் தாமரை தொடக்கம் முதலே சீரிய கவனம் செலுத்தியுள்ளது. இது பாராட்டுக்குரியது. ரஷ்யா, சீனா, ஆங்கிலம், கிழக்காசிய மொழிகள், பிற இந்திய மொழிகள் ஆகியவற்றிலிருந்து பல்வேறு படைப்புகள் தொடர்ந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இது சாதனைக்குரிய பணியே.

தீக்கதிர்

1963 கே. ராஜு

முன்னுரை

பல மதங்கள், இனங்கள், மொழிகளைக் கொண்ட நம் நாட்டில் மதவெறி, குறுகிய கண்ணோட்டம், பிரிவினைவாதம் போன்றவற்றிற்கு இடம் கொடுத்தால் தேச ஒற்றுமையை நாம் கட்டிக் காக்க முடியாது. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதே நமது தாரக மந்திரமாக இருக்க முடியும். இந்தத் தத்துவத்தை உயர்த்திப் பிடிப்பதில் 'தீக்கதிர்' கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் நடந்துவரும் அதிர்ச்சியளிக்கும் நிகழ்ச்சிகள் நமது தேசீய கௌரவத்தைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளன. பிரிவினைவாதிகளின், மதவெறியர்களின் சதிச்செயல்களை முறியடித்துத் தேச சுதந்திரம், ஜனநாயகம், அரசியல் சட்டம் ஆகியவற்றைப் பாதுகாப்பதே இன்றைய தேவை. இதற்குத் தொடர்ச்சியான கருத்துப் போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

சமூக, அரசியல் நெருக்கடிகளுடன் நாட்டின் பொருளாதாரமும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. தற்போதைய இருள் சூழ்ந்த நிலையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள சரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சர்வதேச நிதி நிறுவனம் விதித்துள்ள நிபந்தனைகள் நாட்டை மீளமுடியாக் கடன் வலையில் சிக்க வைத்துள்ளன. தொழில் உற்பத்தி குறைந்திருக்கிறது; விவசாயம் நெருக்கடியில் உள்ளது; சிறு தொழில்கள் ஸ்தம்பித்து நிற்கின்றன. விலைவாசியும், வேலையின்மையும், வறுமையும், ஏற்றத்தாழ்வும் அதிகரித்து வருகின்றன. பொதுத்துறை சீரழிக்கப்பட்டு வருகிறது; அந்நியப் பொருட்கள் தங்குதடையின்றி உள்ளே நுழைந்து 'சுதேசி' என்ற ஆள்வோரின் கோஷம் வெறும் வாய்ப்பந்தல் என்பதை நிரூபித்து வருகின்றன. அனைத்து மக்களுக்கும் எழுத்தறிவு, உடல்நலப்பாதுகாப்பு, குடியிருக்க வீடு ஆகிய இலட்சியங்கள் இன்னம் எட்டாக்கனியாகவே உள்ளன. இப்பிரச்சனைகளைப் பற்றி உள்ளது

உள்ளபடி மக்களுக்கு எடுத்துச் சொல்ல தீக்கதிர் முயன்று வருகிறது. உழைக்கும் மக்களின் பத்திரிகையாக, ஏழை எளிய மக்களின் பாதுகாவலனாக, பாதிக்கப்பட்ட மக்கள் விடும் ஆறுதல் பெருமூச்சு பத்திரிகையாகத் திகழ்ந்து வருகிறது.

பத்திரிகை தோன்றிய வரலாறு

ஒன்றாயிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள், சுதந்திரத்திற்குப்பின் ஆட்சிபீடம் ஏறிய இந்திய தேசீய காங்கிரஸ் பற்றி இரு வேறு கணிப்புகள் எழுந்தன. கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் முற்றிய சூழ்நிலையில்தான் தீக்கதிர் பிறந்தது. கட்சி அணிகளுக்குச் சித்தாந்தப் பயிற்சி கொடுக்கவும், காங்கிரஸ் ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக்கொள்கைகளை அம்பலப்படுத்தவும் அன்று ஒரு பத்திரிகை மிகவும் தேவையாக இருந்தது. அத்தேவையை நிறைவேற்றவே தீக்கதிர் எழுந்தது. தீக்கதிர் தோன்றிய கட்டத்தில், 1962ஆம் வருடத்திய இந்திய சீன எல்லை மோதலைத் தொடர்ந்து கட்சியின் ஆயிரத்துக்கு மேற்பட்ட தலைவர்களும், ஊழியர்களும், சிறையில் அடைக்கப் பட்டிருந்தனர். சிறையில் இருந்த தலைவர்கள் கலந்து பேசி ஒரு தினசரி இதழைத் தொடங்க வேண்டுமென முடிவெடுத்து அப்பொறுப்பை தோழர் எல் அப்பு என்ற அற்புதசாமியிடம் அளித்தனர். 1963 ஜூன் 26 அன்று தோழர் அப்புவை ஆசிரியராகக்கொண்டு முதல் இதழ் வெளியானது.

தீக்கதிர் உருவாக்கத்திற்குப் பெரிதும் வழிகாட்டியதோடு, தமிழகம் முழுவதிலும் அதற்கு முகவர்களைத் தேடிப்பிடித்து விற்பனைக்கு தோழர் ஆர். ராமராஜ் ஏற்பாடு செய்தார். தோழர் அப்புவுக்கு ஆசிரியர் பணியில் பெரிதும் தோள் கொடுத்தவர் தோழர் சோலை. தீக்கதிர் உருவாக்கத்திற்கு மிகவும் பாடுபட்ட இன்னொரு தோழர் எம்.என். ராவுண்ணி.

இப்பத்திரிகைக்கு 'தீப்பொறி' என்ற பெயர்தான் கேட்கப் பட்டது. ஆனால் தி.மு.க. தலைவர்களுள் ஒருவரான திரு. சி.பி.சிற்றரசு அப்பெயரைப் பதிவு செய்து வைத்திருந்ததால் இரண்டாவதாகக் கேட்கப்பட்ட 'தீக்கதிர்' என்ற பெயர் கிடைத்தது.

முதலில் பத்திரிகையை அச்சிட்டுத் தரவே பல அச்சகத்தார் தயங்கினர். இறுதியில் தியாகராய நகர் ரங்கநாதன் தெருவில் டிரெடில் மெஷின் ஒன்றை வைத்து சிறிய அச்சகத்தை நடத்தி வந்த புலவர் வே. புகழேந்தி முன் வந்தார். அவர் தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்.

அவர் வைத்திருந்த இயந்திரத்தில் காலால் மிதித்துத்தான் ஒவ்வொரு பக்கமாக அச்சிட வேண்டியிருக்கும்.

பத்திரிகையின் ஆரம்பக்கட்டம்

பத்திரிகைக்குக் கட்சி அணிகளிடமிருந்து வரவேற்பு இருந்தது. தொழிலாளர்கள் பலர் கவிதைகள் எழுதி அனுப்பினர். 'இவை தொழிலாளர்கள் எழுதிய கவிதைகள், இலக்கணத்தைத் தேடாதீர்கள்; இதயத்தைத் தேடுங்கள்' என்ற அறிமுகத்துடன் அவை பிரசுரமாயின.

வர்க்க சமரசக் கொள்கைகளை எதிர்ப்பது, போராட்டப் பாதையைச் சுட்டிக்காட்டுவது, சிறையிலடைக்கப்பட்டிருந்த தலைவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுப்பது ஆகியவையே தீக்கதிரின் துவக்கப் பணிகளாக இருந்தன.

பி.ராமமூர்த்தி, என். சங்கரய்யா, வி.பி.சிந்தன், ஏ.பாலசுப்பிரமணியம், கே.முத்தையா ஆகிய தலைவர்கள் சிறையிலிருந்து வெளியானபின் தீக்கதிரில் பல கட்டுரைகள் எழுதினர். 1964ஆம் ஆண்டு கட்சி பிளவுபட்டு மார்க்சிஸ்ட் கட்சி உதயமானது. அவ்வாண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து தோழர் சங்கரய்யாவை ஆசிரியராகக் கொண்டு மார்க்சிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ ஏடாக வெளிவரத் தொடங்கியது. மிகுந்த சிரமத்திற்குப் பிறகே திருவல்லிக்கேணியில் கட்சிக்கும் பத்திரிகைக்கும் வாடகைக்கு இடம் பிடிக்க முடிந்தது.

மேலும் சோதனை

லால்பகதூர் சாஸ்திரியின் அரசு கட்சியின்மீது அடக்கு முறையை ஏவிவிட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலைவர்களும், ஊழியர்களும் இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி சோதனைகளையும் பிரித்துப் பார்க்கவே இயலாது. 13 மாத இடைவெளிக்குப் பின் 1966 பிப்ரவரியில் தோழர்கள் விடுதலை செய்யப்படலாயினர்.

சொந்த அச்சகம்

1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரவிருந்த நேரத்தில் ஒரு டிரெடில் இயந்திரமும் பழைய சிலிண்டர் இயந்திரமும் வாங்கப்பட்டன. தோழர் முத்தையாவின் பொறுப்பின் கீழ் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது.

1969ஆம் ஆண்டில் கட்சியின் மாநிலத் தலைமையகம் மதுரைக்கு மாற்றப்பட்டது. தீக்கதிரும் மதுரையிலிருந்து வெளிவரத்

தொடங்கியது. தற்போது தீக்கதிர் அச்சிடப்படும் பைபாஸ் சாலைக் கட்டிடத்தை 1973ஆம் ஆண்டு கட்சி சொந்தமாகப் பெற்று விரிவாக்கம் செய்தது. அவ்வாண்டு நவம்பர் 7ஆம் தேதி புதிய கட்டிடத்தைத் தோழர் பி. ராமமூர்த்தி திறந்து வைத்தார். 1993ஆம் ஆண்டு தீக்கதிரின் இரண்டாவது பதிப்பு சென்னையிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

தணிக்கை என்ற கொடூரம்

1970களின் ஆரம்பம் சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் கறை படிந்த காலம் 1971ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் ஜனநாயகம் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான கட்சி ஊழியர்கள் மாநிலத்தை விட்டே வெளியேற வேண்டிய நிலை. நாடெங்கிலும் இந்திராகாந்தியின் ஆட்சிக்கெதிராகப் போராட்டங்கள் வெடித்தன. 1974ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களும் ரயில்வே தொழிலாளர்களும் ஆலைத் தொழிலாளர்களும் பலம் வாய்ந்த போராட்டங்களை நடத்தினர். தேர்தல் வழக்கில் பிரதமர் இந்திரகாந்திக்கெதிராக அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தது. தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவும் போராட்டங்களை ஒடுக்கவும் அவர் 1975 ஜூன் 25 நள்ளிரவில் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார். ஜனநாயக தீபம் அணைக்கப்பட்டது. நாடே இருளில் மூழ்கடிக்கப்பட்டது.

அவசரநிலையின் அதிரடித் தாக்குதல், ஜனநாயக உரிமைகள், தொழிற்சங்க உரிமைகளுடன் பத்திரிகைச் சுதந்திரத்தையும் வீழ்த்தியது. பத்திரிகைத் தணிக்கை கொடூரமான துயரமாக மாறியது. பிரசுரிக்க வேண்டிய செய்திகளை இரண்டு நகல்கள் எடுத்து மாவட்ட ஆட்சியரிடம் கையெழுத்து வாங்கிய பின்புதான் பிரசுரிக்க முடியும். கார்ட்டூன்களுக்கு அனுமதியே கிடையாது. மாவட்ட ஆட்சியரின் கண்காணிப்பு போதாது என்று எண்ணிய மத்திய அரசு நேரடியாகவே தணிக்கை அதிகாரி வெங்கட்ராமன் என்பவரை மதுரைக்கு அனுப்பி வைத்தது. அவர் ராஜாவை மிஞ்சிய ராஜவிசுவாசியாக நடந்து கொண்டார். அவர் கூறியதுதான் சட்டம். தலையங்கத்தையோ, செய்தியையோ அவர் நீக்கச் சொன்னால் நீக்கிவிட வேண்டியதுதான். உதாரணமாக, ஊட்டி ஃபிலிம் தொழிலாளர் பிரச்சினை பற்றிய கட்டுரையை நீக்கவேண்டும் என்று உத்தரவிட்டதோடு 'கட்டுரை இருந்த இடத்தைக் காலியாக விடக்கூடாது; ஏதாவது எழுத்துக்கள் இருக்க வேண்டும்' என்றும் வேறு உத்தரவிட்டாராம்!

வெறுத்துப்போய், தலையங்கம் பகுதியில் 'என்னத்தை எழுத' என்று ஒரு முறை எழுதியிருக்கிறார்கள். அதற்குத் தடை! வெறும் கேள்விக்குறி மட்டும் போட்டுப் பார்த்திருக்கிறார்கள். அதற்கும் தடை! 'பத்திரிகைக்குச் சீல் வைத்து விடுவேன்! மிசாவில் உங்களையெல்லாம் உள்ளே தள்ளிவிடுவேன்! என்று வேறு மிரட்டிக் கொண்டே யிருப்பாராம்!

மக்களின் பிரச்சினைகள் குறித்தோ அவர்கள் நடத்தும் இயக்கங்கள் குறித்தோ எதுவும் எழுத முடியாது. உண்மைகளை எழுத முடியவில்லை. அவதூறுகளுக்கு மறுப்பு எழுத முடியவில்லை. வெண்மணித் தியாகிகள் நினைவு தினத்தன்று படத்தைப் பிரசுரிக்க ஏராளமான நிபந்தனைகள், இடையூறுகள்! மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்ற சர்வதேச கம்யூனிஸ்ட் தலைவர்களின் பொன்மொழிகள் ஆகியவற்றுக்கு அனுமதி கிடையாது. இதையாவது புரிந்து கொள்ள முடியும். ஜனநாயகம் பற்றிய காந்தி, நேரு போன்ற தேசியத் தலைவர்களுடைய கருத்துக்களுக்கும் கூட அனுமதி மறுக்கப் பட்டது. இதைவிட வேடிக்கை, இந்திராகாந்தி ஜனநாயகம் பற்றிக் கூறியிருந்த கருத்துக்களைக்கூட பிரசுரிக்க முடியவில்லை. "தற்போது இந்தியாவில் பத்திரிகை முன் தணிக்கை முறை அமுலில் இல்லை! பிரதமர் இந்திரா அறிவிப்பு!" என்ற செய்திகூட முன் தணிக்கை செய்யப்பட்ட பிறகே பிரசுரிக்கப்பட்டதாம்!

ரிட் மனு தள்ளுபடி

இத்தகைய கொடூரமான தணிக்கை முறையை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இரட்டைத் தணிக்கை முறை

'அன்றைக்கு இருந்த குறைவான வாய்ப்பு, வசதிகளுடன் பத்திரிகையைத் தினந்தோறும் கொண்டு வருவது வேதனையுடன் கூடிய சுகப்பிரசவம் மாதிரி; ஆனால் சென்சார் அதிகாரி வந்தபிறகு சிசேரியன் பிரசவமாக அது மாறிவிட்டது' எனத் தீக்கதிர் நிருபர் தோழர் நாராயணன் குறிப்பிடுகிறார்.

சென்சார் அதிகாரியின் சித்திரவதைக் கொடுமைகள் தாங்காமல் தீக்கதிர் நாளிதழிலிருந்து வார இதழாக மாற்றப்பட்டது. ஒரு கட்டத்தில் அவர், 'தீக்கதிருக்காகத்தான் என்னை மதுரையில் நியமித்திருக்கிறார்கள்' என்று வெளிப்படையாகவே கூறிவிட்டார்' சென்னையில் மாநிலத் தணிக்கை அதிகாரிகளின் கத்திரிக்கோலுக்குத் தப்பிப் பத்திரிகைகளில்

வந்த செய்திகளைக்கூட மறுபிரசுரம் செய்ய தீக்கதிருக்கு அனுமதி இல்லை. யு.என்.ஐ., பி.டி.ஐ. போன்றவற்றை ஒருங்கிணைத்து அரசின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமாக 'சமாச்சார்' என்ற செய்தி நிறுவனத்தை அப்போது மத்திய அரசு உருவாக்கியிருந்தது. அது வெளியிடும் செய்தியைக்கூட தீக்கதிரில் பிரசுரிக்க அனுமதி கிடைக்கவில்லை. காரணம் கேட்டால் உங்களுக்கு 'இரட்டைத் தணிக்கை முறை' என்பாராம்!

தணிக்கை முறையைப் பற்றி விரிவாக இக்கட்டுரையில் எழுதியதற்குக் காரணம், பத்திரிகை தோன்றிய கட்டத்தில் ஏற்பட்ட சோதனைக்குப் பிறகு தீக்கதிர் சந்தித்த மிகப்பெரிய சோதனை இது என்பதால்தான் 'ராணுவ ஆட்சி வரவேண்டும்', 'மீண்டும் அவசர நிலை வரவேண்டும்' என்று சில அறிவுஜீவிகள் மேதாவித்தனமான கருத்துக்களை வெளியிடுவதுண்டு. அவர்கள் சொல்வது போல நடந்துவிட்டால், எதேச்சாதிகாரத்தை அவர்கள் நிச்சயமாக எதிர்த்து நிற்கப் போவதில்லை. அந்தச் சுமையையும் இடதுசாரி சக்திகளும், ஜனநாயக இயக்கங்களும்தான் சுமக்க வேண்டியிருக்கும். அவசரநிலை ஆட்சிக்குப் பிறகு மத்தியில் அமைந்த ஜனதா அரசு அவசர கால அத்துமீறல்கள் பற்றி விசாரிக்கப் பல கமிஷன்களை நியமித்தது. தமிழகத்தில் நியமிக்கப்பட்ட நீதிபதி அனந்தநாராயணன் கமிஷன் மதுரை தணிக்கை அதிகாரி சூப்பர் சென்சாராகச் செயல்பட்டதைக் கண்டித்தார்.

அவசரநிலைக் காலம் முடிந்த பிறகு, தீக்கதிர் மீண்டும் தினசரியானது. முதலில் 4 பக்கங்களுடன் வெளிவந்த இதழ் தற்போது 6 பக்கங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன் ஆஃப்செட் இயந்திரம் வாங்கப்பட்டது. தற்போது கணினி, ஈ-மெயில் வசதிகளுடன் அலுவலகம் நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள், ஆசிரியர் குழு

தீக்கதிர் ஆசிரியர்களாக எல். அற்புதசாமி, எம்.என். ராவுண்ணி, என். சங்கரய்யா, எம். ஆர். வெங்கட்ராமன், கே. முத்தையா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். தற்போது தோழர் வே. மீனாட்சி சுந்தரம் ஆசியராக உள்ளார். மதுரைப் பதிப்பின் பொறுப்பாசிரியராகத் தோழர் வி.பரமேஸ்வரனும் சென்னைப் பதிப்பின் பொறுப்பாசிரியராக, தோழர் க. பொ. அகத்தியலிங்கமும் உள்ளனர். மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மத்தியதரம் ஆகிய அனைத்து அமைப்புகளிலிருந்து வந்த தோழர்கள் சங்கமிக்கும் இடமாக ஆசிரியர் குழு விளங்குகிறது.

முற்றிலும் வேறான 'நியூஸ் வேல்யூ'

முதலாளித்துவப் பத்திரிகைகளில் பாலியல் செய்திகள், வன்முறை, பரபரப்பு தனி நபர் அரசியல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படுகின்றன. புலனாய்வு என்ற பெயரில் பல புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிடும் இதழ்களும் உண்டு. 'நடுநிலை நாளேடு' என்ற போர்வையில் உழைக்கும் வர்க்கத்திற்கெதிராக எழுதித் தள்ளும் பத்திரிகைகளுக்கே இங்கே பஞ்சமில்லை. நடுநிலை ஏடு என்ற பம்மாத்து வேலையெல்லாம் தீக்கதிரிடம் இல்லை. உழைக்கும் வர்க்கத்திற்கும், ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் சிறு தொழில் முனைவோருக்கும் ஆதரவாகச் செயல்படும் ஏடு என்பதை விவசாயிகளின் பிரச்சினைகள், தொழிற்சங்க இயக்கங்கள், ஆசிரியர் மாணவர் இயக்கங்கள் ஆகியவை பற்றி விரிவான செய்திகள் தீக்கதிரில் இடம் பெறுகின்றன. அவை பற்றித் தலையங்கங்களும் தீட்டப் படுகின்றன. விலை உயர்வினால் சாதாரண மக்களுக்கே ஏற்படும் பாதிப்பைப் பற்றி எழுதும்போதே விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும் என்பதையும் சேர்த்துப் பார்க்கும் பத்திரிகை இது. இயக்கத் தலைவர்கள் வெளியிடும் அறிக்கைகள் முதலாளித்துவப் பத்திரிகைகளில் இருட்டடிப்புச் செய்யப்படும். அல்லது ஓர் ஓரத்தில் வெட்டி, சுருக்கி பிரசுரிக்கப்படும். தீக்கதிரில் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து முழு அறிக்கையும் பிரசுரிக்கப்படும். இன்றையப் பரபரப்பை விட நாளைய உண்மையின்மீது கவனம் செலுத்தப்படுகிறது. அரசியல் எதிரிகளைப் பற்றிக்கூட ஆதாரமில்லாத செய்திகளை வெளியிடுவதில்லை. 'நியூஸ் வேல்யூ' என்பதற்குத் தீக்கதிரின் இலக்கணம் மற்ற பத்திரிகைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.

சமூகக் கொடுமைகளுக்கெதிராய்

சாதீய ஒடுக்குமுறைகள், தீண்டாமைக் கொடுமைகள், பாலியல் வன்முறைகளுக்கெதிராக இன்று தீக்கதிர் ஒரு போர்ப்பிரகடனத்தையே செய்திருக்கிறது. நாலுமூலைக்கிணறு, கொடியங்குளம், வாச்சாத்தி போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டபோது அவர்களுக்காதரவாய் வீறு கொண்டு எழுந்ததைக் குறிப்பிடலாம். அண்ணாமலைநகர் காவல் நிலையத்தில் காவலர்களால் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாகி, கண்முன்னே கணவன் அடித்துக் கொலை செய்யப்பட்டபோது ஆதரவற்று நின்ற பத்மினிக்கு நியாயம் கேட்டு உணர்ச்சிமயமான கட்டுரைகளையும் செய்திகளையும் வெளியிட்டுத் தன் பத்திரிகைத் தர்மத்தைத் தீக்கதிர் நிலைநாட்டியது. காவல் நிலையங்களில் லாக்கப் கைதிகள் தற்கொலை செய்து கொண்டதாகச்

செய்திகள் வெளிவருகையில் 'கைதி அடித்துக் கொலை' என்றே செய்தி வெளியிட்டு விசாரணை தேவை என்ற கோரிக்கையையும் தீக்கதிர் எழுப்பும். மனித உரிமை மீறல்களுக்கெதிராக எழுதும்போது சமூகத்தில் செல்வாக்கான சில நபர்களோடும், அரசோடும் மோத வேண்டிய கட்டம் தீக்கதிருக்குப் பலமுறை வந்திருக்கிறது. அச்சுறுத்தல்கள், இடையூறுகள் வரினும் இக்கடமையிலிருந்து தீக்கதிர் பின்வாங்கிய தில்லை.

சாதிச் சண்டைகள், சங்கங்கள் பற்றி

சாதிச் சங்கங்கள் ஜனநாயக இயக்கங்களுக்கும் தொழிற்சங்க இயக்கங்களுக்கும் எதிரானவை என்ற பிரச்சாரத்தைத் தீக்கதிர் செய்து வருகிறது. சாதிச்சண்டைகளினால் சுயநலச் சக்திகளுக்குத்தான் லாபமே தவிர, உழைப்பாளி மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என்பதை உழைப்பாளி மக்களுக்குத் தெளிவுபடுத்தத் தீக்கதிர் முயற்சி செய்து வருகிறது. முத்துராமலிங்கத் தேவர், அம்பேத்கர், வ.உ.சி. பாரதியார் போன்ற மாமனிதர்களைச் சாதிக்குடுவைக்குள் அடக்க முனையும் செயல்களை இப்பத்திரிகை வன்மையாகக் கண்டிக்கிறது. இன்னும் பல கிராமங்களில் இரட்டைத் தம்ளர் முறை, தனிக் குடிநீர், தனிச் சுடுகாடு, செருப்பு போடத் தடை போன்ற தீண்டாமைக் கொடுமைகள்தான் சாதிச் சண்டைகளுக்கு மூலவேராக இருக்கின்றன எனத் தீக்கதிர் சுட்டிக் காட்டுகிறது. கிராமங்களில் இந்தச் சமூக ஒடுக்கு முறைக்கெதிரான இயக்கம், கூலி உயர்வுக்கும், நிலச் சீர்திருத்தத்திற்குமான இயக்கத்தோடு பின்னிப் பிணைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது.

பொதுவாகத் தலித்துகள், பெண்கள், சிறுபான்மையினர் பாதிக்கப்படும்போது நமது தனிக்கவனம் அவர்கள்மீது இருக்க வேண்டும் என்பது தீக்கதிரின் நிலை. நலிந்த பிரிவினருக்கு ஆதரவாக நிற்பதைத் தன் அடிப்படைக் கொள்கையாகவே வைத்துள்ளது.

போலிச்சாமியார்களின் முகமூடியைக் கிழிக்க

திருச்சியருகே பிரேமானந்தா என்ற போலிச் சாமியார் வாயிலிருந்து லிங்கத்தை வரவழைத்துக் காட்டிப் படித்தவர்களைக் கூட ஏமாற்றிப் பெரும் பணம் சேர்த்ததோடு தன்னுடைய ஆசிரமத்தில் பெண்களைப் பலவந்தப்படுத்திக் காம லீலைகளிலும் ஈடுபட்டு வந்ததைத் தீக்கதிர் கண்டித்தது. நாகர்கோவிலில் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் மோசடிகளில் ஈடுபட்டபோதும், திருநெல்வேலியில் தனியார் பயிற்சி நிறுவனங்களின் தாளாளரான ஒரு இஸ்லாமியர் லீலைகளில்

ஈடுபட்டபோதும் அவற்றைத் தண்டனைக்குரிய குற்றங்களாக எடுத்து வைத்தது. சமூக விரோதிகள் எந்த மதத்தைச் சேர்ந்தவரானாலும், எந்தச் சாதியைச் சேர்ந்தவரா னாலும் அவர்கள் கண்டிக்கப்படவேண்டும் என்பதே பத்திரிகையின் நிலை.

தமிழ் வளர்ச்சிக்காக

ஆறு கோடித் தமிழர்களின் தாய்மொழியாம் தமிழுக்கு இன்று தமிழகத்தின் ஆதரவு கேட்க வேண்டிய அவல நிலை. பயிற்று மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாகத் தமிழ் அரியாசனத்தில் என்று அமரப் போகிறது? அரசின் முயற்சி இதில் போதுமானதாக இல்லை. தமிழர்களின் ஆங்கில மோகமும், தாழ்வு மனப்பான்மையும் தமிழ் ஏற்றம் பெறத் தடையாக உள்ளன. மத்தியில் வரக்கூடிய அரசுகள் இந்தி மொழிக்கு மட்டும் ஆதரவளிப்பதும், தொலைக்காட்சியில் இந்தியின் ஆதிக்கமும் தொடர்கின்றன. மாநில மொழிகளின் வளர்ச்சிக்காக, குறிப்பாகத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகத் தீக்கதிர் குரல் கொடுத்து வருகிறது.

கடல் கடந்த நாடுகளில் தமிழர்கள் படும் இன்னல்களையும் தீக்கதிர் வெளிக்கொணர்ந்துவிடும். 'மலேசிய நாட்டில் தமிழர்கள் படும் துயரங்களைப் பற்றித் தீக்கதிரில் படித்தேன்' என்று அண்மையில் தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் அறிவித்தது ஓர் உதாரணம்.

மாநில உரிமைகளுக்காக

மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளை மதிக்கத் தவறுகிறது. காழ்ப்புணர்ச்சியோடு மாநில அரசுகளைக் கலைத்த நிகழ்ச்சிகள் ஏராளம். எல்லா மாநிலங்களும் சமச்சீரான வளர்ச்சி பெறத் தேவையான உதவிகளைச் செய்ய மறுக்கிறது. இவையெல்லாம் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானவை. மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் இந்தியா வலுவாக இருக்கமுடியும் என்பது தீக்கதிரின் கொள்கை. பாபர் மசூதி இடிப்பு போன்ற அரசியல் சட்டத்திற்கே எதிரான நிகழ்ச்சிகள் நடக்கும்போது மட்டுமே பிரிவு 356-ஐ பயன்படுத்த வேண்டுமே தவிர, மற்ற நேரங்களில் பயன்படுத்தக் கூடாது என்பது அதன் நிலை.

அண்மையில் பீகாரில் தலித்துகள் படுகொலை செய்யப்பட்டபோது அதைக் கண்டித்த தீக்கதிர், அம்மாநில அரசு கலைக்கப்பட்டதையும் எதிர்த்ததைப் பலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. தலித்துகளைப் பாதுகாக்க மத்திய அரசு மாநில

அரசுக்குத் தேவையான ராணுவ உதவி உட்பட அனைத்து உதவிகளையும் தந்து படுகொலையைத் தடுக்க வேண்டுமே தவிர, மாநில அரசைக் கலைப்பது தீர்வாகாது என்று தீக்கதிர் கூறுகிறது. குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்த சில நாட்களிலும் படுகொலை தொடர்ந்தது என்பதை மக்களுக்குப் பத்திரிகை நினைவூட்டியது.

பிற மாநிலங்களுடன் உறவு

பிற மாநிலங்களுடன் ஏற்படும் எல்லைப் பிரச்சினைகள், நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகள் ஆகியவற்றைப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும் எனத் தீக்கதிர் நம்புகிறது. இப்பிரச்சினைகளை வைத்து இனவெறியைக் கிளப்பி விடுவதோ, இரு மாநில மக்களை மோதவிடுவதோ எவ்விதப் பலனையும் தராது என்று தீக்கதிர் கருதுவதால் இம்மாதிரிச் செய்திகளை உணர்ச்சியூட்டும் விதத்தில் பிரசுரிப்பதில்லை. காவிரி நதிநீர்ப் பிரச்சினை, கண்ணகி கோவில் பிரச்சினை, முல்லைப் பெரியார் அணைப் பிரச்சினை போன்றவற்றில் தீக்கதிரின் மாறுபட்ட அணுகுமுறையைக் காண முடியும்.

வண்ணக்கதிர்

ஞாயிறு தோறும் வண்ணக்கதிர் பகுதி இலக்கிய இணைப்பாக வெளிவருகிறது. திரைப்படம், தொலைக்காட்சி பற்றி விமர்சனங்கள், சிறுகதை, சிறுவர் பகுதி, கவிதைகள், கேள்வி பதில், கலை இரவுகள், நாடகப்பட்டறை பற்றிய செய்திகளுடன் இப்பகுதி வருகிறது.

மலர்கள், சிறப்பிதழ்கள்

சில முக்கிய நிகழ்ச்சிகள், தினங்களை ஒட்டித் தீக்கதிர் சிறப்பிதழ்கள் வெளியிட்டு வருகிறது. (மே தினச் சிறப்பிதழ் வெண்மணிச் சிறப்பிதழ் போன்றவை). இதுபோக, விவசாய மலர், மருத்துவ மலர், இந்திய சுதந்திரப் பொன்விழா மலர், பி.ஆர். நினைவு மலர், உலகத்தமிழ் மாநாட்டு மலர், தீக்கதிரின் 30ஆம் ஆண்டு நிறைவு மலர், போன்ற பல சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. கம்யூனிஸ்ட்டுகள் தொழில் தகராறுதான் செய்வார்களே தவிர, தொழில் முன்னேற்றம் பற்றிக் கவலைப்படமாட்டார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தை முறியடிக்கத் தமிழகத் தொழில் மலர் 1995 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது.

வெளியீடுகள்

திராவிட இயக்க வரலாறு பற்றித் தோழர் அருணன் எழுதிய தொடர் கட்டுரைகள், தோழர் பி. ராமமூர்த்தியை அவ்வரலாறு பற்றி

மேலும் பல விவரங்களை எழுதத் தூண்டியது. பின்னர் அது புத்தகமாக வெளியிடப்பட்டது. மூட நம்பிக்கைகளிலிருந்து விடுதலை, விடுதலைத் தழும்புகள் (சுதந்திரப் போராட்ட வரலாறு) ஆகிய வெளியீடுகள் முதலில் தீக்கதிரில் தொடர் கட்டுரைகளாக வந்தவையே.

கார்ட்டூன்கள்

தீக்கதிர் கார்ட்டூன்கள் தரமானவை; நகைச்சுவை உணர்வு மிக்கவை எனப் பெயர் வாங்கியுள்ளன. தீக்கதிர் கார்ட்டூன்கள் தேர்தல் நேரங்களில் பெரிய தட்டிகளில் வரைந்து வைக்கப்படுகின்றன. மக்களுக்கு அரசியல் தெளிவை ஏற்படுத்த அக்கார்ட்டூன்கள் உதவுகின்றன. தீக்கதிரில் வெளியான புகழ்பெற்ற கார்ட்டூன்கள் சில இக்கட்டுரையின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நாட்டைத் தாக்கும் இரு அபாயங்கள்

இன்று நம் தேசத்தைத் தாக்கும் இரு அபாயங்களைப் பற்றித் தீக்கதிர் விடாது எச்சரித்து வருகிறது. 'புதிய பொருளாதாரக் கொள்கை' என்ற பெயரில் உலகமயம், தாராளமயம், தனியார்மயம் ஆகிய கொள்கைகள் அமெரிக்கப் பின்னணியுடன் சர்வதேச நிதி நிறுவனம் உலக வங்கி நிர்ப்பந்தம் காரணமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பொருளாதார சீர்திருத்தங்கள் உழைக்கும் மக்களுக்கு எதிரானவை; மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கே எதிரானவை; இக்கொள்கையால் வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வும், பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வும் கூடியிருக்கின்றன; வேலையின்மையும், ஏழ்மையும் கூடியிருக்கின்றன' என்ற உண்மையைத் தீக்கதிர் எடுத்துச் சொல்லி வருகிறது. கொள்கைகள் சரியல்ல என்று விமர்சனம் செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், மாற்று வழியையும் காட்டுகிறது. மாற்றுப் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி விரிவான பல கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது.

இதைவிடப் பெரிய ஆபத்தாக, பெருகி வரும் மதவெறியைத் தீக்கதிர் அடையாளம் காட்டுகிறது. மதச்சார்பின்மை என்ற ஒப்பற்ற தத்துவத்திற்குக் கேடு விளைவிக்கும் எச்செயலையும் தேச ஒற்றுமைக்கு விடப்படும் சவாலாக இப்பத்திரிகை பார்க்கிறது. பெரும்பான்மை மதவெறியைக் கண்டிப்பது போலவே சிறுபான்மை மதவெறியையும் கண்டிக்கிறது. ஒரு மதவெறி இன்னொரு மதவெறிக்கு மாற்றாக முடியாது. மதச்சார்பின்மையே மதவெறிகளுக்கு மாற்று என எடுத்துக் கூறி வருகிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

ஏகாதிபத்திய நாடுகள்- குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம்- மூன்றாம் உலக நாடுகளுக்கெதிராகச் செய்துவரும் சதி வேலைகளைத் தீக்கதிர் அம்பலப்படுத்தி வருகிறது. ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, யூகோஸ்லேவியா போன்ற நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டு ராணுவத் தாக்குதல்கள் நடத்துவதைக் கண்டிக்கிறது. சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சோஷலிசத்தைக் கைவிட்டுச் சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறியபோது 'இது சோஷலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு. உலக மக்களின் பிரச்சினைகளை முதலாளித்துவத்தினால் ஒரு போதும் தீர்க்க முடியாது. சோஷலிசம் மீண்டும் உயிர்த்தெழும்' என்று நம்பிக்கையோடு பிரகடனம் செய்தது. கடந்த சில ஆண்டுகளில் பிரான்ஸ், இத்தாலி, நேபாளம் மற்றும் முன்னாள் சோஷலிச நாடுகளில் இடதுசாரி கட்சிகளின் வெற்றிகள் பல்வேறு முதலாளித்துவ நாடுகளில் வேலையின்மைக்கும் ஆலை மூடலுக்கும் எதிரான மாபெரும் கிளர்ச்சிகள் தீக்கதிரின் நிர்ணயிப்பு சரியானதே என நிரூபித்து வருகின்றன.

அண்டை நாடுகளுடன் உறவு

பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, பர்மா, நேபாளம், சீனா போன்ற நாடுகளுடன் நல்லுறவு இருப்பது மிக அவசியம். அவைகளோடு ஏற்படும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கவேண்டும். மோதல் போக்கினாலோ ராணுவ நடவடிக்கை மூலமோ தீர்க்க முயற்சித்தால் ஏகாதிபத்தியம் இப்பகுதியில் நுழைந்து கோலோச்சுவதற்கே வழிவகுக்கும் எனத் தீக்கதிர் எச்சரித்து வருகிறது. இக்காரணத்தினால்தான் பொக்ரான் அணுகுண்டு சோதனையைப் பலரும் சாதனை எனப் பாராட்டியபோது தீக்கதிர் அதைக் கண்டித்தது. மேலும் அந்தச் சோதனை பாகிஸ்தானுக்கும், இங்குள்ள முஸ்லிம்களுக்கும் எதிரான பிரச்சாரமாக மாறியதையும், போலித் தேசியப் பெருமையைக் கிளப்பிவிட்டு இப்பகுதியில் தேவையற்ற பதட்டத்தை ஏற்படுத்தியதையும், எடுத்துக் காட்டியது. உலக அரங்கில் தனிமைப்பட்டு பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டு, இந்திய நலன்களை ஏகாதிபத்திய நாடுகளிடம் மேலும் சரணடைய வைத்ததைத்தவிர பொக்ரான் சோதனை வேறெதையும் சாதிக்கவில்லை என்பது தீக்கதிரின் நிர்ணயிப்பு. பிற மூன்றாம் உலக நாடுகளுடனும், சோஷலிச நாடுகளுடனும் அண்டை நாடுகளுடனும் நல்லுறவு என்பதே நமது அயல்துறைக் கொள்கையாக இருக்க வேண்டும் எனத் தீக்கதிர் வலியுறுத்தி வருகிறது.

சந்தித்த தாக்குதல்கள்

1991 மே மாதத்தில் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட போது அதனுடன் எவ்விதத்திலும் தொடர்பே இல்லாத தீக்கதிர் அலுவலகம் தாக்கப்பட்டது. தோழர் ராமராஜ் கத்தியால் குத்தப்பட்டார். பல இலட்ச ரூபாய்க்கு நட்டமேற்பட்டது. சென்ற ஆண்டு ஏற்பட்ட தீ விபத்திலும் பலத்த நட்டமேற்பட்டது. ஏற்கனவே பத்திரிகை நடத்துவதற்கு பணபலமின்றி, சினிமா, பெரும் வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் விளம்பரங்களின்றி நிதி நெருக்கடியுடன் நடந்துவரும் பத்திரிகைக்கு இப்படி எதிர்பாரா சோதனைகளும் ஏற்பட்டன. தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சாதாரண மக்களிடம் வசூல் செய்தே நெருக்கடிகள் சமாளிக்கப்பட்டன. இலட்சக்கணக்கான ரூபாய் முதலீட்டுடன், அதிரடி விளம்பரத்துடன், ஆரவாரமாகத் தொடங்கப்படும் சில பத்திரிகைகள் சத்தமின்றி மூடுவிழா நடத்திடும் போது தீக்கதிர் தொடர்ந்து வெளிவருவதற்குக் காரணம் சாதாரண மக்கள் கொடுக்கும் ஆதரவும், பின்பலமும் தான்.

விளம்பரக் கொள்கை

எவ்வளவு நிதி நெருக்கடி இருப்பினும், மதுபான விளம்பரம், ஆபாசப்படம் உள்ள விளம்பரம், மூடநம்பிக்கைகளை வளர்க்கும் விளம்பரம் ஆகியவற்றுக்குத் தீக்கதிரில் இடமில்லை. சோதிடப்பகுதி, ராசிபலன் இல்லாத விரல்விட்டு எண்ணக்கூடிய பத்திரிகைகளில் தீக்கதிரும் ஒன்று.

மூன்றாவது அணியை நோக்கி

தேசிய அளவில் இன்று காங்கிரசுக்கும் பி.ஜே.பிக்கும் மாற்றாக இடதுசாரிக் கட்சிகளும், மாநிலக்கட்சிகளும், ஒரு மூன்றாவது அணியை உருவாக்க வேண்டுமென்பதை தீக்கதிர் வலியுறுத்தி வருகிறது. கடந்த கால அனுபவங்களைப் போலின்றி மூன்றாவது அணி உறுதியான அணியாக உருவாக வேண்டுமானால் அதற்கு இடதுசாரிக் கட்சிகளின் ஒற்றுமை முதலில் தேவை என்பதை உணர்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. இந்த இலட்சியத்திற்கு தீக்கதிர் தலையங்கங்களும், இரண்டாம் பக்கம் வெளியிடப்படும் பொருள் பொதிந்த கட்டுரைகளும், பெருமளவுக்கு உதவி செய்கின்றன. இப்பகுதிக்காகவே தீக்கதிரை வாங்கக் கூடிய வாசகர்களும் உள்ளனர். பிற அரசியல் கட்சித் தலைவர்களும் தீக்கதிர் தரும் கனமான உள்ளடத்திற்காக பத்திரிகையைத் தொடர்ந்து

படிக்கின்றனர். குன்றக்குடி அடிகளார் போன்ற பிரமுகர்கள் ஆயுள் சந்தா செலுத்தியுள்ளனர்.

'ராஷ்ட்ரீயம் பயில்' என்றான் பாரதி. "இந்த தேசத்து அரசியலைத் தெரிந்துகொள்" என்று பொருள். பல படித்தவர்கள்கூட தேசத்து அரசியலில் ஆர்வம் காட்டாது, தான். தன் குடும்பம் என்ற கூட்டுக்குள் அடங்கிவிடும்போது சாதாரண மக்களிடையே அரசியல் விழிப்புணர்வைத் தீக்கதிர் எனும் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறது. தீக்கதிர் படிக்கும் மாணவர்கள் பொது அறிவுப் போட்டிகளில் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

குறைகள்

உயர்ந்த இலட்சியங்களை முன் வைத்துப் பத்திரிகை நடத்தப் பட்டாலும் அது இன்னும் பெரும்பகுதித் தமிழ் மக்களைச் சென்றடையாமல் இருப்பதைப் பத்திரிகையின் பலவீனமாகக் கொள்ளலாம். மேலும் பல்லாயிரக்கணக்கான மக்களை ஈர்க்கும் விதத்தில் பத்திரிகையை நடத்தி விற்பனையையும் இயக்கமாகக் கொண்டு சென்றால் தன் வாசகர் வட்டத்தைத் தீக்கதிர் பல மடங்கு பெரிதாக்கிக் கொள்ள முடியும். எதிர்காலத்தில் மக்கள் பத்திரிகையாக மலரத் தேவையான செயலூக்கமிக்க நடவடிக்கைகளை ஆசிரியர் குழுவும், நிர்வாகமும் எடுக்க வேண்டுமென்ற என் விருப்பத்தைத் தெரிவித்துக் கட்டுரையை முடிக்கிறேன்.

செம்மலர்

1970 **ச. மாடசாமி**

தோற்றம்

1970, மே திங்களில் செம்மலர் தோன்றுகிறது. இந்தியா, சக்ரவர்த்தினி, தேசபக்தன், நவசக்தி, விமோசனம் எனத் தேசிய இதழ்களும், குடியரசு, திராவிட நாடு, பொன்னி எனத் திராவிட இயக்க இதழ்களும், சாந்தி, சமரன், விடிவெள்ளி, சரஸ்வதி என முற்போக்கு இதழ்களும் செம்மலருக்கு முன்பே தோன்றிவிட்டன. 1958இல் தாமரை தோன்றிவிட்டது. செம்மலர், முதல் முற்போக்கு இதழ் அன்று. ஆனால் செம்மலர் ஒரு நோக்கில் முதல் முற்போக்கு இதழ் ஆகும்.

பரவலாக வாசகத் தளத்தில் காலூன்றியும், பரந்த முற்போக்கு மேடையை உருவாக்கியும், 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இதழ்கூட நின்றுவிடாமல் தொடர்ந்து வரும் ஒரே முற்போக்கு இதழ் செம்மலர்தான். எனவே செம்மலரின் வருகை முற்போக்கு இலக்கிய முயற்சியில் புதிய சக்தி எனலாம்.

வணிகப் பத்திரிகைகள் தொழில் நுட்பரீதியாகப் பெரிதும் வளர்ந்துவிட்ட காலத்தில் - இலக்கிய விவாதங்கள் சிறு பத்திரிகைகள் வாயிலாகச் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்ட ஒரு சூழலில் - 1970 மே திங்களில் செம்மலர் பிறக்கிறது. அரசியலில் இடதுசாரிகள் விடுதலைக்குப் பின் ஓர் இடத்தைப் பிடித்துவிட்ட காலமும் இதுவாகும்.

செம்மலரின் முதல் இதழ் – நோக்கம்

பி.டி. ரணதிவே, அகிலன், அன்றைய கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், மு.வ. ஆகியோரின் வாழ்த்துரைகள் தாங்கி செம்மலரின் முதல் இதழ் வருகிறது.

வாழ்த்தும் போதே செம்மலர் செல்ல வேண்டிய பாதையையும் தெளிவுபடுத்துகிறார் பி.டி.ரணதிவே.

> *புதிய சமுதாயம் காணப் போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் உத்வேகம் ஊட்டும் சாதனமாக உங்கள் பத்திரிகை விளங்கட்டும்.*
>
> *(செம்மலர், மே, 1970, ப.1)*

உழைக்கும் மக்களுக்காக, உழைக்கும் மக்களின் போராட்டங்களைக் கருவாகக் கொண்ட இலக்கியம் படைப்பதுதான் செம்மலர் பிறந்த நோக்கம் என்ற முடிவுக்கு வரலாம். இதனைக் கவி வரிகளில் புலப்படுத்துகிறார் தணிகைச் செல்வன்.

மேன்மக்கள் இலக்கியம்
மெத்தக் கிடக்குது!
கீழ் மக்களுக்கோர் இலக்கியம் காணக்
கிளம்புது செம்மலர் (ப.80)

செம்மலரின் முதல் அட்டையில் உச்சிவெயிலில் பாரம் ஏற்றிக் கைவண்டி இழுக்கும் உழைப்பாளிகள் இடம் பெற்றுள்ளனர். இவ் ஓவியத்தை வரைந்த ஓவியர் தி. வரதராஜன் ஓவியம் வரையப் புறப்பட்ட சந்தர்ப்பத்தை 25 ஆண்டுகளுக்குப் பின் நினைவு கூறுகிறார்.

> கொதிக்கிற வெயிலில் சுடுபுழுதியில் விவசாய வேலையில் ஈடுபட்டிருந்த நான் மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு மதுரைக்குப் பஸ் ஏறினேன்.

கொள்கை விளக்கம்

செம்மலர் முதல் இதழின் தலையங்கம் "கலையும் இலக்கியமும் யாருக்காக?" என்ற கேள்வி எழுப்பிப் பதில் அளிக்கிறது.

"நம்முடைய பாதை மிகத் தெளிவானது. எதையும், எவற்றையும் மெழுகிப் பூசி எழுதுவதென்பது இன்றைய வாழ்வின் யதார்த்தத் தன்மையை எடுத்துக் காட்டுவதாக இருக்க முடியாது. அதற்குப் பதிலாகச் சிதைந்து அழுகிக் குமட்டலெடுக்கும் குப்பைச் சிதைந்து அழுகிக் குமட்டலெடுக்கும் இன்றைய சமூக அமைப்பைத் தொட்டியில் வாரிக் கொட்டுவதினின்றும் பாதுகாப்பதாகவே இருக்கும்.

நமது பணி வாழ்வுக்குதவாத பழைய அமைப்பை வாரிக் குப்பைத் தொட்டியில் கொட்டி, புதிய மணங்கமழும் பூச்செடிகளை மலரவைப்பதே" (ப.9)

உழைக்கும் மக்களே செம்மலரின் கதாநாயகர்கள் என்பதை முதல் இதழ் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

> இன்று புதிய மாறுதலுக்காகப் புதிய போராட்டம் மலர்ந்திருக்கும் பொழுது இந்தப் புதிய போராட்டத்தின் புதிய கதாநாயகர்களாக உழைக்கும் மக்கள்

வீறுகொண்டெழுந்திருக்கும் பொழுது, இப்புதிய போராட்டத்தின் மூலம் புதிய கலாச்சாரம், புதிய பண்பாடு, புதியமனிதன் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுது இவைகளுக்கு எதிர்ப்பாகக் கிளம்பும் சுரண்டும் வர்க்கத்தினரை அம்பலப்படுத்துவதும், முற்போக்கு என்ற கொடியின் கீழ் தப்பான வழியில் தவறாகச் செல்கிறவர்களைச் சரியான வழிக்கு விமர்சன ரீதியாகக் கொண்டு வருவதுமான பணியில் செம்மலர் தன் புதிய மலர்களை மடலவிழ்கிறது (ப.10)

புதிய இலக்கியம் படைப்பதோடல்லாமல், நமது பழைய வரலாறுகள், இலக்கியங்கள், தத்துவங்கள், சமுதாய மாற்றங்களுக்குக் காரணமாய் இருந்த வர்க்கப் போராட்டங்கள் ஆகியவற்றைக் கற்றுணர்ந்து சாரமிக்க அனுபவங்களைப் பிழிந்தெடுத்து, இன்றைய நமது புதிய வாழ்வுக்கான போர்ப்பரணிக்கு அவை எந்த அளவுக்கு ஊட்டம் கொடுக்கின்றன என்பதையும் கணக்கிலெடுத்துச் செம்மலர் பணிபுரியும். இதுவே செம்மலர் இதழின் குறிக்கோள்" (ப.10)

எளிய உழைக்கும் மக்களைக் கதாநாயகர்களாக்குவது; பழைய அமைப்பைத் தகர்த்து வாரிக் கொட்டுவது என்ற இரு பெரும் லட்சியங்களைச் செம்மலர் முன்வைக்கிறது. இவை பொதுவுடைமை இலக்கிய இலட்சியங்களே. இரண்டாவது லட்சியம் மட்டும் எட்டச் சிரமமானதாக இன்றுவரை இருந்துவருகிறது.

முதல் இதழின் படைப்புகள்

முதல் இதழில் வெளியான இரு கதைகள் குறிப்பிடத்தக்கவை. இரண்டு கதைகளில் ஒன்று கு. சின்னப்ப பாரதி எழுதியது. மற்றொன்று டி. செல்வராஜ் எழுதியது. இருவரும் செம்மலர் தோன்றுவதற்கு முன்பே சிறுகதை, நாவலாசிரியர்களாகப் புகழ் பெற்றவர்கள்.

கு. சின்னப்ப பாரதியின் கதை 'அவள் எத்தனை குழந்தைகளுக்குத் தாயானாலும்' என்பது ஒழுக்கம் குறித்து மரபாக வரையப்பட்ட கோடுகளுக்குள் நில்லாமல், விலகி நின்று பெண் விடுதலைக்காகப் பேசுகிறது. அவள் இரு குழந்தைகளுக்குத் தாய். அவள் கணவனோ அன்பில்லாதவன். அன்பும், பிடிமானமும் அற்ற இல்லற வாழ்க்கை. திருமணத்துக்கு முன் நேசித்த ஒருவன் இன்னும் அவளை நேசிக்கிறான். துணிவாக அவள் முடிவு எடுக்கிறாள். கணவனைப் பிரிந்து பழைய காதலனோடு இணைகிறாள்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நடக்கும் விவாதமே கதை முழுவதும் நிறைந்திருக்கிறது.

"ஒரு பெண்ணுக்கு அன்பு, பாசங்கிறதெல்லாம் கணவன் கிட்டே இருந்துதான் கெடைக்கணுமா என்ன?"

"ஒரு மனைவிங்கறவ சொத்துக்கான வாரிசு படச்சுத் தரும் யந்திரக் கருவியா?

கேள்விகள் அழுத்தமாகவும், சவுக்கடி போலவும் அமைந்துள்ளன. குடும்பம் என்ற சிறிய அதிகார மையம் குறித்துப் பொதுவுடைமைவாதிகள் அழுத்தமாகப் பேசவில்லை என்ற குற்றச்சாட்டை மறுப்பது போல இக்கதை இருக்கிறது. பாட்டாளி, ஒடுக்கப்பட்டோர் என்ற கருத்தாக்கங்களைக் குறுகிய பொருளில் பொதுவுடைமைப் படைப்பாளிகள் பார்க்கவில்லை என்பதற்கும் இக்கதை ஓர் எடுத்துக்காட்டாகும்.

மற்றொரு கதையின் தலைப்பு 'ஒரே ஒரு மைசூர் பாக்'. (பக்.71-78) இதன் ஆசிரியர் டி. செல்வராஜ். இது ஒரு தொழிலாளியைப் பற்றிய கதை. ஆனால் வறட்டு யதார்த்தமாக இல்லாமல் நையாண்டி கலந்த கற்பனையுடன் கதை அமைந்துள்ளது.

கதை இரண்டு தளத்தில் நடக்கிறது. ஒன்று சிறிய ஓட்டல்; மற்றொன்று நாட்டின் நீதி, நியாயங்களுக்கு அடையாளமாய் நிற்கிற நீதிமன்றம். சிறிய ஓட்டலிலும், பெரிய நீதிமன்றத்திலும் ஒரே விதமான நீதி கிடைப்பதைக் கதை சுட்டிக்காட்டுகிறது.

அவன் ஓர் ஓட்டல் தொழிலாளி. சர்வர் வேலை பார்க்கிறான். 15 ஆண்டுகள் அங்கு உழைத்திருக்கிறான். விற்பனைக்கு வைத்து இருந்த மைசூர் பாக்கில் ஒன்றை ஆசை தாளாமல் எடுக்கிறான். சாப்பிடவில்லை. அதற்குள் பிடிபடுகிறான். வேலை நீக்கம் செய்யப்படுகிறான். அனுதாபம் கொண்டு பெரிய வழக்கறிஞர் ஒருவர் அவனுக்காக வாதாடுகிறார். இருப்பினும் வழக்கு தோற்கிறது. வழக்கறிஞருக்கும் நீதிபதிக்கும் இடையே நடக்கும் உரையாடல் இது.

"ஒரே ஒரு மைசூர்பாக் தானே" - வழக்கறிஞர்

"ஒரு மைசூர்பாக்காக இருக்கலாம்; ஒரு மலையாகக்கூட இருக்கலாம்; குற்றம் குற்றம் தானே" - நீதிபதி

"சின்னஞ்சிறிய குற்றம் ஒரு கணச் சபலம்" - வழக்கறிஞர்

"குற்றத்தை விட குற்ற உணர்வுக்குத்தான் தண்டனை என்பது உமக்குத் தெரியாதா?" - நீதிபதி

பல வழக்குகளில் வெற்றி வாகை சூடிய ஒரு பெரும் வழக்கறிஞர் "இது தானா நம் தர்மம்?" என்று வெடித்துக் கதறுவதோடு கதை முடிகிறது.

இவ் இரு கதைகளும் செம்மலரின் பயணத்தைப் பொறுப்புடன் தொடங்கி வைக்கின்றன. பொதுவுடைமை இலக்கியப் பார்வையையும் சரியாக முன் வைக்கின்றன.

வளர்ச்சி

செம்மலரின் படைப்பாக்கத்திறன்

ஒரு படைப்பில் கருத்தும் உணர்ச்சியும் அடிப்படையானவை யாக இருந்தபோதிலும், செய்நேர்த்தி இல்லாமல் அது கலையாகாது.

அழகியலாளர்கள் தொடர்ந்து இக்கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.[2]

முற்போக்காளர்கள், வெறும் உருவவாதிகளாக நின்று இலக்கியப் பரிசோதனை செய்து கொண்டிருக்க முடியாது. அது தேவையும் இல்லை.

ஆனால் படைப்பாக்கத்தில் அக்கறையே இல்லாமல் அவர்கள் இருக்க முடியாது. ஏனெனில், படைப்பு மக்களின் இதயத்தைத் தொடவேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது. படைப்பு, கலையாகாமல் இதயத்தைத் தொட முடியாது.

பொதுவான குற்றச்சாட்டுகள்

"கருத்துக்களில் இவர்களுக்கு விழுந்திருக்கிற நம்பிக்கை அளவுக்குக் கலையில் விழவில்லை"[3] என்பது முற்போக்குப் படைப்பாளிகள்மீது வைக்கப்படும் பொதுவான குற்றச்சாட்டு.

இதை அவர்களும் மறுக்கவில்லை. "நமது நோக்கங்கள் நல்லவை; நாம் கருத்தைக் கிரகித்துக் கொண்டோம்; அதைச் சொல்லும் முறைதான் நன்றாக இல்லை"[4] என்கிறார் மாவோ. சொல்லும் முறை என்பது பிறவியில் கிடைக்கும் வரம் அன்று. பயிற்சியில் கிடைக்கும் திறன்தான் அது. கற்றுக் கொள்வதற்கு அக்கறை இருந்தால் கற்றுக் கொள்ள முடியும்.

அக்கறை இருக்கிறதா?

உருவம் எப்படியாவது இருக்கலாம்; செய் நேர்த்தி தேவையன்று என்று முற்போக்கு இலக்கியவாதிகள் வாதிட்டதே இல்லை. செம்மலரின் இரண்டாவது இதழே, உருவம் உள்ளடக்கம் குறித்துப் பின்வரும் கருத்தை முன்வைக்கிறது.

"புரட்சிகரமான உள்ளடக்கமும், மிக உன்னதமான கலாரூபமும் பக்குவமாகப் பிணைந்து இருக்கவேண்டும். கலாரீதியான குணாம்சம் நிறைந்ததாய் இல்லாத கலை, இலக்கிய சிருஷ்டிகள், அவை அரசியல் ரீதியாக எவ்வளவு முற்போக்கு வாய்ந்தவைகளா யிருந்தாலும் சரி, பயனற்றவையாகும்." (செம்மலர் ஜூன் 1970, ப.71)

1975ஆம் ஆண்டில் முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் உரையாற்றும்போதே பி. கோவிந்தப் பிள்ளை, உருவத்தில் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது என்று இளம் எழுத்தாளர் களுக்கு அறிவுறுத்துகிறார்.

"கருவா? வடிவமா? புத்திலக்கிய மறுமலச்சியை உருவாக்க வேண்டிய நாம் இது பற்றிய ஒரு உறுதியான முடிவை எடுக்க வேண்டும். கருவைப் பொறுத்தமட்டில் நமக்குத் தெளிவு இருக்கிறது. விஞ்ஞான ரீதியாக நாம் கருத்துக்களிலே தெளிவாக இருக்கிறோம். எனவே இந்நிலையில் உருவத்தில்தான் பெருங்கவனம் செலுத்த வேண்டும் என்பேன். வெறும் பிரச்சாரம் மட்டும் நம் படைப்புகளில் இருந்தால் நாம் தனிமைப்பட்டு ஒரு ஜாதி ஆகிவிடுவோம். செயற்கையான படைப்புகளை உருவாக்கும் சந்தர்ப்பவாத அபாயமும் ஏற்படும்" (செம்மலர், ஆகஸ்ட் 1975) என்பது அவரின் அறிவுரை.

எளிய வடிவம்

எளிய மக்களை வாசகத்தளமாகக்கொண்ட முற்போக்கு இலக்கியம் கருத்தைப் புரியவைக்கும் எளிய உருவத்தையே தேர்ந்தெடுக்கிறது.

"பகட்டுகளற்ற கலை நேர்மையோடு"[5] செம்மலர்ப் படைப்பாளிகளின் கதைகள் விளங்குவதாக மேலாண்மை பொன்னுச்சாமி பெருமிதம் கொள்கிறார்.

தாமரைச் சிறுகதைகள் பற்றியும் இத்தகைய பெருமிதத்தையே செந்தீ நடராசன் வெளியிடுகிறார்.

"இவை (சிறுகதைகள்) சாதாரண மனிதர்களைப் போல் எளிமையானவை. வெளிப்படையானவை. நேரடியானவை. முகமூடிகளோ, இதர வேடங்களோ, ஆடை ஆபரணங்களோ எவையும் அணியாதவை"[6]

இவர்கள் சுட்டிக்காட்டும் எளிமை, வெளிப்படை நேரடித் தன்மை போன்றவற்றுக்கு நவீன விமர்சன உலகில் மரியாதை இல்லை. ஆனால் மரியாதைக்காக முற்போக்கு இலக்கியம் வேடங்கட்ட முடியாது.

முற்போக்கு இலக்கியத்தின் இலக்கு சாதாரண மக்கள் உலகம் என்பதை மறந்துவிட முடியாது.

நோக்கமும் வாசகத் தளமும் அல்லவா வடிவத்தைத் தீர்மானிக்கின்றன!

வடிவத்தில் ஏற்பட்டுள்ள இரு குறைகள்

செம்மலர்ப் படைப்புக்களில், கலைநேர்த்திக்கு இடையூறான இரு குறைகளைக் காண முடிகிறது.

ஒன்று, கதையின் இடையிடையே படைப்பாளி நிகழ்த்தும் சொற்பொழிவு, மற்றொன்று தேவையற்ற செயற்கையான முற்போக்கு முடிவு.

சொற்பொழிவு

'உருவ அக்கறை' குறித்துச் செம்மலர் அடிக்கடி பேசிய போதும், படைப்பாளி தேவையில்லாமல் படைப்புக்குள் தலையிட்டுப் பேசுவதைச் செம்மலர் அனுமதித்தே வந்திருக்கிறது. செம்மலர்ப் படைப்பாளிகளில் ஒருவரான தமிழ்ச்செல்வன், இந்தப் போக்கு குறித்துக் கவலை தெரிவிக்கிறார்.

"முற்போக்குப் படைப்பாளிகளிடமிருந்த சத்திய ஆவேசம் என்னைக் கவர்ந்தது. அவர்களின் படைப்புகளில் இருந்த கலாப்பூர்வமற்ற, சொற்பொழிவுத் தன்மை வாய்ந்த, புரட்சிக்கனல் தெறிக்கும் வாசகங்கள் எனக்குப் பெரும் ஆயாசத்தை ஏற்படுத்தின"[7]

"படைப்பாளியின் மொத்த கருத்துக்கள் எந்த அளவுக்கு மறைந்து கிடக்கின்றனவோ, அந்த அளவு கலைப் படைப்புக்கு நல்லது" என்று ஏங்கெல்ஸ் மின்னா காட்ஸ்கிக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியதைச் செம்மலர் அடிக்கடி நினைவுபடுத்திய பிறகும்

இத்தவறு நடக்கிறது. (மேற்கோள் : செம்மலர், ஏப்ரல் 1976, ப.71) இதற்கு எடுத்துக்காட்டாக 1988, நவம்பர் செம்மலரில் வெளியான 'அருள்' கதையைச் சொல்லலாம்.

இதன் ஆசிரியர் தேனி சீருடையான், அங்கதம் (satire) என்ற உத்தி மிகப் பொருத்தமாக அமைந்த கதை இது. தீச்சட்டி எடுக்கும் மச்சானிடம் அருள் எப்படி போலியாக இறங்குகிறது என்பதை நல்ல நகைச்சுவையுடன் கதை சொல்லி வருகிறது. இடையில் திடீரென்று 'அருள் இறங்குவது; காமியாடுவது என்பதெல்லாம் பொய் வேஷம்' என்று கதாசிரியர் புகுந்து பேச ஆரம்பிக்கிறார். வாசகர்களின் புரிதல் உணர்வைக் குறைவாக மதிப்பிடுவதால் நேரும் தவறு இது.

தேவையற்ற முற்போக்கு முடிவு

ஆரம்ப காலக்கதைகளில், எப்படி முடிப்பது என்று அறியாமலோ, இப்படி முடிப்பது தான் முற்போக்கு என்று கருதியோ செயற்கையாய் வரவழைக்கப்பட்ட கோபங்களிலும் எழுச்சிகளிலும் கதையை முடித்தனர். ஆரம்பத்தில் நேர்ந்த இத்தவறு பொருட்படுத்தக்கூடியது அன்று. படைப்புகள் பற்றி விவாதங்களும், சுயவிமர்சனங்களும் தொடங்கிய பிறகும் கூட படைப்புகளில் வலிந்த முடிவுகள் தோன்றியுள்ளன. எடுத்துக் காட்டாகப் பின்வரும் கதையைக் கூறலாம்.

டிசம்பர், 1983இல் மேலாண்மை பொன்னுச்சாமி எழுதிய கதை 'புதிய பிறப்பு'. ஒரு தொழிற்சங்கவாதியிடமுள்ள முற்போக்குப் பார்வையின் எல்லைகளை மிகச்சிறப்பாக இக்கதை கண்டறிகிறது. தன் மனைவியை மாதர் சங்கத்தில் ஈடுபடுத்தும் அவன், பின்னர் அவள் ஈடுபாட்டுடன் மாதர் சங்கப் பணிகளில் வளர்ந்து வரும்போது பொறாமையால் வைக்கோலைப் போல எரிகிறான். கதை இத்தோடு நின்றிருந்தால் உள் மனிதனை அம்பலப்படுத்தியதில் கதை வெற்றி பெற்றிருக்கும் ஆனால் அவனைத் திருத்திப் புதிய பிறப்பு எடுக்க வைத்துக் கதையை முடிக்கிறார். ஆசிரியர், வாசகனை மனத்தில் வைத்து எழுதக்கூடாது என்று சொன்னவர்கள் இருக்கிறார்கள். வாசகனை மனத்தில் வைத்து எழுதும்போது தவறு நேர்வதில்லை. ஆனால் அமைப்பை மனத்தில் வைத்துக் கொண்டு எழுதும்போது மேலே குறிப்பிட்ட தவறுநேர்கிறது.

ஜெயகாந்தன் சுட்டிக் காட்டிய தவறு

முற்போக்கு எழுத்தாளர் மாதவராஜ் செம்மலரில் புதிய உத்தியுடன் எழுதிய கதை 'மண்குடம்', தண்ணீர்ப் பிரச்சினையை

மண்குடத்தின் பார்வையில் கதை சொல்கிறது. மண் மகுடம் பேசுகிறது. 'ஏ! தாயி! எனக்கு அடுத்த பெறப்புண்ணு ஒண்ணு இருந்துச்சுன்னா நான் ஒன் வயித்துல பெறக்கணும். ஓம் மார்ல . . . பாலக் குடிக்கணும்! கதையின் முடிவில் போராடும் பெண்கள் கூடி மண் குடத்தைப் போட்டு உடைக்கிறார்கள் உடைபடும் போது மண் குடத்துக்குப் பெருமையாக இருக்கிறது. அந்த முடிவை முற்போக்காளர்கள் 'கச்சிதமான மூத்தாய்ப்பாய் இருக்கிறது' என்று பாராட்டுகிறார்கள். (செம்மலர், செப்டம்பர் 1989, ப.69) ஆனால் தவற்றைச் சுட்டிக் காட்டுகிறார் மூத்த எழுத்தாளர் ஜெயகாந்தன். "மண் குடத்துக்கும் ஒரு மனசு இருப்பதும் அது நம்மோடு பேசுவதும் வாழ்வின்மீது அது கொண்டுள்ள நேசமும் ஆதங்கமும் வெளிப்படுகிற முறையே கவித்வமிக்கதாயிருக்கிறது. ஆனாலும் தன்னைப் போட்டு உடைக்கிற போராட்டத்தை அதுதான் செய்யப் போகிற தியாகமாக எண்ணி உவகை கொள்ளும்போது தான் கொள்கை வந்து கொடி பிடிக்கிறது! அடிப்பாவி! என்னைப் போட்டு உடைப்பதால் என்ன பயன்? என்று மண் குடத்தின் மனம் கேட்டிருக்கலாம்; கேட்டிருக்கும்"[8] என்று தோழமையோடு திருத்துகிறார் ஜெயகாந்தன்.

மூத்த படைப்பாளி, அக்கறையுடன் முன்வைக்கும் இவ்விமர்சனம், மிகையான உணர்ச்சியால் நேரக்கூடிய தவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.

தவறு களையப்படும்போது நழுவும் சத்திய ஆவேசம்.

சுயவிமர்சனத்தில் நம்பிக்கையுள்ள செம்மலர்ப் படைப் பாளிகள் தவறுகளைக் களைந்து முன்னேறுகிறார்கள். சொற்பொழிவுப் போக்குக்காக ஆதங்கப்பட்ட தமிழ்ச் செல்வனே 1996 இல் நடந்த சிறுகதைப் போட்டி முடிவுகளை அறிவிக்கும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> கதையில் கதாசிரியர் வந்து பாத்திரங்களின் முதுகில் ஏறி உட்கார்ந்து சொற்பொழிவு ஆற்றும் கதைகளும் உண்டு. ஆனால் ஆச்சரியப்படத் தக்க விதமாக அப்படிச் சொற்பொழிவுக்கதைகள் நான்கோ, ஐந்தோதான் வந்திருந்தன. காலம் நல்லவிதமாக மாறி வருகிறது. ஆறுதல் தருகிறது" (செம்மலர், பிப்ரவரி, பக்.37, 38)

பொதுவுடைமைப் படைப்பாளிகளின் வளர்ச்சி குறித்து முழு மகிழ்ச்சி அடைய முடியாதபடி இந்தப் பாராட்டின் இறுதியில்

முற்போக்குப் படைப்புகளில் கோபாவேசத்தைக் காணவில்லை என்ற குறிப்பும் காணப்படுகிறது.

உணர்ச்சி மிகையாகிய போது வடிவம் நழுவுகிறது. உருவம் பற்றிய மிகையான சிந்தனையில், உயிர்நாடியான சத்திய ஆவேசம் நழுவிப் போகிறது. உள்ளடக்கம் சாரம் இழக்கிறது. லட்சிய வாதிகளுக்கு வாழ்க்கையில் உள்ள சிரமங்கள், லட்சியப்படைப்பு களுக்கு இலக்கியத்தில் இருக்கின்றன.

செம்மலரின் உள்ளடக்கம்

மரபார்ந்த வாழ்க்கை மீதும் நம்பிக்கை மீதும் கோபம் கொள்ளுதல்; எளிய மனிதனின் சிதைவையும் எழுச்சியையும் அக்கறையுடன் கவனித்தல் என்ற முற்போக்கு இலக்கிய சாரத்தில் இருந்து செம்மலர் உள்ளடக்கம் விலகவில்லை. ஆனால், எடுத்துக் கொண்ட கதைப் பொருள்களில் காலந்தோறும் வேறுபாடுகள் உண்டு.

தொடக்க காலக் கதைகளில் மரபெதிர்ப்பு

சமூகம் விதித்த ஒழுக்க நெறிகள்மீது கொண்ட கோபம்தான் செம்மலரின் தொடக்க காலக் கதைகளை இயக்குகின்றன.

பாசாங்கு வாழ்க்கை, பழமையைப் போற்றுதல், உயர் வகுப்பார் விதித்த ஒழுக்க நெறிகள் - போன்றவற்றின் மீதான தாக்குதலுடன் செம்மலரின் இலக்கியப் பயணம் தொடங்குகிறது எனலாம். நிர்ப்பந்தம் காரணமாகச் சமூகத்தின் பார்வையில் ஒழுக்கமற்றவர்களாய்த் திருடர்களாய், விபசாரிகளாய் நிற்போரின் மீது அனுதாபம் கொண்டு கதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. பிராமண எதிர்ப்புக் கதைகளும் தொடக்க காலத்தில் உண்டு. இக்கதைகள் திராவிட இயக்கத்தின் தாக்கத்தோடு தெரிகின்றன. வர்க்கப் போராட்டம் பற்றிக் கதைகள் தொடக்கத்தில் மிகக் குறைவு.

அறுபதுகளில் பிரபலம் அடைந்திருந்த மு.வ. அகிலன், நா. பார்த்தசாரதி போன்றோர் போற்றிய சமூக மதிப்புகளையும், உருவாக்கிய இலட்சியப் பாத்திரங்களையும் எதிர்க்கும் முயற்சியாகவே செம்மலரில் இத்தகைய உள்ளடக்கம் பிரதானப்படுத்தப்பட்டுள்ளது என்று கருத இடமிருக்கிறது.

அப்பாவியாக இருந்து திருடன் ஆனவன் (கல்லுக்குள் ஈரம், செப்டம்பர் 71), இரவில் மகனுக்குத் தெரியாமல் சோரம் போகும் அன்புள்ள தாய் (கழிப்பு, ஏப்ரல் 72); திருடன் வடிவில் வந்த நல்லவன்;

கணவன் வடிவில் கோழை (இரவில் வந்தவன், ஏப்ரல் 72) என்று தொடக்கக் காலக் கதைகளில் ஒரு 'மீறல்' புலப்படுகிறது. மீறல்- ஆழமான மார்க்சியத் தத்துவப் பின்னணியில் இல்லாதிருப்பது பெருங்குறை.

"மீறல்" கருத்துக் குழப்பத்தில் சிக்கிக் கொள்ளும் நிலையும் உண்டு. எடுத்துக்காட்டாக ஜூன் 1972இல் வெளியான 'பிள்ளையார் பிடிக்க' என்ற கதையைச் சொல்லலாம். பிராமணர் ஒருவர், அவர் வீட்டு வேலைக்காரியைப் பெண்டாள முனைந்தபோது, அப்படியானால் உங்க வீட்டு அம்மாவை என் வீட்டுக்காரனிடம் அனுப்பு என்று அவள் கொடுக்கும் பதிலடிதான் கதை.

எளிய கதாபாத்திரங்கள்

மேடையும் வெளிச்சமும் இன்றி, வாய்ப்பும் அங்கீகாரமும் இன்றி விடுபட்ட எளிய மனிதர்களை ஆரம்ப காலத்திலேயே செம்மலர் கண்டுபிடிக்கத் தொடங்கிவிடுகிறது.

எளிய மக்களைக் கதாபாத்திரங்கள் ஆக்கும்போது அவர்களின் பலவீனங்களையும் அறிந்தே படைத்திருக்கிறார்கள். பலநாள் பாடுபட்டுச் செய்த அடுப்புகளைத் தலையும் இடுப்பும் நோகச் சுமந்து விற்றுக் கிடைத்த கொஞ்சம் பணத்தையும் திரைப்படத்திற்குச் செலவழிக்கும் பாட்டாளியை 'மண்ணைப் பிசைந்து, பிசைந்து மண்ணோடு மண்ணாகிவிட்டதே அவன் மனமும்' என்று அனுதாபம் கசியப் படம் பிடிக்கிறார் 'ஞானி' (ஜூன் 1977).

போராட்டக் கதைகள்

தனிமனிதனின் வாழ்க்கைப் போராட்டம், கூட்டுப் போராட்டம் இரண்டும் செம்மலர்க் கதைகளில் இடம் பெற்றுள்ளன.

போராட்டத்தை அதிதீவிரத்துக்கு எடுத்துச் செல்லும் கதைகளும் உண்டு. நிலத்தைக் கைப்பற்ற போலீசுடன் விவசாயச் சங்கத் தோழர்கள் நடத்தும் போராட்டம் (உதித்த சூரியனும் சிவந்த வானமும், அக்டோபர் 1970); சாதிக் கொடுமைக்கு எதிராக, 'ரத்தக் கடனை ரத்தத்தால்தான் தீர்க்கமுடியும்' என்ற ஆவேசத்துடன், பழிக்குப் பழி வாங்கும் தீவிரம் (நேற்றைய அடிமைகள், பிப்ரவரி 75) போன்ற உள்ளடக்கக் கதைகள் சில எழுபதுகளில் தெரிகின்றன. எண்பதுகளில் இத்தகைய கதைகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

தொழிற்சங்கங்களும், தொழிற்சங்கப் போராட்டங்களும் எழுபது செம்மலரில் குறைவான இடத்தையே பிடித்துள்ளன.

மாற்றங்கள்

கிராமங்களில் நடந்து கொண்டிருக்கும் மாற்றங்களைப் பதிவு செய்யும் போக்கு எழுபதுகளில் தொடங்கி விடுகிறது.

டிராக்டர் வந்ததால் வேலை இழக்கும் உழவுத் தொழிலாளிகள் (பாட்டுத்தானே, ஆகஸ்ட் 1970); ஊர்ப் பஞ்சாயத்தில் பள்ளிக்கூடம், பிரைமரி ஹெல்த் சென்டர் போன்ற கோரிக்கைகளை முன் வைக்கும் புதிய தலைமுறையினர் (பஞ்சாயம், ஜனவரி, 1975); கருவாட்டு வியாபாரி மகன், அத்தொழிலை வெறுத்து விவசாயியாக மாறுவது (ஜப்தி, நவம்பர், 1974); சிறு விவசாயி நிலமிழந்து தொழிலாளியாக மாறுவது, வர்க்க உணர்வு பெறுவது (எதிர்காலக்கதிரவன், செப்டம்பர் 1976); காண்ட்ராக்டர் கலாச்சாரம் அரசியலுடன் சேர்ந்து கிராமத்தில் உருவாவது (முசக்குட்டி முனுசாமி பிரம்மாபுரம் பிரமுகராகிறார், ஜூலை 1979); பயர் ஒர்க்ஸ் தொழிலாளி வேலையைவிட்டுச் சிறுவியாபாரியாக மாறி வர்க்கக் குணங்களில் சமரசமாகிப் போவது (நீறு பூத்த நெருப்புத்துண்டு, செம்மலர், அக்டோபர் 1976); சிறிய விவசாயிகளையும் நடுத்தர விவசாயிகளையும் ஆட்டிப் படைக்கும் புதிய எசமானர்களாகக் கமிசன் கடை வியாபாரிகளின் தோற்றம் (வலை, மார்ச் 1976) ஆகியவை பதிவு செய்யப்பட்டிருக்கும் மாற்றங்களில் சில. மாற்றங்கள் பாய்ச்சல் வேகத்திலும் பெரிய அளவிலும் இல்லாமல், மெதுமெதுவாக நடக்கும் சிறு சிறு மாற்றங்களாகப் படைக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத் தக்கது.

எண்பதுகளில் உள்ளடக்கம் – விரிவான களம்

மத்திய வர்க்கத்தின் வருகை, குடும்பப் பிரச்சினைகளில் நுட்பமான கவனம், தொழிற்சங்கத்தின் பங்கேற்பு, மனப் போராட்டங்களின் சித்தரிப்பு, நகரம் நோக்கிச் செல்லும் மாற்றம் ஆகியவை எண்பதுகளின் களத்தை விரிவுபடுத்துகின்றன. பொதுவுடைமை இலக்கியத்தின் பார்வை படிப்படியாக விரிவடைகிறது.

மாற்றமில்லாமல் தொடரும் போக்கு

எழுபதுகளில் காதல் கதைகளிலும் நகைச்சுவைக் கதைகளிலும் பஞ்சம் தெரிகிறது. இப்பஞ்சம் எண்பதுகளிலும் தொடர்கிறது.

"காதல் என்பது யாரும் எழுதக்கூடியது; எந்தச் சிறப்பான அறிவும் தேவைப்படாத ஒரு விசயம்" என்று முற்போக்காளர்கள் நினைத்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். காதல் ஒரு முற்போக்கான உணர்வு என்பதை மறந்ததால் வந்த தேக்கம் இது. சொல்லப்பட்டிருக்கும் சில காதல் கதைகள் (புயல், செம்மலர், ஜனவரி

1983; மாறுதல், செம்மலர், பிப்ரவரி 1983, ஈஸ்வரியின் சின்னக்கா, செம்மலர், ஜூன் 1987) வித்தியாசமான கோணத்தில் காதல் சிக்கல்களை விவாதிக்கின்றன.

நகைச்சுவைக் கதைகளுக்கான பஞ்சமும் இதுபோலத்தான். எழுபதுகளில் இருந்த நிலைதான் எண்பதுகளிலும். இது குறித்த வாசகர் கடிதங்கள் செம்மலரில் அடிக்கடி பிரசுரமாகியுள்ளன.

கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களும் செம்மலர் ஆசிரியர் குழுவினரைப் பார்த்து "என்னப்பா. . .செம்மலரில் நகைச்சுவைக் கதைகள் வரவேண்டாமா? மனுசனுக்கு நகைச்சுவையும் வேணுமே."[10] என்று சுட்டிக் காட்டிய கட்டங்களும் உண்டு. தீவிர சமூகச் சிந்தனையாளர்கள் நகைச்சுவை உணர்வின்றி இருப்பார்கள் என்ற தவறான முடிவுக்கே இப்போக்கு, வாசகர்களைக் கொண்டுபோய் விடும். நகைச்சுவையுடன் சொல்லும் ஆற்றல் முற்போக்கு எழுத்தாளர்களிடம் உண்டு என்பதை மெய்ப்பிக்கும் கதைகளும் உண்டு. அருள் இறங்குவதைக் கேலி செய்யும் 'அருள்' (நவம்பர், 1988); கீரை, ஓசி கேட்கும் முதலாளியை எதிர்த்துக் கிராமத்தில் தொழிலாளிகள் நடத்தும் போராட்டத்தைச் சொல்லும் 'ஒரு தீபம் ஏற்றி வச்சாச்சு' (நவம்பர் 1988); போராடிப் பெற்ற பலனை முட்டாள்தனமாக இழக்கும் கிராமத்து மக்கள் பற்றி விவரிக்கும் 'ரைட். . . . போகலாம்' (ஆகஸ்ட் 1988) ஆகிய கதைகள் இந்த ஆற்றலுக்கு அடையாளங்களாய் உள்ளன.

மத்திய வர்க்கம்

செம்மலர் தொடங்கிய இரண்டு ஆண்டுகளிலேயே படைப்புக்களில் மத்திய வர்க்கம் இடம் பெறவேண்டும் என்ற ஆதங்கம் உருவாகி விட்டது.

செம்மலருக்குக் கதை, கவிதை எழுதும் பல எழுத்தாளர்கள் தொழிலாளி அல்லது உழைப்பாளி ஒருவனை மட்டுமே-அவனது போராட்டங்களை மட்டுமே மையமாகக் கொண்டு கதை புனைவது தான் முற்போக்கு இலக்கியம்-புரட்சி இலக்கியம் என்று கருதுகிறார்கள். கரத்தால் உழைக்கும் தொழிலாளியைப் போல். கருத்தால் உழைக்கும் உழைப்பாளிகளைக் கோடிக்காணக்கான மத்தியதரவர்க்கத்தினர் உண்டு. இவர்களது வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலிக்கும் உணர்ச்சிமயமான - உயிர்துடிப்புள்ள இலக்கியங்களைப் படைப்பதும் நமது கடமை" (செம்மலர், மார்ச் 1972, ப.5)

இருப்பினும் மத்திய வர்க்க மனிதர்கள் செம்மலர்ப் படைப்புக்களில் தாராளமாய் இடம் பிடிப்பது எண்பதுகளில்தான்.

அப்படி இடம் பிடித்தவர்களும் அடிப்படையில் கிராமத்து மனிதர்களே. பிழைப்புக்காக நகரம் சென்றவர்கள். மத்திய வர்க்கக் குடும்பங்களும், அக்குடும்பங்களில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்களும் அக்குடும்பங்களில் பெண்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகளும் எண்பதுகளில் செம்மலரின் கதைப் பொருளாகி இருக்கின்றன.

மேலும், தொழிற்சங்கத்துக்கும் மத்திய வர்க்கக் குடும்பத்திற்கும் இடையே வளரும் நட்பும், முரணும் கதைப் பொருளாகியிருக்கின்றன.

மத்திய வர்க்கத்தின் வருகை, கதைத் தளத்தை விரிவுபடுத்தி யிருப்பது கண்கூடு. இந்தப் புதிய உள்ளடக்கத்தால் வடிவமும் புதுமை பெற்றதைக் காணமுடிகிறது.

தீப்பெட்டித் தொழிற்சாலை

எண்பதுகளின் முக்கியமான புதிய வரவு 'தீப்பெட்டித் தொழிற்சாலை'. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பாடுபடும் பெண்களைப் பற்றியும், குழந்தை உழைப்பாளிகளைப் பற்றியும் எண்பதுகளில் கதைகள் தோன்றுகின்றன. போரிடும் பிஞ்சுகள் (ஜனவரி 1980), அசோகவனங்கள் (பிப்ரவரி 1980), சோற்றுப் பொட்டலம் (ஆகஸ்ட் 1980) செக்கு (மே 1980) என 1980ஆம் ஆண்டிலேயே தீப்பெட்டித் தொழிற்சாலையை மையமாக வைத்துப் பல கதைகள் பிறந்தன. 1980ஆம் ஆண்டில்தான் விருதுநகர் மாவட்டத்தில் தீப்பெட்டி ஆபீசுக்கு மழையோடு வேனில் ஏற்றிச் செல்லப்பட்ட குழந்தைகள் ஆற்றோடு போன பரிதாபம் நிகழ்ந்தது.

1988இல் ஒரு திருப்பம்

1988ஆம் ஆண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செம்மலர் வழி நடத்திய சிறுகதைப் போட்டியில், ஷாஜகான் எழுதிய 'ஈன்றபொழுது' முதல் பரிசுக்குரிய கதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது செம்மலரின் பார்வையில் ஏற்பட்ட புதிய திருப்பமாகும். மூன்று குழந்தைக்குத் தாய், மத்திய வர்க்கக் கணவனை உதறிவிட்டு ஒரு லாரி டிரைவருடன் ஒரு குழந்தையை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு பிரிந்து சென்றுவிடுகிறாள். பள்ளிக்குச் சென்ற பிள்ளைகளைப் பார்க்க முடியவில்லை. அவர்களை விட்டுச்சென்று விடுகிறாள். தந்தையிடம் இருந்து பிள்ளைகள் பெரியவர்களாக வளர்கின்றனர். அம்மா நினைப்பு போகவில்லை. சகோதரியின் திருமணத்தைச் சொல்ல, மகன், முகம் மறந்துபோன அம்மாவைத் தேடி வருவதுதான் கதை. அம்மாவின் அன்பில் நனைகிறான். அம்மா வீட்டை விட்டுப் போனபோது தாங்கள்

பள்ளிக்கூடம் போகாமல் இருந்திருக்கலாமே என்று பிள்ளைகள் கவலைப்படுவதோடு முடிகிறது கதை.

இத்தகைய உள்ளடக்கம் செம்மலருக்குப் புதிதல்ல. முதல் இதழில் பிரசுரமான 'அவள் எத்தனை குழந்தைகளுக்குத் தாயானாலும்' கதையின் உள்ளடக்கமும் இதுதான். ஒரே ஒரு வேறுபாடு உண்டு.

பிரிந்துபோனவளின் அன்பும், அவள் பக்கம் இருக்கும் நியாயமும் 'ஈன்ற பொழுதில்' கதையில் மென்மையான குரலில் சொல்லப் பட்டிருக்கின்றன. பிரிந்துபோனது ஏன் என்பது தொடர்பான தர்க்கங்கள் கதையில் விரிவாக நடக்கவில்லை. வாசகர்கள் யூகிப்பதற்குக் கதையில் பெரியவெளி கிடைக்கிறது. படைப்பாளி எல்லா இடத்தையும் அடைத்துக் கொண்டு நிற்கவில்லை. உள்ளடக்கத்தைச் சொல்வதில் இது ஒரு புதிய உத்தி.

கலையைப் பொறுத்தவரை உரத்த குரலைவிட மென்மையான குரல் வலுவானது என்ற உண்மையின் பக்கம் செம்மலர் திரும்பியிருக்கிறது என்பதற்கு வர்க்கப் போராட்டக் கதைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னுக்கு வந்துவிட்ட 'ஈன்ற பொழுதில்' கதை ஓர் எடுத்துக்காட்டாகும்.

உளவியல் நோக்கில் சமூகப் பிரச்சினைகளை அணுகக் கற்றுக்கொண்ட மாற்றமே எண்பதுகளில் மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய மாற்றம்.

படைப்புகளில் கோபம் தணிந்து ஆறிய நிலையும் காணப்படுகிறது.

படைப்புகளில் மத்திய வர்க்கத்தின் இடம் கூடியிருப்பதும் ஒரு மாற்றமே.

இவை யாவும், செம்மலரில் அரசியல் குறைந்து, கலையம்சம் வளர்ச்சி பெற்றதற்கான அடையாளங்களே. உரத்த அரசியல் முழக்கங்களோடு, பொதுவுடைமை இலக்கியம் தோன்றினாலும் மனிதர்களை வதைக்கும் சிறுசிறு பிரச்சினைகளின் பக்கம் அதன் கவனம் திரும்புவதே இலக்கிய நியதியாக உள்ளது.

படைப்பாளிகள்

முற்போக்கு மற்றும் தொழிற்சங்க இயக்கங்கள் சார்ந்தோர், விவசாயிகள், சிறு வியாபாரிகள், அரசு ஊழியர்கள் ஆகியோர் செம்மலர்ப் படைப்பாளிகளில் பெரும்பகுதியினர் ஆவர். வாசகர்களும்

இவர்களே. செம்மலர்ப் படைப்பாளிகளில் பலர் தென் மாவட்டங்களில் வாழ்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடக்க காலப் படைப்பாளிகள்

செம்மலர் முதல் இதழின் படைப்பாளிகளாகிய கு. சின்னப்ப பாரதியும், டி. செல்வராஜும் புதியவர்கள் அல்லர். ஏற்கெனவே எழுதிப் பயிற்சி பெற்ற படைப்பாளிகள். இருப்பினும் இவர்கள் படைப்புகள் ஆழம் பெறுவது செம்மலரில் எழுதத் தொடங்கிய பின்னரே!

செம்மலரோடு உணர்வு பூர்வமாகத் தம்மை இணைத்துக் கொண்ட தொடக்க காலப் படைப்பாளிகளில் ஒருவர் தணிகைச் செல்வன். கவிதைகளில் மின்னிப் பிரகாசித்த இவர் படைப்பாற்றல், சிறுகதைகளில் மங்கித் தெரிகிறது. இவரைப்போல, படைப்புத்திறன் பெற்ற மற்றொரு இளைய படைப்பாளி அஸ்வகோஷ். அஸ்வகோஷ், கதைகள் தவிர நாடகம் தொடர்பாகக் கட்டுரைகளும் எழுதி வந்தவர்.

எழுபதின் பிற்பகுதியில் உருவானவர்கள்

ஞானபாரதி, மேலாண்மை பொன்னுச்சாமி, என்.ஆர். தாசன், ஆமர்நாட்டான், பறம்பைச் செல்வன், இளசை, அருணா, பெருநாழி ஏமாளி, அப்பாக்குட்டி, ஆர்.ஆர்.எஸ்., கொ.ச. பலராமன், பிஎஸ்.ஜெயராம், கொமா. கோதண்டம், சுபானு, விளதை கதா. முகிலன், ஜானகி காந்தன், காஸ்யபன், திருவேங்கடம் மாட்சாமி, சி.ஆர். இரவீந்திரன் ஆகியோர் எழுபதில் உருவான படைப்பாளிகள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் மேலாண்மை பொன்னுச்சாமி செம்மலரின் ஓட்டத்துக்கு இணையாக ஓடிவந்தவர். ஓரிடத்திலும் நிற்கவில்லை; திகைக்கவில்லை. செம்மலரில் புதிய தலைமுறை உருவான பின்னும் பழையவராக மாறாதவர். இன்றுவரை எழுதி வருபவர்.

எழுபதுகளில் பிற்பகுதியில் உருவானவர்களில் பொள்ளாச்சி அம்பலம், மும்தாஜ் யாசீன், தம்பராயன் ஆகியோர் குறிப்பிடத்தக்க சிறந்த படைப்பாளிகளாவர்.

எண்பதுகளில் உருவானவர்கள்

செம்மலர் உருவாக்கிய படைப்பாளிகள் பட்டாளமாக, கந்தர்வன், தமிழ்ச் செல்வன், வேல. ராமமூர்த்தி, தேனி சீருடையான், அல்லி உதயன், கமுத்துரை, ரோஜாக்குமார், உதயஷங்கர், ஷாஜஹான், போப்பு, முகில், கமலாலயன், நா. முத்துநிலவன், மாதவராஜ் ஆகியோரை

மேலாண்மை பொன்னுச்சாமி குறிப்பிடுகிறார். (செம்மலர் மார்ச் 1995, ப.81) இவர்களில் பெரும்பான்மையோர் எண்பதுகளில்தான் செம்மலரில் அறிமுமாகிறார்கள்.

மேலாண்மையின் பார்வையில் இருந்து விடுபட்ட சிறந்த படைப்பாளி எஸ். ராமகிருஷ்ணனும் எண்பதுகளில்தான் செம்மலரில் அறிமுகமாகிறார்.

ஆர்.வி., கோணங்கி, சூரியகாந்தன், பாவண்ணன், கிருதயுகன், சூரங்குடி அ. முத்தானந்தன், தனுஷ்கோடி ராமசாமி, போடி மாலன், ம. மாதேஸ்வரன், கே. பாலபாரதி, களந்தை பீர் முகம்மது, சேலம் செஞ்சுடர், நந்தா ஷங்கர், தூயவன், செம்பருத்தி, பொன்னுச்சாமி போன்ற திறமைமிக்க படைப்பாளிகளும் எண்பதுகளில் அவ்வப்போது செம்மலரில் கதைகள் படைத்துள்ளனர்.

வெளியே இருந்து எழுதியவர்கள்

செம்மலருக்கு வெளியே பேரும், புகழும் பெற்றுத் தமிழகத்தால் நன்கறியப்பட்ட படைப்பாளிகளும் செம்மலரில் கதைகள் எழுதினர். ராஜம் கிருஷ்ணன், சு. சமுத்திரம், கோமல் சுவாமிநாதன் போன்றோரை வெளியில் புகழ் பெற்றுப் பின் செம்மலரில் எழுதியவர்களாகச் சொல்லலாம்.

பெண் படைப்பாளிகள்

எல்.ஆர். லட்சுமி, செம்பருத்தி, பாலபாரதி, பிரேமா அருணாசலம், இந்துவரதன் எனப் பெண் படைப்பாளிகள் செம்மலரில் பங்கு கொண்டிருந்தாலும் இவர்களின் எண்ணிக்கை குறைவே. முற்போக்குப் படைப்பாளிகள் என்ற பட்டியல் தயாரிக்கப் படும்போது இவர்கள் பெயர்கள் இடம் பெறுவதில்லை. பெண் படைப்பாளிக்குரிய இடம் செம்மலரில் மிகக் குறைவாக இருப்பது ஒரு குறையே.

வாசகத் தளம்

தொடக்கத்தில் 2000 பிரதிகள் அச்சிடப்பட்ட செம்மலர், இன்று 18,000 வரை அச்சிடப்படுகின்றது. வணிக நோக்கில் இல்லாமல் ஓர் இதழை 30 ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது; வாசகப் பரப்பை மெல்ல மெல்ல விரிவு செய்வது என்பவை சிரமமான காரியங்களே.

"இன்றைய நிலையில் இலக்கிய இதழ் நடத்துவதென்பது எவ்வளவு கடினம் என்பதும் எவ்வளவு இழப்பு ஏற்படும் என்பதும்

இதழ் நடத்துவோருக்கு நன்கு தெரியும். இந்நிலையில் செம்மலர் இலக்கியத் திங்கள் இதழ் வெள்ளிவிழா கண்டுள்ளதை எண்ணி மகிழ்வெய்துகிறேன்" என்று கலைஞர் கருணாநிதி இவ் விடா முயற்சியைப் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது (செம்மலர் வெள்ளிவிழா மலர், மார்ச் 1995, ப.6)

விரிவடைய வேண்டிய வாசகத்தளம்

வாசகத்தளத்தைப் பொறுத்த அளவில் பரப்பு நாளுக்கு நாள் கூடி வந்த போதிலும், மத்திய வர்க்க வாசகத்தளத்தையே செம்மலர் நம்பி இருக்கிறது.

அடிமட்டத் தொழிலாளிகள், கிராமப்புற அரைகுறைப் படிப்பாளிகள், பெண்கள் ஆகியோர் மத்தியில் செம்மலரின் வாசகத்தளம் விரிவடைய வேண்டியுள்ளது.

"நம் நாட்டில் முற்போக்கு எழுத்தாளர் இயக்கம் தோன்றி, 30, 40 ஆண்டுகள் ஆகியும் ஒரு குறை இருக்கிறது. இந்த இயக்கம் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியிலும், படித்த அறிவு ஜீவிகள் மத்தியிலும் மட்டுமே பரவி உள்ளது. கோடிக்கணக்கான கிராம மக்கள், 'விவசாயத் தொழிலாளர்கள், ஆதிவாசிகள் மத்தியில் போகவில்லை' என்று பி. கோவிந்தப்பிள்ளை 25 ஆண்டுகளுக்கு முன் தெரிவித்த வருத்தம் இன்றும் தொடர்கிறது. (ஆகஸ்ட் 1975, ப.76) இந்த வருத்தத்தைக் களைய இரு இயக்கங்கள் எடுத்த முயற்சிகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. அறிவொளி இயக்கமும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமுமே அவ் இரு இயக்கங்கள்.

அறிவொளி இயக்கம்

தமிழகத்தில் 1990 முதல் 95 வரை சிறப்பாக நடைபெற்ற அறிவொளி இயக்கம் கிராமப்புற மக்களுக்கும், முற்போக்காளர்களின் படைப்புகளுக்கும் இடையே பாலம் இட்டது. கல்வி கலாச்சார மையமாகக் கிராமங்களில் உருவாக்கப்பட்ட 'அறிவொளி வட்ட'ங்களில் முற்போக்கு எழுத்தாளர்களின் கதைகள் படிக்கப்பட்டன; விவாதிக்கப்பட்டன. முற்போக்கு எழுத்தாளர் களையே வட்டங்களுக்கு அழைத்துச்சென்று, அவர்களே அவர்கள் கதைகளை மக்கள் மத்தியில் வாசிப்பதற்கான ஏற்பாடும் அறிவொளி இயக்கத்தில் உருவாக்கப்பட்டது. இந்தச் சந்திப்புகள், அன்பும் வெதுவெதுப்பும் நிறைந்த சந்திப்புகளாகும்.

அது மட்டுமன்று புதுமைப்பித்தனின், சங்குத் தேவனின் தர்மம் (முத்தாச்சி என்ற பெயரில்), கி. ராஜநாராயணனின் காய்ச்ச மரம்,

மேலாண்மை பொன்னுச்சாமியின் உள்மனிதன் (எட்டரை என்ற பெயரில்), கு. அழகிரிசாமியின் வெறும் நாய், தனுஷ்கோடி ராமசாமியின் தரகன் பாடு (கடுங்காப்பி என்ற பெயரில்) வேல. ராமமூர்த்தியின் ஆசை தோசை, உதய ஷங்கரின் ஐந்து பெண்கள் பெற்ற ஆவுடையப்ப பிள்ளை, ரோஜாக் குமாரின் அஞ்சு ரூவா முதலிய கதைகள் எளிய வடிவில் மறுபடி எழுதப்பட்டு ஒவ்வொன்றும் பத்தாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு, 'மக்கள் வாசிப்பு இயக்கத்'தில் இலட்சக்கணக்கானோர் மத்தியில் வாசிக்கப்பட்டன.

எழுத்தாளர் - மக்கள் சந்திப்புகள் பல பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்தின. தங்களுடைய மொழிநடை. கதை சொல்லும் போக்கு ஆகியவை மத்திய வர்க்கச் சார்புடன் இருப்பதை எழுத்தாளர்கள் கண்டு கொண்டனர். தங்களுடைய கதை முடிவுகளும் மக்களின் மனவுலகில் இருந்து விலகியிருப்பதை அவர்கள் இச்சந்திப்பில் அறிய முடிந்தது.

ஒவ்வொரு வாசகத் தளத்துக்கும் ஒரு சிறப்பு மொழி தேவை; பொது மொழி போதாது என்ற உண்மையை அறிவொளிச் சந்திப்புகள் தெளிவுபடுத்தின.

இச் சந்திப்பிற்குப் பிறகு வேல. ராமமூர்த்தி அறிவொளி வாசகத் தளத்திற்குப் பின்வருமாறு மொழிநடையை மாற்றினார்.

"சண்முகம் ஒரு கிறுக்கன். 37 வயது ஆகிறது. டவுசர்தான் போடுவான். முழங்காலுக்குக் கீழே தொங்கும். பின்புறம் தேய்ந்தும் கிழிந்தும் இருக்கும் சட்டை போட மாட்டான். அவிச்சகிழங்கு மாதிரி உடம்பு. சொறி பிடித்து இருக்கும். தலையில் எண்ணெய் தேய்க்க மாட்டான். பரட்டைத் தலை" சிறுசிறு வாக்கியங்களில் மொழிநடை எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது.

எளிய மக்களுக்குப் படைப்பது எளிய செயலன்று; கலைகளிலேயே அதுதான் கடினமான கலை என்பதைச் செம்மலர்ப் படைப்பாளிகள் புரிந்துகொள்ள அறிவொளி இயக்கம் உதவியது.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

முற்போக்குக் கலை, இலக்கியத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முயன்று வரும் இயக்கம் 'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' சுருக்கமாக இது, த.மு.எ.ச.

இயக்கம் தோன்றியபின், இதழ் தோன்றுவது வழக்கம். இந்த நியதிக்கு மாறாக, செம்மலர் தோன்றிய பின், அது தந்த ஆர்வத்தில்

'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' தோன்றியது. இந்தியாவில் 1975, ஜூன் 25 நள்ளிரவில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. ஜூன் 29 அன்று 'மிசா' சட்டம் கொடுமையாக்கப் பட்டது. இந்தக் காலகட்டத்தில்தான் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உதயமானது. 1975 ஜூலை 12, 13 தேதிகளில் இதன் முதல் மாநாடு மதுரை தமுக்கம் கலையரங்கில் நடைபெற்றது. எமர்ஜென்சியில் பிறந்த இயக்கம் என்பதால் 'சர்வாதிகாரத்தின் கர்ப்பப்பையைக் கிழித்துக் கொண்டு உதித்தெழுந்த' (செம்மலர், ஜூன், 1980, ப.8) இயக்கமாக, அவ்வியக்க நண்பர்களால் பெருமை பாராட்டப் பெறுகிறது. தமிழ்நாட்டில், அதுபோழ்து, தி.மு.க. ஆட்சியில் இருந்ததாலும், இந்த முயற்சியைத் தடையின்றித் தொடங்க முடிந்தது.

த.மு.எ.ச..வின் பணியை நா. பார்த்தசாரதி பின்வருமாறு பாராட்டுகிறார்.

> சமூகப் பிரச்சனைகளில் சம்பந்தப்படுத்திக் கொள்ளவும், அதிகார சக்திகள் தவறான பாதையில் போவதைக் கண்டிக்கவும் எழுத்தாளர் சங்கங்கள் என்ற பேரில் பல அமைப்புகள் தயங்கியும் பூசியும் நிற்கின்றன. த..மு.எ.ச. அச்சமின்றி அரசின் தவறான போக்குகளை எதிர்க்கவும், சமூக நாட்டத்தில் நிமிர்ந்து நிற்கவும், திராணி பெற்று இருக்கிறது (செம்மலர், டிசம்பர், 1987, ப.32)

செம்மலரில் இருந்து உதித்தபோதும், செம்மலருக்கு ஒரு பார்வை வழங்கியதில் த.மு.எ.ச.வுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. "த.மு.எ.ச.வில்தான் நாங்கள் அனைவருமே மேலும் மேலும் ஒரு சரியான நிலையை நோக்கி விரைந்தோம்"[11] என்று குறிப்பிடுகிறார் அதன் பொதுச் செயலாளர் இரா. கதிரேசன்.

தொடக்கத்தில் இருந்தே பரந்த எழுத்தாளர் மேடையை உருவாக்குவதற்குச் செம்மலரில் வேண்டுகோள்கள் வெளிவந்தன. பரந்த மேடையை உருவாக்குவதில் த.மு.எ.ச. முனைந்து நின்றது.

"த.மு.எ.ச. அமைப்பு ஒரு திறந்த புத்தகம்; எதையும் அவர்கள் மறைக்கவில்லை. மார்க்சிஸ்ட் கட்சியின் ஏடாகிய செம்மலரில் எழுதி வந்தவர்களால் ஆக்கப்பட்டதுதான் த.மு.எ.ச. ஆனால் ஒரு எழுத்தாளர் அமைப்பு என்ற முறையில் அது சுயேட்சையாக இயங்குகிறது. அதில் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் இருக்கலாம். ஒரேயொரு நிபந்தனைதான். அவர்கள் த.மு.எ.ச.வின் இலக்கியக் கோட்பாட்டை ஒப்புக் கொண்டிருக்க வேண்டும்"[12] என்கிறார் அருணன்.

இது உண்மைதான். மதவாத, சாதீய அமைப்புகளைச் சார்ந்தோர் தவிர, மற்ற அனைத்துப் பிரிவினரும் த.மு.எ.ச. மேடையில் ஏறியிருக்கின்றனர்.

த.மு.எ.ச.வின் முதல் 15 ஆண்டுகளில் சிறிய அறைக் கூட்டங்கள் ஏராளமாக நடத்தப்பட்டன. ஒரு நண்பனின் வீட்டு மாடியில், ஆரம்பப் பள்ளிக்கூட வளாகத்தில், சில நேரங்களில் மரத்தடியில் என்று இக்கூட்டம் சிறிய கிராமங்களில் கூட நடக்கும். யாராவது ஒருவர் கதை வாசிப்பார்; சிலர் கவிதைகள் வாசிப்பார். படைப்புகள் மீது விமர்சனம் நடைபெறும். விமர்சனம் ஆக்கப்பூர்வமாக இருக்கும். கழுகு தன் குஞ்சுகளைப் பறக்கப் பழக்குவது போலக் கோபமின்றியும், அதே சமயம் கறாராகவும் விமர்சனம் இருக்கும். ஏராளமான சிறு படைப்பாளிகள் இந்தக் கூட்டங்களில் உருவாகியிருக்கிறார்கள்.

தொண்ணூறுகளில், புதியதொரு வடிவத்தைத் த.மு.எ.ச. கண்டுபிடித்தது. அதுதான் கலை இரவு. கலை இலக்கிய இரவுகளின் மூலம் த.மு.எ.ச. ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து தொடர்ந்து சந்தித்து வருகிறது. மிகப் பிரபலமான திரைப்படக் கலைஞர்களையும், கலை இரவு நடக்கும் அந்த ஊரின் எளிய கரகாட்டக் கலைஞரையும் எந்தப் பாகுபாடும் இன்றி த.மு.எ.ச. மேடையேற்றுகிறது.

த.மு.எ.ச. கொடுத்த நம்பிக்கையில், புதிய வரலாறு படைக்க அழைப்பும் விடுக்கப்பட்டது. "த.மு.எ.ச. கலை இரவுகள் மூலம் நல்ல நல்ல இலக்கியப்படைப்புகளைக் கொண்டு சென்றது ஒரு வரலாற்றுச் சாதனை என்றால், இனி படைக்க வேண்டிய வரலாறு ஒன்றும் உள்ளது. அது யாதெனில், படிக்காத உழைப்பாளி மனிதர்களின் வியர்வை வாசத்தை நுகர்ந்துகொண்டே படைப்பாளி, தன் படைப்புக்களை வாசிக்க வேண்டும்."

மேலாண்மை பொன்னுச்சாமி மேலே குறிப்பிட்டுள்ளபடி இந்த வியர்வை வாசத்துக்கு நெருங்கிப் போவதில்தான், பொதுவுடைமை இலக்கியத்தின் எதிர்காலமும் வெற்றியும் இருக்கின்றன.

பொதுவுடைமை இலக்கியத்தின் முன் உள்ள சவால் இதுவாகும்.

குறிப்புகள்

1. தி. வரதராஜன், சந்தோசமாக, பெருமையாக (கட்டுரை), செம்மலர் வெள்ளிவிழா மலர், ப.137
2. "உணர்ச்சியையோ அன்றி கருத்தையோ வெளியிடுவதால் மட்டுமே ஒரு ஆக்கம் கலைப்படைப்பாக மாட்டாது. கலாபூர்வமான செய்நேர்த்தியயையும் அவை கொண்டிருத்தல் வேண்டும்". கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, அழகியல், ப.30
3. ராஜ் கௌதமன், எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம், ப.104
4. மாசே.துங். கலையும் இலக்கியமும், ப.63
5. தொடரும் வெளிச்சம் (முன்னுரை) த.மு.எ.ச. வெளியீடு, ப.1.
6. செந்தீ நடராசன் (தொ.ஆ.), தாமரைச் சிறுகதைகள் (முன்னுரை), ப.1
7. ச. தமிழ்ச்செல்வன் (கடிதம்), திருப்பரங்குன்றம், த.மு.எ.ச. இலக்கிய மலர் (1995)
8. ஜெயகாந்தன் (அணிந்துரை), மாதவராஜின் ராஜகுமாரன், ப.1
9. மேற்கோள்: சோலக்கோல், கு. சின்னப்பபாரதி, தாகம், முன்னுரை, ப.3
10. தோழர் எம்.ஆர்.வி., செம்மலர் வெள்ளிவிழா, மலர், ப.138
11. இரா.கதிரேசன் (நேர்காணல்), திருப்பரங்குன்றம் தமுஎச. இலக்கியமலர், ப.35
12. அருணன், இலக்கிய வானில் வெள்ளிநிலா (தமுஎச வரலாறு), ப.13, ப.7

சிகரம்

1975

மு. வளர்மதி

தமிழ்க் கலை இலக்கிய வரலாற்றில் பொதுவுடைமைச் சிந்தனைப் போக்குகளை உருவாக்கிய பல ஏடுகளில் 'சிகரம்' இதழுக்குத் தனி இடம் உண்டு. சிகரம் இதழ் 1975ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் நாள் மக்கள் இலக்கிய மாத இதழாக ரூ.1 விலையில் வெளியிடப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் ச.செந்தில்நாதன் அவர்கள் சிகரம் இதழின் ஆசிரியராக இருந்து இவ்விதழைச் சிறப்புடன் நடத்தி வந்துள்ளார். 1975ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் நாள் நெருக்கடிச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது பொதுவுடைமை இயக்கம் சார்ந்த ஏடுகள் அனைத்தும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலிருந்து தப்பிய ஒரே இதழ் சிகரம் மட்டுமே. நெருக்கடிச் சட்டம் அமுல்படுத்திய நாளிலிருந்து நான்கு நாட்களுக்குப் பிறகு (1975) சிகரம் இதழ் வெளியிடப்பட்டதுதான் இதற்குக் காரணம்.

இதழின் நோக்கம்

சிகரம் இதழ் குறித்து ஆசிரியர் ச. செந்தில்நாதன் "ஒரு சொல் கேளீர்" என்ற தலைப்பில்,

> "காலகட்டத்தின் கட்டளையை ஏந்தி. . . கலை இலக்கியப் பண்பாட்டுத் துறையில் தோகை விரிக்கிறது ஒரு மயில்; கீதம் இசைக்கிறது ஒரு குயில். ஆர்க்கின்ற பறவையினம் அருணோதயத்திற்குக் கட்டியம் கூறுகின்றது. எவ்விய கால்களுடன் சேவல் ஒன்று கூவுகிறது. "இதோ சிகரம்!" துயில் கொண்ட துறையில் மணிக்கதவம் தாள் திறக்கிறது. பகைகொண்ட ஆதிக்கம் பதறித் துடிக்கிறது. இது வரலாறு காணாத ஏடு; தமிழ் வையகத்தில் இதற்கேது ஈடு என்று சொல்ல எனக்கு அகந்தையும் கிடையாது அறியாமையும் கிடையாது. சிகரம் ஒரு சரித்திரமல்ல; சரித்திரத்தில் ஓர் அத்தியாயமும் அல்ல; சில வரிகள். சில வரிகளாக இருந்தாலே போதும்"[1]

என்று மிகுந்த தன்னடக்கத்துடன் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். சிகரம் இதழுக்கு எழுதுபவர்கள் மார்க்சியவாதியாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை; அப்படி ஒரு நிபந்தனை ஏதும் இல்லை என்பதையும் ஆசிரியர் அறிவித்துள்ளார்.

> மனிதாபிமான கோட்பாடுகளிலும் ஜனநாயக நெறிகளிலும் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் போதும். உங்கள் எழுத்து மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால் போதும். சிகரம் இடம் கொடுக்கும். இந்த இடம் இடதுசாரி சக்திகள் பரந்த ஜனநாயக அமைப்பைக் கட்டுவதற்கும், ஒன்றுபடும் விஷயங்களில் ஒருமைப் பாட்டை வளர்த்துக் கொள்ளவும், எதிர் வர்க்கங்களுக்கு ஆதரவான இலக்கிய அம்சங்களை அம்பலப் படுத்துவதற்கும் கொடுக்கப்படும் இடமாகும்[2]

என சிகரம் இதழின் கோட்பாட்டையும் நோக்கத்தையும் ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளார்.

இதழ் தொடங்குவதைக் குறித்து ஆசிரியரின் விளக்கம்

'ஒரு சொல் கேளீர்' என்ற தலையங்கத்தில் 'காதுகளைக் கடன் கொடுங்கள்' என்ற தலைப்பில் சிகரம் இதழின் ஆசிரியர் ச. செந்தில் நாதன் சிகரம் இதழ் தொடங்குவதற்கானச் சில சூழல்களை, டிசம்பர் 75, மலர் 1 இதழ் 6 முதல் ஜூன் 76 மலர் 1 இதழ் 12 வரையில் வெளிவந்துள்ள சிகரம் இதழ்களில் விளக்கியுள்ளார். சென்னையில் மக்கள் எழுத்தாளர் சங்கத்தை நடத்திய பாணியில் ஏன் சிகரத்தை நடத்தக் கூடாது? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரிக்கும் இலக்கிய ஏடாகவும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அடியொற்றி நடக்கின்ற ஏடாகவும் மட்டுமே இது ஏன் இருக்க வேண்டும்? எனப் பலபேர் கடிதத்தின் வாயிலாகவும் நேரிலும் ஆசிரியரிடம் ஐயங்களை எழுப்பினர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து ஏழு இதழ்களில் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவான வரலாற்றுப் பின்னணியை விளக்கும்போது, இறுதியாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சரியான முற்போக்குத் திசைவழிச் செல்லும் புதிய அணியின் பாசறை. இந்த அணிதான் தமிழ் இலக்கிய வரலாற்றின்

> அடுத்த அத்தியாயத்தை ஆரம்பிக்கப்போகின்ற அணி. இந்த அணிக்கு உறுதுணையாக இருக்கும் ஏடுதான் சிகரம்[3]

என்று தெளிவாக அறுதியிட்டுக் கூறியுள்ளார். மேலும் 'சிகரம்; பிற்போக்கிலக்கியப் போக்கை எதிர்த்து நெஞ்சுரத்தோடு போராடும்; திரிபிலக்கியப் போக்கை அயராது அம்பலப்படுத்தும் முற்போக்கு எழுத்தாளர்களுக்கு நேசக்கரம் நீட்டும் வர்க்க எழுத்தாளர்களை அன்போடு அரவணைக்கும்' என்று ஆசிரியர் செந்தில்நாதன் சிகரம் இதழில் அணுகு முறை குறித்து (ஒரு சொல் கேளீர்) சிகரத்தின் தலையங்கப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இத்தொடர் சிகரம் இதழ் தோன்றுவதற்கு வாய்ப்பான சில சூழல்களை விளக்குவதாக உள்ளது.

படைப்பாளர்கள்

பொதுவுடைமை அல்லது முற்போக்கு கருத்துகளுக்கு எதிரான கருத்துடையோருக்குச் சிகரம் இடம் தரவில்லை. 'ஒரு முற்போக்கு எழுத்தாளன் கம்யூனிஸ்டாக இருக்க வேண்டியதில்லை. ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே சமயம் அவன் கம்யூனிசத்திற்கு எதிராகக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கமாட்டான் என்பது சிகரம் இதழைப் பொறுத்தமட்டில் முக்கியமான ஒரு கருத்தாக இருந்தது. சிகரம் இதழாசிரியர் ச. செந்தில்நாதன், கவிஞர் தணிகைச் செல்வன், கவிஞர் இளவேனில், செம்மலர் ஆசிரியர் கே. முத்தையா, ஜன சுந்தரம், வி.பி.சிந்தன், உதயை மு. வீரையன், என்.ஆர். தாசன், ம.நு. ராமசாமி, மருதமுத்து, நல்லதம்பி, கவிஞர் தமிழன்பன், பா. செயப்பிரகாசம் தோழன், அப்பாக்குட்டி, அக்கினிபுத்திரன், மேலாண்மை பொன்னுசாமி, பறம்பை செல்வன், டி. செல்வராஜ், வல்லிக்கண்ணன், மன்னர் மன்னன், கோ. கேசவன் ஆகிய படைப்பாளிகளைக் குறிப்பிட்டுக் காட்டலாம். மேலும் 'செம்மலர்' இதழில் எழுதமுடியாத பல எழுத்தாளர்களும் சிகரம் இதழில் எழுதி வந்துள்ளனர்.

கவிஞர் தணிகைச் செல்வன் 'தங்கையே வா' என்ற தலைப்பில் முதல் இதழில் சிகரத்தை வாழ்த்திக் கவிதை வழங்கியுள்ளார்.

"இந்தச் சிகரம்
மக்கள் தொடர் என்னும்
மலைத் தொடரில் ஒரு குன்று
யதார்த்தத்துக்குப் புறம்பான
சர்க்கஸ் வித்தைகளல்ல
இந்தச் சிகரத்தின் அடிவாரத்தில்
நீங்கள் சந்திக்க முடியும்!

அப்படியானால் - அதன் உச்சி
அது - இந்த அடிவார மனிதர்களின்
அபிலாஷைகளின் சின்னம்

ஆகவே - இது
எழுத்துச் சிகரம் என்பதால் எழுச்சிகரம்
பரிமாறும் உணவில் சிகரம் என்பதால் உணர்ச்சிகரம்"[5]

கவிஞரின் இந்த வரிகளே சிகரம் இதழின் பெயர்க்காரணத்தை தெளிவுப்படுத்துவதாக அமைகின்றது.

தனிக்கட்டுரைகள், தொடர்கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள், பட்டறை எனும் வாசகர்களின் கடிதப்பகுதி, நந்தனார் நாட்குறிப்பு, விமரிசனப் பகுதிகள் என 24 பக்கங்கள் கொண்ட இதழாகச் சிகரம் வெளிவந்துள்ளது.

கட்டுரைகள்

சிகரம் இதழ் படைப்புகளில் கட்டுரைகளே சிறப்பிடம் பெறுகின்றன. ஆசிரியரின் தலையங்கத் தொடர் கட்டுரையான 'ஒரு சொல் கேளீர்', கவிஞர் இளவேனில் எழுதிய 'கவிதா', செம்மலர் ஆசிரியர் கே. முத்தையா எழுதிய 'சிலப்பதிகாரம் உண்மையையும் புரட்டும்', ஜன சுந்தரம் எழுதிய 'அகப்பாடல்களில் அரசியல் பிரச்சினைகள்' ஆகியன சிறந்த தொடர்கட்டுரைகளாக 1975, 76, 77ஆம் ஆண்டு இதழ்களில் இடம் பெற்றுள்ளன. இதற்குப் பிறகு தொடர் கட்டுரைகள் இடம்பெறவில்லை.

சிகரம் இதழ், தொடக்கத்திலிருந்து தனிக்கட்டுரைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. வி.பி. சிந்தனின் 'இலக்கியமும் சமுதாய மாற்றமும்', ஈ.எம்.எஸ். எழுதிய 'முற்போக்குச் சமுதாய மாற்றங்கட்குக் கலையும் இலக்கியமும் ஓர் ஆயுதமே' (தமி. விசுவ ராமலிங்கம்), ஜீவா எழுதிய 'நான் ஒரு நாஸ்திகன்', பி. ராமமூர்த்தியின் 'தேசிய இனப் பிரச்சனையும் திராவிட இயக்கமும்' (25 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டது) ந. அரணமுறுவலின் 'இலங்கை தேசிய இனச் சிக்கல்' - ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், புதுமைப்பித்தனின் 'தழுவலும் மொழி பெயர்ப்பும்,' கோமல் சுவாமிநாதனின் 'தமிழில் நாடகங்கள்', 'ரஷ்ய இலக்கியமும் புரட்சியும்', டாக்டர் கைலாசபதியின் 'தற்கால இலக்கியத்தில் சில போக்குகள்' ஆகிய கருத்தாழம் மிக்க கட்டுரைகளைக் குறிப்பிட்டுக் காட்டலாம். இவை மட்டுமல்லாமல் 'கவிதையும் விஞ்ஞானமும்' (பி. கோவிந்தப்பிள்ளை),

'சிவாஜி கண்ட இந்து ராஜ்யமும் வரலாற்றுப் புரட்டர்களும் (தேவன்), 'புதுக்கவிதை பார்வையும் பாதையும்' (மருதமுத்து), சங்கம் மாயையும் உண்மையும் (பொன். பாலசுப்பிர மணியம்), கலைஞனும் சமூகமும் (நல்லதம்பி), பாரதி இலக்கியம் (நல்லதம்பி), இலக்கியமும் வரலாறும்' (சித்திரலேகா மௌனகுரு), கண்ணதாசன் கவிதைகள் (நல்லதம்பி), கடவுளின் பெயரைச் சொல்லி' (தமி. பஞ்சு), மகாகவியும் புரட்சிக் கவியும் (வசந்தா) போன்ற தனிக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் வாசகர்களுக்குப் புதிய பார்வையை வழங்கியுள்ளது.

சான்றாக 'இலக்கியம் என்பது சமுதாயத்தின் விளை பொருள். சமூக உறவுகளும், உற்பத்தி முறைகளும் எந்த அளவு ஒரு சமுதாயத்தில் நிலவுகிறதோ அந்த அளவு அந்த சமுதாயத்தின் இலக்கியமும் இருக்கும்[6] என்றும் 'உற்பத்தி முறைகள் மாறுகின்றன. உறவு முறைகள் மாறுகின்றன. வர்க்கங்கள் தோன்றுகின்றன. அவை மோதுகின்றன. இந்தச் சமூக மாறுதல்கள்தான் இலக்கியத்தின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் மாற்றி மாற்றி வளர்த்தெடுக்கின்றன'[7] என்பன போன்ற இலக்கியக் கோட்பாடுகளை விபி. சிந்தனின் 'இலக்கியமும் சமுதாய மாற்றமும்' என்ற கட்டுரையில் காணலாம். டாக்டர் கைலாசபதி 'மானுடன் நவீன இலக்கியத்தின் சிறப்பியல்பு என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். நவீன இலக்கிய வளர்ச்சியில் மூன்று முக்கிய கருத்தோட்டங்களைக் காணலாம். அவை முறையே 1. பின் நோக்கிப் பார்க்கும் பண்பு. 2. உள்ளதை உள்ளபடியே நுணுக்க விவரங்களுடன் உரைக்கும் நிகழ் நோக்குப் பண்பு, 3. முன்னோக்கு என்பனவாகும்[8] இலக்கியம் குறித்துப் புதிய அணுகுமுறையை வாசகர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் முறையில் இத்தகைய கட்டுரைகள் சிகரம் இதழில் இடம்பெற்று வந்துள்ளன.

அக்கால கட்டத்தில் வெளிவந்த புதிய படைப்புகள் குறித்தும், படைப்பாளிகள் குறித்தும் விமரிசனக்கட்டுரைகள் பல இடம் பெற்றுள்ளன. கணேசலிங்கத்தின் 'தரையும் தாரகையும்', பூமணியின் 'வயிறுகள்', ப. வேலுசாமியின் 'உயரும் கைகள்', வெ. நடராசனின் 'புதிய ராகங்கள்', தேயிலைத் தோட்டப் பின்னணியில் வெளிவந்த மூன்று நாவல்கள் - முல்க்ராஜ் ஆனந்தின் ஆங்கில நாவல் 'இரண்டு இலைகளும் மொட்டும்' (Two Leaves and Bud) பாலனின் 'சொந்தக்காரன்,' டி. செல்வராஜின் 'தேநீர்' ஆகிய மூன்று நாவல்களும் ஐசக் அருமைராசனின் 'கீறல்கள்', பா. செயப்பிரகாசத்தின் 'ஜெருசலேம்', கு. சின்னப்பப் பாரதியின் 'தாகம்', புவியரசு கவிதைகள், ஜீவா எழுதிய ஸ்டாலின் நூலுக்கு விமர்சனம், இந்திரா பார்த்தசாரதியின்

'குருதிப்புனல்', ஜெயகாந்தனின் 'ரிஷிமூலம்', 'ஜயஜய சங்கரர்' போன்ற பல விமரிசனக் கட்டுரைகளும், திரைப்பட விமரிசனங்களும் சிகரம் இதழில் வெளியிடப்பட்டுள்ளன. எஸ்.வி. ராஜதுரையின் 'எக்ஸிஸ்டென்ஷியலிசம்' பற்றிய விமரிசனக் கட்டுரை மூன்று இதழில் தொடராக இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையும் ஞானியின் 'இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும்' என்ற கட்டுரையும் தத்துவ விமரிசனக் கட்டுரைகளாக அமைந்துள்ளன.

தொடர் கட்டுரைகள்

இளவேனிலின் 'கவிதா' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை சிகரம் முதல் இதழில் தொடங்கப்பட்டு 1977ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இதழ்வரை வெளிவந்துள்ளது. இக்கட்டுரை முழுவதுமாக வெளியிடப்படவில்லை. ஆனால் இத்தொடர் பின்பு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. வாழ்க்கைப் போராட்டங்களும், வர்க்கப் போராட்டங்களும் கவிதையை உருவாக்குவதில் வகிக்கும் பாத்திரம் குறித்ததொரு மார்க்சிய அறிமுமாக இத்தொடர் இடம் பெற்றுள்ளது. எழுபதுகளில் ஒரு புதிய அலையாக விசியடித்த புதுக்கவிதை குறித்து இவருடைய திறனாய்வு தொடங்குகிறது. புதுக்கவிதை - இது வரலாற்றின் நிர்ப்பந்தம், இது வர்க்கப் போராட்டத்தின் பிரதிபலிப்பு என்னும் நோக்கில் கவிதை குறித்தும், மக்கள் சமூகத்தை ஒட்டிய கலை இலக்கியங்களை வழங்கிய கம்யூனிசப் படைப்பாளிகள் பற்றியும் பல்வேறு செய்திகளுடனும் வரலாறுகளுடனும் எழுதப்பட்ட ஒரு தொடர் 'கவிதா'.

> பழைய சமூக அமைப்பிலிருந்து எழுச்சி பெற்று வரும் புதிய வர்க்கத்தின் கோஷமாய் முஷ்டி உயர்த்தி எழும் படைப்புகள் எவையோ அவையே கலை இலக்கியத் துறையில் ஒரு சகாப்த சிருஷ்டியாய் அமர காவியமாகக் கருதப்படுகின்றன[9]

என்ற செய்தி இத்தொடரில் நூலிழையாக இடம் பெற்றுள்ளது. கவிஞனைக் குறித்துக் கூறும் பொழுது, 'ஒவ்வொரு கவிஞனும் சமுதாயத்துடன் ஒவ்வொரு அம்சத்தில் அந்நியனாகி மோதுகிறான்; தகர்க்கிறான்; மண்டை உடைபடுகிறான்; அழுகிறான்; சூளுரைக்கிறான்; அடிமைபடுத்துகிறான்; விடுதலை செய்கிறான்; உருத்திராட்சம் தரிக்கிறான்; சிலுவைப் போர் நடத்துகிறான்; காட்டிக்கொடுக்கிறான்; காந்திக்குப் பின்னால் போகிறான்; கம்யூனிஸ்ட் ஆகிறான்; நவீன மோஸ்தரில் ஹிப்பி ஆகிறான். நக்சலைட்டாவும் மாறுகிறான்'[10] இப்படி

கவிஞனின் நிலை பல்வேறு திசை நோக்கி நிற்பதாக உள்ளது என்பதைக் காட்டுகிறார் கவிஞர் இளவேனில். உடைமை வர்க்கத்து அதிகார முத்திரையுடன் வெளிவந்த கலை இலக்கியப் போக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு உழைக்கும் வர்க்கத்தின் கலை இலக்கியத் தன்மையை இக்கட்டுரையில் திறம்பட விளக்கியுள்ளார். பல நாட்டு அறிஞர்கள், கவிஞர்களின் பெயர்களும் இடம்பெறுவதால் படிக்கின்ற வாசகனை மிரளவும் வைக்கும் என்பதில் அய்யமில்லை. அதேபோல் ஒரு இதழில் ஒரு கட்டுரை என்பது ஒரே செய்தியைச் சொல்வதாக இல்லை. ஒவ்வொரு பத்தியும் ஒவ்வொரு விதமான கனமானச் செய்திகளைச் சொல்வதைக் குறிப்பிட்டுக் காட்டலாம். இளவேனில் 'கவிதா'வை நன்றாக எழுதினாலும் தடம் மாறி எங்கெங்கோ செல்கிறார் என்ற விமர்சனமும் உண்டு.

பண்டையத் தமிழ் இலக்கியங்களைப் படிப்பதிலும், பயன்படுத்துவதிலும் யாருக்கும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை 'சிலப்பதிகாரம் உண்மையும் பாராட்டும்' என்ற திறனாய்வுக் கட்டுரையில் நிறுவிக் காட்டியுள்ளார். செம்மலர் ஆசிரியரும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளருமான கே.எம். முத்தைய்யா இத்தொடர் கட்டுரை சிலப்பதிகாரம் குறித்து ஏற்கனவே பதிவாகியுள்ள சில ஆய்வு முடிவுகளைத் தகர்க்கும் வகையில் வரலாற்று நோக்குடன் விளக்கியுள்ளார். இத்தொடரில் 14 தலைப்பின்கீழ் ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளைக் கண்டறிந்துள்ளார்.

சிலப்பதிகாரம் ஒரு வரலாற்று நூல் அல்ல; பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த அரசர்களின் ஆட்சிக்கால நிகழ்ச்சிகளைக் கொண்டு கற்பனையாக உருவாக்கப்பட்ட காப்பியம். சிலப்பதிகாரம் பரவலாகத் திருத்தப்பட்டுள்ளது. அறிந்தே உணர்ந்தே பண்டைய இலக்கியங்களில் பக்குவமாகப் புகுத்தியிருக்கிறார்கள். இதற்கு உதாரணமாகவே சிலப்பதிகாரத்தில் 'வஞ்சிக் காண்டம்' என்ற காண்டத்தையே உருவாக்கிச் சேர்க்கப்பட்டுள்ளது என்பது கட்டுரையாளர் கே. முத்தையா அவர்களின் கருத்தாகும்.

1. சிலப்பதிகாரம் 3-லிருந்து 5ஆம் நூற்றாண்டுக் காலத்தில் தோன்றிய இலக்கியம். அது களப்பிரர்கள் காலம். அது இருண்ட காலம் அல்ல. புத்தமும் சமணமும் தமிழகத்தில் மேலோங்கி நின்று, இலக்கியங்கள் எழுத்து வடிவில் பரவலாகத் தோன்றிய காலம்; இந்த முயற்சிக்கு வணிகர்கள் பேராதரவு தந்த காலம்.

2. இதே இலக்கியம் 11, 12, 13ஆம் நூற்றாண்டுகளில் திருத்தப் பட்டது. பிற்காலச் சோழ மன்னர்களின் சாம்ராஜ்ய தேவைகளுக்கு

ஏற்ப மாற்றப்பட்டது. காண்டங்களாகப் பிரித்ததும் இந்தக் காலத்தில்தான் ஆரம்பக்கால சிலப்பதிகாரத்திற்குச் சம்பந்தப் படாதது வஞ்சிக்காண்டம். கண்ணகிக்குச் சிலைவடித்திடக் கல்லெடுக்க, செங்குட்டுவன் வட நாட்டுக்குப் படையெடுத்ததாகக் கூறுவது வெறும் கற்பனை. வரலாற்று ஆதாரமில்லாத கற்பனை.

3. சமண மதத்தைப் பின்பற்றிய பாத்திரமான கண்ணகியை இந்து மதத் தெய்வமாக மாற்றி விழாவெடுப்பது, சமணமதத்தை வென்று இந்து மதம் தன் கொடியைப் பறக்கவிட்டது. பிற்கால சோழ சாம்ராஜ்யத்தின் மதப்பிரச்சாரப் பாணியைச் சேர்ந்தது.

4. கண்ணகி தன் இறுதி நாளை முடித்துக்கொண்ட இடம் கேரள எல்லையான பேரியாற்றின் எல்லையல்ல, 'நெடுவேல் குன்றம்' என்பது திருப்பரங்குன்றம். அரசன் இறந்த பிறகு இலக்கியத்தின்படி, ஒரு இரவு, ஒரு பகல்தான் கண்ணகி நடக்கிறாள். அன்றிலிருந்து 14-வது நாள் நெடுவேல் குன்றத்தில் உயிர் நீக்கிறாள். கேரள எல்லைக்குச் செல்லவில்லை. அங்கே குன்றக் குறவர்களைச் சந்தித்தாள் என்பது பிற்சேர்க்கை. கேரள எல்லையான பேரியாற்றின் கரைக்குக் கண்ணகி சென்றாள் என்று திருத்தியதற்குக் காரணம், சேர, சோழ, பாண்டிய ஆட்சிகளை ஒரே ஆட்சியின் கீழ் இணைத்து அரசாண்ட இராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகிய அரசர்களின் சாம்ராஜ்ய அமைப்பை நியாயப்படுத்துவதேயாகும். இதற்கு 3 முடியரசுகளையும் வலிந்து இணைத்து இலக்கியமாக்கப் பட்டது" என்பன போன்று 14 முடிவுகளை அளித்துள்ளார் கே.முத்தையா, சிலப்பதிகாரம் - இலக்கிய ஆய்வு மேற்கொள்பவர்களுக்கும் மார்க்சிவாதிகளின் பார்வைக்கும் பயன்படக்கூடியது இக்கட்டுரை.

அகப்பாடல்களில் அரசியல் பிரச்சினைகள்' எனும் தொடர் கட்டுரையை ஜன. சுந்தரம் எழுதியுள்ளார். 1977 சனவரி இதழில் தொடங்கி 1978 ஜூன் இதழ் வரை தொடர் கட்டுரையாக வெளிவந்துள்ளது. இக்கட்டுரை முழுவதுமாக வெளியிடப்பட வில்லை. இக்கட்டுரை குறித்து ஜன. சுந்தரம் குறிப்பிடுவதாவது,

> நான் தமிழக வரலாற்றில் இலக்கியத்தில் இருண்ட காலமான சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களை மார்க்சிய பார்வையோடு மதிப்பீடு செய்வதற்கு முயலுகிறேன். பூர்ஷ்வா அரசியல்வாதிகள் அந்த இலக்கியங்களை விவரண முறையில் (Descriptive Medhod) மதிப்பீடு செய்தார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக

> மு.வ. திகழ்கிறார். நான் அதை வரலாற்று முறையில் (Histocial Method) மதிப்பீடு செய்ய முயல்கிறேன். இந்த முறையில் நான் அறிந்த வரையில் தமிழகத்தில் இதுவரை யாரும் முயலவில்லை. சங்கக் காலத்தைப் பொறுத்தவரை தமிழக வரலாற்று இலக்கியத் துறையில் பூர்ஷ்வா ரீதியான வரலாற்று முடிவுகள் கூட முறையாக யாரும் படைக்கவில்லை என்பதுதான் உண்மை. பிறகு மார்க்சிய முறையில் சங்ககால வரலாற்றைக் கட்டியெழுப்புவதைப் பற்றி (Reconstruct) கேட்கவேண்டுமா? இந்த நிலையில் அந்தக் கால சமூக வரலாற்றை ஆய்வு செய்து சில முடிவுகளைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பும் நானே மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்த முறையில் அரசியல் ஆய்விற்கிடையே சமூக வரலாற்றுப் பிரச்சினைகளை விவாதிக்க வேண்டிய நிர்பந்தம் எனக்கு ஏற்பட்டது தவிர்க்க முடியாத நிலை என்று நான் கருதுகிறேன்[12]

எனக் கட்டுரையாளர் ஜன. சுந்தரம் குறிப்பிடுகிறார். சங்க காலத்தைப் பற்றிய பல்வேறு செய்திகளை இந்தியப் பின்னணியில் தொகுப்பதும், அவைகளுக்கிடையே உள்ள சமூக உறவுகளைக் கண்டறிய முயலுவதுமே 'அகப்பாடல்களின் அரசியல் பிரச்சினைகள்' கட்டுரையின் நோக்கமாகும்.

சிகரம் இதழின் ஆசிரியர் 'ஒரு சொல் கேளீர்' எனும் தலைப்பில் தமிழ் - தி.மு.க.- கம்யூனிஸ்ட் என்ற கட்டுரையை 1976ஆம் ஆண்டு ஜூலை இதழ் தொடங்கி 1977 ஜூலை மாத இதழ் வரை தொடர்ந்து எழுதியுள்ளார். மொழிக் கொள்கை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கம்யூனிஸ்டுகளைத் தமிழ்த் துரோகிகள், தமிழ்ப் பகைவர்கள், தமிழ் உணர்ச்சி இல்லாதவர்கள் என்று கம்யூனிஸ்டுகள் மீது கோபம் வரும்போதெல்லாம் பேசி வருகிறார்கள் என்பதற்குப் பதிலடியாக சிகரம் இதழாசிரியர் செந்தில்நாதன் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் கலை இலக்கிய கண்ணோட்டத்தை விமரிசனப் பார்வையில் அலசியுள்ளார்.

முதலில் திராவிடர் இயக்கம் தோன்றுவதற்கு வாய்ப்பாக இருந்த சூழலை ஆசிரியர் விவரித்துள்ளார். இரண்டாவதாக திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தது. இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக இருந்து செயல்பட்டது பின்னர் இராமாயண எரிப்புப் போராட்டம், சுதந்திர நாள் துக்க நாள் என்ற அறிவிப்பு - கருப்புச் சட்டை அணிதல் போன்றவைகளால் எதிரும் புதிருமான

கருத்துகள் தோன்ற வழி வகுத்த சூழல்களை விளக்கியுள்ளார். "நாட்கள் செல்லச் செல்ல தி.க.வின் கொள்கைகளை தி.மு.க. நீர்த்துப்போக வைத்துக் கொண்டிருந்தது. எனவே தி.க.வினருக்கும் திமு.க.வினருக்கும் நடைமுறையிலும் பிரச்சினைகளை அணுகுவதிலும் வேறுபாடுகள் தோன்றின. இந்த வேறுபாடுகள் கலை இலக்கிய அனைத்துத் துறைகளிலும் தெரிந்தன"[13] என்பதை ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

திராவிட இயக்கத்தாரின் கலை இலக்கியப் பணி இலட்சக் கணக்கான இளைஞர்களுக்கு இன எழுச்சியூட்டுவனவாக இருந்தது என்பதை விளக்கியுள்ள ஆசிரியர், திராவிட இயக்கத்தினர் கலை இலக்கியங்களை இனக்கண் கொண்டு பார்த்தார்கள் என்பதை ஓர் குற்றச்சாட்டாகவே கூறியுள்ளார்.

"இன்று நாம் முற்போக்கு பிற்போக்கு என்று பார்க்கும் பார்வைகள் அன்று திராவிட இயக்கத்தின் பார்வையாக இல்லை. கலை இலக்கியங்களை இனக்கண் கொண்டே பார்த்தார்கள். ஆரியத்திற்குப் பலியாகி வருணாசிரமத்தைப் பரப்பும் தமிழ் இலக்கியங்களை எதிர்த்தார்கள். சுத்த சுயம்புவான தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டைப் பறைசாற்றுகின்றன என்று எடுத்துக் கூறி வரவேற்றார்கள். இதைத் தவிர வேறு விமர்சனப் பார்வைகள் அவர்களுக்குக் கிடையாது. கலை இலக்கியம், சமுதாயம், அரசியல் அனைத்திலும் ஒரு போராட்டம் பிரதிபலித்ததை அவர்கள் அங்கீகரித்தார்கள்; ஆனால் அந்தப் போராட்டத்தை ஆரிய திராவிட போராட்டமே என்று வாதிட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

நூற்றாண்டு காலங்களாகப் படிக்கவும், புரட்டுத்தனம் புரியவும், மேலாதிக்கம் செய்யவும் இங்கே பார்ப்பனர்களுக்கே வாய்ப்பிருந்தது. வாழ்வின் வெளிச்சமான பகுதிகளுக்குள் திராவிட இன மக்கள் அனுமதிக்கப்படவே இல்லை என்பதை மறுக்க முடியுமா! சூத்திரர், பஞ்சமர் இன மக்கள் தங்களை ஒடுக்குவோருக்கு எதிரான பார்ப்பனிய வர்ணாசிரமக் கொள்கையை எதிர்த்தும், திணிக்கப்படும் அல்லது ஆதிக்கம் செலுத்தும் மொழிக் கொள்கையை எதிர்த்தும் கலை இலக்கியப் பிரச்சாரத்தை முன்வைத்தது. கம்யூனிசத்துக்கு எதிரானது என்று கருதமுடியாது. 'தேசிய இனப் பிரச்சினையில் கண்டு கொள்ளாமல் திரும்பிக் கொள்வதும், தாவித் தாண்டுவதும், தப்பித்து ஓடுவதும் தவறானது. ஆபத்தானது. அது சோஷலிசத்திற்குச் செய்யப்படும் துரோகம் என்று லெனின் திரும்பத் திரும்பக் கூறுகிறார்.

. . . மார்க்சியர்களுக்குப் பொருளாதாரப் போராட்டங்களே முதன்மையானவை என்று கூறி தேசிய இனப்பிரச்சினை போன்ற முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பிரச்சினைகள் அலட்சியம் செய்து ஒதுக்குகிற பொருளாதார வாதிகளையும் அவர் கடுமையாக விமர்சித்தார்."[15] ஆகையால் கம்யூனிசம் என்பதும் திராவிட இயக்கம் என்பதும் ஒடுக்கப்பட்ட மக்களின் கனவுகளோடும், நம்பிக்கைகளோடும் விடுதலையோடும் நேரடியாகத் தொடர்புடையதாக இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஆயிரம் களம் வென்ற அரசனின் போர்வாளும் ஒரு தர்ப்பைப் புல்லுக்கு முன் தகர்ந்து போனது என்பது வரலாறாக இருக்கும்போது அந்த தர்ப்பைப்புல்லைத் தகர்க்கும் பொறுப்பும் கடமையும் கம்யூனிசத்திற்குக் கிடையாதா? என்பதை ஆசிரியர் 'தமிழ் - தி.மு.க. கம்யூனிஸ்ட் கட்டுரையின் இறுதிப்பகுதியில் விளக்கியிருக்கலாம். ஆனால், இக்கட்டுரை பாதியிலேயே நின்றுபோனது.

சிகரத்தின் விமரிசனக் கட்டுரைகளில் தத்துவ விமர்சனமாக அமைந்த கட்டுரைகளான ஜன. சுந்தரம் எழுதிய எஸ்.வி. ராஜதுரையின் 'எக்சிஸ்டென்ஷியலிசம்' மருதமுத்து, ஞானியின் 'இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும்' என்ற கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை யாகும்.

எக்சிஸ்டென்ஷியலிசம் (நிலவுலகக் கொள்கையும் இயக்கவியலும்) இது ஒரு நவீன காலத்தின் மேலைநாட்டுத் தத்துவ மாகும். இந்தத் தத்துவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தும் எஸ்.வி. ராஜதுரையைப் பாராட்டும் அதே சமயம் அதன் பின்னுள்ள உள்நோக்கத்தை ஜன. சுந்தரம் விளக்குகிறார். அதாவது எக்சிஸ்டென்ஷியலிசம் என்ற தத்துவத்தை மார்க்சியக் கண்ணோட்டத்தில் விமரிசனம் செய்வது என்று தொடங்கி, வழி தவறிவிட்ட கம்யூனிசத்தைச் சரிப்படுத்துவது என்ற நோக்கத்தையும் கொண்டிருக்கிறார். இதன் மூலம் விஞ்ஞானபூர்வமான மார்க்சிய அடிப்படைகளைத் தகர்க்கும் உள்நோக்கத்துடன் எஸ்.வி. ராஜதுரை எக்சிஸ்டென்ஷியலிசத்தின் பிரதிநிதியாகவே திகழ்கின்றார் என்பதைக் கட்டுரையாளர் ஆராய்கின்றார்.

"உபநிசத் தத்துவவாதிகளைப் போலவே எக்சிஸ்டென்சியல் வாதிகளும் தங்கள் அனுபவங்களின் தன்மைக்கேற்ப வெவ்வேறு கோணங்களில் அத்வைத சித்தாந்தத்தை உருவாக்கிய சங்கரர்போல ஒரு தத்துவ மேதை எக்சிஸ்டென்ஷியலிசத்தைப் பொறுத்தவரை இன்னும் உருவாகவில்லை. மார்க்சியப் போர்வையுடன், எக்சிஸ்டென்ஷியலிசம் என்ற அத்வைதக் கோட்பாட்டை

இந்தியாவில் விற்பனை செய்ய முற்படுவது கொல்லன் தெருவில் ஊசி விற்க வந்த கதையாகிவிடும். எஸ்.வி. ராஜதுரை இந்தப் பணியைத்தான் செய்திருக்கிறார்"[16] என்று கட்டுரை ஆசிரியர் ஜன. சுந்தரம் கூறுகின்றார்.

ஞானியின் 'இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும்' என்ற நூலுக்கு மருதமுத்து விமரிசனக் கட்டுரை வழங்கியுள்ளார். மதமும் மார்க்சியமும் இணைய வேண்டும் என்பது ஞானியின் நூல் கூறும் முடிந்த முடிவாகும். 'இந்திய வரலாற்றில் இதுவரையில் அரசியலையும், பொருளாதாரத்தையும் விட சமயமும் (தத்துவமும்) கலாசாரமும் அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இந்த ஆன்மீக விஷயங்கள் வலியுறுத்தியிருக்கும் உன்னதமான பண்புகளின் தொடர்ச்சியாகத் தான் மார்க்சியம் இந்தியாவில் வளரமுடியும். ஒரே வார்த்தையில் சொல்லுவதானால் மார்க்சியம் இந்தியாவில் மதத்தோடு இணைவது அவசியமாகும்'[17] என்று குறிப்பிட்டுள்ளார் ஞானி. பாயர்பாக்கின் தவறான கருத்துக்களை ஞானி தெரிந்தோ தெரியாமலோ அங்கீகரித்துக் கொண்டுள்ளார். பாயர்பாக்கின் பொருள் முதல்வாதத்தின் அடிப்படையில் ஒரு புதிய மதத்தை உண்மையான மதத்தை நிறுவ முற்படுகிறார். ஞானியோ மார்க்சியத்தை மதத்தோடு இணைக்க வேண்டும் என்கிறார். பாயர்பாக் பொருண்மை தொடர்பு இல்லாமல் கருத்துக்களை மட்டும் பிரித்தெடுத்து ஆராய்ச்சி செய்தார். ஞானியும் அப்படியே அவரைப் பின்பற்றி இருக்கிறார் எனக் கட்டுரை ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். மதமும் மார்க்சியமும் இணையவேண்டும் என்பதற்கும், மார்க்சீயத்துக்கு முரணான வேறு பல தவறான கருத்தோட்டங்களுக்கும் விமரிசனமாக அமைகிறது இக்கட்டுரை.

பல முற்போக்குப் படைப்பாளிகளின் சிறந்த வெளியீடுகளை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது சிகரம் இதழ். இதைப் போல பல படைப்புகள் அல்லது படைப்பாளிகள் குறித்தும் சிகரம் இதழ் அவ்வப்போது கடுமையான விமர்சனம் செய்து வந்துள்ளது. ஜெயகாந்தனின் ரிஷிமூலம், ஜய ஜய சங்கரர் ஆகிய இரண்டு நாவல்கள் குறித்துக் கடுமையான விமர்சனம் செய்துள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

'ஜய ஜய சங்கரர்' ஒரு பிரச்சார நாவல் அந்தக் காலத்தில் புராணம் எழுதியவர்கள் எப்படிப் பிரச்சாரம் செய்தார்களோ அவ்விதமே இன்றைய எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று காஞ்சி சாமியார் கட்டளையிட்டதை ஒட்டியே எழுதப்பட்டது இந்த நாவல். இது எதைப் பிரச்சாரம் செய்கிறது? ஒரே வார்த்தையில் சொல்வதானால் சநாதன தர்மத்தை. இன்றைக்கு

ஏற்ற வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் மத அடிப்படையில் அமைந்த ஒரு பாசிசக் கோட்பாட்டைத்தான் இந்நாவல் பிரச்சாரம் செய்கிறது?[18] என்ற விமர்சனத்தின் மூலம் இந்நாவல் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ள முடியும்.

"புதிய பிராமணனை ஆக்கித்தாருங்கள் - ஒவ்வொரு ஆலயத்தையும் சார்ந்து ஒரு கூடாரம் ஏற்படுத்திவிடவேண்டும் - அதுவே பிராமணர்களை உருவாக்கும் பட்டறையாக வேண்டும். (பக்.62.63) இந்த நாவல் முழுவதும் வைதீக மதத்தின் அருமை பெருமைகள் தம்பட்டமடிக்கப்படுகின்றன. அத்வைதம் தலைவிரித்து ஆடுகிறது. ஆசார அனுஷ்டானங்கள் அலங்கோலமாக உலவித் திரிகின்றன. அறிவு நிந்திக்கப்படுகிறது. போராட்டம் புறக்கணிக்கப் படுகிறது"[19] என ஜெயகாந்தனின் 'ஜய ஜய சங்கர' நாவல் பற்றி சிகரம் இதழில் 'மன்னவன்' விமரிசனம் செய்துள்ளார். சமூக அக்கறையின்றி எழுதப்படும் நாவல்கள் குறித்தும், படைப்பாளிகள் குறித்தும் விமரிசனம் செய்து அம்பலப்படுத்துவதில் நெஞ்சுரத்துடன் நின்றது சிகரம் இதழ் என்றால் அது மிகையில்லை. அதே வேளையில் மிகச் சிறந்த படைப்பாளிகளை நேசக்கரம் நீட்டி வரவேற்றுள்ளது சிகரம். இதற்கு, பூமணியின் 'வயிறுகள்' என்ற சிறுகதைத் தொகுப்பை (கோ. ராஜாராம்) ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

"இன்றைய நிலையில் கி. ராஜநாராயணனுக்கு அடுத்தபடி பூமணியைத்தான் தமிழ்க் கிராமச்சூழலின் படைப்பாளியென்று சொல்ல முடிகிறது. தென்மாவட்டக் கரிசல் மண்ணின் நிகழ்ச்சிகள், மனிதர்கள் மற்றும் உடன் இணைந்த மொழிப்பாங்கு அனைத்தும் ஒருசேர கலையழகுடன் பூமணியின் கையினால் சொல்லோவியங் களாகியுள்ளன. ஒரு academic interests உள்ள ஒருவன் கிராமியச் சூழலின் மொழியையும், நடையுடை பாவனைகளையும் கிரகித்துக் கொள்வதும், பிரதியெடுத்துத் தருவதும் செய்யக்கூடும். ஆனால், அவன் இலக்கியப் படைப்பாளியல்ல. மக்களின்மீது நேசமும் தனித்துவமும் கொண்ட பார்வையும், பூமணிக்குக் கலையழகுடன் சேர்த்து இலக்கியத்தரமான படைப்பாளியாக அவரை ஆக்கியுள்ளன[20]. இது போன்ற சிறந்த படைப்பாளிகளை வாசகர்களுக்கு அடையாளம் காட்டும் பணியைச் சிகரம் இதழ் தொடர்ந்து செய்து வந்துள்ளது.

இலக்கியம் குறித்து முக்கியப் படைப்பாளிகள், திறனாய்வாளர்களின் நேர்காணல் மூலம் சிகரம் இதழில் பேசப்பட்டுள்ளது. வி.பி.சிந்தன், கே.எம். முத்தைய்யா, கே.ரமணி, ஜோதிர்லதா கிரிஜா, கவிஞர் நா. காமராசன், கவிஞர் தணிகைச் செல்வன்,

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், ராஜம் கிருஷ்ணன், டொமினிக் ஜீவா, இயக்குநர்கள் சத்ய ஜித்ரே, ருத்ரய்யா, இலங்கைத் தமிழர் விடுதலை முன்னணியின் தலைவர் ஜெயபாலன், அரணமுறுவல், வல்லிக்கண்ணன் ஆகியோரின் நேர்காணல் பகுதிகள் சிகரம் இதழில் சிறப்பிடம் பெற்று வந்துள்ளன.

1976ஆம் ஆண்டு வி.பி.சிந்தன் நேர் காணலில், சிகரம் வளர்ச்சிக்கு உங்கள் அறிவுரை என்ன? என்ற கேள்விக்கு "விமர்சனத்தில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். தவறானதும், நச்சுக் கருத்துக்களைப் பரவச் செய்வதுமான இலக்கியங்களை அம்பலப்படுத்தும் விமர்சனங்கள் தேவை. நவீன படைப்புக்களைப்பற்றி மட்டும் விமர்சனங்கள் வெளியிடப்படுவது போதாது. கூர்மையான விமர்சனங்கள் நெகடிவ் என்று கருதுகிறவர்கள் உண்டு. நான் அதை ஏற்கவில்லை. படைப்பு எப்படி இருக்க வேண்டுமென்ற பாசிடிவ் சைடுதான் இத்தகைய விமர்சனங்களால் ஏற்படும் விளைவு. விமர்சன இலக்கியம் இன்று தமிழிலக்கியத்தில் மிகவும் பலவீனமாகவே உள்ளது. சிறுகதைக்கு மன்னன் என்றும் கவி உலகத்திற்கு சக்கரவர்த்தி என்றும், நாவலுக்கு சாம்ராட் என்றும் பட்டம் சூட்டி இலக்கியத்தைக் காசாக மாற்றும் பணியிலே ஈடுபட்டவர்களையெல்லாம் முச்சந்தியிலே நிறுத்தி அவர்களின் படைப்புகள் சமுதாயத்திற்கு ஏற்படுத்தும் கேடுகளை அம்பலப்படுத்தும் விஞ்ஞான ரீதியான விமரிசனங்கள் தேவை. ஏராளமான புது எழுத்தாளர்களுக்கு இது ஒரு நல்ல பார்வையைக் கொடுக்கும். மேலும் இந்திய மொழிகளிலும் அன்னிய நாட்டு இலக்கியங்களிலும் வெளிவரும் சிறப்பான முற்போக்குக் கதைகள் கவிதைகள், விமர்சனக் கட்டுரைகள் சிகரத்தில் வெளியிடுவது பயன் அளிக்குமென்று கருதுகிறேன்"[21] என்று தன்னுடைய கருத்தைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இவர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளபடி சிகரம் ஒவ்வொரு இதழிலும் பல்வேறு விமரிசனக் கட்டுரைகள் இடம் பெறலாயின. கலை இலக்கியப் பணிகளில் தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம் மேலும் அக்கறைக்கொண்டு செயல்பட வேண்டும் என்கிறார் கே. ரமணி தனது நேர்காணலில். இன்றைக்கு வெளிவரும் கதைகளில் பெரும்பாலும் பெண்களுடைய அடிப்படையான பிரச்சினைகள் பிரதிபலிக்கப்படுவதில்லை. ஒரு சில பெண்களின் பிரச்சினைகளை ஓரளவுக்குத் தொட்டாலும் இறுதியில் சம்பிரதாயப் போக்குகளையும், நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திக் கட்டுப் பெட்டித்தனமாக முடிவுகளைக் கொடுத்துவிடுகின்றனர். எழுத்தாளர் களுடைய கோணங்கித்தனத்தை கதாபாத்திரங்களின் தலையில்

கட்டிவிடுகிறார்கள்[22] என்று ஜோதிர்லதா கிரிஜா நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். ராஜம்கிருஷ்ணன் தமது நேர்காணலில் பெண்களுக்கும் சமூகத்தில் எப்படி உரிய இடம் இல்லையோ அப்படியே பெண் எழுத்தாளர்களுக்கும் இலக்கிய உலகில் கிடைக்க வேண்டிய இடம் கிடைக்கவில்லை என்று வருத்தத்துடனும், அதே வேளையில் ஆனந்தவிகடனால் தான் அவமானப்பட்டதால் 'எனக்குச் சக்தி இருந்தால் ஆனந்தவிகடன் ஆபீசையே எரித்திருப்பேன் என்று ஆவேசத்துடனும் குறிப்பிட்டுள்ளார்.

இதைப்போலவே சிகரம் இதழில் நேருக்கு நேர் பகுதியில் படைப்பாளிகள் சிலர் கலை இலக்கியம் குறித்தும், அன்றைய படைப்புகள் குறித்தும் தங்கள் கருத்துக்களைக் கூறிவந்துள்ளனர். ஆனால் இப்பகுதி சிகரம் இதழில் தொடர்ச்சியாக இடம்பெறவில்லை. அவ்வப்போது இடம்பெறுவதாக இருந்தது.

1979ஆம் ஆண்டு சிகரம் இதழ் இடையில் சிறிது காலம் நின்று பின் புதிய வடிவத்தில், 60 பைசாவிற்கு வெளியிடப் பட்டுள்ளது. ஆனால் சிகரத்தில் முன்பு போல் கட்டுரைகளும் நேர்காணல்களும் இடம்பெறாததையும் வாசகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதழின் சிறுகதைகள்

சிகரம் இதழின் சிறுகதைகள் ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் சிறுகதைகளைப் போல அல்லாமல் வர்க்க பிரச்சினைகளையும், போராட்ட உணர்வுகளையும் அதற்கான நடவடிக்கைகளின் வெற்றி, தோல்விகளையும் சொல்லுவதே பெரும்பாலான சிறுகதைகள் எனலாம். என்.ஆர். தாசன், மேலாண்மை பொன்னுச்சாமி, பா. ஜெயப்பிரகாசம், உதகை மு. வீரையன், ம.ந. ராமசாமி, டி. செல்வராஜ், அப்பாக்குட்டி, சி.ஆர். ரவீந்திரன், வல்லிக்கண்ணன், கமலாலயன், திலீபன், கொ.ச. பலராமன், மன்னர் மன்னன் போன்ற பல எழுத்தாளர்களின் சிறுகதைகளைச் சிகரம் இதழ் வெளியிட்டு வந்துள்ளது. சிகரம் இதழ் வாசகர்கள் செறிவான, அதே வேளையில் பொதுவுடைமை சிந்தனைகளை யதார்த்தமாகத் தூவிச் செல்லும் சிறுகதைகளையே மிகவும் விரும்புகின்றனர் என்பதை பட்டறை எனும் கடிதப் பகுதியிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தாத ஒரு நிகழ்வைச் சொல்லுவதாக அமைந்த கதைகளும் ஒருசில உண்டு. சோதனை முயற்சியாக வெளியிடப்பட்ட சிறுகதைகளும் உண்டு. ஆனால் இவை அனைத்திலும் இடம் பெறும் கதாபாத்திரங்கள், அடித்தட்டு மக்கள்

அல்லது நடுத்தர வர்க்கத்து மக்களின் பின்னணியில் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும்.

சிகரம் முதல் இதழில் வெளிவந்த, என்.ஆர். தாசனின் 'கனத்த நேரங்கள்' எனும் முதல் சிறுகதை ஒரு அலுவலகத்தில் பணியாற்றும் சாதாரண ஊழியனுக்கு எதிர்பாராத விபத்தில் ஏற்பட்ட மரணம், அந்த நிகழ்வின் நேரத்தை சக ஊழியர்களும், அந்த குடும்பத்தினரும் எப்படி சந்திக்கின்றனர் என்பதே அந்த கதை. இது பாதுகாப்பற்ற சமூகத்தில் மனித மனங்களின் பதட்டங்கள், நினைவுகள் குறித்த ஒரு நிகழ்ச்சியாக மட்டுமே அமைகிறது.

சிகரம் முதல் இதழில் வெளியிட்ட ம.ந. ராமசாமியின் 'அன்னியன்' என்ற கதை விமர்சனத்துக்கு உள்ளாகியது. 'இக்கதையின் கருத்தோடு சிகரத்திற்கு உடன்பாடு இல்லை என்றாலும் முற்போக்கு எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள் வாசகர்கள் விவாதிக்க வேண்டிய பிரச்சினை என்பதால் இக்கதையை விவாதத்திற்கு விடுகிறோம்[23] என்ற அறிவிப்புடன் இக்கதை வெளியிடப்பட்டுள்ளது. மில் தொழிலாளர் போராட்டத்தில் மாதவன் என்ற தொழிலாளி 15 நாட்கள் சிறை சென்ற போது அவன் மனைவி வறுமையின் காரணமாக அன்னியன் ஒருவனிடம் சோரம் போகிறாள். சிறையிலிருந்து வந்த மாதவன் இச்செய்தி அறிந்து மனைவியை அடித்த பின்பு சிந்திக்கின்றான். தான் இல்லாத காலத்தில் அன்னியன் ஒருவன் தனக்குப் பதிலாக இருந்து தன் குடும்பத் தேவையை நிறைவு செய்ததாக உணர்கிறான் என்பதே அன்னியன் என்ற கதையின் சுருக்கம்.

இக்கதை வர்க்கப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிறது. கேவலமான முறையில் களங்கம் கற்பிக்கிறது. சிகரத்தில் இதைப் பிரசுரித்தது விஷப் பரீட்சை என்று வாசகர்கள் கடிதம் எழுதினர். இதற்கு இச்சிறுகதையாசிரியர் ம.ந. இராமசாமியும் பதில் கூறியுள்ளார். "சோரம் போவதை நியாயப்படுத்தவில்லை நான். சோரம் போக நேர்ந்ததற்கான சந்தர்ப்பங்களை நியாயப்படுத்தி இருக்கிறேன். வர்க்கப் போராட்டங்களைக் கொச்சைப் படுத்துவது என் நோக்கமல்ல" என்று பதில் கூறியுள்ளார். அப்பாக்குட்டி எழுதிய 'கருப்பாயி', 'ஈடு', 'எல்லாம் சப்பைக்கட்டு' அமுஃ. கிருஷ்ணமூர்த்தியின் 'அருவருத்த உலகம்', பா. செயப்பிரகாசத்தின் 'இருளுக்கு அழைப்பவர்கள்', தி. மதுசூதனின் 'கருத்த நட்சத்திரங்கள்' போன்ற பல சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்கள் தங்களை விற்றுக் கொள்ளும் சூழலுக்குத் தள்ளப்படுவதைச் சித்தரிக்கின்றன. இவை அவமான இந்தச் சமூகத்தின் இழிநிலையையும், பெண்கள் இச்சமூகத்தில் போகப்பொருளாக

மட்டுமே மதிக்கப்படுகின்ற நிலையையும் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. கொ.ச. பலராமன் எழுதிய 'அல்லல்கள்' (டிச.76) விவசாயிகள் படும் துன்பங்களைக் கூறும் சிகரம் சிறுகதைகளில் சிறப்பிடம் பெறும் மனதை உருக்கும் ஒரு சிறுகதையாகும். விவசாயி பயிர் செய்ய எத்தனை விதமான கடன் தொல்லை, இயற்கையின் உதவி, பயிர்பாதுகாப்பு, உழைப்பு, கூலிப் பிரச்சினைகள், கட்டுப்படியாகாத விலை, மீண்டும் மீண்டும் கடன், வேதனைகள் அனைத்தையும் ராமையா என்ற விவசாயி குடும்பத்தின் மூலம் சொல்லப்பட்டுள்ளது. விவசாயிக்கு இவ்வுலகம் இல்லை என்று சொல்வது பொருத்தமாகும்.

டி. செல்வராஜின் பக்தனும் சித்தனும், பா. செயப்பிரகாசத்தின் விடிகிற நேரங்கள், மேலாண்மை செ. பொன்னுச்சாமியின் ஒற்றைக் கண்ணன், நிஜத்தின் நிறமாற்றம், உதயை மு. வீரையனின் எங்க முதலாளி ரொம்ப நல்லவரு, திலீபனின் நஞ்சன் கூடு நரசய்யா, ஜாப்சனின் விலகிய பனி போன்ற சிகரத்தின் பல சிறுகதைகள் பண்ணை மற்றும் மில் முதலாளிகளுக்கும், கூலி, தொழிலாளிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற போராட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடியனவாக அமைந்துள்ளன. சிகரம் இதழில் இந்த நோக்கில் வெளியிடப்பட்ட கதைகளில் மேலாண்மை செ. பொன்னுச்சாமியின் ஒற்றைக் கண்ணன், திலீபனின் நஞ்சன் கூடு நரசய்யா ஆகிய இரண்டு சிறுகதைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. கம்யூனிச இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, தான் வாழ்ந்த கிராமத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் பணியாற்றி வந்த சங்கரன் என்ற சிறு விவசாயியைப் பற்றிய கதை தான் 'ஒற்றைக் கண்ணன்'. விவசாயக் கூலிகளுக்குக் கூலி உயர்வு தரப்படவேண்டும் என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்துச் செல்லும்பொழுது அக்கட்சிக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தில் இது சிறு விவசாயிகளைப் பாதிக்கும் என்ற வகையில் சங்கரன் பேசியது, கட்சியின் முடிவுக்கு எதிராகப் போய் முடிந்தது.சங்கரன் விரக்தி அடைந்து கட்சியை விமரிசனம் செய்கிறான். இதனால் சங்கரன் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு நீக்கப்பட்டான். இந்த நிலையை எதிர்பார்த்துக் காத்திருந்த அப்பகுதி பண்ணையார் வீசிய பணவலையில் சிக்கினான் சங்கரன். சிறிது சிறிதாகக் கொடுத்தப் பணத்திற்காக மொத்த சொத்தையும் எழுதி வாங்கிக் கொண்டார். இறுதியில் சங்கரன் தான் முதலாளித்துவத்திற்குப் பலியாகி ஏமாற்றப்பட்டு, ஏதுமற்றவனாகிறான். அப்போது அவனுடைய வீட்டு வழியே கம்யூனிஸ்ட் கட்சியினர் புரட்சி ஓங்குக! செங்கொடிக்கு ஜே! என்று முழக்கமிட்டு வீரத்துடன் நடைபோட்டுச் செல்லும் ஊர்வலத்தை மீண்டும் பாசத்துடன் ஒற்றைக் கண்ணால் பார்த்து

மகிழ்கிறான். உடைமையற்றவன் தான் கம்யூனிசத்தை அங்கீகரிக்கவும், ஏற்கவும் செயல்படுத்தவும் முடியும் என்பதை இச்சிறுகதை மிக அருமையாகச் சித்திரித்துக் காட்டுகிறது.

திலீபன் எழுதிய நஞ்சன் கூடு நரசய்யா - இது அவசரநிலை இருந்த போது எழுதப்பட்ட கதை. இப்போதுதான் வெளியாகும் வாய்ப்பைப் பெற்றது என்ற முன்னறிவிப்புடன் 1979 மே மாத இதழில் வெளிவந்துள்ளது. கொத்தடிமைகளாய் இருக்கும் நரசய்யாவும் அவனுடைய மனைவியும் பண்ணை முதலாளியிடம் அனுபவிக்கின்ற கொடுமைகளைப் பார்க்கும் வழிப்போக்கனான ஒருவன் மூன்று தலைமுறையாக வாங்கிய கடனுக்கு அடிமையாக உள்ளதை அறிந்து பத்திரிகை நிருபராக உள்ள தன் நண்பரிடம் இக்கொடுமையைப் பற்றிப் பேசுகிறான். இருவருமே, சென்று கொத்தடிமைகளாயிருக்கும் அந்த குடிசைவாசிகளிடம் 20 அம்ச திட்டத்தை விளக்கி, அத்திட்டத்தின்படி பண்ணை முதலாளியிடமிருந்து விடுதலைப் பெற்றுத் தருவதாகச் சொல்கின்றனர்.

அப்போது நரசய்யா, "உங்களுடன் வருகிறேன், நீங்கள் எனக்கு இருக்க இடம் தரமுடியுமா, அது கிடைக்காத வரை நான் அடிமைதானே, உங்களோடு வந்தால் மட்டும் உண்மையிலேயே விடுதலையும், ஒரு துண்டு நிலம் பாடுபடக் கிடைக்கும் என்று எப்படி நம்புவது. நன்றி ஐயா! நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு குடிசைக்குள் போய் விட்டான். இச்சிறுகதை பொருளாதார நிலை மனிதனை எந்த அளவிற்கு மீளமுடியாத அடிமைக் குழியில் தள்ளியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதோடு, பாட்டாளி மக்களைச் சுரண்டி வாழும் வர்க்கத்தின் வேர்களை அடியோடு வெட்டி எறியாமல், மேலோட்டமான எந்த அம்சமும் அவர்களை விடுவிக்க முடியாது என்று பாடம் புகட்டுவதாக உள்ளது. உண்மை நிலையைக் கலை, இலக்கிய வடிவமாகின்ற பொழுது இரண்டு போக்குகள் உருவாகின்றன. சமூக அனாதைகளாகக் கிடக்கும், பாடுபாட்டும் பசித்த மக்களின் பரிதாபமான நிலையை அப்படியே கூறுவது ஒரு வகையான இலக்கியப் போக்கு, பரம்பரையாகத் தங்களை ஒடுக்குதலுக்கு உள்ளாக்கும் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளைப் புரிந்துகொண்டு, சமாதானம் என்பதைத் தூக்கி எறிந்துவிட்டு மக்களைத் தாக்குதலுக்குத் தயார் செய்வது என்பது மற்றொரு வகையான இலக்கியப் போக்கு. இந்த இரண்டு போக்குகளும் நிறைந்த பல சிறுகதைகள் சிகரத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

உதாரணமாக நிலவு எழுதிய 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' (செப்.77) என்ற சிறுகதையில் ஒரு கிராமத்தில் வாழும் ஒரு [illegible]

பெண்ணும் ஊரை விட்டு ஓடிப் போய்க் கலப்புத் திருமணம் செய்து கொண்டதற்காக வாத்தியார் குடும்பத்திற்கு ரூ.1000 அபராதம் விதித்தது கிராமப் பஞ்சாய்த்து. அந்தப் பணத்திற்காக வீட்டை கிராமத்திற்கு எழுதிக் கொடுத்துவிட்டு ரூ.1000 அபராதம் கட்டி விடுகிறார் வாத்தியார். இந்தப் பணத்தைக் கொண்டு அந்த ஆண்டு அம்மன் திருவிழா சிறப்புடன் நடைபெறுவதாகக் கதை முடிகிறது. இதே போல ம.ந. ராமசாமி எழுதிய 'சான்றிதழ்' (செப்.77) என்ற சிறுகதை சாதி சான்றிதழ் வாங்க முடியாத தாழ்த்தப்பட்ட மாணவனைப் பற்றிக் கூறுகிறது. கிராமக் கணக்குப் பிள்ளை கேட்கும் 5 ரூபாய் இலஞ்சப் பணத்தைக் கொடுக்க முடியாததால் கோபாலுக்குச் சாதிச் சான்றிதழ் பெற முடியவில்லை. பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சிப் பெறாத நிலையில் மேற்கொண்டு படிக்கவும் முடியவில்லை. சாதிச் சான்றிதழ் இல்லாததால் வேலைக்கு மனு போடவும் முடியவில்லை. இதற்கு நியாயம் பேசிய ஒருவர் கணக்குப் பிள்ளையிடம் சண்டையிட்டுச் சான்றிதழ் வாங்கிக் கொடுத்த பிறகு, அவரே அவனுக்குத் தகுதி - திறமை இல்லை என்று வேலைதர மறுக்கிறார். இந்த இரண்டு நிகழ்வுகளும் யதார்த்தமான நிலைகளைச் சொல்கின்றன. பறப்பை செல்வன் எழுதிய விசுவரூபம் (செப்.77) சிறுகதை, இந்தப் போக்கிற்கு அடுத்த கட்டமாக அமைகிறது.

மேல்சாதி இளைஞனால் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த பெண் களங்கப்படுத்தப்பட்ட போது ஊர் சபையில் அவனுக்கு அபராதத் தொகை செலுத்துமாறு தீர்ப்பு வழங்குகிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாமல், திருமணம் செய்து வைக்குமாறு கோருகின்றனர். சாதிய விழுதுகள் தாங்கி நிற்கும் இந்த சமூக அமைப்பின் கண்களில் விரலை விட்டு ஆட்டும் முயற்சியை இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. இதுபோல சிகரம் இதழில் வெளிவந்த சிறுகதைகளைப் பலவாறு பகுத்துக் கூறலாம்.

சிறந்த மொழிபெயர்ப்புக் கதைகளும் இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டலாம். வங்க மொழியில் எழுதிய 'டல்ஹவுஸி சதுக்கம்' (சிகரம் 1976 ஜூன்) என்ற கதையும் ஒரிய மொழிக் கதையான 'பக்ஷீஷ்' என்ற சிறுகதையும் குறிப்பிடத்தக்கவை யாகும். டல்ஹவுஸி சதுக்கம் என்ற இடத்தில் நடைபாதையோரம் கேட்பாரற்று உயிர் பிரிந்த தாயின் மார்பில் பால் குடிக்கும் குழந்தையைப் பலரும் பார்த்துக் கொண்டே செல்கின்றனர். இக்காட்சியைப் படமெடுத்துச் செல்கிறார்கள் இரண்டு பிரெஞ்சுக் காரர்கள். அவ்வழியே செல்லும்

வேலையில்லாப் பட்டதாரிகளும் ஒரு பிச்சைக்காரனும் இந்த கதிதானே நமக்கும் என்று விரக்தியோடு கடந்து செல்கின்றனர். இவை அனைத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான் ஒரு சிறுவன். சுதந்திர இந்தியாவில் புனிதப் போர்வையை அகற்றி விட்டு உள்ளே சீழ்பிடித்துக் கிடக்கும் சமூகத்தை சித்தரித்துக் காட்டுகிறது இச்சிறுகதை.

'பக்ஃஷீஷ்' என்ற சிறுகதையில் டெபுடி கமிஷனர் சொன்னபடி ஹினுரய என்ற மலைவாசி வேட்டைக்காரன், அப்பகுதி தொழிற்சங்கவாதியான ஷபட்டா சிங்கைக் கொலை செய்ததற்கு ரூ.500 பரிசு பெறுகிறான். அப்பகுதி மக்களைச் சுரண்டி வாழும் பண்ணையார் கோவிந்த சர்தார் ஹினுரயாவின் மனைவியை அடைய முயற்சித்தபோது ஹினுரயா அவனைக் கொலை செய்து விடுகிறான். ஒரு நல்லவனைக் கொலை செய்ததற்கு ரூ.500 பரிசு என்றால் ஒரு கொடுமைக்காரனைக் கொலை செய்ததற்கு எவ்வளவு பெரிய பரிசு கிடைக்கும் எனக் காத்திருக்கிறான். இறுதியில் மரணதண்டனை பரிசாகக் கிடைக்கிறது. அதிகாரவர்க்கம் கம்யூனிசத் தன்மைக்கு எதிராக எப்படிவேலை செய்கிறது என்பதைக் காட்டுவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. இதுபோன்ற பல சிறுகதைகள் சிகரம் இதழில் இடம்பெற்றுள்ளன.

கவிதைகள்

பொதுவாக, சிகரத்தில் இடம்பெற்ற கவிதைகள் அனைத்தும் முற்போக்குச் சிந்தனை நிறைந்த புதுக்கவிதைகள் எனலாம். நெடிய கவிதைகள் ஒரு சிலவே. நெடிய கவிதையாக இருந்தாலும், சிறிய கவிதையாக இருந்தாலும் சமுதாயப் பார்வையுடன் எழுதப்பட்டிருப்பது இதன் சிறப்பு. தணிகைச் செல்வன், தமிழன்பன், உதயை மு. வீரையன், தோழன் (இளவரசு), இளமுருகு, கோ. ராஜராம், ஏ.தெ. சுப்பையன், அக்கினிபுத்திரன், வைகறை போன்ற பல கவிஞர்களின் கவிதைகளும், இளந்தலைமுறையைச் சார்ந்த பல புதிய கவிஞர்களின் கவிதைகளும் சிகரம் இதழில் இடம் பெற்றுள்ளன. பொதுவாக எழுபதுகளில் நடப்பியல் சார்ந்த சமூக விமர்சனம் புதுக்கவிதைகளில் கூர்மையாக வெளிப்பட்டது. சமூகக் கொடுமைகள் தனி மனிதரால் இழைக்கப் பட்டாலும் அத்தகைய ஒரு நிலையை உருவாக்கி வைத்திருப்பது உடைமை அமைப்பே என்பதால் இவர்களது விமர்சனங்கள் இத்தகைய சமூக அமைப்பைச் சார்ந்தே நின்றன. சிகரத்தின் கவிதைகள் இந்த இலக்கை ஒட்டியே அமைந்துள்ளன.

பட்டினி கிடக்க சுதந்திரம் இருக்குது
பாரத நாட்டினிலே – இதனைத்

தட்டிக் கேட்டால் சட்டம் வருகுது
இரும்புக் கூட்டினிலே
கும்பி எரிந்து குடலும் கருகி
குடித்தனம் நடத்துகிறோம் – எதை
நம்பி இனிமேல் நாட்டில் வாழ்வது
நாளைக் கடத்துகிறோம்' *(சிகரம் ஆக.75. ப.6)*

மக்களின் கதியற்ற ஒரு நிலையை உதயை மு. வீரையன் அவர்கள் சுதந்திரம் எங்கே? என்ற கவிதையில் வழங்கியுள்ளார்.

ஏதுமற்ற பஞ்சையாய், பராரிகளாய் வாழும் உழைக்கும் மக்களின் நிலையை 'நியாய விடியல்' என்னும் கவிதையில் தமிழன்பன் எடுத்துக் காட்டுகிறார்.

தாயின் மணிக்கொடி தயாரிப்பதற்காக
இடுப்பு வேட்டியும் இவர்கள் இழந்தனர்
மண்ணில் இவர்கள் மானமும் நீல
விண்ணில் கொடியும்
பட்டொளி வீசிப் பறப்பது பாரீர்

என்றும், இவ்விமர்சனத்தின் முடிவாகக் கண்டனங்களும் எச்சரிக்கைகளும் எழுவது இந்த உள்ளடக்கத்தின் ஒரு வளர்ச்சியாக அமைந்துள்ளது.

சன்மார்க்கத்தளுக்கு காந்தியக் குரலுக்கு
இந்த வேடங்கள் இனிமேல் நியாயத்
தீக்குளிப் பிற்கே தயாராக வேண்டும்
உதட்டில் கீதை, உள்ளே போதை
தேசியப் போர்வை, திருட்டுப் பார்வை
இன்னும் அதிக நாள் நடக்காது
உற்பத்தி மூலங்கள் ஒருவருக்கென்னும்
தனியுடைமை தகராவிட்டால் – வளைந்த
புருவங்களிலே அக்கினி அம்புகள்
நக்கீர நயன இமை மயிர்களிலே
புரட்சி ஈட்டிகள் சீறிப் புறப்படும்!
விசுவரூபத்தின் விதைகளே தோளில்
திரவ அம்புகளாய்த் தெரிகின்றன *(சிகரம், ஆக.75)*

இதுபோன்ற போர்க்குணம் மிக்க கவிதைகள் பலவற்றைச் சுட்டிக் காட்டலாம். ஏனெனில் இந்தியநாடு, அரசு, சுதந்திரம், சட்டம்,

நிலப்பிரபுத்துவம், சுரண்டல், உரிமை மறுப்பு, அடக்குமுறை, பசி, வேலையின்மை ஆகிய அனைத்தும், பாடுபொருளாக்கப்பட்டு அதனுடைய தொடர்ச்சியாக விழிப்புணர்ச்சி, போராட்டம், புரட்சி, பொதுவுடைமை என்பதாக முடிவடைகிறது. ஆகையால் சிகரத்தின் கவிதைகள் அக்கால கட்டத்தில் இவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்த புதுக்கவிதைகளுக்கு ஒரு சான்றாக அமைகின்றன.

இந்திய நாட்டிலே படித்து வேலையில்லாமல் அலைகின்ற கோடிக்கணக்கான உற்பத்திக் கரங்கள் இந்த அரசின் நாசகாரமான முதலாளித்துவ சர்வாதிகாரக் கொள்கையால் வாழ வழியின்றித் தற்கொலை செய்து கொள்ளும் கொடுமையை 'ஒரு தானத்தின் தகனத்தில்' என்ற கவிதையில் மனமுருகச் சித்தரித்துக் காட்டுகிறார் கவிஞர் பொன்விடியல்.

உழைத்துப் படித்தவன் உழைக்க வாய்ப்பின்றி
உணவுக் கலைந்தான்
வாலிபத்தின் வாசலில் வசந்த ரோஜாக்களைத்
தரிசிக்கச் சென்றவன்
கந்தகப் பூக்களின்
மகரந்த நெடியில்
மூச்சுத் திணறினான்

இறுதியில்,

பூஞ்சோலைப் புரட்சியில் புதுப்பாதை
காணாதவன் சாவுக்கிடங்கின் சரித்திரமானான்

அதுவும்

இரத்தவங்கியில் தானம் செய்தவன்
தற்கொலை வேள்வியில் தகனமானான் (சிக. ஏப்.76,ப.7)

வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையை இக்கவிதை மிக உருக்கமாக எடுத்துக்காட்டுகிறது. இதைப்போல மற்றொரு நிலையை க. சேகரின் 'உருவாதல்' என்ற சிறு கவிதை சித்தரித்துக் காட்டுகிறது.

எங்கள் நாட்டில்
மிக இளம் வயதிலேயே
உருவாகிறார்கள் - யார்?
விஞ்ஞானிகளோ!
அறிஞர்களோ!
அல்ல
பிச்சைக்காரர்கள்

சமூக அவலங்களைப் போலித்தனமில்லாமல் சொல்வதற்குப் புதுக்கவிதை வடிவம் எளிதாக உள்ளது. "புதிய உருவங்களை நமக்குக் கையில் தந்தது சமூகம்தான். விஷயம் தெரிந்தவன் அதைக் கையாளுகின்றபோது மேலும் கீழும் சில மாறுதல் கொடுக்கிறான். சமூக உணர்வுகளின் புலிப்பாய்ச்சலைப் புரிந்து கொள்கிறவன், புதிய புதிய வடிவங்களைக் கைகளில் ஏந்துகிறான்"[24]. 1976-ம் ஆண்டு வெளிவந்த சிகரம் இதழ்களை ஆ. சொக்கர் விமர்சனம் செய்து ஒரு கட்டுரை வழங்கியுள்ளார். இதில் 1976 பிப்ரவரி இதழில் வெளியான கோ. ராஜாராமின் 'சிவப்பு நதி' கவிதை நாடகம் அந்த ஆண்டில் சிறந்த கதையாக மதிப்பிட்டுள்ளார். ஏனெனில் மக்கள் நல்வாழ்விற்காக வழிகாட்டும் போராட்டத்திற்கு சிவப்பின் பாத்திரத்தை விளக்கும் முறை அருமையான புதிய உத்தி எனக் கருதுகிறார்.

தங்கையே வா, பறிமுதல்,.கோழியே வாழிய, மா மகனே, மெஷின், எமெர்ஜென்சிக்கு இரங்கற்பா, செங்கொடித்தாயே ஆகிய கவிதைகளையும் மேலும் சில சிறு கவிதைகளையும் சிகரம் இதழில் தணிகைச் செல்வன் வழங்கியுள்ளார். இவற்றுள் 'எமர்ஜென்சிக்கு இரங்கற்பா' என்ற நீண்ட கவிதை குறிப்பிடத்தக்க ஒரு கவிதையாகும்.

1975ஆம் ஆண்டு நெருக்கடிகாலச் சட்டத்தின் மூலம் மக்களுக்கு இழைத்த அநீதிகள், அடக்குமுறைகள், இதனால் ஏற்பட்ட உயிர் பலிகள், கொடுமைகள், மக்களின் துயரங்கள் சிறையும், சித்ரவதையும் பற்றி மே 77 சிகரம் இதழில் 'எமர்ஜென்சிக்கு இரங்கற்பா' என்ற ஒரு நீண்ட கவிதையில் விளக்கியுள்ளார்.

ஜனநாயகம் எதற்கு
தலைகாய்ந்த ஜனங்களுக்கு
தனிநாயகம் போதும்!
தனிநபரே ஆள்வதுதான்
இனி நியாயம்! இந்நியாயம்
விநியோக மாக வேண்டும்
விரைவாக! அதனாலே
ஓடேந்தும் மக்களுக்கு
ஓட்டேந்தும் உரிமை ஏன்?
கூடாது! எவனாச்சும்
மனித உரிமை என்று
வாய் திறந்தால் விடாதே
குனிய வை! அவன்மீது

குதிரை ஏறு பின்னர்!
குறி பார்த்துத் தாக்கு!
குண்டர்களை ஏவு!
இதையெல்லாம் –
மீறியும் யாரேனும்
வேதனையைச் சொல்வதற்குப்
பேனாவைத் திறந்தால்
பேனாவை ஒடிக்காதே
அவன் கையை ஒடி

இப்படி நெருக்கடி காலச் சட்டத்தின் இரும்புக்கரங்கள் மக்களின் உரிமைகளை, பத்திரிகை சுதந்திரத்தை அடித்து நொறுக்கியது என்பதைச் சொல்லிச் செல்லும் தணிகைச் செல்வனின் இரங்கற்பா ஒரு கவிதையல்ல! வரலாறு.

சிகரத்தில் வெளிவந்த கவிதைகளில் நீண்ட விவாதத்திற்கு உரிய கவிதையாக அமைந்தது கவிஞர் தணிகைச் செல்வனின் 'மாமகனே'.

சிகரம் இதழில் காதல் மற்றும், சமூகத்தைப் புறக்கணித்த தனிமை வாதக் கவிதைகள் இடம்பெறவில்லை. "கலைஞனுக்குச் சமூகத்தோடு உள்ள தொடர்பே அவனது கருத்துக்களை நிர்ணயிக்கவும் வளப்படுத்தவும் செய்கின்றது. அவன் 'நான்' என்னும் தன்னகங்காரப்போக்கு மட்டுமே யதார்த்தம் என்று எண்ணி, சமூக யதார்த்தங்களைப் பார்க்க மறுத்தால், அக்கலைஞன் தவிர்க்க இயலாத வகையில் கருத்துக்களைப் பொறுத்து திவாலா ஆகிவிடுவான். தீவிர தனிமைவாதம் கலைஞர்களைச் சமூக வாழ்வின் ஊற்றுக் கண்களைக் காணவொட்டாது தடுக்கும், தனிப்பட்ட உணர்வு அலைகளிலே மலட்டுத்தனமாக மூழ்கிக் கிடந்து, சீக்குப் பிடித்த விபரீதக் கற்பனையில் மூழ்கி விடுகிறான். ஆகவே கலைஞனுக்குச் சமூகத்தோடு தொடர்பு மிக அத்தியாவசியமாகி விடுகிறது[26] ஆகையால் சிகரம் இதழில் கவிதைகளின் சமூகத்தன்மை மிக்க உள்ளடக்கத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறுகதைகளில் இடம்பெற்ற சாராம்சங்கள் கவிதைகளிலும் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் இளவரசு 'தோழன்' என்ற புனைபெயரில் எழுதிய கவிதையை ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

மாடு தின்னும்
பறைப்பயல் மகனே!
காலில் செருப்போடு

கண்முன் நடப்பதா?
தோலை உரிப்பேன்
போடா தொலைவில்
பொங்கினார் பண்ணையார்!
நெருப்புக் கதிரவன்
நேர்மேல் நின்று
வெய்யிற் குழம்பை
வீசும் நடுப்பகல்
செருப்பைக் கழற்றித்
தெருவினில் நடந்தான்
நெருப்பு ஊர்வலம்
நெஞ்சினிலே நடந்தது

மனிதனைத் தின்னும்
மதிப்புடையோரே
கையில் செருப்போடு
கண்முன் வருகிறோம்
மாட்டுத் தோலை
மாற்றிப் பறைக்கு
மனிதத் தோலை
வாங்க வருகிறோம் *(சிகரம், ச.75, ப.8)*

'வருகிறோம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட இக்கவிதை தாழ்த்தப்பட்ட மக்களின் கோபத்தை அதன் தீவிரத் தன்மையோடு சொல்கிறது. சில கவிதைகள் கோபத்தை வெளிப்படுத்தும் கோஷங்களாகவும் முழக்கங்களாகவும் அமைந்துள்ளன.

> செந்தமிழும் நாப் பழக்கம் என்பது போல எதிலும் ஒரு பயிற்சி ஏற்படுகிற போதுதான் முழுமை கிடைக்கிறது. பயிற்சிக் கூடத்திலேயே இருக்கின்ற நமது இளங் கவிஞர்களிடம் மின்னல் அடிப்பது போல் அழகியல் அம்சம் அவ்வப்போது பளிச்சிடுகின்றது. நாளாவட்டத்தில் இந்தக் குறைபாடு, தொடர்ந்து பயிற்சியின் காரணமாக மறையும் என்பது என்னுடைய நம்பிக்கை[27]

என்று கவிஞர் தணிகைச் செல்வன் தனது நேர்காணலில் இத்தகைய கவிதைகள் குறித்துப் பதிலளித்துள்ளார்.

ஆசிரியர் செந்தில்நாதன் அவர்களும் சிகரம் கவிதைகள் குறித்து 'ஒரு சொல் கேளீர்' பகுதியில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். "சில

கதைகளையும், கவிதைகளையும் நன்றாக இருக்கின்றது என்பதற்காக அல்ல மோசமாக இல்லை என்பதற்காகவே வெளியிடுகிறோம். இன்று சுமாராக எழுதும் எழுத்தாளன் நாளையே தரம் வாய்ந்த தேர்ந்த எழுத்தாளனாய்ப் பரிணமிக்கக்கூடும்! அவன் வளர்ச்சியை நசுங்கிப்போக வைப்பதில் இயக்கத்துக்கு லாபமில்லையே[28] என்றும் 'சிகரத்திற்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 50 கவிதைகளாவது வருகின்றன. ஆனால் பிரசுரமாவது பத்தோ பதினைந்தோதான். பலபேர் கவிதை எழுதுவதை ஒரு சீரியஸான விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை. உரைநடையை ஒடித்துப் போட்டு, கார்டிலேயே எழுதி அனுப்பி என்னை ஊக்குவிக்க வேண்டும் என்று விண்ணப்பம் விடுகின்றார்கள். கவிஞனுக்குக் கம்பீரம் வேண்டாமா? படைப் பாளிக்குத் தன்னம்பிக்கை வேண்டாமா? ஊக்குவிக்க வேண்டியது பத்திரிகை ஆசிரியரின் கடமையே தவிர எழுத்தாளன் என் எழுத்தைப்போட்டு ஊக்குவிக்க வேண்டும் என்ற இரங்கிய தொனியில் விண்ணப்பித்துக் கேட்கலாமா? ஒவ்வொரு வாசகனும் புதுக்கவிஞனாக விரும்புகிறான்! வெறும் ஆர்வம் மாத்திரமே கவிஞனை உருவாக்கிவிடுமா என்ன? சும்மா செங்கொடியை எடுத்து வா என்றோ, போருக்குப் புறப்படு என்றோ எழுதி விட்டால் அது எழுச்சியை ஊட்டும் கதையாகிவிடுமா என்ன? நாம் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்! ஒரு மோசமான எழுத்தாளனை விட ஒரு நல்ல ரசிகனுக்கு மரியாதை அதிகம்.

இப்படிச் சொல்வதால் யாரும் அதைரியப்பட வேண்டியதில்லை. நம்முடைய அக்கறை இன்னும் அதிகமாக வேண்டும் என்பதற்காகவே சொல்கிறேன்[29] என்று சிகரம் கவிதைள் குறித்து ஆசிரியர் குறிப்பிட்டுள்ளது கவிஞர்கள் மேலும் தங்களை வளர்த்துக் கொள்ள உதவுவதுவாகும். உலகப்புகழ் பெற்ற கவிஞர்களைப் பற்றியும் சிகரம் இதழ் வெளியிட்டு வந்துள்ளது. ஷோலக்கோவ், பாப்லோ நெருடா, கவிஞர் இக்பால் ஆகியோரைப் பற்றிய கட்டுரைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். பொதுவாக, சமூகக் கொடுமைகளை எதிர்க்கும் உழைக்கும் மக்களைப் புதிய பாடுபொருளாய் மதித்து எழுதுவது, அவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவான கவிதைகளை வெளியிடுவது என்பது சிகரத்தின் சிறப்புகளாகும்.

முடிவுரை

சிகரம் இதழின் படைப்புகள் பொதுவாக மார்க்சிய அணுகுமுறையைப் பின்பற்றி வந்துள்ளன. 'மனிதர்கள் எல்லோருக்கும்

அதாவது ஒரு மத்திய தர ஊழியருக்கும், சாதாரண தொழிலாளிக்கும், பிர்லாவுக்கும், பாமரனுக்கும், கொல்கிறவனுக்கும், கொல்லப்படுகிற வனுக்கும் பொதுவான பொருத்தமான இலக்கியம் என்று எதுவும் இருக்க முடியாது. ஒவ்வொரு இலக்கியமும் ஒரு வர்க்கத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. இலக்கியத்தில் நடைபெறும் இந்த வர்க்க முரண்பாடுகளுக்குச் சமுதாயத்திலே உள்ள வர்க்கப் போராட்டங்களே அடிப்படையாக அமைகின்றன. இந்த வர்க்கப் போராட்டத்தில் சத்தியத்தின் பக்கம் எவன் நிற்கிறானோ, எவன் மக்களிடமிருந்து ஒதுங்கிவிடாமலும், மக்களை ஒதுக்கி விடாமலும் இருக்கிறானோ, அவனே மக்களால் நினைவு கூரப்படுகிறான். மக்களை ஒதுக்குகிறவன் மக்களால் ஒதுக்கப்படுகிறான்[30] இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள நெருங்கியத் தொடர்பை வி.பி. சிந்தன், சிகரம் முதல் இதழில் விளக்கும் போது இந்த இலக்கியப் பார்வையை அளித்துள்ளார். சிகரத்தின் சுமார் ஆறாண்டு இதழ்களும் இத்தகைய கண்ணோட்டத்துடன் பல்வேறு படைப்புகளை வெளியிட்டுள்ளன. நந்தனார் நாட்குறிப்பு, ஆஸ்தான கவி பதில் சொல்கிறார் போன்ற பகுதிகள் அந்தந்த கால இலக்கியம், சமூக, அரசியல் பிரச்சினைகள் அறிந்து கொள்ள முடிகிறது. இப்பகுதியால் இதழாசிரியர் ச.செந்தில்நாதன் அவர்கள் சிகரத்திற்கு சிறப்பு சேர்த்துள்ளார். சிகரம் இதழில் வந்த கட்டுரைகள், கவிதைகள், பிற படைப்புகள் ஆகியவை பெரும்பாலும் அந்தந்தப் படைப்பாளர்களால் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

தமிழுலகில் கலை இலக்கியம் குறித்து ஒரு புதிய பார்வையை அளிக்க வேண்டும் என்று வெளிவந்து கொண்டிருந்த சிகரம் இதழ் 1000 பிரதிகள் முதல் 3000 பிரதிகள் வரை விற்பனையாகியுள்ளன. பிரதிகள் அதிகமானபோதும் நட்டக் கணக்கு தொடர்ந்து வந்தது. தோழர்கள் மணியரசன், இளவேனில், இளையபாரதி, பெ.நசிவம், பாரதி விஜயன், வைகறை ஆகிய தோழர்களின் உறுதுணையால் ஒரு காலகட்டம் வரைதான் சிகரம் இதழை நடத்த முடிந்தது. பிறகு வழக்குரைஞர் தொழிலையும் பார்க்க வேண்டியிருந்தது போன்ற பல காரணங்களால் சிகரம் இதழை வெளியிடமுடியவில்லை. இப்போதும் கூட எனக்கு இதழ் நடத்த விருப்பம் இருந்தாலும் சூழ்நிலை காரணமாக நடத்த முடியவில்லை என்று கூறுகிறார் சிகரம் இதழ் ஆசிரியர் ச. செந்தில்நாதன். கலை இலக்கியப் பாதையில் சிகரம் இதழ் தனது முழுமையான பங்களிப்பைச் செலுத்தி வந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

குறிப்புகள்

1. சிகரம், ஒரு சொல் கேளீர், ச. செந்தில்நாதன், ஜூலை 1975, ப.1
2. மேலது, ப.2
3. மேலது, ப.8
4. மேலது, ப.2
5. சிகரம், தங்கையே வா, தணிகைச் செல்வன், ஜூலை 1975, ப.2
6. சிகரம், இலக்கியமும் சமுதாய மாற்றமும், வி.பி.சிந்தன், ப.13
7. மேலது, ப.13
8. சிகரம், தற்கால இலக்கியத்தில் சில போக்குகள், கைலாசபதி, சன. 76, ப.2
9. சிகரம், கவிதா, இளவேனில், செப்.76, ப.19
10. மேலது, ப.20
11. சிகரம், சிலப்பதிகாரம் உண்மையும் புரட்டும், கே. முத்தையா செப்.77, ப.16
12. சிகரம், அகப்பாடல்களில் அரசியல் பிரச்சினைகள், ஜன. சுந்தரம், மார்ச் 79, ப.14
13. சிகரம், ஒரு சொல் கேளீர், ச.செந்தில்நாதன், அக்.1976, ப.2
14. சிகரம், ஒரு சொல் கேளீர், ச. செந்தில்நாதன், நவ.76, ப.3
15. புயலுக்கு இசை வழங்கும் பேரியக்கம், இளவேனில், சென்னை, மு.ப.95, ப.107
16. சிகரம், ஜன. சுந்தரம், எஸ்.வி. ராஜ துரையின் எக்சிஸ்டென்ஷியலிசம், செப்.76, ப.12
17. சிகரம், மருதமுத்து, ஞானியின் இந்திய வாழ்க்கையும் மார்க்சியமும் ஜூலை 77, ப.10
18. சிகரம், ஒரு சொல் கேளீர், ச. செந்தில்நாதன், மே 76, ப.23
19. சிகரம், நவ.76, ப.5

20. சிகரம், கோ. ராஜாராம், செப்.75, ப.5

21. சிகரம், விபிசியுடன் ஒரு பேட்டி, செப்.75, ப.20

22. சிகரம், ஜோதிர்லதாகிரிஜா, டிச.75, ப.2

23. சிகரம், அன்னியம், மாநராமசாமி, ஜூலை 1975, ப.27

24. சிகரம், நடுத்தர வர்க்கத்துப் பேனா, சூரியதீபன், ஆக.77, ப.20

25. சிகரம், நவ.76, ப.18

26. சிகரம், கலைஞனும் சமூகமும், நல்லதம்பி, 1977, ப.9

27. சிகரம், தணிகைச்செல்வன், 1979, ப.27

28. சிகரம், ஒரு சொல் கேளீர், ச. செந்தில்நாதன், அக்.1977, ப.24

29. மேலது, ப.25

30. சிகரம், ஜூலை 75, ப.14

31. சிகரம், ஆசிரியருடன் நேர்காணல், 2.4.99

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம்

இணைந்து நடத்தும்

பொதுவுடைமை இயக்க இதழ்கள்

அழைப்பிதழ்

(இதழியல் கருத்தரங்கம் - 8)

அன்புடையீர்,

வணக்கம்.

பொதுவுடைமை இயக்க இதழ்கள் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் (சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை-113) 10-4-1999, 11-4-1999 ஆகிய இரு நாள்களில் நடைபெற உள்ளது.

அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்
சென்னை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம், சென்னை

திருமிகு **என். சங்கரய்யா** அவர்கள்
(செயலாளர், தமிழ் மாநிலக் குழு
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி- மார்க்சிஸ்ட்)

10.4.1999 அன்று முற்பகல் 10.00 மணியளவில் நிகழவிருக்கும்
கருத்தரங்கத் தொடக்க விழாவிற்குத் தலைமையேற்றுப்

பொதுவுடைமை இயக்க இதழ்கள்
நூல் தொகுப்பினை வெளியிடுவார்கள்

திருமிகு **இரா. விசுவநாதன்** அவர்கள்
(வேளாண் அமைச்சர், புதுவை மாநிலம்)

கருத்தரங்கைத் தொடங்கிவைத்துச்
சிறப்புரையாற்றுவார்கள்

திருமிகு **கே. முத்தையா** அவர்கள்
(முன்னாள் ஆசிரியர், செம்மலர்)

வாழ்த்துரை வழங்குவார்கள்

திருமிகு **ஆர். நல்லகண்ணு** அவர்கள்
(செயலாளர், தமிழ் மாநிலக் குழு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி)
தலைமையில்

11-4-1999 அன்று மாலை 5.00 மணியளவில்

பேராசிரியர் முனைவர் **கா. சிவத்தம்பி** அவர்கள்
(வருகைதரு பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)

கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்துவார்கள்

முதல் அமர்வு

10-4-1999 முற்பகல் 11.00 -1.00

தலைமை : முனைவர் இரா. இளவரசு

கட்டுரையாளர்	தலைப்பு
திரு. பா. வீரமணி	புது உலகம்
பேராசிரியர் இன்குலாப்	மனிதன், புதிய மனிதன்
பேராசிரியர் கே. ராஜு	தீக்கதிர்

கருத்துரை : திரு ச. செந்தில்நாதன்

இரண்டாம் அமர்வு

10-4-1999 பிற்பகல் 2.00 -5.00

தலைமை : முனைவர் மே.து. ராசுகுமார்

கட்டுரையாளர்	தலைப்பு
திரு. இரா. விசுவநாதன்	சுதந்திரம்
பேரா. ஆ. சிவசுப்பிரமணியன்	சாந்தி
திரு. சி. மகேந்திரன்	ஜனசக்தி
முனைவர் ந. கடிகாசலம்	மனஓசை

கருத்துரை : திரு சு.பொ. அகத்தியலிங்கம்

மூன்றாம் அமர்வு

11-4-1999 முற்பகல் 10.00 - 1.00

தலைமை : முனைவர் இ. சுந்தரமூர்த்தி

கட்டுரையாளர்	தலைப்பு
திரு வல்லிக்கண்ணன்	சரஸ்வதி
முனைவர் வீ. அரசு	சமரன்
பேரா. ச. மாடசாமி	செம்மலர்
முனைவர் சாரா. செந்தில்குமார்	தாமரை
முனைவர் மு. வளர்மதி	சிகரம்

கருத்துரை : முனைவர் தமிழன்பன்

நான்காம் அமர்வு

11-4-1999 பிற்பகல் 2.00-5.00

தலைமை : முனைவர் பொற்கோ

கட்டுரையாளர்	தலைப்பு
திரு. அ. சீனிவாசன்	தத்துவ இதழ்கள்
திரு பசுமைக்குமார்	சார்பு இயக்க இதழ்கள்
முனைவர் கே.எம். வேணுகோபால்	பிறஇதழ்கள்

கருத்துரை : திரு பா. செயப்பிரகாசம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
சங்கத் தமிழ் பகுதி 1	100.00
சங்கத் தமிழ் பகுதி 2	100.00
சங்கத் தமிழ் பகுதி 3	115.00
சங்கத் தமிழ் பகுதி 4	130.00
சங்கத் தமிழ் பகுதி 5	110.00
Freudism in the Novels of James Joyce and T.Jankiraman:A comparative study	125.00
இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்	290.00
தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு	310.00
பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும்	170.00
தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள்	185.00
மனிதப் புனிதர் கக்கன்	110.00
மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை	75.00
மூவர்தமிழ் மூன்று பார்வைகள்	50.00
காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள்	100.00
அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
படைப்பு நெறிமுறைகள்	150.00
Comparative Studies in Literary Cultures	100.00
Sangam Classics:New Perspecties	105.00
அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள்	100.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்	170.00
கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை	45.00
தமிழ் நாடக வகையும் வரலாறும்	110.00
வா.செ.கு.என்ற ஆளுமையாளர்	50.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	45.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	40.00
வல்லம் புராணம்	200.00
இதழியல் உலகம்	120.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	60.00
படைப்பிலக்கியம்-விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு	100.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணக்கூறுகளும்	85.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	115.00
பெயரியல்	55.00

---

729 பொதுவுடைமை இயக்க இதழ்கள் 115.00